www.padippakam.com

# மாவீரர் நினைவுகள் 2



படிப்பகம்

www.padippakam.com

படிப்பகம்

www.padippakam.com

# தாய்நிலத்து வீரர்

## மாவீரர் நினைவுகள் 2



படிப்பகம்

www.padippakam.com

This book is published in connection with the
**National Heroes' Day of Tamil Eelam ,1993**

---


| | |
|---|---|
| Title: | **THAINILATHTHU VEERAR**<br>(Collection of articles about martyrs<br>in the tamil freedom stuggle. Series no. 2) |
| First Edition : | November, 1993 |
| Publishers : | **Thainilam Pathippakam,**<br>Tamil Co-ordinating Committee Norway<br>Post Boks 1699, Vika<br>0110 Oslo<br>Norway<br>Tel. : 22 19 12 60 fax : 22 19 01 14 |
| Artistic expression : | Kanna |


படிப்பகம்

# மாவீரர் நினைவாக ...

மனித வாழ்க்கை உன்னதமானது. அந்த உன்னதத்தை விடுதலை என்ற இலட்சியத்திற்காக கருக்கிக் கொண்ட போராளிகளின் வாழ்வு பற்றிய குறிப்புக்கள் அதனை வாசிப்பவர்களின் ஆத்மாவையும் சிந்தனையையும் சுத்தம் செய்யக்கூடியவை.

சாதாரண மனித வாழ்வின் மீது கேள்விகளை எழுப்பும் இவ் குறிப்புக்களைப் படிப்பதன் மூலம் போராட்டத்தையும் அதன் வளர்ச்சியையும் விளங்கிக்கொள்ள முடியும்.

எமது மண்ணின் விடுதலைக்காக தம்மை அர்ப்பணித்த இவ் மாவீரர்கள் பற்றி ஏற்கனவே தமிழீழத்தின் பல்வேறு பத்திரிகைகளிலும் வெளிவந்த கட்டுரைகள் சிலவற்றின் தொகுப்பினை மாவீரர் நினைவுகள் – 2, ஆக நூலுருவில் இம்மாவீரர் நாளில் வெளியிடுகின்றோம்.

புலிகளின் தாகம் தமிழீழத் தாயகம்

தமிழீழ விடுதலைப்புலிகள் நோர்வேக்கிளை
ஒஸ்லோ, நோர்வே
27.11.93

www.padippakam.com

# உள்ளடக்கம்


| | |
|---|---|
| லெப்.கேணல் சாள்ஸ் | 01 |
| லெப்டினன்ட் திலக் | 11 |
| மேஜர் சுருளி | 15 |
| வீரவேங்கை ஜஸ்மின் | 20 |
| கப்டன் நேசன் | 24 |
| கப்டன் எல்லாளன் | 29 |
| கப்டன் மதியழகன் | 33 |
| லெப்டினன்ட் சோமேஸ் | 37 |
| கப்டன் தேனுகா | 42 |
| கரும்புலி மேஜர் காந்தரூபன் | 48 |
| 2வது லெப். ஆனந்தி, ராதை | 53 |
| மேஜர் டயஸ் | 60 |
| மேஜர் செல்வராஜா மாஸ்டர் | 64 |
| கப்டன் கல்கி | 70 |
| மேஜர் சலாம் | 80 |
| மேஜர் தாடிபாலா | 90 |
| மேஜர் சயந்தன் | 94 |
| லெப்.கேணல் வேணு | 100 |
| கப்டன் பரஞ்சோதி | 104 |
| கப்டன் அக்காச்சி | 108 |


படிப்பகம்

www.padippakam.com

படிப்பகம்

www.padippakam.com





# லெப்.கேணல் சாள்ஸ்

## (ஆனந்தராசா தவராஜன்)

## வீரமரணம் : 24.06.1993

அன்றொரு காலம்..

சிங்களக் கடற்படையின் படகுகளைக் கண்டால் எங்களது சாதாரண படகுகள் கடலில் நிற்காது, நிற்கமுடியாது.

சண்டைகளுக்கென்றே தயாரிக்கப்பட்ட நேவிப்படகுகளின் வேகத்திற்கும் , அவற்றில் பொருத்தப்பட்டிருக்கின்ற சக்தி வாய்ந்த ஆயுதங்களின் தாக்குதலுக்கும் ஈடுகொடுக்க எங்களது சாதாரண படகுகளால் முடியாது என்பதனால் தூரத்தில் கண்டவுடனேயே ஓடி மறைந்துவிட வேண்டும், வேறு வழியில்லை. எங்கள் படகுகளை அழிப்பது அவர்களின் இலக்கு என்பதுடன், கலைப்பது அவர்களுக்கு ஒரு பொழுதுபோக்காகவும் இருந்தது.

ஆனால் இன்று, அந்நிலை நேர்மாறாக மெல்ல மெல்ல மாறி வந்துவிட்டது.

தரையைப் போல கடலிலும் சிங்களப்படையை தூரத்தித் தாக்கி அழிக்கலாம் எனச் சொல்லித் தந்தவனும், முதன் முதலாக மட்டுமல்ல தொடராகவும் அதனைச் செய்து காட்டியவனும் தான் எங்கள் சாள்ஸ்.

*1991* இன் இறுதியில் அது ஆரம்பித்தது.



படிப்பகம்

www.padippakam.com



நயினாதீவிலிருந்து ஊர்காவற்துறைக்கு கடல்ரோந்து புரிகின்ற நேவிப்படகுகளை வழி மறித்துத் தாக்க சாள்ஸ் முடிவெடுத்தான்.

தளபதி கங்கையமரனின் துணையோடு றெக்கி பார்த்து, தாக்குதல் திட்டம் வகுத்து, தாக்குதல் குழுக்களை ஒழுங்கு படுத்தி, ஆயுதங்களோடு படகுகளைத் தயார் செய்து தானே கொமாண்டராகி வியூகம் அமைத்துச் சென்று அந்தக் கடற்சண்டையை வழி நடத்தினான் சாள்ஸ்.

கனன் பீரங்கிகள், பிப்ரிகலிபருக்கும் மிகையான கனரகத் துப்பாக்கிகளுடன், அதிவேக ஓட்டம் கொண்ட நேவியின் சண்டைப்படகுகளை பிப்ரி, ஜி.பி.எம்.ஜி யுடன் சாதாரண ரைபிள்களை மட்டுமே கொண்ட எங்களது மீன்பிடிப் படகுகள் துரத்தித் தாக்கின.

சிங்களக் கடற்படையை புலிகளின் படகுகள் கலைத்து விரட்டிய முதல் வரலாறு அது.

எதிரியின் போர்ப்படகொன்று மூழ்கடிக்கப்பட்டதுடன், எல்.எம்.ஜி ஒன்றும் கைப்பற்றப்பட்ட போதும் இழப்பேதுமில்லை எங்களுக்கு.

இதற்கு முன்னர் நெடுந்தீவிற்கும் குறிகட்டுவானிற்கும் இடையிலுள்ள கடலில் சாள்ஸ் நடத்திய ஒரு கண்ணிவெடித்தாக்குதல் குறிப்பிடத்தக்கது.

இரவு முழுவதும் ஆழ்கடலுக்குள் இறங்கி நின்று, அலைகளின் நடுவில் அவன் கண்ணி வெடியை விதைத்துவிட்டுவர, மறுநாள் காலை அதில் சிக்கிய எதிரியின் படகொன்றை அலைகள் விழுங்கிக்கொண்டன என்பதுடன், சிங்களக் கடற்படையின் வடபிராந்தியத் தளபதி கொமடோர் சமரவீர படுகாயமடைந்தார் என்பதும், 7 படையினர் கொல்லப்பட்டதும் முக்கியமானது.

உடைந்த படகையும் ஆயுதங்களையும் கடலுக்கடியிலிருந்து மீட்ட பின்னர் தான் சாள்ஸ் அடுத்த வேலைக்குப் போனான்.

1992 இன் துவக்கத்தில், தாளையடிக் கடலில் எதிரியின் "சவட்டன்" விசைப்படகு மீது தானே கொமாண்டராக நின்று ஒரு பகற்பொழுது தாக்குதலை நடாத்தினான் சாள்ஸ். எங்களது நான்கு வீரர்களை நாம் இழந்ததுடன் அவனுக்கும் காலில் காயம் ஏற்பட்டது அந்தச் சண்டையில்.

ஆனையிறவுக் கடல் நீரேரியில் எதிரியின் நீருந்து விசைப்படகொன்றை மூழ்கடித்து, பிப்ரி உட்பட பல ஆயுதங்களை கைப்பற்றிய கடற் கண்ணித் தாக்குதல்....

அதே நீரேரியில் எதிரியின் ரோந்துப்படகுத் தொடரைத் தாக்கி பல ஆயுதங்களைக் கைப்பற்றிய இன்னொரு சண்டை....



படிப்பகம்

www.padippakam.com



மாதகல் கடற் பிரதேசத்தில், விசைப் படகொன்றை மூழ்கடித்த மற்றுமொரு கண்ணிவெடித் தாக்குதல்.....

பூநகரி கல்முனைக்கருகே உள்ள மாண்தீவில், சிங்களப்படையின் கரையோரக் காவலரணைத் தகர்த்து, றைபிள்களோடு எதிரியின் சடலங்களையும் எடுத்து வந்த அதிரடித் தாக்குதல்....

இவ்வாறாக கடற்புலிகளின் கடற் சண்டைத் திறன் வளர்ந்த ஒவ்வொரு தாக்குதலுக்குப் பின்னாலும் இருந்த உந்துவிசை அவன்.

அவனிடம் ஒப்படைக்கப்படுவது என்ன வேலையாக இருந்தாலும் அந்த வேலையோடு தன்னையே கலந்து செய்துமுடிக்கும் தன்மை அவனுடையது.

வெற்றிகரமான கடற்சண்டைகளின் முன்னோடித் தளபதி மட்டுமல்ல, அவனொரு சிறந்த தொழில்நுட்பவியலாளனுமாவான்.

வேலையில்லாத வேளையில்லாதவன் அவன். ஓய்வுக்கு ஓய்வு கொடுத்திருந்த உழைப்பாளி. ஓய்வு நேரங்களில் மூளைக்கு வேலை கொடுத்து எதையாவது ஆய்வு செய்துகொண்டிருப்பான்.

கைவசம் உள்ள வளங்களைக் கொண்டு புதிது புதிதாக எதையாவது கண்டு பிடிக்க வேண்டுமென்றோ அல்லது கஷ்டப்பட்டுச் சிரமத்துடன் நாம் செய்கின்ற வேலைகளை இலகு வாகவும் வேகமாகவும் செய்து முடிக்கக் கூடிய வழிகளைப் பற்றியோ அல்லது இப்படியான ஏதோ ஒரு விடயத்தைப் பற்றியே தான் அவனது " ரெக்னிக்கல் மூளை " எப்போதும் சிந்தித்துக் கொண்டிருக்கும்.

"முயற்சிசெய்து பார்த்துவிட்டோ அல்லது முயற்சி செய்து பாராமலேயோ ஏதோ ஒரு சாட்டுச் சொல்லிக்கொண்டு இது சாத்தியப்படாது என்று நாங்கள் ஒதுக்கி வைத்து விடுகின்ற வேலைகளை தானாகவே பொறுப்பெடுத்து வெற்றிகரமாகச் செய்து முடித்துவிடுவான் அந்தப்பொறியியலாளன்" என்றான் ஒரு கடற்புலித் தோழன்.

கடற்புலிகளின் தொழில்நுட்ப வளர்ச்சியும் சாள்ஸின் அறிவாற்றலும் ஒன்றோடொன்று இறுகப் பிணைக்கப்பட்டிருந்தன.

வோக்கி கதைக்க "குறொஸ்" செய்ய வேண்டும் என்றாலும் சரி "கொம்யூனிக்கேசன் செற்" றுக்கு தேவையான உதிரிப்பாகம் என்றாலும் சரி என்னவாகத்தான் இருந்தாலும் அது வேண்டும் இது வேண்டும் என்று எதிர்பார்க்காமல் உள்ளூரில் கிடைக்க கூடியவற்றைக் கொண்டே செய்து முடித்து விடுவது தான் மற்றைய தொழில் நுட்பவியலாளருக்கும் இவனுக்கும் இடையிலுள்ள வேறுபாடு.

கடற்புலி வீரர்களுக்கான படகுப் பயிற்சிக் கல்லூரி ஒன்றை ஆரம்பித்தான் அந்தச் சிறந்த



படிப்பகம்

படகோட்டுனன். புயலுக்கும் சூறாவளிக்குமிடையில் ஆர்ப்பரித்தெழும் கடல் அலைகளுக்கு நடுவில் படகை நீண்ட தூரத்திற்குச் செலுத்தக் கூடியதான பயிற்சியை அளித்து பெண்புலிகள் உட்பட திறமையான ஓட்டிகளை சாள்ஸ் உருவாக்கித் தந்தான். இப்போது அவனில்லை , ஆனால் அந்தப் பட்டறை இனி எப்போதும் புதியவர்களைத் தயார் செய்து கொண்டே இருக்கும், அவனது நினைவோடு.

சண்டை முனைகளில் நிலவும் போர்ச் சூழ்நிலைகளினால் தடங்கல்கள் ஏற்பட்டு , எமக்கு உணவு வராமல் விட்டு விடுவது அடிக்கடி நடக்கும் ஒரு விடயம். ஆனால் சாள்சுடன் நின்று களங்களில் போரிட்ட தோழர்கள் சாப்பாட்டிற்காக காவலிருந்த நாட்கள் குறைவு. உடனடியாக அடுப்பில் சட்டியையோ வாளியையோ வைத்து, எட்டியவற்றைக் கொண்டு சுவையாகக் கறி சமைத்துத் தன் தோழர்களுக்குக் கொடுத்து விடுவான் அந்த அட்டகாசமான சமையல்காரன். அவன் தயாரிக்கும் கோழி சூப் இயக்கத்தில் மிகவும் பிரபல்யமானது. தலைவரிடமே பாராட்டுப் பெற்றது. சாள்சின் சூப் பருகவென்று நண்பர்கள் தேடி வந்த நாட்கள் கூட உண்டு. எம்மை பிரிவதற்கு சில நாட்களிற்கு முன்பு கூட மூர்த்தி மாஸ்ரர் வீட்டில் " கோழி சூப் " விருந்து படைத்து விட்டுத் தான் அவன் போனான். அவன் ஆக்கித் தந்த சுவைகள் அவனது நினைவைத் தந்துகொண்டே இருக்கின்றன.

தோழர்களில் அவன் கொண்டிருந்த அன்பும் பாசமும் அலாதியானது. மற்றெல்லோரையும் விட வித்தியாசமான விதத்தில் பழகுகின்ற இவன், எல்லாப் போராளிகளினாலும் கவரப்பட்டு அவர்களின் நெஞ்சங்களில் நீக்கமற நிலைத்து விட்ட ஓர் உற்ற நண்பன்.

கிளாலியிலிருந்து வேலையாக வந்து எங்காவது நிற்கும் போது கோவில் திருவிழா பார்க்க நண்பன் அழைத்தால் " பொடியளை விட்டிட்டு வந்திட்டன், நான் வரேல்லை " என்று போக மறுக்கும் சாள்ஸ் என்ன நிகழ்ச்சி பார்ப்பதற்கென்றாலும் அது சரியோ தவறோ, தன்னோடு நிற்கும் போராளிகள் எல்லோரையும் அழைத்துச் செல்லாமல் ஒருநாள் கூட போயிருக்காத உயிர்த்தோழன்.

"எந்த மாவட்டத்துக்குப் போனாலும் அங்கு நிற்கும் யாராவது ஒரு போராளி வந்து சாள்ஸ் அண்ணையிட்டை சுகம் கேட்டதென்று சொல்லுங்கோ என்பான்" என்று சொன்னார் பிருந்தன். அந்தளவுக்கு வியாபித்திருந்தது அவன் நட்பு.

தவறிழைக்கும் போராளிகளைத் தண்டிக்கும் போது, அரவணைத்து, அன்பாகப் பேசி பிழைகளைத் தெளிவுபடுத்தும் விதம், அவனில் வேறுபட்ட ஒன்றாகவே கண்டோம்.

வகுப்பு எடுக்கும் பொழுது பகிடியாகவும் செல்லமாகவும் கதைத்து, தான் சொல்வதை அவர்கள், மன விருப்போடு கேட்டுப் படிக்கக் கூடியதாக விளங்கப்படுத்திக் கற்பிப்பது அவனுடைய பாணி. தனக்குத் தெரிந்த எல்லாவற்றையும் மற்றவர்களுக்குச் சொல்லிக் கொடுத்துவிடும் தன்மை அவனுடையது. கடலிலும், தரையிலும் தான் பெற்ற அனுபவங்கள், பட்ட துயரங்கள், திறமையான செயற்பாடுகள் என எல்லாவற்றையும் சொல்லிக் கொடுப்பான்.

"புத்தகத்தில் படித்த அறிவு இல்லாவிட்டாலும் பரவாயில்லை, அனுபவம் மூலம் படிக்க நிறைய இருக்கு. அனுபவம் பலதரப்பட்ட பாடங்களையும் எங்களுக்குக் கற்பிக்கின்ற ஒரு வழிகாட்டி " என்று சொல்லித்தான் வளர்ந்ததைப் போலவே பட்டறிவு மூலம் போராளிகளை வளர்க்கும் வழிமுறை அவனுடையது

ஒவ்வொரு கடற் சண்டையின் முடிவிலும், அந்தக் கள நிகழ்ச்சிகளின் போக்குகளை ஆழமாக நோக்கி, சரி பிழைகளை ஆராய்ந்து, அந்தப் பட்டறிவின் அடிப்படையில் அடுத்த சண்டையை நெறிப்படுத்துகின்ற அவன், ஓர் அனுபவசாலியான படைத்தளபதி. எப்போதும் தானே நேரில் கடலில் இறங்கி, சண்டைகளை வழிநடத்தி, வீரர்களுக்குச் சொல்லிக்கொடுப்பது அவனுடைய பாணி. சிரிப்பூட்டும் பகிடிகளாலும், பம்பல்களாலும் எங்களை இன்பத்திலாழ்த்தும் அவனுடைய கதைகள், ஒரு தனித்துவமான கலாரசனை. எப்போதும் கலகலப்பாக மகிழ்ச்சியாக பொழுதுகள் அவனோடு கழியும்.

போராட்டத்தைப் பற்றியும், இயக்கத்தைப் பற்றியும், தலைவரைப் பற்றியும் சொல்லிச் சொல்லி எப்போதும் எங்களை உற்சாகத்தில் வைத்திருப்பான் சாள்ஸ்.

என்றுமே மறக்கமுடியாத பசுமையான நினைவுகள் அவனுடையவை. இன்று எங்களோடு அவன் இல்லை. ஆனால், எல்லோருக்குள்ளும் அவன் நிறைந்திருக்கின்றான்.

சமர் முனைகளில் சண்டைகளை வழி நடாத்திக் கொண்டிருக்கும் அந்தத் தளபதி, மக்களை எங்களோடு இணைப்பதற்கு ஆற்ற வேண்டிய பணிகளைப் பற்றியும் சிந்திப்பான். ஒவ்வொரு தாக்குதலையும் தனியே இராணுவ வெற்றிகளாக மட்டும் வைத்துக்கொண்டிராமல், மக்களைத் தாயகப்பணிக்கு உள்வாங்கும் அரசியல் நோக்கங்களை நிறைவேற்றவும் அவ் வெற்றிகளைப் பயன்படுத்தினான். ஆனையிறவு கடல் நீரேரியில் கண்ணிவெடியில் உடைந்து பயனற்ற விதத்தில் கடலுக்குள் மூழ்கிய விசைப்படகைக் கூட, விரைவாகச் சுழியோடி கட்டியிழுத்து வந்து, வடமாராட்சியில் மக்கள் பார்வைக்கு வைத்தான்.

ஊர்காவற்துறைக் கடலில் சேதப்பட்ட நேவிப்படகையும், எடுத்த எல்.எம்.ஜி யையும் யாழ்ப்பாணக் கரையில் சனத்துக்குக் காட்டியதும், அவனது அரசியல் சிந்தனைக்குச் சான்றுகள். புலிகளின் வெற்றிக் களிப்புகளை மக்களோடு பகிர்ந்து கொண்டான் அந்தக் கடற்தளபதி. ஆனையிறவுக் கடல் நீரேரியில் சாள்ஸ் நடத்திய ஒரு தாக்குதல் மேனி சிலிர்க்க வைக்கும் கதை.

மதியத்திற்குப் பிந்திய பகற்பொழுது அது. எட்டு விசைப்படகுகளில் கடல்ரோந்து வந்து கொண்டிருந்த சிங்கள கடற்படையின் நீருந்து விசைப்படகு ஒன்று ஏற்கனவே சாள்ஸ் வைத்துவிட்டுக் காத்துக்கொண்டிருந்த கண்ணிவெடியில் சிதறி மூழ்கியது.

திகைத்துப் போன நேவியின் ஏழு படகுகளும் அவ்விடத்தைச் சூழ்ந்துவிட, படகையும் ஆயுதங்களையும் தங்கள் ஆட்களையும் மீட்க அவர்கள் முயன்றுகொண்டிருந்தனர். பூநகரிப்

பக்கமிருந்து அவசரமாக வந்த ஹெலி வட்டமிட்டபடி பாதுகாப்பு வழங்கிக் கொண்டிருந்தது.

சாள்சுக்கு ஏமாற்றம். படகையும், ஆயுதங்களையும் மீட்க முன்னர் அவர்களைத் தாக்கி விரட்டத் தயாரானான் அவன். கைவசமிருந்ததோ ஒரே ஒரு படகு, அதிலிருந்ததும் ஒரேயொரு கனரகத் துப்பாக்கி தான். அவர்களோ ஏழு சண்டைப் படகுகளில். ஹெலி வேறு மேலே. சமாளிக்க முடியுமா என கூடி நின்றவர்கள் சிந்திக்க, இன்னும் சில புலிகளுடன் படகைக் கடலில் இறக்கினான் அந்த வீரன்.

கரையிலிருந்து பார்த்துக்கொண்டிருந்த பிருந்தன் சொன்னார்.

"ஜி.பி.எம்.ஜி. ரவைகளைப் பொழிய மின்னலெனத் தங்களை நெருங்கிய தனித்த ஒரு படகைக் கண்ட நேவி அதிர்ந்து போனான். அவிழ்த்து விட்ட பட்டிமாடுகள் வரிசையாக ஓடுவது போல் , நேவிப் படகுகள் அனைத்தும் ஓட்டமெடுக்க ,மேலே நின்று சுட்டுக் கொண்டி ருந்த நேவியாலும் சாள்சை தடுத்து நிறுத்த முடியவில்லை."

அன்று கடலுக்குள்ளிருந்து படகையும்,ஆயுதங்களையும் மீட்டுத் தான் சாள்ஸ் வடமாராட்சியில் மக்கள் பார்வைக்கு வைத்தான்.

திருகோணமலையின் கடற்கரையோரம் உள்ளது திருக்கடலூர். அந்த வீரனைப் பெற்றுத் தந்த பெருமை அதற்குத்தான் சேரும். 1960 இன் கடைசி மாதத்தின் 15 ம் நாள், ஒரு அழு குரலுடன் அது நடந்தது.

அப்பா ஆனந்தராசாவிற்க்கும், அம்மா விஜயதேவிக்கும் மகனாக, 2 அக்காமாருக்கும் 4 தம்பிமாருக்குமிடையில் பிறந்தவனுக்கு, அவர்கள் ஆசையோடு வைத்த பெயர் தவராஜன்.

கடற்தொழில் அந்த குடும்பத்திற்கு மட்டுமல்ல, அந்தக் கிராமத்திற்கும் சொந்தமானது. புனித ஜோசப் கல்லூரியில் 10 ம் வகுப்பு வரை படித்துவிட்டு அப்பாவோடு தொழிலுக்குப் போனவன், சின்ன வயதிலேயே திறமை மிக்க படகோட்டியாகத் தேர்ச்சிபெற்றான். மட்டக்களப்பு தொழில்நுட்பக் கல்லூரியில் அவன் பாடத்திட்டம் ஒன்றை பூர்த்தி செய்வதற்கு, இயற்கையாகவே அவனிடமிருந்த ரெக்னிக்கல் மூளை துணையாக இருந்தது. தடங்கலின்றி சிங்களத்தில் உரையாடுவதோடு, ஆங்கிலத்தில் பேசும் ஆற்றலையும் சாள்ஸ் கொண்டிருந்தான்.

சிங்கள இனவாதப் புயல் எங்கள் தாய்நிலத்தில் கோரமாக வீசிய போது, எல்லோரையும் போலவே இந்தக் குடும்பத்தின் அமைதியான வாழ்வும் குலைந்தது.

பச்சைப் பேய்களின் பவனி. இராணுவ வண்டிகளின் வலம். சிங்களக் காடையர்களின் அட்டூழியம். திருகோணமலை எரிந்தது. தமிழர்கள் பிணங்களாய்க் குவிந்தார்கள். எங்கள் கடலில் அவர்கள். விடிகாலையில் கரையொதுங்கும் பிணங்கள். அந்த எரிமலை தனக்குள் குமுறும்.

www.padippakam.com



எல்லாவற்றுக்கும் மேலாக அன்புத் தம்பி ஜெயராஜனை சிங்களத் துப்பாக்கிகள் கொடூரமாகக் கொன்றபோது அவனால் தாங்கிக் கொள்ள முடிவில்லை.

தாயகத்திற்குச் செய்யவேண்டிய பணி, சொந்த வாழ்வையும் தாக்கிய பேரினவாதம், அவன் இயக்கத்திற்குப் போக முடிவெடுத்தான்.

புலிகள் இயக்கத்தின் தொடர்பு தேடி சந்து பொந்தெல்லாம் அலைந்து திரிந்தான். நீண்ட காலத்தின் பின், 1985 இன் நடுப்பகுதியில், அது கிடைத்தது. சந்தோஷம் மாஸ்ரரைத் தேடிப் பிடித்து இயக்கத்தில் சேர்ந்தவன், திருமலையில் இரண்டாவது பயிற்சி முகாமில் பயிற்சி எடுக்கும் போதே, புலேந்தி அம்மானின் கவனத்தை ஈர்க்குமளவுக்கு ஆற்றலை வெளிப்படுத்தி, திறம்படச் செயற்பட்டான்.

திருமலைக்கான கடல்மார்க்க விநியோகங்களைச் செய்வதே அவனுக்குக் கொடுக்கப்பட்டிருந்த வேலை. ஆனால், மிகச் சிரமமான அந்தப் பணியில் வண்டியோடிவிட்டுக் களைப்போடு வந்தாலும், ஆமிக்கு சக்கை அடிக்க சுரேந்திரன் வெளிக்கிட்டால் தானும் சேர்ந்து போவான்.

இப்படி தொடங்கியவன் தான், பின்பு கண்ணி வெடிவைக்கப்போகிறவர்கள் ஆலோசனை பெற்றுச்செல்லும் அளவுக்குச் "சக்கையில் எக்ஸ்பேட்" ஆகினான்.

திருகோணமலையில் சிங்களப்படை தனது முற்றுகையை இறுக்கிய ஒரு காலகட்டத்தை நினைவு கூர்ந்தான் பதுமன்.

அது இக்கட்டான சூழ்நிலை, உணவுக்கே பஞ்சமான நெருக்கடி, விநியோக வழிகள் எல்லாமே தடைப்பட்டுவிட்ட அந்த நாட்களில் புலிகளின் உணவுக் கால்வாயாக இருந்தவன் சாள்ஸ்தான். நிலமெல்லாம் ஆமி, கடலெல்லாம் நேவி. சாள்ஸ் படகெடுத்துப் போவான். அடிக்கடி கடலில் நேவி கலைப்பான். ஆனாலும் உணவோடு வந்து சாள்சின் வண்டி கரையைத் தொடும். "இன்று வண்டி ஓட முடியாது, கடலில் நேவி கூடுதலாக நிற்கிறான்" என்று வோக்கி அறிவிக்கும். அப்போதும் தோழர்களுக்கு உணவுதர வண்டியோடு கடலில் இறங்குவான், இந்த உயிர்த்தோழன்.

ஒரு நாள் சிங்களப் படையின் முற்றுகையின் போது காயப்பட்ட புலிவீரர்களைக் காவிக் கொண்டு அவனது படகு புறப்பட்டபோது, அமைதியாக இருந்த கும்புறுப்பிட்டிக் கடல், திடீரென வழமைக்கு மாறாய் மாறியது. கொந்தளித்த கடல் வண்டியைக் கவிழ்க்க, அலைக்குள் தவித்து, புண்ணுக்குள் பட்ட உப்புத் தண்ணீரால் துடித்த தோழர்களைப் பாதுகாப்பாக கரைக்கு கொண்டு வந்து சேர்த்தது கண்ணுக்குள் நிற்கிறது.

86 இன் இறுதி. சுற்றிவளைப்பொன்றில் காயமடைந்து யாழ்ப்பாணம் வந்தபின், தமிழகத்திற்கு வண்டியோட்டுவது அவனுக்கு ஒப்படைக்கப்பட்ட வேலை. அந்தப் பணியின் போது



படிப்பகம்

www.padippakam.com



அவன் நேவியிடம் கலைபடுவது மூன்றுநேர உணவைப் போல நிகழும் சம்பவம். அப்படியான ஒரு நாளில், முன்னிரவு நேரம், பொருட்களோடும், போராளிகளோடும் வந்துகொண்டிருந்த சாள்சின் படகை, திடீரென எதிர்ப்பட்ட நேவிப்படகு கலைத்துத் தாக்க, இயலுமானவரை வேகத்தைக் கூட்டிச் சாள்ஸ் ஓட முயல, பீரங்கிக் குண்டு பட்டு வெடித்துச் சிதறிய படகிலிருந்து அவன் தூக்கி வீசப்பட்டான். முகம்மது மாத்திரம் கண்ணுக்குத் தெரிந்தான்.

கரையை நோக்கி நீந்தத் தொடங்கினார்கள். மைல்க்கணக்கான தூரம். நேரம் செல்லச் செல்ல களைத்துப்போய் பின் தங்கிய முகம்மது கண்ணுக்கு முன்னாலேயே அலைகளுக்குள் காணாமல் போய்விட்டான்.

எல்லாம் போய்விட்டது. தோழர்களை இழந்த துயர். நடுச்சமுத்திரம். உள்ளிழுக்கும் கடல். தனித்த ஒருவன். தளராத உறுதி. 17 மணி நேரம் நீந்தி மறுநாள் மாலை வடமராட்சி கரையில் ஒதுங்கும் வரை, மயக்கம் தன்னை ஆட்கொள்ள அனுமதிக்காதிருந்தான் அந்த வேங்கை என்பதை, மற்றவர்கள் கற்பனைகூட செய்து பார்க்க முடியாது. அது அவனது மன வைராக்கியத்திற்குச் சான்று.

அந்த நினைவெல்லாம் நாங்களும் ஒருநாளைக்கு நேவிப்படகுகளைக் கலைத்து அடிக்க வேண்டுமென்ற வேட்கையை, அந்த வீரனுக்குள் வளர்த்துக் கொண்டிருந்திருக்கும்.

இந்தியப்படையின் ஆக்கிரமிப்புக் காலம். இப்போது அவனது பணி, மணலாற்றில் தலைவரின் நிழலில், போர்மையம் கொண்டிருந்த முனையில். மிகமிக இன்றியமையாத கடல்வழி விநியோகம்தான், இங்கும் அவனது வேலை. வண்டி ஓட்டிவிட்டு வந்து நிற்கும்போது களைப்போடு எங்காவது படுத்திருப்பான் என்று தேடினால், போராளிகளுக்குப் பாடம் சொல்லிக் கொண்டிருப்பான். அல்லது கொம்யூனிக்கேசன் செற்றில் ஏதாவது செய்துகொண்டிருப்பான். எதுவுமே இல்லா விட்டால், சமையற்கட்டில் கறிக்கு உப்புப்புளி சரிபார்த்துக் கொண்டாவது இருப்பான்.

இந்தியர்கள் வெளியேற்றப்பட்ட பின், சசிக்குமாரோடும் பிருந்தனோடும் யாழ்ப்பாணத்திலிருந்த பயிற்சி முகாம்களில் புதிய போராளிகளுக்கு துறை சார்ந்த வகுப்புக்கள் எடுத் துக்கொண்டு இருந்த சாள்ஸ், சிங்களப்படையுடன் மீண்டும் போர் தொடங்கிய பின், கடற்புலிகள் பிரிவோடு இணைக்கப்பட்டான்.

சாள்சின் எல்லாத் திறமைகளும், அனைத்து அம்சங்களும் முழுமையாக வெளிப்பட்ட காலம் அது.

விடுதலைப் புலிகளின் கடற்புலிகள் புதிய பரிமாணம் பெற்றபோது, தளபதி சூசையின் உற்ற தோழனாக நின்று, கடற்புலிகளின் வளர்ச்சிக்காக ஓய்வில்லாமல் அவன் உழைத்தான்.

சாள்ஸ் ஒரு கடற்காவியம்.!



படிப்பகம்

www.padippakam.com



"விடுதலைப் புலிகளின் வரலாற்றில் கடற்புலிகள் முக்கியமான ஒரு அத்தியாயம்" என்று தலைவர் அவர்கள் சொல்கின்றார். "கடற்புலிகளின் வளர்ச்சியில் சாள்ஸ் ஒரு பிரதானமான உந்துவிசை" என்கின்றார் தளபதி சூசை.

சாள்ஸ் !

ஒரு சிறந்த மனிதனாக, தேசப்பற்றும் உறுதியும் மிக்க போராளியாக, நட்புக்கொள் கிறவர்களுக்கு இனிய நண்பனாக, எதிரி அதிர சண்டைகளை வழிநடத்தும் தளபதியாக, புதியனவற்றை படைக்க முயலும் ஒரு தொழில்நுட்ப நிபுணனாக, போராளிகளுக்கு அறிவூட்ட விளையும் ஆசானாக, அலைகளை தோற்கடிக்கும் படகோட்டியாக, அட்டகாசமான சமையல்காரனாக, மக்களுக்கு பணிசெய்து நிற்கும் சமூகப்பற்றாளனாக.... இன்னும்... இன்னும்... எல்லாவற்றுக்கும் பொருத்தமானவன் அந்த விடுதலைப்புலி.

சின்ன குழந்தையாக தவழும் கடற்புலிகளை, பெரும்படை அமைப்பாகக் கட்டி எழுப்பும் கனவுகளோடு வாழ்ந்தானே அந்த வீரன்! தன்னையே உருக்கி அதன் அடிவேரில் பாய்ச்சியல்லவா அதனை நெடிதுயரச் செய்து கொண்டிருந்தான். ஏன் திடீரென எங்களை விட்டுப் போனான்?.

கண்ணுக்குள் சுழல்கிறது அந்த நிலவு முகம். இறுதி நாட்களில் கிளாலிக் கடலில், எதிரிக்கு முன்னால் அது செஞ்சூரியனாய்ச் சுட்டெரித்தது.

24.06.1993 அன்றிரவு.

20 மைல் நீளப் பெருங்கடல், படகோட்டம் தொடங்கிவிட்டது. ஏக்க விழிகளோடு படகுகளில் மக்கள். தமிழரின் பிணந்தின்னக் காத்திருக்கும் சிங்களச் சுறாக்கள். மக்களைக் காக்கும் பணியில் அவர்கள் குழந்தைகள். அவர்களை வழிநடத்தியபடி களத்தில் சாள்ஸ்.

ரவைகளைப் பொழிந்தபடி விரைந்து வருகின்றன எதிரியின் படகுகள். நேருக்கு நேர் எதிர் கொள்கின்றன புலிகளின் படகுகள். பிப்ரியும், எல்.எம்.ஜியும் தணல் கக்கிய ஒரு படகில் சாள்ஸ். இருள் வானைக் கிழித்தன ஒளிக்கோடுகள். அதிர்ந்து போனான் எதிரி!

எதிர்பாராத கணம்! திடீரென எல்.எம்.ஜி இயங்க மறுத்தது. அது கைவிட்டுவிட்டது. சாள்சின் கையிலிருந்து முழங்கிய பிப்ரியை மட்டும் நம்பி எதிரியை நெத்தி முட்ட நெருங்கியது படகு! இடைவெளி நன்றாகக் குறுகிவிட்ட நிலையில் இன்னொரு எதிர்பாராத கணம் பிப்ரியும் இயங்க மறுத்துவிட்டது. சாள்ஸ் திரும்பத் திரும்ப கோக் பண்ணி கோக் பண்ணி அடிக்கவும், அது பிசகிக் கொண்டேயிருந்தது. எதுவுமே செய்யமுடியாத சூழ்நிலையில், படகைப் பக்கவாட்டாக திருப்பி எடுக்க முயல, நேவியோடு போராடப் பிப்ரியோடு போராடிக்கொண்டிருந்த சாள்சின் உடலைத் துளைத்துச் சென்றன ரவைகள்! உடனடியாக கரையை நோக்கித் திருப்பப்பட்டது படகு. இரத்தம் வெளியேறிக் கொண்டிருந்தது. நீளக்கடல். ஓட ஓட கடலும் நீண்டுகொண்டேயிருக்க, இரத்தப் பெருக்கு அதிகமாகிக் கொண்டே போனது. சண்டையின்



படிப்பகம்

www.padippakam.com



துவக்கத்திலேயே நாங்கள் மகானை இழந்துவிட்டோம். படகு கரையைத் தொடும் போது எங்கள் சாள்சும் எங்களை விட்டுப் போய்விட்டான்.

மக்களின் படகுகள் பாதுகாப்பாக மறு கரையை அடைந்து கொண்டிருந்தன.

ஓ..... சாள்ஸ்! எங்களின் கடற்போர்த் தளபதியே! உனது நினைவுகளையும், கனவுகளையும் எங்களோடு விட்டுச் சென்று விட்டாய். நீ சுமந்த இலட்சியத்தை நாங்களும் சுமக்கின்றோம். அதை அடையும்வரை நாங்கள் ஓயமாட்டோம், உன்னைப் போலவும் கடலின் அலையைப்போலவும்!

– விடுதலைப் புலிகள்



படிப்பகம்

www.padippakam.com





# லெப்டினன்ட் திலக்

## (சேதுலிங்கம் கிருஷ்ணவரதன்)

## வீரமரணம் : 22.07.1991

இந்திய இராணுவம் எமது மண்ணை ஆக்கிரமித்து பல அழிவுகளை செய்து கொண்டிருந்தகாலம். வீதிகள் ஒழுங்கைகள் எங்கு பார்த்தாலும் வெறிநாய்களின் வேட்டை. அமைதிப்படை என்று வந்து குழந்தைகள், பெண்கள் என்ற வேறுபாடு இன்றி தமிழீழ மண்ணை அழித்து அட்டகாசம் செய்து கொண்டிருந்தகாலம்.

எமது மக்களைக்காக்க என்று சொல்லி இந்த மண்ணில் வந்தவர்கள் எமது மக்களையும் கலை, பண்பாட்டையும் அழிப்பதைக்கண்டு சிறுவர் முதல் பெண்கள் வரை எமது மண்ணைக்காக்க எழுந்தனர்.

சிறு வயதில் இருந்தே துடிப்புடன் எந்தக் காரியத்தையும் துடுக்குடன் செய்யும் கிருஸ்ணவரதன் என்ற இயற்பெயர் கொண்ட இவன் கடலால் சூழப்பட்ட வல்வெட்டித்துறையில் ஆதிகோவிலடி என்னும் கிராமத்தில் சேதுலிங்கம் வள்ளியம்மா தம்பதிகளின் மூத்த மகனாக 10.09.1972 இல் பிறந்தான். இவன் 17.01.1989 இல் புலிகளுடன் தன்னை ஒரு முழுநேர உறுப்பினராக இணைத்துக் கொண்டான். புலிகளின் கானகப் பாசறை பல புலிகளை இந்த மண்ணில் உருவாக்கிவிட்ட மணலாறு பயிற்சி முகாமில் பயிற்சி எடுப்பதற்காக அனுப்பப்பட்டான்.

இங்கு "திலக்" என்ற பெயருடன் பயிற்சியைத் தொடங்கிய இவன் பயிற்சியில் மிகவும் கட்டுப்பாடுடனும், திறமையுடனும் நடந்து கொண்டான். இதனால் பல தடவைகள் முகாம்பொறுப்பாளராலும், பயிற்சி அளித்த ஆசிரியர்களாலும் வெகுவாகப் பாராட்டப்பட்டு வந்தான்.


படிப்பகம்

www.padippakam.com



எந்த வேலையைக் கொடுத்தாலும் முகமலர்வுடன் ஏற்று அதைச் செய்து முடிப்பதில் இவனுக்கு நிகர் இவனே தான். காட்டுப்பகுதியில் உணவுப் பொருள்களில் இருந்து சகல விதமான பொருள்களையும் தலையில் சுமந்தே செல்ல வேண்டிய நிலை. தூர இடங்களில் இருந்து பொருள்களை எடுத்து வருவதானால் பொறுப்பாளரால் தெரிவு செய்யப்படும் குழு திலக்கின் குழு வாகவே இருக்கும்.

அவன் தான் சோர்வின்றி தன் குழுவில் உள்ளவர்களையெல்லாம் பாட்டாலும் பகிடிப் பேச்சாலும் சிரிக்க வைத்து வேலைகளை களைப்பின்றிச் செய்யும் திறமையுடையவன். பயிற்சி முகாமில் நடைபெறுகின்ற கலை நிகழ்ச்சிகளில் திலக் இல்லாமல் இருக்காது. எதாவது ஒரு நிகழ்ச்சியிலேனும் அவன் பங்குஇருக்கும். அப்படி இல்லாவிட்டால் சக போராளிகள் கட்டாயப்படுத்தி 'திலக் ' அண்ணை மேடையில் எறுங்கோ" ஒரு பாட்டென்றாலும் கட்டாயம் பாடவேண்டும்" என்பார்கள், அவர்களின் அன்புக்காக பாடுவான்.

இவனுடைய ஒவ்வொரு அசைவும், பேச்சும் ஒரு முழுமையான விடுதலைப் போராளிக்கு உரியனவையாகவே இருக்கும் எப்போ எடுத்தாலும், தனது குழுவில் உள்ளவர்களிடம் மச்சான் சண்டை பிடிக்கவேணும், ஆமிக்கு நாம் யார் என்று காட்டவேண்டும் என்று பேசிக் கொள்வான்.

பயிற்சிக் காலத்தில் இப்படி விடுதலை உணர்வுடன் இருந்து திலக் பயிற்சியை முடித்து வெளியே வந்தான். பயிற்சியில் இவன் காட்டிய திறனும் போராட்ட உணர்வும் "எமது வெற்றிக்கு" கடுமையான பயிற்சியும் மன உறுதியும் தான் காரணம் என்ற தலைவரின் கூற்றுக்கு அமைய மேலும் பயிற்சி எடுக்க விரும்பிய இவனை வயதில் சிறியவனாக இருந்தாலும் இவன் திறமையையும் ஆர்வத்தையும் கண்டு மேலதிக பயிற்சிக்கும் அனுப்பபபட்டான். அங்கும் இவன் முதன்மை மாணவனாக இருந்து பலபேரின் பராட்டைப் பெற்றான்.

இப் பயிற்சியையும் முடித்து வெளியே வந்த நேரத்தில் இரண்டாவது ஈழப்போர் ஆரம்பமானது. இதனைத் தொடர்ந்து இன அழிப்பில் ஈடுபட்டு வந்த சிங்கள வெறியர்களின் முகாம்களை அழித்திட புலிகள் செயற்பட்டு வந்தனர். இதன் முதல்படியாக கொண்டச்சி இராணுவமுகாம் தகர்ப்பு இடம்பெற்றது. இத்தாக்குதலில் திலக்கின் பங்கு அளப்பெரியது. தாக்குதல் தொடங்கியது ஒரு பக்கமாக திலக் நின்ற அணி எதிரியின் முகாமுக்குள் புகுந்து அவனை அழிக்கவேண்டும். புலிகளின் கரங்களில் இருந்த துப்பாக்கி நெருப்பைக் கக்கியவண்ணம் முன்னேறிச் சென்றது. திலக்கின் துப்பாக்கி மின்னலாக சுழன்றது. அதில் எதிரிகள் பலர் கண் முன்னே விழுந்தனர். முதலாவதாக இவன் சென்ற அணியே முகாமுக்குள் புகுந்தது. பல ஆயுதங்களுடன் பவள் கவச வாகனம் ஒன்றும் புலிகளால் கைப்பற்றப்பட்டது.

இதனைத் தொடர்ந்து பரந்தன் பக்கமாக முன்னேற முயன்ற இராணுவத்தினர் மீது கடும் தாக்குதல் தொடுக்கப்பட்டது. இதில் இவன் காட்டிய வீரம் இவனோடு களம்சென்ற அனைத்து போராளிகளையும் ஒரு கணம் சிந்திக்க வைத்தது. சண்டை முடிந்து முகாம் திரும்பியதும் இங்கு வராமால் தொடர்ந்து சண்டை செய்து கொண்டு இருக்கவேண்டும் என்று



படிப்பகம்

www.padippakam.com



கூறிக்கொண்டு இருந்தான்.

சண்டையில் இவன்காட்டும் வீரமும் துணிச்சலும் எல்லோரையும் இவன் பக்கம் ஈர்த்தது. எல்லோருக்கும் முன் உதாரணமாக திலக் செயற்பட்டான் சண்டைக்கு போராளிகளை தெரிவு செய்யும் போது இவன் பெயர் இடம்பெறாவிட்டால் எதற்கும் முகம் சுளிக்காத இவன் முகம் சுளிப்பான், யாருடனும் பேசமாட்டன்.

"இவ்வளவு பேரும் சண்டைக்கு போக நான் மட்டும் இங்கு நிற்பதா" என்றுகூறிக்கொள்வான். இவனின் இந்த மாறுதலைப் பார்த்து இவனும் சண்டை அணியில் சேர்த்துக் கொள்ளப்படுவான்.

இப்படித் தான் கொக்காவில் இராணுவ முகாம் தாக்குதலுக்கு சென்ற அணியில் இவன் சேர்த்துக் கொள்ளப்பட்டான்.அங்கும் இவன் காட்டிய வீரம் எல்லோரும் இவன் போலவே இருக்க வேண்டும் என்ற எண்ணத்தை எல்லோரிடமும் தோற்றுவித்தது. வீரத்திலும், விவேகத்திலும், இலட்சியத்திலும் இவன் எப்படி இவ்வளவு திறன் பெற்றான் ? அதுதான் ஒவ்வொரு போரளியையும் தனது பிள்ளையாக வளர்க்கும் தலைவனின் கண்காணிப்பில் வளரும் புலிகளின் திறன்.

இதனைத் தொடர்ந்து யாழ்ப்பாண மண்ணை ஏனைய பிரதேசங்களுடன் பிரித்து நிற்கும் ஆனயிறவு முகாம் முற்றுகையின் முதல் கட்டமாக ஆனையிறவு உல்லாசவிடுதி மினிமுகாம் புலிகளின் சில நிமிடத் தாக்குதலில் அழிக்கப்பட்டது. இத்தாக்குதலில் திலக் காட்டிய வீரமும் விவேகமும் இவனுக்கே உரியது சில நிமிட நேரத்தில் முகாம் வீழ்ச்சி அடைந்தது என்றால் அதில் சென்ற அணிகள் எவ்வளவு வேகத்தில் தாக்கியிருப்பார்கள். இதனால் முகாமுக்குள் இருந்த எதிரிகள் பயப் பீதியால் ஆட்டம் இழந்தார்கள். தமது உயிர் திரும்பாது என்னும் முடிவுக்கு வந்தனர். எமக்கு உதவி செய்யும் படி இராணுவத்தினர் இராணுவத்தளபதிகளிடம் உயிர் பிச்சை வேண்டினர். இதன் காரணமாக முற்றுகையை முறியடிக்கவென்று கட்டைக்காட்டுப் பகுதியில் இராணுவம் தரையிறக்கப்பட்டது.

24மணி நேரத்தில் முற்றுகையை முறியடிப்பதாகக் கூறிக்கொண்ட இராணுவம் 24நாட்களுக்கு மேல் போரிட வேண்டிய நிலை ஏற்பட்டது. கடற் கப்பலின் மூலம் தரையிறக்கப்பட்ட இராணுவத்தினரை எதிர்கொள்ள போராளிகள் கட்டைக்காட்டுப் பகுதியைநோக்கி விரைந்தனர். மூண்டது கட்டைக்காட்டுப்போர். உல்லாச விடுதிப்பகுதியில் சண்டையில் நின்ற திலக் கட்டைக்காடு செல்ல விருப்பம் கொண்டு பொறுப்பாளரிடம் கேட்டபொழுது இவன் ஆர்வத்தைக் கண்ட அவர் அங்கு சென்ற அணியுடன் இவனையும் அனுப்பி வைத்தார். அங்குலம் அங்குலமா முன்னேறி வந்த இராணுவத்தினர் இவர்களின் கடும் எதிர்பைக் கண்டு திணறினர்.

போருக்கெல்லாம் தாய்ப்போர் என்று கொக்கரித்தான் எதிரி. இலங்கையில் இரண்டு இராணுவங்கள் உண்டு என்று கூறும் அளவுக்கு திலக் போன்ற நிகரில்லாத வீரர்கள் காட்டிய வீரமே காரணம். இராணுவம் முன்னேறிக்கொண்டு இருந்த நேரத்தில் இடையில் உட்சென்று



படிப்பகம்

www.padippakam.com



தாக்குவததற்காக ஓர் அணி தெரிவு செய்யப்பட்டது அத்தாக்குதலில் திலக்கும் இடம் பெற்றான்.

உட்சென்று தாக்கும் தாக்குதல் தொடங்கியதும் போராளிகளின் ஆயுதங்கள் தீப்பிழம்பாக உட்புகுந்தன எதிரி திசை தெரியாமல் ஓடினான் எம்மவர்களின் குண்டுகள் எதிரியைச் சல்லடை போட்டது. பல இராணுவத்தினர் கொல்லப்பட்டு பல நவீனரகஆயுதங்கள் கைப்பற்றப்பட்டதுடன் இராணுவத்தினரின் உடல்களும் கைப்பற்றப்பட்டது. இதில் திலக் காட்டியவீரம் இன்றும் போராளிகள் மத்தியில் பேசப்படுகின்றது. இச் சண்டையின் பின்னரும் முன்னேறி வந்த இராணுவத்துக்கு எதிராக தொடர்ந்தும் போராடினான். 22.07.1991 அன்றும் தொடர்ந்து நடைபெற்ற மோதலில் எதியின்ரவை பட்டு வீரமரணத்தைத்தழுவிக் கொண்டான்.

இவன் கண்ட கனவை நனவாக்க இவன் சிந்திய செங்குருதியில் சிவந்த மண்ணில் செங்கொடி ஏற்றிட ஆயிரமாயிரம் வேங்கைகள் உருவாகிக்கொண்டே உள்ளனர். வீரத்துக்கு உதாரணமான இந்த வீரனின் நினைவுகளும் அனைத்துப் போரளிகளின் இலட்சிய உணர்வுகளும் என்றும் எம்மோடு தொடர்ந்துவரும்...

–ஈழநாதம்



படிப்பகம்

www.padippakam.com





# மேஜர் சுருளி

**(கந்தசாமி சிறிதரன்)**

**வீரமரணம் : 30.05.1991**

# கந்தசாமி ரதிதரன்

**வீரமரணம் : 15.10.1987**

இராணுவ வாகனங்கள் யாழ்.நகர வீதிகளில் அரக்கத்தனமாக வலம் வரும் காலம், ஒளிந்தும், மறைந்தும் புலிகள் இயங்கிய நாட்கள் இரவு வருவதற்காய் போராளிகள் காத்திருப்பார்கள். இரவிற்காக காத்திருக்கும் புலிகளில் சுருளியும் ஒருவன்.

அவனது போராட்ட வாழ்வு பெரும்பாலும் இரகசியம் நிறைந்ததும், மறைவானதுமாகவே இருந்தது.

அன்றைய இரவுகள் மிகப் பயங்கரமானவை. எந்த வீதியிலும், எங்கும் இராணுவ ஓநாய்கள் வாய்பிளந்து நிற்கும், சில நேரங்களில் இரவின் அமைதியை துப்பாக்கிகளின் வேட்டுக்கள் கலைக்கும்.

ஒரு போராளியோ, அல்லது எந்த ஒரு வேலைக்குப்போன தமிழ் மகனோ வீதியை முத்தமிட்டுக் கிடப்பான்.

சுருளி இயக்கத்துக்குள் தன்னை இணைத்துக் கொண்டதுமே அவனுக்குக் கிடைத்த வேலை, எமது இயக்கத்தின் பெறுமதி மிக்கவையான இராணுவத் தளபாடங்கள், ஆவணங் களைப் பாதுகாக்க வேண்டிய பொறுப்பேயாகும். அந்த நேரங்களில், எம்மிடமிருந்தவையோ சில ஆயுதங்கள் தான். அவற்றை இழந்து விட நாம் ஒரு போதும் தயாராக இல்லை. ஏனென்றால், எங்கள் விடுதலைப் போராட்டத்தை வளர்த்தெடுக்கும் உன்னதமான கருவிகள்



படிப்பகம்

www.padippakam.com



அவை. அவற்றைப் பாதுகாப்பதற்காக ஒவ்வொரு போராளியும் உயிரையும் கொடுக்க தயாராக இருந்தான். அப்படிப் பட்டதொரு பொறுப்பான வேலை தான் சுருளிக்கும் கிடைத்தது.

பண்டிதர் அண்ணை தான் அந்த நாட்களில் இயக்கத்தின் பல்வேறு வேலைகளுக்கும் பொறுப்பாக நின்று செயற்பட்டுக் கொண்டிருந்தார். அந்த நெருக்கடி மிகுந்த நேரங்களில் பண்டிதர் அண்ணைக்கு உறுதுணையாக நின்று செயற் பட்டவர்களில் சுருளியும் ஒருவன். பண்டிதருக்கு சுருளி ஒரு செல்லப்பிள்ளை. பண்டிதர் அவனில் மிகுந்த அன்பை வைத்திருந்தார். அதே நேரம் பெரு நம்பிக்கையையும் வைத்திருந்தார். அவரின் கைகளுக்குள் நின்று சுற்றிச் சுழன்று வேலை செய்தவன் சுருளி. அவரின் கைகளுக்குள்ளேயே வளர்ந்தவன். அவனைப் போன்ற இரவுப் பறவைகளின் பறப்புக்கள் தான் இயக்கத்தைக் காத்தது, போராட்டத்தை வளர்த்தது.

இயக்கத் தளபாடங்களை பாதுகாத்தல் என்பது இலகுவான ஒன்றல்ல, மிகவும் கடினமான பணி, இரவு முழுவதும் ஆந்தை மாதிரி கண் விழித்து வேலை செய்ய வேண்டும். மழைக்கும், வெயிலுக்கும் பாதுகாக்க வேண்டும். அதே நேரம் எதிரியின் கழுகுக் கண்களுக்கும் மறைக்க வேண்டும். இதில் ஏற்படும் சின்னத்தவறு கூட இயக்கம் ஓர் ஆயுதத்தை இழக்க வேண்டிய நிலையை ஏற்படுத்தலாம்.

சுருளி எவருடனுமே இலகுவாகப் பழகுவான், அவர்களின் நம்பிக்கையையும் பெற்று விடுவான். அவனது அந்த இயல்பே அவனுக்கு வழங்கப்பட்ட வேலைகளுக்கு பெரும் உதவியாக இருந்தது. அவனுடைய தோழர்கள் அவனைக் கேலி செய்வதுண்டு. எப்பவுமே சிரித்தபடி திரிகிறாயடா என்று. கள்ளங் கபடமற்ற இந்தப் பிறவி ஓர் உயர்ந்த போராளியாக வாழ்ந்தான்.

அந்த நேரத்தில் தான் ஒரு கடுமையான சுற்றிவளைப்பிற்கு உட்பட்டு பண்டிதர் அண்ணையும் எங்களின் சில தோழர்களும் வீர மரணத்தை சந்தித்தார்கள். பண்டிதர் அண் ணையின் வீரமரணம் சுருளியை நன்றாகவே பாதித்தது. இயக்கத்திற்கு வந்தநாள் தொடக்கம் பண்டிதருக்கு பக்கத்திலேயே திரிந்த அவனால் அவரின் இழப்பை தாங்க முடியாமலிருந்தது. அன்று தொடக்கம் எத்தனையோ இரவுகளில் பண்டிதரின் நினைவுகள் இவனது விழிகளை நனைத்திருக்கிறது.

பண்டிதரின் வேலைகளை மேஜர் அல்பேட் பொறுப்பெடுத்த பொழுது, அல்பேட்டுடன் இணைந்து சுருளியும் வேலைகளைச் செய்தான். யாழ்.பொலீஸ் நிலையத்தின் மீது புலிகள் தாக்குதலை நடாத்திய பொழுது அல்பேட்டின் தலைமையில் சுருளியும் கலந்து கொண்டான். அந்த நேரங்கள் தான், இராணுவ முகாம்களை நாம் எமது கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வந்தகாலம். அச்சந்தர்ப்பங்களில் பல தாக்குதல் நடவடிக்கைகளில் சுருளியும் ஒருவனாக பங்கு பற்றினான்.

சுருளி ஒரு சாதாரண சுருட்டுத் தொழிலாளியின் மகன். யாழ் மாவட்டத்தில் உள்ள



படிப்பகம்

www.padippakam.com



சுதுமலை கிராமம் தான் அவனது பிறப்பிடம். அங்குள்ள அம்மன் கோயிலடியில் ஓடித்திரிந்து வளர்ந்த பிள்ளை அவன், கோயிலடி வீதியிலும், மழை வெள்ளக் காலங்களில் வயல் வெளிகளிலும் விளையாடித் திரிந்த இவனின் நெஞ்சத்தில் விடுதலை உணர்வும் துளிர்க்கத் தொடங்கியது.

அது ஆயுதப் போராட்டத்தின் ஆரம்ப காலம், விடுதலை இயக்கம் எது, சமூக விரோதக் கும்பல்கள் எதுவென பிரித்தறிய முடியாத நிலை, நரிகளெல்லாம் புலி வேசம் போட்டு நின்றன. உண்மையான விடுதலை இயக்கமொன்றுடன் தன்னை இணைத்துக் கொள்ள வேண்டும் என்ற தாகம் சுருளியில் படிந்து கொண்டது. அவனுடன் அவனது கிராமத்து நண்பர்கள் சிலரும் சேர்ந்து கொண்டனர்.

அவர்கள் தெரிந்துகொண்டதெல்லாம், தலைவர் பிரபாகரனைப் பற்றி, அவரின் வீரத்தைப் பற்றி, அவரால் வகுக்கப்பட்ட கட்டுப்பாடுகளைப் பற்றித்தான், புலிப்படையைத் தேடி அவர்கள் அலைய வெளிக்கிட்டார்கள். புலிகள் மட்டும் கண்ணுக்குத் தெரியவே இல்லை, மற்றும் படி எல்லா இயக்கத்தவர்களும் கால்களிற்குள் நின்றனர்.

"இயக்கத்தில் சும்மா ஆள்ப்பொலிவிற்கு சேரக்கூடாது, செயற்பட வேண்டும், ஒழுங்கும் கட்டுப்பாடும் வேணும், அதோடு விடுதலைப் போராட்டத்தை முன்னெடுத்துச் செல்லுற உறுதியும் தீவிரத்தன்மையும் வேணும். இதையெல்லாம் பார்த்துத் தான் நாங்கள் இயக்கத்தில்சேர வேண்டும்" என்று கூறித் தன் நண்பர்களை தவறான வழிகளுக்குச் சென்று விடாமல் பார்த்துக் கொண்டான் சுருளி.

இறுதியில் அவன் தான் எங்கோ அலைந்து புலிகளில் ஒருவரைச் சந்தித்துக் கொண்டான்.

அந்த நேரங்களில்தான், ஒரு நாள், மானிப்பாய் கிராம மக்களை துப்பாக்கி வேட்டோசை கண்விழிக்கச் செய்தன. காலை ஆறு மணிக்கு பிரயாணிகள் பேருந்து ஒன்றை மறித்த பச்சை பேய்கள் அதிலிருந்தவர்களை இறக்கி, வரிசையில் நிக்க வைத்து சுட்டுக்கொன்றனர்.

காலையில் படிப்பதற்காக வந்த மாணவர்கள், பேரூந்துச் சாரதி இன்னும் பொதுமக்கள் சிலர்– உடல் சிதறி உயிரற்றுக் கிடந்தார்கள். அந்த இராணுவ மிருகங்கள், இந்தச் செய்தி தெரியாது வந்த மினிபஸ் ஒன்றையும் மறித்து அதில் ஏறினர். அந்த மினிபஸ் மானிப்பாயிலிருந்து மாதகல் இராணுவ முகாமை நோக்கி ஓட வெளிக்கிட்டது. அது ஓர் துயரம் நிறைந்த சம்பவம். அந்த பஸ்ஸிற்குள் இருந்த ஒவ்வொரு தமிழனும் கொடுமையாக சித்திரவதை செய்யப்பட்டான். சுடப்பட்டு வீதி வீதியாக வீசப்பட்டார்கள். அந்த பச்சை மிருகங்களின் கோரப்பற்கள் எங்கள் தேசத்தின் வீதிகளைச் சிதைத்துச் சென்றன.

அந்தச் சம்பவத்தின் பின்பு, வெளியில் வாழ்வதற்கு சுருளியின் மனம் இடந்தரவில்லை, அவன் ஒரு முழுமையான போராளியாக மாறிவிட்டான். பண்டிதர் அண்ணையுடன் இணைந்து வேலை செய்யத் தொடங்கினான்.

www.padippakam.com



காலங்கள் ஓடின. விடுதலைப் போராட்டம் தொடர்ந்தது. சுருளியின் தம்பிகளில் ஒருவரான ரதிதரனும் புலிகளுடன் இணைந்து கொண்டான்.

இந்தியப் படைகள் தமிழீழத் தேசத்தின் மீது ஆக்கிரமிப்பை நடத்தி, ஒரு போரைத் தொடக்கிய நேரம் எம் தேசமெங்கும் ஆயிரக்கணக்கான மக்கள் கொல்லப்பட்டார்கள். தமிழ்ப் பெண்களில் பலர் படு மோசமாக பாலியல் வன்முறைக்கு ஆளானார்கள். இந்த மண்ணை நேசித்தவர்கள் பலர் பிடித்துச் செல்லப்பட்டார்கள், சித்திரவதை செய்து கொல்லப்பட்டார்கள். தமிழீழத் தேசத்தில் விலக இடமின்றி இந்தியர்கள் நிறைந்து போய் நின்றார்கள்.

அந்த நிலைகளில், ஆயுத தளபாடங்களையும் ஆவணங்களையும் பாதுகாப்பதற்காக சுருளியும் அவன் தோழர்களும் கடுமையாகப் போராடினார்கள். அந்த நாட்களில் அவர்கள் விடுதலைப் போராட்டத்தை பாதுகாத்தார்கள். அதற்காக ஆயுதங்களைப் பாதுகாத்தார்கள்.

சில நாட்கள் சென்றன. இந்தியப் படைகள் சுருளியை தேடத் தொடங்கினர். சுருளியின் வீடு அடிக்கடி சுற்றி வளைக்கப்பட்டது. போராட்டத்திற்காக இருவரைத் தந்த அவனின் குடும்பம் கொடுமையான சித்திரவதைக்கு ஆளானது. பல வருடங்களாக இருந்த பகையுணர்வை சமூக விரோதி ஒருவன் இந்தியர்களுடன் சேர்ந்து நின்று தீர்க்கத் தொடங்கினான்.

அப்போது தான் ஒருநாள் சுருளியின் தம்பி ரதிதரனும் அவனது தோழர்களும் இந்தியப் படைகளாலும் தேசவிரோதிகளாலும் சுற்றிவளைக்கப்பட்டார்கள். சின்னதொரு சண்டை, ரதிதரனின் உடலிலும் சில ரவைகள் பட்டன. அவனது தோழர்கள் தப்பிச் சென்றனர். ரதிதரனின் உயிரற்ற உடலை இந்தியச் சிப்பாய்கள் வீதியால் இழுத்துச் சென்றார்கள். இந்த மண்ணை நேசித்த போராளி ஒருவன் தேசவிரோதிகளாலும், இந்தியர்களாலும் இந்தத் தேசத்தின் தெருக்கள் வழியே இழுத்துச் செல்லப்பட்டான்.

இந்திய இராணுவத்தினர் இங்கு நின்ற பொழுது சில காலம் வன்னியில் நின்ற சுருளி, மீண்டும் யாழ்ப்பாணத்தில் வந்து நின்று செயற்படத் தொடங்கினான். ஆபத்து நிறைந்த அந்த நேரங்களில் சுருளியும், அவனது தோழர்களும், மிக அவதானமாகச் செயற்படவேண்டியிருந்தது! தேசவிரோதிகளும், இந்தியர்களும் வீதிக்கு வீதி, சந்திக்குச் சந்தி முகாமிட்டு நின்றார்கள், தமிழீழ மக்கள் இந்தியத் துப்பாக்கிகளின், முனைகளில் நின்று வாழ்ந்தனர்.

அந்த நேரம் தாக்குதலுக்குத் தேவையான ஆயுதங்களை மறைவிலிருந்து எடுக்க வேண்டியிருந்தது. ஏனையவற்றைப் பாதுகாக்க வேண்டியிருந்தது. இதற்காக சுருளியும், அவனது தோழர்களும் நம்பிக்கையானவர்களைத் தேடி அலைய வேண்டி இருந்தது.

இந்தியப் படைகள் இந்த மண்ணை விட்டு வெளியேறிய பின்பு, புலிகளின் புலனாய்வுப் பிரிவில் இணைந்து சுருளி செயற்பட்டான்.



படிப்பகம்

www.padippakam.com



சுருளி, கொடுக்கப்படும் எந்த வேலையையும், பொறுப்புணர்ச்சியுடன் சிறப்பாக செய்து முடிப்பவன். பண்டிதரிடமிருந்து இவனில் தாவிக் கொண்டதில் ஒன்று எளிமை.

தன்னைக் கவனியாது ஒரு சைக்கிளில் கிராமத்து வீதிகளால் ஏதோவொரு வேலைக்காக ஓடித்திரியும் சுருளி .... ஒரு வெடிவிபத்தில் சிக்கினான்.

மூன்று நாட்கள் அவன் சாவுடன் போராடினான். ஆனாலும் 30.05.1991 அன்று மேஜர் சுருளி வீரமரணத்தைச் சந்தித்துக் கொண்டான்.

– விடுதலைப்புலிகள்



படிப்பகம்

www.padippakam.com





# வீரவேங்கை ஜஸ்மின்

பன்குளம், அழகான தமிழ்க் கிராமம் முக்காலமும் நீர் நிறைந்து நிற்கும் குளம், குளத்திற்கு கீழாக பரந்து விரியும் வயல் நிலங்கள் வறுமைக்கு அங்கு என்ன வேலை.

தமிழ் பகுதியான பன்குளத்திலும் சிங்களக் குடிகள் பரவத் தொடங்கின காணி இல்லாத சிங்களவர்களுக்கு நிலம் வழங்க தமிழர் கிராமமான பன்குளத்திற்குள் சிங்கள அரசு இடம் கண்டுபிடித்தது.

தமிழர்களுக்கு நடுவில் சிங்களவர்களும் அங்கு குடியிருத்தப்பட்டார்கள்.

பன்குளத்தில் நடுத்தர வசதி வாய்ப்புக்களைக் கொண்ட குடும்பமொன்றைச் சேர்ந்தவள் தான் ஜஸ்மின். அப்பா, அம்மா, அக்கா, அண்ணா, தம்பி என்ற சிறிய வட்டத்தினுள் அவளும் ஒரு சிறுமி.

வீடு, அழகான கிராமத்தின் வீதிகள், வயல்கள் எங்கள் சொந்த ஊரில் நாங்கள் வாழ்கிறோம். இந்த வாழ்வு நிரந்தரமானது என்று தான் அங்கு எல்லோரும் நினைத்தார்கள்.

ஆயிரத்துதொளாயிரத்து எழுபத்தி ஏழு இலங்கை முழுவதற்குமான தேர்தல் முடிவுற்று ஜெயவர்த்தனாவின் ஐக்கிய தேசியக் கட்சி அரச கட்டில் ஏறி இருந்தது. தமிழர்கள் தங்கள் தேசம் சிறிலங்காவிலிருந்து விலகிச் செல்வதற்காக வாக்களித்திருந்தார்கள்.



படிப்பகம்

www.padippakam.com



தமிழர்களின் ஒன்றிணைவைக் கண்ட சிங்கள ஆட்சியாளர்கள் சினம் கொண்டார்கள். நள்ளிரவு பன்குளம் கிராமம் தீப்பற்றி எரிந்தது, நெருப்பினூடே சிங்களக் காடையர்கள் தமிழர்கள் மீது பாய்ந்தனர். அப்போதெல்லாம் ஜஸ்மினுக்கு நான்கு வயது தான் நிறைந்திருந்தது.

கிராமம் தீப்பற்றி எரிந்ததும் அவளை அணைத்தபடி வயல்களிலும், காடுகளிலும் அம்மா ஓடியதும் அவளுக்கு சிலகாலம் நினைவலைகளில் நின்றன, பின்பு மறந்து போனாள்.

எண்பத்தி மூன்று, அப்போது ஜஸ்மினுக்கு பத்து வயது தந்தையை இழந்த பின் அவர்கள் நால்வரையும் வளர்க்க அம்மா போராடிக் கொண்டிருந்த காலம்.

அன்றும் அப்படித்தான் இரவு வானொலிச் செய்தியைத் தொடர்ந்து பன்குளம் சந்தியின் மத்தியில் தமிழர் கடைகளின் மத்தியில் தீ எழுந்தது.

சிங்களக் காடையர்களின் வெறிக்கூச்சல்கள் தமிழ் மக்களின் அவலக்குரல்கள் பன்குளம் கிராமத்தில் படர்ந்தது. இளைஞர்களில் சிலர் எதிர்த்தனர்.

ஆனால் காடையர்களின் துணைக்கு அரசகாவலர்களும், தமிழர்களின் இரத்தம் எங்கும் சிந்தியது.

அம்மா ஜஸ்மினையும் இழுத்துக் கொண்டு காட்டிற்குள் ஓடினாள் பசியும் பட்டினியும் நாட்கள் கடந்தன மீண்டும் கிராமத்திற்கு வந்த போது எங்கும் சாம்பல் மேடுகள். பலரை அந்த மண் பறிகொடுத்திருந்தது.

ஜஸ்மின் சிறுமி அவளுக்கு எதுவும் விளங்கவில்லை. ஆனால் சிங்களவர்கள் சிங்கள அரசின் காவலர்கள் என்றால் வெறுப்பும் கோபமும் அந்தச்சின்ன வயதிலேயே மனதிற்குள் குடிகொண்டு விட்டது.

எண்பத்தி ஆறு இப்போது ஜஸ்மினுக்கு பதின்மூன்று வயது பன்குளத்தில் சிங்களவரின் தொகை பெருகி இருந்தது தமிழரின் நிலங்களும் வயல்களும் அடாத்தாக பறிக்கப்பட்டிருந்தன. அவை இப்போ சிங்களவருக்கு சொந்தமாக இருந்தன.

இம்முறை தமிழர்கள் மீது சிங்களவர் பாய்ந்து ஓய்ந்த பொழுது ஜஸ்மின் நிலைமைகளை ஓரளவு புரிந்து கொண்டாள்.

சிந்தப்படும் இரத்தத்தினதும் கண்ணீரினதும் பெறுமதி அவளுக்கு நன்றாகவே விளங்கியது. அந்த மண்ணில் தமிழர்களின் வாழ்வு நிச்சயமற்றதொன்றாகிப் போனது சிங்களவர் சினங்கொள்ளும் போதெல்லாம் தமிழர்கள் அழிந்தனர்.

இதற்கு இடையில் ஜஸ்மினின் அண்ணன் புலிகளுடன் இணைந்து கொண்டான்.



படிப்பகம்

அண்ணனை சில நிமிடங்கள் காணது விட்டாலும் தவிக்கும் அம்மா அந்தச் செய்தியைக் கேட்ட பின்பும் அமைதியாக இருந்தாள். சொல்லப் போனால் அவன் சென்றதை அவளும் விரும்பினாள்.

அவர்கள் வாழ்வதாக இருந்தால் போராட வேண்டும் அல்லது அழிந்து போக வேண்டி வரும் என்பதை அம்மா அனுபவத்தில் தெரிந்திருந்தாள்.

அழிவுகள் அடாவடித்தனங்கள் இறுதியாக பன்குளத்திலிருந்து தமிழ் மக்கள் ஒரேயடியாக விரட்டப்பட்டனர்.

ஜஸ்மின் குடும்பத்தினருடன் ஆலங்கேணி கிராமத்தில் தங்கியிருந்தாள்.

1990 இந்தியப் படைகள் வெளியேறி சில நாட்கள் கடந்திருந்தன.

சிங்கள அரசு பேச்சுவார்த்தை என்று நாடகமாடிக் கொண்டிருந்தது. தமிழர்களின் சுதந்திர வாழ்வுக்கு தாயகத்தின் விடுதலை அவசியமானது என்பதை ஜஸ்மின் உணர்ந்து கொண்டாள். அவளும், அவளின் தோழிகளில் சிலரும் கிராமத்திலிருந்து புறப்பட்டார்கள்.

ஜஸ்மின் அவளின் கைகளில் தேசத்தை மீட்பதற்கான ஆயுதம். அவளும், அவளது கிராமத்தவர்களும் கண்டுவிட்டு ஓடிய அரச காவலர்களின் கைகளில் இருந்த ஆயுதம், இன்று அவளின் கைகளிலும் இருந்தது.

களங்களில் அவள் வீரமுடன் போரிட்டாள். சண்டை நடைபெறும் ஒவ்வொரு களத்திற்கும் போகவேண்டும் என்று அவாவி நின்றாள். சிறு வயது தொடக்கம் சிங்களவர்களின் அட்டூழியங்களையும் காலத்திற்கு காலம் அனுபவித்த அவளுக்குள்– கடினமான போராட்ட வாழ்க்கையை இலகுவாக எடுக்கும் மனவுறுதி குடிகொண்டு விட்டது. அதனால் தான் முகாமிலும் சண்டைகளின் போதும் அவளால் சிரித்துக் கொண்டு உலாவ முடிந்தது.

ஆகாய கடல் வெளி இராணுவ நடவடிக்கையை புலிகள் தொடங்கிய போது அதில் ஜஸ்மினும் ஒருத்தியாகக் கலந்து கொண்டாள்.

வெவ்வேறு முனைகளால் ஆனையிறவு தளம் மீதான தாக்குதல்கள் ஆரம்பமாகின. தேவைப்படும் போதெல்லாம் ஜஸ்மினின் துப்பாக்கியும் எதிரிகளை அகற்றப்போராடியது.

அதே நேரம் திருகோணமலை காட்டுப் பகுதிக்குள் நடந்து கொண்டிருந்த புலிகளின் ஒரு அணி மீது இராணுவத்தினர் பதுங்கியிருந்து தாக்கினர்.

ஜஸ்மினின் அண்ணன் சபேசன் அதில் காயமடைந்திருந்தான். சில நாட்களின் பின்பு யாழ் மாவட்டத்தின் ஓர் வைத்தியசாலையில் அவன் சேர்க்கப்பட்டிருந்தான். அவனைப் பார்ப்பதற்காக

www.padippakam.com



வன்னிப்பகுதியில் எதோ ஓர் அகதிமுகாமில் தங்கி இருந்த அம்மா வந்திருந்தாள்.

மகனை பார்த்த பின் மகளைப் பார்க்க அவள் விரும்பினாள். சண்டை கடுமையாக நடந்து கொண்டிருந்தது. தாய் நிலத்தை காக்கும் போரிலிருந்து சிறு பொழுதென்றாலும் விலகிவர ஜஸ்மினால் முடியவில்லை.

உணவற்ற, உறக்கமற்ற நிலையில் ரவை மழைக்குள் நின்று அவர்கள் சண்டையிட்டுக் கொண்டிருந்தார்கள் ஜஸ்மின் வழமைபோல் சிரித்தாள் மகிழ்ச்சியாக இருந்தாள் எதிரிகளைக் கண்ட போது மட்டும் ஆவேசத்துடன் போரிட்டாள்.

மகனைப் பார்த்து விட்டு திரும்பிய தாய் அகதி முகாம் வாசலில் கால்வைத்த பொழுது அவளுக்கு துயரம் நிறைந்த அந்தச் செய்தி கிடைத்தது.

ஜஸ்மின் வீரச்சாவடைந்து விட்டாள் மகளின் இழப்பு அம்மாவின் இதயத்தை சோகமாக அழுத்தினாலும் ஜஸ்மினின் உன்னதமான வாழ்வை நினைத்து அவளால் அழமுடியவில்லை. ஆனையிறவின் உப்புக் காற்று அவளின் வீரம் நிறைந்த வரலாற்றை என்றும் சொல்லிக் கொண்டிருக்கும் என்பது அம்மாவுக்கு நன்றாகவே தெரியும் .

– தமிழன், ஈழநாதம்.


படிப்பகம்

www.padippakam.com





# கப்டன் நேசன்

## (மோகன்பாபு)

அந்தநாள்...1988 ஆம் ஆண்டு ஆவணித் திங்கள் ஆறாம் நாள்.

அது ஒரு கொடியநாள். இரவு 9.30 மணி வானொலி கேட்டுக்கொண்டிருந்தார் நேசனின் தந்தை. சில மாதங்களாக சமூகப்பணிகளில் தன்னை முழுமையாக அர்ப்பணித்திருந்தார். சமூகநலன் விரும்பிகளைத் தேசத்துரோகிகள் என்றும் விரும்புவதில்லை. விசப்பூண்டுகள் விடுதலையை விரும்புமா? சில நாட்களாக இந்திய இராணுவத்துடன் இணைந்து தியாகலிங்கத்தின் உயிருக்குக் குறிவைக்கத் தொடங்கினர்.

டொக்..டொக்..டொக் கதவு தட்டப்பட்டது. தட்டும் ஓசையில் வித்தியாசத்தை உணர்ந்த நேசனின் தந்தை தற்பாதுகாப்புக்காக இரவில் வைத்துக்கொண்டு படுக்கும் கொட்டனைக் கையில் எடுத்துக்கொண்டார்.

ஆரது?... சற்று குரலை உயர்த்தி அதட்டலாகக் கேட்டார் பளார்... கதவில் உதைத்தனர். கதவு திறந்ததும் சரமாரியாகத் துப்பாக்கிக் குண்டுகள் வந்தன. நேசன் தாயை இறுகக் கட்டிப்பிடித்துக் கொண்டான். கண்முன்னே தந்தை சுருண்டு விழுந்தது அவன் பிஞ்சு உள்ளத்தில் ஆழப்பதிந்தது. அழுவதற்குக்கூட அவனுக்குச்சக்தி இருக்கவில்லை.

காலங்கள் ஓடின.....



படிப்பகம்

www.padippakam.com



க.பொ.த. சாதாரண தரத்தில் படித்துக் கொண்டிருந்த நேசனுக்குப் படிப்பில் சிந்தனை பதியவில்லை. அமைதி அவனிடம் குடிகொண்டது. தாயின் கண்ணீரைத் தினமும் பார்த்தான். படிப்பும், பரீட்சையும் அவனுக்குச் சுமையாகத் தோன்றியிருக்க வேண்டும். ஓராண்டு முன்னரே க.பொ.த. சாதாரணதரப் பரீட்சையை எழுதி முடித்தான். 1989 ஆம் ஆண்டு சித்திரைத்திங்கள் 21 ஆம் நாள் ரீயூசனுக்குச் செல்வதாகத் தாயிடம் சொல்லிவிட்டு புறப்பட்டான்.

அன்று அவன் திரும்பவில்லை. அவனிடம் இருந்து தாய்க்கு ஒரு சிலவரிகளடங்கிய கடிதம் மட்டுமே வந்திருந்தது.

அன்புடன் அம்மாவுக்கு!

அப்பா செத்து இன்றுடன் எட்டு மாதமும் பதிநாறு நாட்களுமாகிறது.அப்பாவைச் சுட்ட துரோகக் கும்பலில் இன்று ஒருவன் மட்டுமே எஞ்சியுள்ளான். அவனையும் அழித்து அத்துரோகிக்கு துணைநின்ற சிப்பாய்களையும் அழிக்கவே புறப்பட்டுள்ளேன். நீங்கள் இனி அழக் கூடாது. மலரப்போகும் தேசவிடுதலையில் உங்கள் மகனின் பங்கும் நிச்சயம் நிலைத்துநிற்கும்.

இப்படிக்கு

உங்கள் மகன்
மோகன்பாபு

களத்தில்நின்ற காலம்......

மாதங்கள் பத்து உருண்டு மறைந்தன. நாற்பது போராளிகளுடன் வீட்டுக்கு வந்தான் நேசன்.

"அம்மா எல்லாருக்கும் சாப்பாடு போடு" தாயோடு அன்று அவன் பேசிய வார்த்தைகள் இதுமட்டும் தான். பின்னர் நண்பர்கள் சிலரை கண்டு கதைத்துக் கொண்டு புறப்பட்டுவிட்டான்.

அந்த வார்த்தைகளை மட்டும் நெஞ்சில் மீண்டும் மீட்டிப் பார்த்துக் கொண்டு வரும் போராளிகளுக்கெல்லாம் சமைத்துப்போட்டுக் கொண்டேயிருந்தாள் தாய்.

நேசன் சண்டைகள் பலவற்றில் பங்கு கொண்டான். அவனின் நினைவிலும், சொல்லிலும், செயலிலும் துணிவு மிகுதியாக இருந்தது. ஐந்து தடவைகள் கடுமையான காயங்களை சுமந்துகொண்டான். வேகமும், விவேகமும் அவனிடம் மிகுதியாக இருந்ததால். சாள்ஸ் அன்ரனி சிறப்புப்படைப்பிரிவில் இணைக்கப்பட்டான். வீரம் மட்டுமன்றி வாகனம் ஓட்டுவதில் மிகுந்த சாதுரியத்தை கொண்டிருந்ததால் சாள்ஸ் அன்ரனி சிறப்புப்படைப்பிரிவுத் தளபதியின் மனத்தையும் ஈர்த்துக்கொண்டான்.

www.padippakam.com



நேசன் கண்ட களங்களில் பெருவெற்றியாக அமைந்த இரண்டைக் குறிப்பிடலாம். ஒன்று முல்லைத்தீவில் பதினேழுக்குமேற்பட்ட இராணுவத்தைக் கொன்று 50 கலிபர் துப்பாக்கி உட்பட பல நவீன ஆயுதங்களைக் கைப்பற்றிய சண்டை. அடுத்தது நடந்தது தட்டுவன் கொட்டியில் முப்பதுக்கும் மேற்பட்ட இராணுவக் காவலரண்களை தகர்த்து சாதனை நிலைநாட்டிய சண்டை.

முல்லைத்தீவுச் சண்டைக்கு மகன் வந்திருப்பதை அறிந்த தாய் அவனைப் பார்க்கும் ஆசையில் அவன் செல்லும் பாதையில் காத்திருந்தாள் மகனுக்காக புதிதாக எடுத்த சாரமும், சேட்டும் கொண்டு சென்றிருந்தாள். வழியில் ஒரு போராளியை சந்தித்து,

"தம்பி நான் நேசனின் அம்மா, அவனை ஒருக்கால் பார்க்க ஆசையாய் கிடக்குது, நான் நிற்பதாய் சொன்னால் வரமாட்டான், ஒரு ஆள் முக்கிய அலுவலாய் உன்னை சந்திக்க வந்திருக்குது என்று சொல்லி அவனை வரச்சொல்லுவீர்களா"

என வேண்டினாள். அந்தப்போராளியும் அவ்வாறே அறிவித்தான்.

சிறிது நேரத்தில் நேசன் அவ்விடத்துக்கு வந்தான். "ஆரது என்னட்ட அலுவலாய் வந்தது" என்று கேட்டதும் மறைந்து நின்ற தாய் வெளியே வந்தாள்.

"நீங்களே அம்மா இஞ்ச வந்தனீங்கள் இப்படியெண்டால் இனி இந்தப் பக்கமும் என்னைக் காணமாட்டியள்"

மகனின் வார்த்தைகளைக் கேட்ட தாயின் கண்களிலிருந்து நீர்த்துளிகள் திரண்டு விழுந்து சிதறின.

"நான் போறனப்பா இந்தா உனக்கெண்டு ஒரு சாரமும் சேட்டும் எடுத்து வைச்சிருந்தனான்" என்று அவற்றை அவனிடம் நீட்டினாள்.

அம்மா, இயக்கம் எங்களுக்கு நிறைய சாரமும் சேட்டும் வாங்கித் தருது. உதைக் கொண்டு போய்வையுங்கோ" என்று கூற, வாய்புதைத்து கண்ணீரோடு திரும்பினாள் அவனின் தாய்.

தாய் மீது அன்பிருந்தும் அதற்கு மேலாக தாய்மண்ணில் அன்பு வைத்திருந்தான் நேசன்.

தென்னங்கீற்று நிறைந்த அழகிய கிராமம் அலம்பில். பீரங்கிகளாலும், எறிகணைகளாலும், விமானக்குண்டுகளாலும் அக்கிராமம் சப்பித்துப்பப்பட்டுக் கிடந்தது. ஆறு ஆண்டுகளாய் பட்டையால் இறைத்து வளர்த்த தென்னை மரங்களை புல்டோசர்கள் தள்ளி ஒதுக்கிக் கொண்டிருந்தது.



படிப்பகம்

www.padippakam.com



ரீ.சீ.லீ. பீரங்கிகளிலிருந்து வெளிக்கிளம்பிய எறிகணைகள் பேரிரைச்சலுடன் குமுளமுனைக் கிராமத்தை நோக்கிப்பறந்தன. செல்லும் திசையில் பத்துப்பன்னிரண்டு தென்னை மரங்களை அறுத்து விழுத்தி வெடித்தன. தர்மம் தவறிய சிங்கள சிப்பாய்களுக்கு இந்த வளத்தைப் பற்றி என்ன புரியும்.

சீனாவிலிருந்து பெற்ற 'சுப்ப சோனிக்' குண்டு வீச்சு விமானங்கள் குறிதவறி வீசிய குண்டுகளால் ஐம்பது பனை மரங்கள் அடியோடு பெயர்த்தெறியப்பட்டுக் கிடந்தன. தமிழீழதில் தென்னைகளையும் பனைகளையும் நாசமாக்க சிங்கள அரசு கோடி ரூபாக்களை செலவிட வேண்டியுள்ளது.

ஒன்றன்பின் ஒன்றாக வீசப்பட்ட ஆட்லறி எறிகணைகள் மேய்ப்பாரற்ற ஆட்டுப்பட்டி யொன்றினுள் விழுந்து வெடித்தது. கால்வேறு தலைவேறாய் அவை சிதறின.

யுத்தப்பிரதேசத்தை பார்வையிட்டுக் கொண்டுவந்தான் நேசன்.

தனது பிறந்தகம் தீயில் வெந்து சாம்பலாய்க் கிடப்பதைக் கண்டான் "என்னை சுமந்துகொண்டுபோக ஒரு வாங்குகூட இல்லாமல் எரிச்சுப் போட்டாங்கள் மச்சான்" என சக போராளிகளுக்கு கூறிக்கொண்டான்.

முதல் நாள் நடைபெற்ற சண்டையில் நேசனுக்கு காயம் எற்பட்டிருந்தது காயம்பட்டும் சிகிச்சைக்கு செல்ல மறுத்தவிட்டான். "என்ர காணிக்குள்ள நிண்டோண்டு ஆமி எனக்கு சுடவோ மச்சான்". என்று கூறி காயத்துக்கு கட்டுப்போட்டு அடுத்தநாள் சண்டைக்கு தயாராகி நின்றான்.

களத்திலே மகன் நிற்பதை கேள்வியுற்று காண ஓடிவந்தாள் தாய். மழையில் நனைந்து கொண்டு மக்களற்ற அபாயமண பகுதிக்குள் வந்த தாயைக்கண்டு "என்னம்மா இந்த மழையில் நனைஞ்சு கொண்டு இஞ்ச வாறாய்" .என்று அன்பாக ஆனால் கண்டிப்பு தொனிக்க கேட்டுவிட்டு சிரித்தான்.

கன்னத்தில் கட்டுப்போட்ட காயம் தாய்க்கு தெரியக் கூடாதென்பதற்காக கைகளால் அதை மறைத்துக்கொண்டே சிரித்தான்.

முந்நூறுநாள் சுமந்து பெற்ற தாய்க்கு மகனின் உடலை அளவிட முடியாமலாபோகும். கண்ணீ ரோடு மகனிடம் விடை பெற்று திரும்பினாள். இரவு கண்ட கனவு அவளை தடுமாற வைத்துக் கொண்டிருந்தது.

நேசன் அன்றைய சண்டைக்கு தன் அணியைத் தயாராக்கிக் கொண்டான். எதிரியின் குண்டுவீச்சில் கால்கள்சிதறிய பசுமாடொன்று நடக்கமுடியாத நிலையில் கண்களால் நீர் ஆறாகப்பெருக நேசனை நோக்கியது.

"மிருகங்களுக்கு கூட எங்கள் மண்ணில் சுதந்திரமில்லை" என்று கூறி நெட்டுயிர்த்தான் நேசன்.

"மச்சான் நேசன், என்ன உங்கட வீட்டையும் ஆமி இறக்கிப் போட்டாங்களாம்" என சகபோராளி ஒருவன் கிண்டலாகக் கேட்டான்.

"வீடென்ன மச்சான் வீடு, வீட்டத்தான் பேந்தும் கட்டிக் கொள்ளலாம், எத்தின பெடியள் செத்திட்டாங்கள், அவங்களையெல்லாம் திரும்பப் பெறலாமே"

நேசனின் உறுதியான வார்த்தைகள் இது.

தந்தையை கண்முன்னே சுட்டுக்கொன்றதைக் கண்டவனல்லவா நேசன்.

எதிரியின் அழிவு எந்தளவிற்கு அதிகமோ, அதில்தான் அவன் அமைதியைக்கண்டான். தன்னுடைய தந்தையைப்போல எத்தனை தந்தையர்,தம்பியர்,அன்னையர் அழிக்கப் பட்டிருப்பர்.....

சில மணிநேரத்தில் சண்டை தொடங்கியது. பறிபோன மண்ணும், மக்களும் கண்ணில் தெரிய, தன்னைமறந்து ஆவேசமுடன் சுட்டுக்கொண்டிருந்தான் நேசன். சில கணந்தான், நெற்றியில் குண்டு பாய்ந்தது. தன் மண்ணைக் கைகளால் இறுகப்பிடித்தபடி கண் மூடினான் நேசன்.

—மணலாறு விஜயன், ஈழநாதம்

www.padippakam.com





# கப்டன் எல்லாளன்

## (ஒட்டேகா)

வல்வை! ஆம் பல மாவீரர்களும், போராளிகளும் சிறு வயதில் அள்ளி உடம்பெல்லாம் அப்பி விளையாடிய மண். கடலில் உப்புக் காற்றை நெடுங்காலமாக சுவாசித்துக்கொண்டு, இவ்வூரிற்கு இன்னும் பெருமை சேர்த்துக்கொண்டிருக்கும் அம்மன் கோவில். இக் கோயில் வீதியிலும் மதவடிக் கடற்கரையிலும் ஓடி, ஆடி தவழ்ந்தவன் தான் ஒட்டேகா. இரு பெண் சகோதரிகளுக்கு ஓர் ஆண் பிள்ளை என்பதனால் வீட்டில் செல்லம் அதிகம். அதனாலே என்னவோ அவனது குழப்படிகளும் அதிகம்.

இன்றும் அந்த மண்ணைக் கேட்டாலும் அவனது குழப்படிகளையும் குறும்புத் தனத்தையும் பக்கம் பக்கமாகச் சொல்லும். அவனது பாடசாலை நாட்களில் ஒருநாள் அவன் வகுப்பறைக்கு வரவில்லை. அவன் வராவிட்டால் அன்று வகுப்பறையில் பம்பல்கள்(பகிடி) குறைவுதான். ஏன் என்று விசாரித்ததில் அம்மன் கோவில் தேர்க்கொட்டகையில் புறா பிடிக்க ஏறி விழுந்து கால் முறிந்து விட்டதாம். இன்னொருநாள் சிவன்கோயில் குளத்தில் குளிக்கும் போது மண்டை உடைந்ததாம். இப்படியாகப் பாடசாலை நாட்களில் பல காயங்களையும், முறிவுகளையும் சந்தித்தவன் தான் ஒட்டேகா. இதனால் மூன்று மாதங்களாகப் பாடசாலைக்கு வரவில்லை. என்றாலும் அந்த வருட பரீட்சையில் திறமையாகச் சித்தியெய்தினான்.

இப்படியான வாழ்க்கை ஓட்டத்தில் தான் இந்திய ஆக்கிரமிப்பாளர் காலடி எடுத்து வைத்தார்கள். சிறு வயது முதலே போராட வேண்டும் தமிழரிற்கு விடிவு ஏற்படுத்த வேண்டும் என்ற எண்ணங்களைக் கொண்டிருந்த ஒட்டேகாவும் அவனது நண்பர்களும் இயக்கத்தில் சேர்வதற்கான வண்டி ஏறினர். அந்நேரம் அங்கு வந்த லெப்.ஜோக்கின் அவர்கள், "டேய் நீ



படிப்பகம்

www.padippakam.com



வீட்டில் ஓர் ஆண்பிள்ளை எனவே நீ வீட்டை போ" எனக் கூறினார். அதற்கு ஒட்டேகா "நான் போகமாட்டேன்" என்று கூறினான். ஆனாலும் அவர்கள் விடுவதாயில்லை. "வண்டியை விட்டு இறங்கு" எனக்கூறினார்கள். "நான் இறங்க மாட்டேன்" என்று அழுதான் ஒட்டேகா. ஒன்றும் செய்ய முடியாமல் அவனை அவர்களும் வழியனுப்பி வைத்தார்கள். அவன் தவழ்ந்து விளையாடிய மதவடி கடற்கரையும் வழியனுப்பி வைத்தது. நெடிந்துயர்ந்த மரங்களின் இடைகளிடையே பார்த்தால் ஆகக்கூடியது 50 மீற்றர் தூரம்தான் கண்களிற்குப் புலப்படும். இரவு நேரங்களில் கொடிய மிருகங்களின் கூச்சல், யானையின் பிளிறல் ஒலி, பாம்புகள் முதலியன ஊர்ந்து செல்லும்போது ஏற்படும் சருகுகளின் ஒலி, இரவு பகல் பாராது குரங்குகள் செய்யும் அட்டகாசம். இப்படியான அடர்ந்த காடு எங்களிற்கெல்லாம் புதிது. அதை விட அங்கு நின்றவர்களின் பயமுறுத்தும் சொற்கள், ஆம்! இதிலிருந்து ஒரு மைல் அருகில் ஆமி நிற்கிறான். எனவே சத்தம் போடக்கூடாது என்ற வெருட்டல்கள். இதுதான் IPKF வந்தவுடன் நடந்த முதலாவது பயிற்சி முகாம்.

இங்குதான் ஒட்டேகாவும் பயிற்சி எடுத்துக் கொணடிருந்தான். ஒரு நாள் ஒட்டேகா தனிமையில் இருந்து ஏதோ சிந்தித்துக்கொண்டிருந்தான். நான் கிட்டப்போய் நின்றதையும் கவனிக்கவில்லை. என்ன மச்சான் யோசிக்கிறாய் என்று கேட்டேன். ஒன்றுமில்லை என்ற ஒத்தை வார்த்தை பதிலாக வந்தது. ஒன்றுமில்லை என்று சொன்னதில் ஏதோ ஒன்று இருக்கிறது என்று புரிந்து கொண்டேன். நிச்சயமாக இவன் தனது தாயைப் பற்றித்தான் சிந்தித்திருப்பான். ஏனெனில் தாயின் நம்பிக்கைகளை சிதைத்துவிட்டு வந்து விட்டான். வண்டி ஏறும் போதும் அம்மா கவலைப்படுவா, வேறு ஓர் பிரச்சனையும் இல்லை என்று கூறியது எனது ஞாபகத்திற்கு வருகிறது.

பயிற்சி முகாமின் கஸ்டங்கள் நிறைய, அந்த கஸ்டங்களுக்கிடையே செல்வராஜா மாஸ்டரின் அன்பு வார்த்தைகள் எம்மை ஆறுதல் படுத்தும். இக்கஸ்டங்களிலும் ஒட்டேகா நிறம்பவும் கஸ்டப்பட்டான். ஏனெனில் எமது பயிற்சி முகாமில் உடம்பு கூடியவன் இவனே. ஆனாலும் அவ் உடம்பைக் கொண்டு ஒழுங்காக பயிற்சிகள் செய்தான். அதனால் செல்வராஜா மாஸ்டர் றெயினிங் கஸ்டம் என்று கூறுபவர்களிற்கு ஒட்டேகாவை உதாரணமாகக் காட்டுவார்.

பயிற்சி முகாம் அவனை முற்றிலும் மாற்றியிருந்தது. ஆம், அவனது உடம்பு அளவான உடம்பாக மெலிந்திருந்தது, அவனது உள்ளமோ, பழைய குழப்படிகள் எங்கோ ஓடிவிட்டிருந்தன, எந்தவொரு பொறுப்பாளரைக் கேட்டாலும் ஒட்டேகா அவன் அமைதியான நல்லபெடியன். என்றே கூறுவார்கள். எல்லா நேரங்களிலும் பகிடி விடுபவன்தன் போக்காக மாற்றியிருந்தான்.வேலை நேரங்களில் வேலைகளில் கவனமாயிருந்தான். ஓய்வின்போது மட்டும் அளவோடு பகிடிகள் விடுவான். பயிற்சியின் பின் மணலாற்றுக் காட்டில் அவனது பணி தொடர்ந்தது. மணலாறில் இந்திய இராணுவத்திற்கெதிரான சண்டைகளில் முன்னின்று சண்டையிட்டான். அதன் பின் இந்திய இராணுவத்தை காட்டினுள் வராமல் தடுக்க வேவு வேலைகள் செய்வதற்கு நியமிக்கப்பட்டான்.



படிப்பகம்

www.padippakam.com



வேவு வேலையின் போது அவன் தனக்கு ஏற்படும் அனுபவங்களை வந்து கூறுவான்.அதை இப்போது நினைத்துப் பார்க்கிறேன். கிழமைக்கணக்காக தனக்குத் தேவையான உணவு, உடைகளைச் சுமந்தாலும், தொடர்ச்சியாகக் கோல்சரைக் கழற்றாததால் தோளில் ஏற்பட்ட காயத்தைக் காட்டிச் சிரித்ததை நினைக்கவா, சப்பாத்து வெட்டுகிறது என்று கூறி சப்பாத்தைத் தோளில்ப் போட்டுக்கொண்டு வெறும் காலுடன் நடந்து வந்ததை நினைக்கவா, தூர இடங்களுக்குப் போகும் போது உனக்கு என்று தரும் பழரின்னையும், சீஸ்ரின்னையும் சாப்பிடாமல் வைத்திருந்து முகாமில் சக போரளிகளுக்குக் கொடுத்துச் சாப்பிடுவதை நினைக்கவா, முகாமில் பாய் இருக்கும்போது இரண்டு உரப்பைகளைச் சேர்த்துத்தைத்து அதை விரித்துப் படுத்திருப்பதை நினைக்கவா, ஏன்என்று கேட்டபோது பாயில் படுத்தால் நித்திரை வராது. சருகுகளுக்கு மேல் இதை விரித்து படுத்தால் மெத்தையில் படுப்பது போல் உணர்கிறேன் என்று கூறியதை நினைக்கவா, நெஞ்சம் கனக்கிறது. இந்திய இராணுவம் பதித்த காலைத் திருப்பி எடுத்து ஓடிய பின் யாழ்ப்பாணம் வந்து கொக்காவில், மாங்குளம் முதலிய சண்டைகளில் முன்னின்று திறமையாகப் போரிட்டான்.

அதன்பின் ஆனையிறவுச் சமரின் போது குறுாப்பிரிக்கும் போது ஒட்டேகாவை எறிகணைப் பிரிவிற்கு பிரித்த போது, நான் முன்னணி சண்டைப்பிரிவிற்குப் போகப்போகிறன் என்று கேட்டான். ஆனால் பொறுப்பாளர் எறிகணைப் பிரிவில் நில் என்று கூறினார். ஆனாலும் ஒட்டேகா அடம்பிடித்து முன்னணிச் சண்டைப் பிரிவிற்குச் சென்றான். ஆனையிறவுச் சமரில் திறமையாகச் செயற்பட்டான். அதன்போது வெற்றிலைக்கேணியில் நடந்த சண்டையில் தலையில் காயமடைந்தான்.

"காயப்பட்டிருந்த காலப்பகுதியில் தானே, நீ நடந்து திரிந்த மணலாறு மீது போர் தொடுக்கப்பட்டது. இதைக் கேட்டவுடன் மணலாறு சமர்க்களத்திற்குச் செல்வதற்கு கேட்டாயாமே. ஆனால் உன்னை அச் சமரிற்கு விட வில்லை. அதனால் நீ கவலையடைந்தாய். ஏனெனில் புனிதமான மணலாற்று மண்ணில் பல மாவீரர்களினதும், போராளிகளினதும் கால்கள் பதிந்த இடத்தில் எதிரியின் கால் பதிந்து அசுத்தமாவதை நீ விரும்பவில்லை".

அதன் பின் ஒட்டேகாவின் திறமைகளைக் கண்ட பொறுப்பாளர் அவனை எறிகணைப் பிரிவிற்குப் பொறுப்பாக நியமித்தார். எறிகணை செலுத்துவதில் திறமையாகச் செயற்பட்டதால் அவனை எறிகணை பயிற்சி கொடுப்பதற்கு நியமித்தார்கள்.

பயிற்சி கொடுக்கும் போது, பயிற்சி எடுக்கும் போராளிகளோடு சேர்ந்து அவனும் மண்மூட்டை தூக்கி ஓடுவான் பயிற்சியின் போது அவர்கள் செய்யும் எல்லாப் பயிற்சிகளையும் அவன் சேர்ந்து செய்தான். பயிற்சிக் கஷ்டங்களை எல்லாம் அவர்களோடு சேர்ந்து அவனும் பகிர்வதால் சக போராளிகள் ஒட்டேகா அண்ணா, ஒட்டேகா அண்ணா என்று தங்கள் அன்பை அவனோடு பகிர்ந்தார்கள். ஒவ்வொரு நாள் காலையிலும் தனிமையில் இருந்து எறிகணை பற்றிய புத்தகத்தை படித்து தனது அறிவை வளர்த்துக் கொண்டான். அப்புத்தகம் இப்போது இன்னொரு போராளியின் கையில் இருந்து எம்மோடு சேர்ந்து உன்னைத் தேடுகிறது.



படிப்பகம்

www.padippakam.com



பயிற்சிகள் கொடுப்பதில் முன்னின்றவனிற்கு, பல காலமாக சண்டைக்குப் போகவில்லை என மனம் புழுங்கியவனிற்கு கட்டைக்காட்டில் இராணுவம் வெளியேறி விட்டதாம். ஒட்டேகாவின் பிரிவினரையும் வெளிக்கிடட்டாம் என்றவுடன் மனமகிழ்ந்தான்.

சண்டையும் உக்கிரமாக நடந்தது. ஒட்டேகா ஆமி ஓடுறான் செல்லை அடி! இன்னொன்று அடி! என்ற பொறுப்பாளரின் சொல்லிற்கு இசைவாக செல்களை அடித்துக் கொண்டிருந்தவனிற்கு, எங்கிருந்தோ வந்த செல் அவனருகில் வீழ்ந்து வெடிக்கிறது. ஒட்டேகா என்ற போராளி மாவீரனாய்...

நாங்கள் உன்னை எங்கெல்லாமோ தேடுகிறோம். எங்களோடு சேர்ந்து, என் நிழல் தேடி வந்து களைப்பாறிய மக்களை அழிக்கலாம். ஆனால் என்னை அழிக்க முடியாது என்று நிமிர்ந்து நிற்கும் மரங்களும், எனது வளங்களை எடுத்து வாழ்ந்த மக்களை அழிக்கலாம் என்னை அழிக்க முடியாது என்று துணிந்து நிற்கும் தென்னைகளும், என்மேல் தவழ்ந்து விளையாடிய மீனவரையும் வள்ளங்களையும் அழித்தாய். வெகு விரைவில் உன்னைப் பிடித்து விழுங்கி விடுவேன் என்று ஆர்ப்பரிக்கும் கடலும், எம்மை நீ அழித்தால் அடிக்கட்டைகளாக இருந்தாவது உனது கால்களில் குத்துவோம் என்று எதிரிக்கு எதிராகச் சவால் விடும் நெல்வயல்களும் சேர்ந்து உன்னைத் தேடுகின்றன.ஒட்டேகாவின் திறமைகள் என்றும் அழியப் போவதில்லை. ஏனெனில் மணலாறு மண்ணோ, அன்றி ஆனையிறவு உப்புவயலோ, இல்லையேல் மரவடி கடற்கரையோ, கோவில் வீதியோ அழியமாட்டாது. அவைகள் அவனது திறமைகளைக் காலம் காலமாக ஓங்கி கூவிக் கொண்டிருக்கும்.

எதிரி படைகளை ஓட்டமெடுக்கச் செய்த ஒட்டேகாவே!, ஏன் எம்மை விட்டு விரைவாக ஓட்டமெடுத்தாய், எம் நெஞ்சை விட்டு உன் நினைவலைகள் ஓட்டமெடுக்கா.

உன் கனவுகளை நனவாக்க நாமும் தொடர்ந்து எதிரிகளைப் புறமுதுகிட்டு ஓட்டமெடுக்கச் செய்வோம்.


–அமுதசாகரன், ஈழநாதம்



படிப்பகம்

www.padippakam.com





# கப்டன் மதியழகன்

## (ரதீஸ்குமார்)

## வீரமரணம் : 09.11.1992

தமிழ் மண்ணில் அமைதி காக்கவென்று பசுத்தோல் போர்த்திய நரிமாதிரி இந்திய கூலிப்பட்டாளம் புகுந்தது. பல அட்டூழியங்கள் புரிந்து அழிக்க வந்த படையாக மாறியது தமிழீழமக்களின் குருதி தமிழீழமண்ணை சிவக்கச் செய்தது இந்திய இராணுவத்துடன் புலிவீரர்கள் ஆவேசமாகப்போராடி இந்திய இராணுவத்தை திணறவும் திகைக்கவும் செய்தார்கள். இதற்கெனப் பலர் பல தியாகங்களைப் புரிந்தார்கள்.

இதனால் கொதிப்படைந்த இந்திய இராணுவம் தமிழீழமக்களை வெறியாட்டமாடியது. பல பொதுமக்களை வெட்டியும் சுட்டும் கோரத் தாண்டவமாடியது. பல பெண்கள் பாலியல் வன்முறைக்கு உள்ளானார்கள். இத்தனை கொடுமைகளையும் கண்டு துடித்தான் மகலன்.

மகலன் வடமாராட்சி அல்வாய் என்னுமிடத்தை பிறப்பிடமாகக் கொண்டவன் சொல்லப்போனால் இவர்கள் குடும்பம் மிகவும் ஏழ்மையானது. இவனுக்கு ஒரு அண்ணனும் இரண்டு தங்கைகளும் இருக்கிறார்கள். இவன் இயக்கத்திற்கு போவான் என்று அவன் வீட்டில் ஒருவரும் நினைத்திருக்கமாட்டார்கள். சுருங்கச் சொல்லப்போனால் அவனுடைய ஊரில் கூட ஒருவரும் எண்ணிப்பார்த்திருக்கமாட்டார்கள். அவன் அமைதியான அடக்கமான சுபாவம் கொண்டவன், அவன் படிப்பில் வலுகெட்டிக்காரன் அவனது வீட்டுப்பெயர் ரதீஸ்குமார்.

1988 ஆம் ஆண்டு இயக்கத்தில் இணைவதற்காக பல இந்திய இராணுவ முகாம்களிற்கு மத்தியிலும் மக்களோடு மக்களாக நிற்கும் புலிகளைக் கண்டு தன்னையும் இயக்கத்தில்



படிப்பகம்

www.padippakam.com



இணைத்துக் கொள்ளும்படி கோரினான் ஆனால் அவர்கள் உடனடியாக இயக்கத்தில் சேர்த்துக் கொள்ளமாட்டோமென தெரிவித்து விட்டனர். ஆனால் அவன் மனந்தளரவில்லை அப்போதைய நெருக்கடியில் இயக்கத்திற்கெனப் பலஉதவிகள் செய்தான். தன் செயற்பாடுகளின் மூலம் இயக் கத்தில் தன்னை இணைத்துக் கொள்ளுவதற்கு தகுதியைப் பெற்றான்.

இவன் தன் தாயை, தன் குடும்பத்தை எவ்வளவு நேசித்தானோ அவ்வளவிற்கு தன் மண்ணையும் நேசித்தான். 1989 ஆம் ஆண்டு தன்னை முழுமையாக இயக்கத்துடன் இணைத்துக்கொண்டான். மணலாறு காட்டுக்கு இவன் பயிற்சிக்காக அனுப்பப்பட்டான் அங்கு இவனுக்கு மகலன் என்று பெயரும் சூட்டப்பட்டது. உலகத்தை கடல்மூலம் சுற்றி சாதனை படைத்த மாலுமி ஒருவரான மகலனைப் போன்று இந்த மகலனும் எல்லாச் செயல்களிலும் சிறந்து விளங்கினான்.

பயிற்சி முகாமில் பயிற்சி எடுக்கும்போது நாளாந்தம் பொருட்கள் தூக்க வேண்டி வரும் அப்போது சில பாரமான பொருட்களை சிலர் தூக்கமாட்டார்கள் அப்படியான கஷ்டமான நேரத்திலும் கூட தன் தோழர்களுக்கு உதவுவது இவனது உயர்ந்தகுணத்தைகாட்டும். மற்றவர்கள் தூக்கமுடியாமல் இருந்த சாமான்களை இவன் இலகுவாக தூக்குவான். தாங்கள் தூக்கமுடியாத சாமான்களை இவன் தூக்குகிறானே தங்களுக்காக, என்று மற்றவர்கள் இவனில் மிகுந்த அன்பு வைத்தனர்.

ஆனால் இவனோ யாரைக் கண்டாலும் அன்பாக சிரித்து கதைப்பதற்கும் போராளிகளை இலகுவில் பழக்கம்பிடிப்பதிலும் இவனுக்கு நிகர் யார் இருக்கிறார்கள் என்று நான் யோசிப்பதுண்டு. இவன் எல்லோரிலும் பார்க்க வித்தியாசமானவன் மற்றவர்களுடைய துன்பத்திலும், இன்பத்திலும் கஷ்ரத்திலும் கலந்து கொள்வான்.

இவனோடு அன்பாக பழகியவர்கள் இவனை மகலன் அண்ணா சாப்பிட்டு விட்டாரா அவர் சாப்பிடாமல் நாங்கள் சாப்பிடமாட்டோம் என்று அடம்பிடித்து சாப்பிடாமல் விட்டு விடுவார்கள். அவர்களது அன்புத் தொல்லை தாங்காமல் அவன் அவர்களுடன் சாப்பிட அமர்ந்து விடுவான். இவனோடு அவர்கள் அவ்வளவு பாசம்.

நான் இவருடன் பழகிய காலத்தில் இவரது சிரித்த அன்பான முகத்தை தவிர கோபமாக இருப்பதை காணவேயில்லை. நித்திரையில்கூட இவரது முகம் சாந்தமாகவே இருக்கும்.

பயிற்சி முகாமில் நடந்த நிகழ்சிகளிலும் விளையாட்டுகளிலும் பங்குபற்றி பல பரிசில்களை வாங்கினான். இவன் நன்கு திறமையாகவும் தண்டனை வாங்காமலும் இருந்ததினால் பயிற்சி மாஸ்ரர் மற்றவர்களுக்கு இவனை ஓர் உதாரணமாக அடிக்கடி சொல்லுவதுண்டு.

இந்திய இராணுவம் தமிழீழமண்ணை விட்டு வெளியேறியதும் இவனது பணிகள் யாழ்ப்பாணத்தில் தொடர்ந்தன. இரண்டாவது ஈழப்போர் ஆரம்பித்ததும் இவன் மோட்டார் எறிகணைப் பயிற்சிக்கு தெரிவுசெய்யப்பட்டான். அந்தப்பயிற்சியில் மிகவும் திறமையாக



படிப்பகம்

www.padippakam.com



நடந்துகொண்டான். கொக்காவில் இராணுவமுகாம் தகர்ப்பிற்கு இவன் முக்கிய பங்கு வகித்தான் பின்பு எல்.எம்.ஜி பயிற்சி பெற வாய்ப்பு கிடைத்தது அதை மிகவும் திறமையாக முடித்துக்கொண்டதும் இவனுக்கு எல்.எம்.ஜி வழங்கப்பட்டது.

1991 ஆம் ஆண்டு ஜூலை மாதம் ஆனையிறவுப் பெரும்போர் தொடங்கியது. அந்தச் சண்டைக்கு மேஜர் ரெட்டி அண்ணாவின் குறுப்பில் சென்றான். 11.07.91 அன்று இரண்டாம்நாளாகத் தடைமுகாம் மீது எம்மவர்கள் தாக்குதல் தொடுத்தார்கள். அந்தத் தாக்குதலில் எமது தரப்பில் இழப்பு கொஞ்சம் அதிகமாகவே இருந்தது. எமது அறுபத்திரண்டு தோழர்கள் வீரச்சாவெய்தினர். இதனால் அந்த முகாமை விட்டுப்பின்வாங்க வேண்டி இருந்தது.

இருப்பினும் வீரமரணமடைந்த தோழர்களின் உடல்களை மீட்டெடுப்பதில் மகலன் தீவிரமாக இருந்தான். எங்களுடன் உண்டு, ஒரே பாயில் படுத்து, ஒன்றாகவே பகிடி விட்ட தோழர்களல்லவா அவர்கள். அவர்கள் தமிழ்மண்ணிற்காகத் தம் உயிரை அர்ப்பணித்தவர்கள். இவர்கள் இராணுவமரியாதையுடன் விதைக்கப்பட வேண்டியவர்கள். அவர்களது உடலை சிங்களவன் தொட விடலாமா? முடியாது. இதனால் மகலன் கடுமையாக இருந்தான். அதற்கேற்ப அடுத்தநாள் காலை வரை உறக்கமின்றி இந்தப்பணியிலே கண்ணும் கருத்துமாக நின்றான். " மச்சான் டேய் இவன் சிங்களவனுக்கு எங்கட பொடியளின்ரை பொடியைத் தொட விடக்கூடாது" என்று கடுமையாகச் சொன்னான் அவனது இந்த வார்த்தையில் உறுதி, நம்பிக்கை, தேசப்பற்று என்பன நிறைந்து காணப்பட்டது. இந்த இவனது முக்கிய பங்கை அங்கு நின்ற எந்த ஒரு போராளியும் மறக்கமாட்டான்.

பின்னர் கடலால் தரையிறக்கப்பட்ட படையினரோடு கட்டைக்காடு பகுதியில் நடந்த சண்டையில் தனது பங்கை ஆற்றினான். 21.07.91 அன்று கட்டைக்காட்டில் நூறு இராணுவத்தினரை ஊடறுத்து தாக்கியதில் (தமிழீழத்தில் முதல் தாக்குதல் ) இவனது பங்கு முக்கியமானது இதில் 90 இராணுவத்தினர் கொல்லப் பட்டனர். ஐம்பது நவீனரகத் துப்பாக்கிகள் கைப்பற்றப்பட்டன இந்தச் சண்டையில் இவன் பங்கு மிக முக்கியமானது. பின்பு சுமார் ஒரு வருடத்தின் பின்னர் இதே பகுதியில் நடந்த "பலவேகய இரண்டு " இராணுவ நடவடிக்கையின் போது எதிரியுடன் மோதினான்.

இவனுக்கு பின்பு மதியழகன் என்று பெயர் மாற்றப்பட்டது. இவனது திறமைகளைக் கண்ட பொறுப்பாளர் இவனுக்கு பீ.கே.எல்.எம்.ஜி கொடுத்தார். இவன் தன்னுடைய ஆயுதத்தில் அதிக பற்று உள்ளவன். தனது சொத்தாகவே அதனைக் கருதினான்.

மண்டலாய் பிள்ளையார் கோவிலடியில் நான்கு காவலரண்கள் தகர்க்கப்பட்டு பல ஆயுதங்கள் கைப்பற்றப்பட்டன . பத்து இராணுவத்தினர் கொல்லப் பட்டனர். வரலாறு படைத்த கட்டைக்காடு ஆயுதக்கிடங்கு கைப்பற்றிய சண்டையிலும் பங்கு பற்றி சிறப்பாகச் செயற்பட்டான்.

எதிரியோடு மோதும் போது மட்டுமல்ல வேலைசெய்வதிலும் போட்டியாகவே செய்வான்.



படிப்பகம்

www.padippakam.com



ஒருநாள் இவன் இரண்டு தோழர்களுடன் பங்கர் போட்டியாக வெட்டினான். முதலாவதாக இவனே வெட்டி முடித்தான். எந்த வேலையிலும் சுறுசுறுப்பாகவும் விரைவாகவும் மற்றவர் மனதை கவரக்கூடிய வகையிலும் செயற்படுவான். இதே வேளை தனது அனுபவங்களையும் தான் அறிந்த செய்திகளையும் மற்றவர்களுக்கு தெளிவாக விளங்கப்படுத்துவான். இதனால் இவனை அன்பாக இவனது தோழர்கள் மாஸ்ரர் என்று கேலி செய்வார்கள்.

*09.11.1992* அன்று கிளாலிக் கடலில் பயணம் செய்ய வேண்டி வந்தது. அன்று இவன் தன் தோழர்களுடன் என்றுமில்லாதவாறு பகிடிவிட்டுக் கொண்டிருந்தான். பின்பு படகில் ஏறும்போதும் சிரித்துக்கொண்டே ஏறினான் ஆனால் கடலில் சிறிது தூரம் சென்றதும் எதிரியின் படகு நெருங்கிக்கொண்டிருந்தது தெரிந்தது. அப் போது இவன் பீகே.எல்.எம்.ஜி யை இயக்கினான் பக்கத்தில் நின்றவர்களும் தாக்கத்தொடங்கினார்கள். கூலிக்கு கும்மாளம் அடிக்க வந்த படையல்லவா எதிரி பின்வாங்கினான் ஆனால் சுடுவதை நிறுத்த வில்லை. எங்கிருந்தோ வந்த எதிரியின் குண்டொன்று மதியழகனின்(மகலன்) தலையை பதம் பார்த்தது. அக் குண்டு மகலனை எம்மை விட்டுப் பிரித்தது அவன் தனது மண்ணுக்காகவும் மக்களுக் காகவும் வீரச்சாவை ஏற்றுக்கொண்டான்.

மகலன் வீரச்சாவடைந்த செய்தியை கெட்ட எங்கள் மனம் ஒருகணம் திடுக்குற்றது மகலனின் வீரச்சாவை எங்கள் மனம் தாங்கிக் கொள்ளாது தத்தளித்தது. மகலனின் வீரச்சாவு ஒரு முழு பால்நிலவை கருமுகில் மறைத்தது போன்ற ஒரு உணர்வு.

எனினும் அவனது கைப்பிடிக்குள் அடங்கியிருந்த பீ.கே.எல்.எம்.ஜி மீண்டும் முழங்கும் தமிழீழம் என்ற எமது தேசம் தேசப்படத்தில் குறிக்கப்படும் நாள்வரையில் அதன் முழக்கம் ஓயப்போவதில்லை.

தேசம் எரிகையில் சிவந்த கண்ணுடன்

பொங்கியே எழுந்தவன் – இவன்

பாசம் அழியாத தமிழீழத்தில் எதிரியின்

காலடியை அதிரவைத்தானே – மதியே

நீ சாகவில்லை ? – இல்லை

சரித்திரமாகி விட்டாய்.

–சரவணன், ஈழநாதம்



படிப்பகம்

www.padippakam.com





# லெப்டினன்ட் சோமேஸ்

## (நடராசா நந்தகுமார்)

## வீரமரணம் : 04.08.1988

தமிழீழ விடுதலைப் புலிகளின் 10 வது பயிற்சி முகாமின் (தமிழகத்தில்) பயிற்சியாளர்களிடையே சோமேஸ் தான் கதாநாயகன். அவனைச் சுற்றி எப்போதும் ஒரு கூட்டம் காணப்படும் பயிற்சி முகாமிற்கு புதிதாக வரும் உறுப்பினர்களென்றாலும் சரி, பயிற்சி பெற்ற மூத்த உறுப்பினர்களென்றாலும் சரி, அல்லது பயிற்சி முகாமைப் பார்வையிட வந்த வெளியார்கள் என்றாலும் சரி, ஒவ்வொருவருக்குமேற்ற மாதிரிக் கதைத்து இவன் முழு தகவல்களையும் திரட்டி விடுவான். அதேவேளை அங்குள்ள நடைமுறைகள் பற்றியும் அவர்களுக்கு விளக்கமளித்து விடுவான்.

அங்கு வருபவர்களுக்கும் மற்றவர்களுக்குமிடையில் இவன் தான் தொடர்புப் பாலமாக விளங்குவான். ஏனெனில் பயிற்சி எடுக்கும் போது பயிற்சியாளர்கள் தேவையற்ற விதத்தில் எவருடனும் கதைக்க இயலாது. இதை விட ஒவ்வொருவரும் ஒவ்வொரு இடத்திலிருந்து வந்திருப்பார்கள், ஒருவரையொருவர் அறிமுகமில்லாதிருப்பார்கள், ஆதலால் கதைக்கத் தயங்குவார்கள். ஆனால் சோமேசைப் பொறுத்தவரை அதெல்லாம் கிடையாது. பழகும் விதத்தினால் அவன் எல்லோருக்கும் பிடித்தவனாகிவிடுவான். அதனால் அவன் கேட்கும் கேள்விகளுக்கு அவர்களால் பதில் சொல்லாமலிருக்க முடியாது.

சாப்பாட்டு நேரத்தில் இவனிடம் தான் மற்றைய பயிற்சியாளர்கள் விளக்கம் கேட்பார்கள். அவர்களுக்கு விளங்காதவற்றையும் மேலதிக விபரத்தையும் இவன் தான் விபரமாகப் புரியவைப்பான், அனைவரும் கூட்டமாக அமர்ந்திருக்க நடுநாயகமாக சோமேஸ் உட்காந்தி ருப்பான் பகிடிவிட்டபடி சுற்றிவர எல்லோரையும் அவதானித்துக் கொண்டே சாப்பாட்டைக்



படிப்பகம்

www.padippakam.com



குழைப்பான். பின் கதைத்துக் கதைத்து குழைத்து சாப்பாட்டைக் கொடுப்பான். அதே முகாமில் சமைத்த சாப்பாடுதான், தனியாக இருந்து சாப்பிடும் போது இது பயிற்சிக்காலச் சாப்பாடு என்ற உணர்விருக்கும். ஆனால் சோமேஸ் கொடுக்கும் போது மட்டும் அது அமிர்தமாக, வீட்டில் சகோதரர்களுடன் கூட இருந்து அம்மா குழைத்துக் கொடுக்க சாப்பிடுவது போல இருக்கும். புதிதாக வருபவர்கள் கூச்சத்தினால் சாப்பிட மறுத்தால் இவன் நீ சாப்பிடாட்டி நானும் சாப்பிட மாட்டேன் என்று அடம் பிடித்து சாப்பிட வைப்பான். அடுத்தநாள் அவர்கள் தாங்களாகவே சோமேஸ் முன் ஆஜராகிவிடுவார்கள்.

பயிற்சியின் போது களைத்துப்போய் மைதானத்தை விட்டு வருபவர்களுக்கெல்லாம் சோமேசைக் கண்டவுடன் அக் களைப்பு பறந்து போய்விடும். இவனது பகிடிகளையும் கேட்க புது உற்சாகம் பிறந்து விடும் பயிற்சி முடிந்ததும் அந்த முகாமின் முதல் பொறுப்பாளர்கள் முதல் அனைவரிடமும் ஒரே கேள்வியைத்தான் கேட்டார்கள் பயிற்சியாளர்கள்.

சோமேஸ் எங்கை போறான் எல்லோருக்கும் தாங்கள் போகுமிடத்துக்கே சோமேஸ்சும் வர வேண்டும் என்று ஒரு ஆசை, அவனிருந்தால் தான் எப்போதும் தாங்கள் உற்சாகமாக இருக்கமுடியும் என்று நம்பினார்கள்.

ஒவ்வொரு பணிகள் கருதி முகாமிலிருந்து வெவ்வேறு இடங்களுக்கு அனுப்பப்படும் போராளிகளை கைகளால் கட்டிப்பிடித்து கண்கள் கலங்க அனுப்பிய இவன் தானும் அவ்வாறு பிரிந்து சென்றான். அந்தக் காட்சிகள் அவனுடன் பழகிய எவராலும் மறக்க முடியாதவை.

எல்லேரிடமும் பழகும் விதம், விளக்கமளிக்கும் ஆற்றல் இவற்றைக் கருத்தில் கொண்டு இவன் கோயம்புத்தூர் பகுதியில் விடுதலைப் புலிகள் மாணவர் இயக்கப் பணிகளை மேற்கொள்வதற்கென தெரிவு செய்யப்பட்டான்.

மாணவர் இயக்கப் பணிகளை இவன் சிறப்பாக மேற்கொண்டான். அக் காலத்தில் இவனுடன் பழகிய கோயம்புத்தூர் மக்கள் என்றும் இந்தப் போராட்டத்திற்கு ஆதரவாளர்களாகவே விளங்குவர். எந்தத் தடைகளும் அவர்களின் போக்கில் மாற்றத்தை ஏற்படுத்த முடியாது. ஏனெனில் ஒரு போராளி எத்தகைய உயர்குணத்தைக் கொண்டிருப்பான், இந்தப் போராட்டம் எத்தனை உயரிய தியாகங்களினால் கட்டியெழுப்பப் பட்டுள்ளது என்பதையெல்லாம் சோமேஸ்சுடன் பழகியும், அவன் சொல்லக் கேட்டும் உணர்ந்திருக்கிறார்கள் அவர்கள்.

எதைத்தான் செய்தாலும் இவனுக்கு தன் சொந்த மண்ணில் இருந்து போராட வேண்டும் என்பது தான் ஆசை. தாயகத்தைப் பற்றி வரும் செய்திகள் தொடர்ந்து அங்கேயிருக்க முடியாத மன நிலையைத் தோற்றுவித்தன. அதனால் நாட்டுக்குப் போக வேணும் என்று வற்புறுத்திக் கொண்டேயிருந்தான். மாணவர் இயக்கப் பணிகளை செய்வதற்கு இவன் தான் பொருத்தமான ஆள், ஆனாலும் இவனது நச்சரிப்புத் தாங்காமல் தமிழீழத்திற்கு அனுப்பும் பொருட்டு தமிழகக் கரையில் இருந்த முகாமிற்கு அனுப்பப்பட்டான், அங்கு சில காலம் பணியாற்றிய பின்னரே இவனுக்கு தாயக மண்ணை மிதிக்கும் பாக்கியம் கிடைத்தது.



படிப்பகம்

www.padippakam.com



அந்தக் காலத்தில் சிறிலங்காப்படை இவனது சொந்தக் கிராமமான பலாலிப் பகுதி முழுவதையும் ஆக்கிரமித்திருந்தது. கள்ளக் குடியேற்றக்காரர்களை தடுக்கவென்று அமைக்கப்பட்ட இராணுவ முகாமினால் அந்தமண்ணின் பூர்வீகக்குடிமக்கள் அகதிகளாக்கப்பட்டனர்.

இவன் இப்பகுதியைச் சேர்ந்தவனென்பதாலும், அப்பகுதியை நன்கறிந்தவன் என்பதாலும் அப்பகுதியை வேவுபார்க்கும் குழுவில் இணைக்கப்பட்டான். தான் மழலையாய் நடைபயின்ற மண்ணில், உருண்டு புரண்டு விளையாடிய மண்ணில் இன்று ஒளித்து ஒளித்துப் போய் வேவு பார்க்கும் நிலை வந்துவிட்டதே என்று வருந்தினான். ஆனாலும் வரலாறு தனக்கு இட்ட பணிகளைச் செய்யும் மனத்திருப்தி இவனுக்கு இருந்தது.

கட்டுவன் காவலரணில் இவன் கடமையில் ஈடுபட்டுக் கொண்டிருக்கையில் 21.5.87 அன்று சிறிலங்காப் படைகளுடனான மோதலில் காயமடைந்தான். காலில் காயமடைந்து யாழ் வைத்திய சாலையில் இருக்கும் போது இவனுடைய அன்னை இவனைப் பார்க்க வந்தார், தான் முத்தமிட்டு வளர்த்த அந்தக்கால்கள் கட்டிலில் காயத்துடன் ஓய்வெடுப்பதைக் கண்டதும் துக்கம் தாளவில்லை அதனால் தம்பி நீ இவ்வளவு காலமும் இயக்கத்திற்கு வேலை செய்தது போதும், இனி வீட்டை வா உனக்கு ஏழு பொம்பிளைச் சகோதரங்கள் இருக்கெல்லே அதுகளுக்கெல்லாம் உழைக்க வேணும் தானை வீட்ட வா, என்று கேட்டார். அவ்வளவு தான் இவன் சீறியெழுந்தான். தான் இருக்குமிடம் வைத்திய சாலை என்பதையும் மறந்தான், எல்லாத் தாய்மாரும் சண்டைக்குப் போ எண்டு பிள்ளைகளை அனுப்புற நேரத்தில நீ வீட்டை வரச் சொல்லிக் கேக்கிறாய்? நீயும் ஒரு தாயே? எங்கட இடமெல்லாம் ஆமிக்காரன் பிடிச்சு வைச்சிருக்கிறான், இந்த நேரத்தில வீட்டை வரச்சொல்லிக் கேட்கிறாய், இஞ்சையிருந்து போ இனிமேல் இதைப்பற்றி கதைச்சா நான் வீட்டையே வரமாட்டன் என்று கத்தினான் வேதனையுடன் தாய் அங்கிருந்து நகர்ந்தார்.

பெற்ற தாயை இப்படி அவன் ஏசியதற்கு சில காரணங்கள் இருந்தன. முதலாவது இவன் காயப்படுவதற்கு முதல் நாள் தான் யாழ் மாவட்டத் தளபதியாக இருந்த ராதா சிறிலங்காப் படையினருடனான மோதலில் வீரச்சாவெய்தியிருந்தார். அதுவும் இவன் காயப்பட்ட அதே கட்டுவன் பகுதியில். ஒரு தாயைப் போன்ற கவனிப்புடன் அவனை நேசித்த ராதாவை இழந்த ஆத்திரம் அவனுள் குமுறிக்கொண்டிருந்தது ராதாவை இழந்த சோகத்தில் இருக்கையில் தனது தாயார் வந்து இப்படிக் கேட்டதை அவனால் பொறுக்க முடியவில்லை. அடுத்து அவனது காயத்தின் வேதனை, இவையிரண்டும் இல்லாவிட்டால் இவன் தனது வழமையான பாணியிலேயே சிரித்துக் கதைத்து தனது மறுப்பை தெரிவித்திருப்பான். ஏழ்மையான குடும்பச் சூழ்நிலை ஏழு சகோதரிகள் குடும்பத்தின் மீது அவனுக்குப் பாசமிருந்தது தான் ஆனாலும் அதைவிட தேசத்தின் மீதிருந்த பாசம் கூடுதலாக இருந்தது.

இந்திய இராணுவத்துடனான போர் ஆரம்பித்ததும் இவனுக்கு ஜீ.பி.எம்.ஜீ யுடன் நின்று போரிடும் சந்தர்ப்பம் கிடைத்தது, குளப்பிட்டி, வட்டுக்கோட்டை, ஏழாலை போன்ற இடங்களில்



படிப்பகம்

www.padippakam.com



இந்தியப்படையினர் இவனது அணியிடம் பேரிழப்பைச் சந்தித்தனர். இறுதியாக 4.08.1988 இல் நித்தகைக்குளத்தில் இந்திய இராணுவத்தினருடனான மோதலில் இவன் வீரச்சாவெய்தினான். நித்திகைக்குளத்தில் இருந்த எமது முகாமொன்றைக் கைப்பற்றிய இந்திய இராணுவம் அங்கிருந்து தாம் புறப்பட்ட முகாமுக்கு திரும்பிச் சென்றது. இவ்வாறு திரும்பிச் செல்லும் வழியில் அவர்களுக்கு விழுந்த அடி மீண்டும் அதே முகாமுக்குத்தான் வழிகாட்டியது . அதனால் திரும்ப அங்கேபோய் நின்று கொண்டு தமது அடுத்தகட்ட நடவடிக்கை பற்றித்தீர்மானித்தனர்.

இந்நிலையில் நீ போனாலும் அடிப்போம், வந்தாலும் அடிப்போம் என்று இந்திய இராணுவத்தினருக்கு படிப்பிப்பதற்காக அந்த முகாம் மீது தாக்குதல் நடத்த தீர்மானித்தான் சோமேஸ். மிகவும் கிட்டிய தூரத்தில் தான் நின்று நடத்தப் போகும் அந்தத் தாக்குதல் எப்படி நடக்கப் போகின்றது என்பது அவனது மனத்திரையில் தெரிந்தது.

அதனால் 10 கைக்குண்டுகளுடனே சென்றான். அங்கிருந்த தனது அயற் கிராமத்தவனாகிய நெடுமாறனிடம் இச் சண்டையில் நான் செத்தா வீட்டுக்காரருக்கு அறிவிச்சிடடாப்பா, அவை இப்ப இடம் பெயர்ந்து விசுவமடுவில தான் இருக்கினம், அது உனக்குத் தெரியும் தானே? என்றுகேட்டான். அவன்திட்டமிட்டபடியே சண்டைமிக மூர்க்கமாக நடைபெற்றது. 10 கைக்குண்டுளும் முடிந்த நிலையில் திரும்பிவந்து மீண்டும் பல கைக்குண்டுகளை எடுத்துக்கொண்டு போய்ப் போரிட்டான் சோமேஸ். அந்தத் தாக்குதலில் எஸ்.எம்.ஜி சுடுகுழல், ரவைகள் இப்படியாக பல ஆயுதங்கள் எமக்கு கிடைத்தன ஆனால் நாம் சோமேசை இழந்து போனோம்.

பொது அறிவு சம்பந்தமான விடயங்களில் சந்தேகம் ஏற்படும்போது எமக்கு விளக்கமளிக்கும் சோமேஸ். எவர் தவறு விட்டாலும் நக்கீரன்பாணியில் அதே சமயம் அவர்களது மனம்கோணாமல் நகைச்சுவையாகவே அத்தவறைச் சுட்டிக்காட்டும் சோமேஸ். போராளிகளின் எந்தப்பிரச்சினையானாலும் தனக்கு அப்பால் போகாத நிலையில் தீர்த்துவைக்கும் சோமேஸ், அந்த 10 ஆவது முகாமின் கதாநாயகன் சோமேஸ், கோயம்புத்தூர் மக்களின் மனதில் என்றும நிறைந்திருக்கும் சோமேஸ் இன்று இல்லை என்னும்போது எம்மால் நம்ப முடியாமல் இருக்கிறது.

இவனை நினைக்கும் போது மிகமுக்கிய சம்பவமொன்று நினைவுக்கு வருகிறது இந்தியப்படையுடன் போர்தொடங்கிய பின்னர் ஒவ்வொரு இடமாகஇந்தியப்படை பிடித்து வந்தது நாம் யாழ் மாவட்டத்தை விட்டு வன்னிக்காடுகளுக்கு போயிருந்தோம் .தொடர்ச்சியான போர் களைப்பையும் ஏற்படுத்தியிருந்த வேளை அது அடுத்து என்னென்ன நடக்குமோ என்ற நிலை.இதைப் பற்றிபலரும் பலவிதமாகக்கதைத்துக் கொண்டிருந்தனர். அப்போது சோமேஸ் சொன்னான். இனித்தான் இந்தியன் ஆமி வாங்கப் போறான் எப்படிக் காடு இருக்குதென்டு படிக்கப் போறான். நாங்கள் இவனுக்குப்படிப்பிச்சுக்காட்டுவம், சோமேஸ் சொன்னபணி அனைவருக்கும் புது உறுதியுடன் தோள்களில் ஆயுதங்களை மாட்டிக் கொண்டனர்.



படிப்பகம்

www.padippakam.com



சோமேஸ் சொன்னது போலவே இந்திய இராணுவம் தமிழீழக் காடு எப்படி இருக்கின்றது என்பதை படித்தது. அதற்காக நிறையவிலை கொடுத்தது.

இந்திய இராணுவம் எமது மண்ணை விட்டகன்றதும் காட்டுக்குள்ளிருந்து மீண்டும் யாழ் குடாவை நோக்கி வந்தோம்.

வரும் வழியில் "இவன் இந்தியன் ஆமி இனித்தான் வாங்கப்போறான்" என்றுகூறி எமக்கு உற்சாகமூட்டிய இடத்தைக் கண்டோம். அன்றைய காட்சியை நினைக்கும் போது நெஞ்சுகனத்தது. அந்த இனிமை இனி நாம் சோர்வாக இருப்பது அவனுக்குப்பிடிக்காது அதனால் மீண்டும் எமது துப்பாக்கியைச் சரிபார்த்தபடி வண்டியில் ஏறினோம். அவன் பிறந்த இடமான பலாலியைப் பார்க்கவேண்டும் என்ற அவசரத்துடன். இப்போது அவன் தனது தாய்க்கு கூறிய வாசகம் நினைவுக்குவருகிறது.

இது எல்லாத்தாய்மாரும் சண்டைக்குப்போ எண்டு பிள்ளைகளைஅனுப்புறநேரம்....

–ஆ.செந்தாளன், ஈழநாதம்.



படிப்பகம்

www.padippakam.com





# கப்டன் தேனுஜா

## (மதனி)

அன்று 14.07.1992 பௌர்ணமி முழு நிலவு. கறுக்காய் வெட்டையில் நிலை கொண்டிருந்த எமது தோழர்களின் இதயங்களிலோ வேதனைப் பெருநெருப்புப் பற்றியிருந்தது.

"தேனுஜா வருவாள்" என்று நம்பிக்கையைச் சுமந்தபடி இன்னும் அவர்கள் விழிகளை வழியிற் பதித்தபடி காத்திருந்தனர்.

காலை 10.00 மணிபோல் இராணுவத்தின் நிலைகளை வேவுபார்க்கச் சென்றிருந்தாள் தேனுஜா. அவள் போய் ஒரு மணித்தியாலந்தான் கழிந்திருக்கும் ... அண்மையில் திடீரெனக் கேட்ட குண்டு வெடிப்புச் சத்தம் எல்லோரையும் ஒரு கணம் உலுக்கி விடுகிறது.

'தேனுஜாவுக்கு ஏதும் நடந்திருக்குமோ' எல்லோர் மனங்களிலும் ஏக்கம்.

'தேனுஜாவைத் தவிர வேறு யாரும் அத்திசையில் செல்லவில்லையே... இப்படித்தானே பலநாட்கள் நடந்தன'. இது இன்னொரு பக்க மனம்.

எதிரியின் பதுங்கு குழிகளுக்குள் நின்று கொண்டே எதிரியைத் தேடுகின்ற லாவகமும், பொறி வைத்துக் காத்துக் கிடக்கின்ற எதிரியின் கண்களை ஏமாற்றி விட்டுத் தப்பி வருகின்ற திடசித்தமும் தேனுஜாவுடன் கூடப்பிறந்த திறமைகளாயிற்றே...

எப்படியும் எங்கள் தேனுஜா வருவாள். விழிகள் பாதையை இறுகக் கவ்வியிருந்தன.



படிப்பகம்

www.padippakam.com



இப்படித்தான் அன்றும் ஒரு நாள்...

தான் அவதானித்த எதிரியின் நிலைகளைக் காட்டுவதற்காகத் தளபதிகளைக் கூட்டிச் சென்றிருந்தாள்.

பாதையில் ஓரிடத்தில் அவர்களை நிறுத்தி வைத்துவிட்டு முன்னே சென்று மீண்டும் நிலைமையைப் பார்த்து வர எண்ணினாள்.

அங்கே... எதிரி ஒருவன் தன்னை உருமறைத்தபடி மர நிழல் ஒன்றில் நின்றிருந்தான் அவனை எமது தோழர்கள் என நினைத்தவள் "யார் அண்ணாவா" என வினாவுகிறாள்.

ஒரு கணம் தான்... நிலைமையைப் புரிந்து கொண்டாள். எதிரியின் துப்பாக்கி இயங்குகிறது. வேவு பார்பதற்காகத் துப்பாக்கியை வைத்தவிட்டுக் கைக்குண்டுடன் சென்ற தேனுஜா சிறிதும் பதறவில்லை. சிரித்தபடியே எம்மிடம் ஓடி வந்தாள். "ஆமியை நான் எங்கட அண்ணாக்கள் எண்டெல்ல நினைச்சுப் போட்டேன்" என்று கூறிச் சிரித்த தேனுஜா...

மீண்டும் வருவாள்...

"எங்கள் தேனுஜாவுக்கு எதுவும் நடக்காது" எல்லோர் இதயங்களிலும் இதே ஏக்கம், எல்லோர் உதடுகளிலும் இதே உச்சரிப்பு.

நேரம் நடுநிசியையும் தாண்டிக் கொண்டிருக்கிறது. எங்கள் தேனுஜாவை இன்னும் காணோமே...

அப்ப ஏதாவது நடந்திருக்குமோ...

இதயம் நம்ப மறுத்து. மீண்டும்...

சருகுகள் மிதிபடும் ஓசை. எல்லோர் இதயங்களிலும் நம்பிக்கையின் துளிர்ப்பு.

தேனுஜா... தேனுஜா... வோக்கியில் எங்கள் நம்பிக்கைகளையெல்லாம் ஒன்றாக்கிக் கூப்பிடுகிறோம். "தேனுஜா...! நாங்கள் கிட்டத்தான் நிற்கிறம். வாங்கோ." சருகுகளின் ஓசையில் ஒரு கணம் துளிர்த்த நம்பிக்கை மீண்டும் தவிடு பொடியாய்...

எங்கள் தேனுஜாவை நாங்கள் இழந்துவிட்டோம். கசப்பான உண்மையை ஏற்றுக்கொள்ள முடியாமல் எல்லோருடைய முகங்களும் ஒரு கணம் மண் நோக்கிக் கவிழ்ந்தன.

ஆம்! இவளின் இழப்பை யாரும் இன்னும் ஏற்றுக்கொள்ளத் தயாரில்லை.



படிப்பகம்

எப்பொழுதும் அன்பு குழைந்த முகத்துடன் எல்லோருடனும் எந்த விதப் பேதமும் இன்றிப் பழகுகின்ற மதனி சாகவில்லை என்று அவளை நேசித்த அவளின் கிராமத்து மக்கள் இன்னும் உறுதியாகக் கூறிக்கொள்கிறார்கள்.

இதுதான் எங்களுடைய விடுதலைப் போரட்டம். ஒவ்வொரு போராளியும் வாழ்விலும் சாவிலும் இந்தத் தேசத்தின் வாழ்வுடன் இரண்டறக் கலந்து போயிருக்கிறார்கள்.

அழ மறந்துபோய் மதனியின் போராட்ட வாழ்வை நினைவு கூருகின்றனர் அவளின் பெற்றோர், சகோதரிகள்...

இவளுக்கு யாரையும் கோபிக்கத்தெரியாது. அதே நேரம் பிரச்சினைகளைக் கண்டு ஒதுங்கிக் போகின்ற சுபாவமும் இவளுக்கில்லை.

இந்திய இராணுவம் எம் மண்ணில் நிலை கொண்டிருந்த காலத்திலே துணிந்து மாணவியாக இருந்து கொண்டே தன்னுடைய பங்களிப்பைச் செய்தவள். அக் காலத்தில் இந்திய இராணுவ வெறித்தனத்துக்கெதிராக நடைபெற்ற ஊர்வலங்கள், உண்ணாவிரதங்கள், மறியற்போராட்டங்கள் எதிலும் தேனுஜாவைக் காணலாம். வடமராட்சி மாணவர் ஒன்றியத்துடன் இணைந்து செயற்பட்ட இவள், மாணவர்கள் இந்திய இராணுவத்தால் வெறித்தனமாகத் தாக்கப்பட்ட நேரங்களில் எல்லாம் எதிரியின் பாசறை தேடிச் சென்று நியாயம் கேட்டவள். எந்த நேரத்திலும் அழிவு ஏற்பட்டு விடுமோ என இவள் அஞ்சியது கிடையாது.

வீட்டில் இருக்கும் பொழுதே தேனுஜா தெளிவான முற்போக்கான கருத்துக்களைக் கொண்டிருந்தாள். பெண்களால் எதையும் சாதிக்க முடியும் என்ற ஆழமான நம்பிக்கை கொண்டவள். அவள் தனது பாடசாலைப் பிராயத்திலே தனது வாழ்க்கைத் துணைவனாக நேசித்தவன் , இவளின் இத்தகைய புரட்சி மனப்பாங்கை ஏற்றுக் கொள்ள முடியாது தோற்றுப் போனான். தேனுஜா ஒவ்வொரு சந்தர்ப்பத்திலும் வாழ்க்கையில் வரும் சவால்களை எதிர்கொண்டு புதிதாய்ப் பிறந்தாள்.

உண்மையில் 'அன்பு' என்பதன் உன்னத அகராதியாக இவள் திகழ்ந்தாள். துள்ளித் திரிகின்ற நடையும், எதையும் கலகலகப்பாக மட்டுமே பேசத் தெரிந்த இவளின் தன்மையும் அறுக்க முடியாத பெரும் பாசப் பிணைப்பையல்லவா ஏற்படுத்தி நிற்கின்றது.

இவள் காயப்பட்டிருந்த நேரம் 'ஏன் மதனி? இனியாவது வீட்டில் நிற்கலாம் தானே' என்று இவளுடன் பழகியவர்கள் கேட்ட நேரம் மட்டும் தான் இவளது முகத்திலே கோபத்தைக் கண்டதாகக் கூறுகின்றார்கள். உண்மை தான். இதை இவளுடன் கூட இருந்த ஒவ்வொரு போராளியும் மறக்க மாட்டார்கள்.

தேனுஜா!

www.padippakam.com



இவள் மகளிர் படையணியின் வரலாற்றில் ஓர் திருப்புமுனை. 1989ம் ஆண்டு 6வது பயிற்சி முகாமிலே தனது பயிற்சியை முடித்துக் கொண்ட இவள் தனது ஒவ்வொரு செயற்பாட்டிலும் புதிய முத்திரை பொறித்து நிற்பாள். அருள் 89 எனப்படும் துப்பாக்கி எறிகணையைச் செலுத்துவதில் இவள் ஒரு போதும் தோல்வியைக் கண்டது கிடையாது.

தேனுஜா தனது பயிற்சியை முடித்துக் கொண்ட காலத்தில் இருந்து அவள் இல்லாமல் எந்தச் சண்டையும் நடந்தது இல்லை. அவளைச் சண்டைக்கு செல்லவிடாது யாராலும் தடுக்க முடியாதிருந்தது.

தேனுஜாவின் கள அனுபவங்களைப் பகிர்ந்து கொள்வதே ஒரு தனி வரலாறு. எந்தக் களத்திலும் இவள் தனியான முத்திரையைப் பதிக்காது வரவில்லை.

பலாலி இராணுவ முகாமைச் சுற்றி மகளிர் படை எல்லையிட்டு நின்றபோது தேனுஜாவின் கால்கள் எப்போதும் எதிரியின் முகாமைச் சுற்றிச் சுற்றி நடந்தன. இராணுவ நடமாட்டம் அனைத்தையும் ஒன்றும் விடாது அவள் விழிகள் அவதானித்தன. அப்பொழுது இராணுவப் பகுதியில் இருந்து கிரனைட், டொங்கான் ஷெல் போன்றவற்றை எடுத்து வந்தாள். இதைத் தொடர்ந்து கட்டுவனில் ஏற்பட்ட மோதலில் தேனுஜா காயப்பட்டாள். ஆனால் எந்தக் காயமும் இந்த வேங்கையினது வேகத்தை முடக்கி விடவில்லை. வீறு கொண்டெழவே வைத்தன.

சிலாபத்துறை முகாம் தாக்குதலில் இவளது போர்த்திறனைப் பற்றி எமது தோழிகள் பெருமையுடன் நினைவு கூறுவார்கள். மன்னார் மாவட்டத்தைப் பொறுத்தவரை அங்குள்ள போராளி களுக்கு மகளிர்படை என்றவுடன் நினைவுக்கு வருவது தேனுஜா தான். அந்தளவு தூரத்துக்குச் சிலாபத்துறை முகாம் தாக்குதலில் அவள் வீரத்துடன் போரிட்டாள்.

சிலாபத்துறை முகாம் தாக்குதலின் முதற்கட்டமாக, சிலாபத்துறை மினிமுகாம் பயங்கரமான மோதலின் பின் எம்மால் வெற்றி கொள்ளப்பட்டது. அடுத்த கட்டமாகப் பிரதான முகாமைக் கைப்பற்றும் முயற்சி நடைபெற்றது. தேனுஜாவின் குழுவினர் வானிலிருந்து வரும் குண்டு மழையையோ, ஷெல் வீச்சையோ பொருட்படுத்தாது பாய்ந்தோடி, முகாமின் ஒரு பகுதிக்குள் நுழைந்து விட்டனர். எவரின் உதவியையுமே பெற்றுக் கொள்ள முடியாத நிலையில் நீண்ட நேரமாகத் தேனுஜாவும் அவள் குழுவினரும் அந்த இடத்தில் நின்றவாறு, இராணுவத்தினருக்குத் தரைமார்க்கமாகவோ, கடல் மார்க்கமாகவோ உதவி கிடைக்காதவாறு தடை செய்து கொண்டிருந்தனர். தேனுஜா தனது அருள் 89 எறிகணைகளை ஒவ்வொன்றாக முகாமினுள் செலுத்தி எதிரியின் வேகத்தை அடக்கிக் கொண்டிருந்தாள்.

இந் நேரம் இராணுவத்தினருக்கு உதவி வழங்கும் நோக்கில் வானிலிருந்து விமானம் மூலம் ரவைப் பொதிகள் போடப்பட்டுக் கொண்டிருந்தன. இராணுவ நிலைக்கு அண்மையில் விழுந்த ரவைப்பொதிகளில் இரண்டை தனியனாக ஊர்ந்து சென்று எடுத்து வந்தாள் தேனுஜா. குழந்தையாய் குதூகலித்து நிற்கும் தேனுஜாவைக் களத்திலே கண்டால், தேனுஜா தான் என்று யாரும் நம்ப மாட்டார்கள். அந்தளவு தூரத்துக்கு சினங் கொண்ட வேங்கையாய் கிளர்ந்தெழுந்து



படிப்பகம்

www.padippakam.com



நிற்பாள். சிலாபத்துறை முகாமை தகர்க்காது பின் வாங்க மாட்டேன் என்ற அவளது வேகம் வீரச் சாவைத் தழுவும் வரை சிறிதும் தணியவில்லை. எப்படியேனும் எதிரியை இம் மண்ணிலிருந்து விரட்டி விட வேண்டும், எம் மண்ணில் புலிக் கொடியை உயரப் பறக்க விட வேண்டும் என்ற மாறாத இலட்சியக் கனவுடன் தான் தனது ஒவ்வொரு நடவடிக்கைகளையும் மேற் கொண்டாள்.

சிலாபத்துறைத் தாக்குதல் தேனுஜாவை ஒரு சிறந்த போராளியாக, சிறந்த வீராங்கனையாக இந்த உலகுக்கு வெளிப்படுத்தியது. இந்தத் தாக்குதலில் இவள் தன் கையிலே காயமடைந்தாள்.

ஆனையிறவுச் சமரின் போதும் இவள் தன்னுடைய முழுத் திறமைகளையும் வெளிக்காட்டியிருந்தாள். எதிரியுடன் நேருக்கு நேர் நின்று மோதுவதில் இருந்து, களத்தில் காயப்பட்ட வீரர்களை விரைவாக இடம் மாற்றுவது, களத்தில் நின்று போராடிக் கொண்டிருக்கும் போராளிகளுக்குத் தேவையான வெடிபொருட்கள், உணவு, நீர் போன்றவற்றை வழங்குவது என்று எல்லா முனைகளிலும் பாய்ந்தோடி நின்றாள்.

தொடர்ந்து மணலாற்றில் நடைபெற்ற இராணுவ நடவடிக்கையின் போதும் தேனுஜாவின் பங்களிப்பு மறக்க முடியாதது. அடர்ந்த காட்டுக்குள் தளம்பாத உறுதியுடனும் வீரத்துடனும் நின்று போராடினாள். இந்தச் சண்டையின் போது அவளது வயிற்றில் பெரிய காயம் ஏற்பட்டது.

இவளது ஆற்றலும், அருமையும், வீரமும், துணிவும் மகளிர் படையணிக்கென்றொரு தனித்த விசேட வேவுப் பிரிவை உருவாக்குகின்ற அளவுக்கு வளர்த்துச் சென்றன. விசேட வேவுப் பிரிவின் பொறுப்பை ஏற்ற தேனுஜா இரவு, பகல் பாராது உழைத்தாள்.எப்படியேனும் மகளிர் படையணி தானே முழுமையான போர்த்திட்டங்களையும் வகுத்து இராணுவ முகாம் ஒன்றைத் தாக்கி அழிக்க வேண்டும் என்ற இலட்சியக் கனவை இதயத்துள் தேக்கி வைத்தாள். அதனைச் செயலுருவில் கொண்டு வர வேண்டுமெனத் துடித்தாள்.

இயக்கச்சியைக் கைப்பற்றும் நோக்குடன் இராணுவத்தால் மேற்கொள்ளப் பட்ட ஒப்பிரேஷன் பலவேகயா – 2 நடவடிக்கையின் போது தேனுஜாவின் வேகத்தைக் கண்ட தளபதிகள் அனைவருமே இவளின் திறமையை வியந்து நின்றனர்.

"நாங்கள் எந்த இடத்துக்குப் போனாலும் அங்கே தேனுஜா நிக்கிறா. எப்படி இவவால இப்படி நடக்க முடிகிறது? இதுவரை இங்கேயே நிண்ட எங்களுக்குக் கூட தெரியாத இடமெல்லாம் இந்தப் பிள்ளைக்கு தெரிந்திருக்குது" என்று கூறி ஆச்சரியப்பட்டனர்.

ஆம், இயற்கையின் ஒவ்வொரு அசைவையும் கூர்ந்து அவதானித்துச் செயற்படுவதில் வல்லவளாகிய இவள் இந்தச் சண்டையின் போது எல்லோருக்கும் வழி காட்டியாக நின்றாள்.

சிட்டுப் போல பறந்து திரிந்து எதிரியின் அசைவை அவதானித்து நின்றாள். நாம் எல்லோரும் 'எதிரி எங்கே... எங்கே...' என்று அவன் வரவைத் தேடி நிற்க, இவளோ எதிரியின்



படிப்பகம்

www.padippakam.com



பக்கத்தில் நின்று கொண்டே தன்னுடைய நடவடிக்கைகளை மேற்கொண்டாள். விடுதலைக்காக அவள் எதையும் செய்யத் தயாராக இருந்தாள்.

ஒரு முறை வேவு பார்க்கப் போனவள் திடீரென்று வோக்கியில் அறிவிக்கிறாள். "ஆர்.பி.ஜி யோடை உடனை வாங்கோ" என்று. மறுகணம் "வேண்டாம், நானே நேரில் வருகிறேன்" என்று அறிவித்தாள். எங்களுக்கு விளங்கவில்லை.

நேரில் வந்த போது தேனுஜா சொன்னாள். "அக்கா, எங்கடை இடத்திலை எதிரி வந்து குசாலாகத் திரிகிறதைப் பார்த்தவுடன் எனக்கு கண்மண் தெரியாமல் கோபம் வந்திட்டுது. கொஞ்சம் உணர்ச்சி வசப்பட்டு விட்டன். பிறகு தான் நான் போன வேலையை யோசிச்சன். எனது தவறு விளங்கிச்சு. அது தான் அப்படி அறிவிச்சனான்" என்றாள்.

எதிரியைக் கண்ணால் கண்டும் அவன் குசாலாகத் திரிவதைக் கண்டும் இவள் ஏன் தன்னை அடக்கிக் கொண்டாள். எங்கள் மண்ணில் எதிரியின் பாதப் பதிவு கூட இருக்கக் கூடாது என்பதற்காக நிதானத்துடன் திட்டங்களை வரைந்து கொண்டிருந்தவள் இந்த வேங்கை. இதனால் தான் அவள் தனது ஆத்திரத்தை அடக்கிக் கொண்டாள்.

இன்னொரு நாள் வேவு பார்க்கப் போனவள் வந்து சொன்னாள். "அக்கா அந்தப் பொயின்றிலை இரண்டு டொங்கான் இருக்கு. எப்படியும் நான் தான் அதை அடிச்சு எடுப்பன். இரண்டு டொங்கானையும் எடுத்து அண்ணாட்டைக் கொடுத்து எங்களுக்கு எம் 203 ஒண்டு வாங்குவன்" என்றாள்.

எத்தனையோ ஆயிரம் கற்பனைகளைத் தனது இதயத்தில் தேக்கி எங்கள் தேனுஜா செயற்பட்டாள். சண்டை தொடங்கிய நாளில் இருந்து தன்னைப் பற்றி அவள் பொருட்படுத்தியது கிடையாது. பதினைந்து நாளாக குளிக்கக் கூட இல்லை. சாப்பாட்டில் கவனம் செலுத்தவில்லை. அவளது முழுக் கவனமும் எதிரியின் நிலைகளைத் தாக்கி அழிப்பதிலேயே செலுத்தப்பட்டது. "எப்படியும் இவங்களை அடிச்சுத் துரத்திப் போட்டுத்தான் நான் குளிப்பன்." என்று கூறிக் கொண்டே வேகம் கொண்டு எழுந்தாள்.

தமிழீழத் தாகத்தை மட்டுமே தன் நெஞ்சில் தேக்கி வளர்த்த எங்கள் தேனுஜா தன் இலக்கை நோக்கிய பயணத்தில் வீரச்சாவைத் தழுவிக் கொண்டாள். எல்லோர் இதயங்களிலும் இலட்சியக் கனவை வளர்த்து விட்டு இவள் எமக்கு வழி காட்டிச் சென்றுவிட்டாள்.

ஈழக்கனவினைச் சுமந்தவள் நினைவுகள் இன்று எங்கள் இதயங்களை ஆக்கிரமித்துள்ளது. அவள் பாதச்சுவடுகளில் எங்கள் பாதச் சுவடுகளை இன்னும் ஆழமாகப் பதிக்கிறோம்.

விடியலைக் காணும் வரை இந்த வேங்கைகளின் பயணம் ஓயாது.

– புதியவள், சுதந்திரப்பறவை.



படிப்பகம்

www.padippakam.com





# கரும்புலி மேஜர் காந்தரூபன்

## (யோகராசா கோணேஸ்வரன்)

**வீரமரணம் : 10.07.1990**

ஒருநாள் தொழிலுக்குப் போறதுக்காக ஒழுங்குகளைப் பார்க்க நான் கடற்கரைக்குப் போனன். கரையில ஊர்ச் சிறுவர்களோட புதுசா ஒரு பையனும் நிண்டுகொண்டிருந்தான். ஒரு கிழிஞ்ச பெனியன் போட்டுக்கொண்டு, மெலிஞ்ச உடம்போட அவன் இருந்தான். அவனைக் கூப்பிட்டு, "நீ ஆர் தம்பி? எங்க இருந்து வாறாய்?" என்று ஆதரவோட கேட்டன்.

உடனேயே அவனுக்கு இரண்டு கண்களும் கலங்கிபோச்சுது. எனக்கு ஒருத்தருமில்லை... அம்மா அப்பா எல்லாம் செத்துப் போச்சினம் சொந்தக்காரர் ஆருமில்லை இப்படியே நடந்து நடந்து இந்தக் கடற்கரைக்கு வந்து சேர்ந்தன் என்றான். காந்தரூபனை தனது சொந்த மகனைப்போல எடுத்து பாசத்தோட வளர்த்த அவர், அவனின் கதையைச் சொல்லிக்கொண்டிருந்தார்.

"கலியாணம் செய்து நீண்ட காலமாக எங்களுக்கு குழந்தை கிடைக்கல்லைத் தம்பி... ஆரிட்டையாவது ஒரு குழந்தையை எடுத்தாவது வளப்பம் எண்டு நாங்கள் நினைச்சுக் கொண்டிருந்தம்...

அந்த நேரத்திலதான் தம்பி எங்களிட்ட வந்தான். அவனை வீட்டுக்குக் கூட்டிவந்து சொந்தப் பிள்ளையாக வளர்த்தம்..."

"இது நடந்தது பதினைஞ்சு வருசத்துக்கு முந்தி... அதுக்குப்பிறகு காந்தரூபன் வளந்து பெரியவனாகி, பின் இயக்கத்துக்குபோனான்."



படிப்பகம்

www.padippakam.com



அவர் மனதைத் திறந்து கதைத்துக் கொண்டிருந்தார்.

"நான் கடற்புலியளுக்கு ஓட்டியாய்ப் போறனான். வண்டியில் நாங்கள் பொடியளையோ சாமான் களையோ கொண்டு வாற நேரங்களில் கனதரம் நேவியால கலைபட்டிருக்கிறம். இப்படி நாங்கள் போய்வாறதுகள் பற்றி தகவல் சொல்கிற பெரிய கப்பல் நடுக்கடலில் நிக்கும். அந்தக் கப்பல் எடுக்கிற தகவல்கள்தான் நாங்கள் கடலில் பறிகொடுத்த அத்தனை பொடியளின்ர சாவுக்கும் காரணம்."

"அந்தத் தாய்க்கப்பல எங்கட பொடியள் அடிக்கப்போறாங்களாம் எண்டு கேள்விப்பட்டன். அந்தக் கப்பல அடிக்கிறதுக்கு கரும்புலியாப்போற பையன்களில எங்கட "காந்தரூபனும்" ஒரு ஆளாம் எண்டிறதையும் நான் அறிஞ்சன்.

"எங்களுடைய முகத்தை ஊடுருவிப் பார்த்து விட்டுச் சொன்னார். 'உடனே தாங்கிக்கொள்ள எனக்குக் கஷ்டமாகத்தான் இருந்தது."அவருடைய நா தழுதழுத்தது. சோகம் தொண்டையை அடைக்க, அவர் தொடர்ந்தார்.

"கடைசியா அவன் கரும் புலியாய்ப் போகும்போது நானும் கடற்கரையில் நிண்டன். அவனை நான் எந்த இடத்தில் முதன் முதலில் கண்டு தூக்கி வளர்த்தனோ, அதே கடற்கரை. படகில ஏறப் போறதுக்கு முதல் என்னட்ட ஓடிவந்தான். கட்டிப் பிடிச்சு மாறிமாறி கன்னத்தில கொஞ்சினான். அநாதையா வந்த என்னை ஆளாக்கினியள் அப்பா எண்டான்.

உங்களுக்கு ஒண்டு ஞாபகமிருக்கோ எண்டான். இந்தக் கடற்கரையில இந்த இடத்திலதான் உங்களுக்கு நான் மகனானனான். இண்டைக்கு இதே இடத்தில, உங்களை விட்டிட்டுப் போறன் எண்டு சொல்லிப் போட்டு போனான் தம்பி."

திறந்திருந்த கதவொன்றைச் சுட்டிக்காட்டி "அது தான் எங்கட சாமி அறை. அந்தத் தெய்வத்தின்ர படத்திற்குப் பக்கத்திலதான் அவன்ர படத்தையும் வைச்சிருக்கிறம்" என்றார்.

"தன்ர சொந்த அப்பாவின்ர பேர் அவனுக்கு தெரிஞ்சிருந்தும், இயக்கத்தில விபரங்களைப் பதியேக்க யோகராசா எண்டு என்னைத் தான் தன்னுடைய அப்பா எண்டு பதிஞ்சிட்டுப் போயிருக்கிறான்...ம்".

அவருடைய கண்கள் கலங்கிப்போயின. தனது சால்வையால் கண்களை ஒற்றிக்கொண்டார். அருகிலே நின்ற அம்மா சொன்னா–

"அன்றைக்கு முழுவதும் இவர் ஒரு மாதிரி இருந்தார். நான் ஒண்டும் கேக்கேலை. பின்னேரம், கடலில பொடியள் கரும்புலியாய்ப் போய் கப்பலடிக்கப் போறாங்களாம் எண்டு, பாத்திட்டு வாறனெண்டு போனார். காந்தரூபனும் போகப்போறான் எண்டு இவர் சொல்லவில்லை. இரவானதும் எனக்கு நித்திரை வர மாட்டனெண்டிட்டுது, சத்தத்தையாவது கேப்பமெண்டு



படிப்பகம்

www.padippakam.com



வீட்டு வாசலில் இருந்தன்.

கொஞ்ச நேரத்தில் கடலதிரச் சத்தம் கேட்டுது. நான் வாசலிலே இருந்தன். இவர் ஒரு மாதிரியாக, சோர்ந்து போய் வந்தார்."

"வீட்டுக்குள்ள வந்தவர் எங்கட காந்தரூபனும் கரும்புலியாப் போனவன் என்று சொல்லிப் போட்டு அழுதார். நான் ஏங்கிப் போனன். என்னால தாங்கிக்கொள்ளேலாம இருந்தது... நானும் சேர்ந்து அழுதன்."

யோகராசா அண்ணரும், மனைவியும் பிற்காலத்தில் மூன்று குழந்தைகளைப் பெற்றார்கள். அவர்கள் தங்களுக்கு நான்கு குழந்தைகள் என்று சொல்லுகிறார்கள். தங்களுடைய முதல் மகன் கோணேஸ்வரன்(காந்தரூபன்) என்றார்கள்.

அவர்களுடைய மூத்த மகன் கரும்புலியாகிக் கடலிலே காவியமாகியபின், அவர்களுடைய நான்காவது மகன் பிறந்தான்.

இப்போது கைக்குழந்தையான அவனைத் தூக்கி தோளில சாய்த்தபடி அந்தத் தாய் சொல்லுகிறாள்...

"காந்தரூபனை நினைச்சுத்தான் இவனை நான் வளக்கிறன்."

இந்தத் தாயுடன் கூடவே அவரது தமக்கை யாரும் இருந்தார். அதே உணர்வு, சின்ன வயது முதல் காந்தரூபன் மீது அன்பு செலுத்திய இந்தப் பெரியம்மாவும் சேர்ந்து, கடந்த காலத்தை நினைவுகூர்ந்தார்.

"சின்ன வயதில காந்தரூபன் என்ர பிள்ளையளோட சேர்ந்துதான் விளையாடித் திரிவான். படிக்கிறதெண்டா அவனுக்குச் சரியான கள்ளம். என்ர மகள் அவனைக் கூட்டிக்கொண்டு வந்து இருத்தி, எழுதக் கற்றுக்கொடுப்பாள், 'அ' எழுதி, 'ஆ' எழுதி 'இ' எழுதும்போது, இதென்ன கனக்க சுழிபோடவேண்டியிருக்கு... எழுதுப் படுகுதில்லை' எண்டு சொல்லிக் கொப்பியைத் தூக்கி எறிஞ்சுபோட்டு ஓடிவிடுவான்.

"அப்படிப்பட்டவன், பிறகு இயக்கத்துக்குப் போய் கொஞ்சக்காலத்தால திரும்பி வரேக்க பெரிய அறிவாளியாக இருந்தான். பெரிய அரசியல் மேதைகளைப் போல எங்களுக்கெல்லாம் விளக்கம் தருவான். அந்தளவுக்கு அவனை இயக்கம்தான் வளர்த்து விட்டது."

பெரியம்மா தொடர்ந்து சொன்னார் "கப்பலடிக்கிறதுக்குப் போறதுக்கு இரண்டு நாளைக்கு முன்னர் சரியான வெமிலுக்கை வீட்டுக்கு வந்தான். 'தலையிடியாக் கிடக்கு பனடோல் தாங்கோ' என்றான். குடுத்தன், வாங்கிக் குடிச்சான்."



படிப்பகம்

www.padippakam.com



"நான் ஒரு முக்கியமான வேலையா வேற ஒரு இடத்துக்குப் போறன் பெரியம்மா" என்றான்.

"வருத்தம் என்று சொல்லுறாயேடா தம்பி...... தலைவரிட்ட சொல்லிப்போட்டு நில்லன்.... இன்னொருதரம் போகலாம்தானே எண்டு ஆலோசனை சொன்னேன்."

இல்லைப் பெரியம்மா. அந்த வேலைக்குப் போகப்போறன் எண்டு நானாத்தான் அவரிட்டைக் கேட்டனான் கட்டாயம் நான்தான் அந்த வேலைக்குப் போகவேணும்... என்றான்.

சரிதம்பி... சுகமாய் போய் சுகமாய் திரும்பிவா எண்டு நான் சொல்ல.. அவன் திருப்பிச் சொன்னான்

சுகமாய் போவன் பெரியம்மா... அதில பிரச்சினையில்லை..... ஆனா.... திரும்பி வாறதெண்டிறதுதான்.... சரி பாப்பம்.. எண்டான்.

அதற்கு மேல் பெரியம்மாவால் பேசமுடியவில்லை. மறுபக்கம் திரும்பி கண்களைத் துடைத்துக் கொண்டார்.

# காந்தரூபனின் விருப்பம்

*1987* இன் ஆரம்பம். அப்போது காந்தரூபன் தெண்டைமானாறு சிங்களப் படைமுகாமைச் சுற்றியிருந்த காவலரணில் கடமையிலிருந்தான்.

ஒரு நாள் முகாமிலிருந்து சிங்களப் படையினர் வெளியேறியபோது சண்டை தொடங்கியது. அச் சண்டையின் ஒரு சந்தர்ப்பத்தில், எதிரியின் கையில் உயிருடன் பிடிபட்டுவிடக் கூடிய சூழ்நிலை உருவாகிய போது, காந்தரூபன் குப்பியைக் கடித்துவிட்டான். ஆனால், அதிஸ்டவசமாக சக தோழர்களால் மீட்கப்பட்டு காப்பாற்றப் பட்டான். இருந்த போதும், சயனைட் விஷம் காந்தரூபனின் உடலில் ஒரு உட்பாதிப்பை உண்டாக்கியிருந்தது. இந்த உட்பாதிப்பிற்கான பராமரிப்பு முறைகளில் அத்தியாவசியமானதாக நிறை உணவு அருந்த வேண்டுமென, மருத்துவ ஆலோசனை வழங்கப்பட்டிருந்தது.

*1988, 1989* காலம்.... அப்போது காந்தரூபன் தலைவர் அவர்களுக்குப் பக்கத்தில் மணலாற்றுக் காட்டில் நின்றான். காந்தரூபனுக்கு அப்போதும் நிறை உணவு தேவைப்பட்டது. ஒரு பசுமாடு இருந்தால் காந்தரூபனுக்குப் பால் எடுப்பதுடன் சுகயீனம் அடைகின்ற போராளிகளுக்கும் பால் கொடுக்கமுடியுமெனக் கருதிய தலைவர், வெளியிலிருந்து பால்தரக்கூடிய நல்லினப் பசு ஒன்றை காட்டிற்குள் இருந்த தளத்திற்குக் கொண்டு வருமாறு சொன்னார். பசு வந்து சேர்ந்தது. தலைவரின் துணைவியார் ஒரு தாயைப்போல இருந்து பால் காய்ச்சிக் கொடுத்தார்.



படிப்பகம்

www.padippakam.com



அந்தப் பொழுதுகளிலெல்லாம் காந்தரூபன் நெஞ்சு நெகிழ்ந்து நிற்ப்பான். தான் ஒரு கதியற்றவன் என்ற கவலையே அற்றுப்போகும். ஒரு நாள் அன்பு கலந்த மரியாதையோடு, காந்தரூபன் தலைவருக்குப் பக்கத்தில் வந்தான். பாசத்தோடு அவனை அழைத்து அருகில் இருத்திக் கதைத்தார் தலைவர்.

"அண்ணை... என்னை கரும்புலிகளில் சேர்த்துக் கொள்ளுங்கோ..." என்றான். அதோடு தனது உள்ளத்திற்க்குள் உறைந்து கிடந்த இன்னொரு விருப்பத்தையும் அவன் தலைவரிடம் சொன்னான்.

"தயவு செய்து நீங்கள் அதைச் செய்யவேணும்"

அவனுக்கருகில் இருந்து அவன் சொல்வதைக் கவனமாகக் கேட்டுக் கொண்டிருந்தார் தலைவர்.

"என்னைப் போல எத்தனையோ பொடியள் இந்த நாட்டில அநாதைகளாக வாழுறாங்கள்... அப்பா அம்மா இல்லாம, சொந்தக்காரரின் ஆதரவில்லாம அலைஞ்சு திரியிறாங்கள். வாழ இடமில்லாம, படிக்க வசதியில்லாம, எவ்வளவோ ஏக்கங்களோடையும் துன்பங்களோடையும் அவங்கள் இருப்பாங்கள் எண்டிறதை நான் அனுபவத்தில கண்டனான் அண்ணை........."நீங்கள் என்னை அன்போட கவனிச்சுப் பார்த்ததைப் போல அவங்களையும் கவனிக்கவேணும். அவங்கள் எந்தக் குறையுமில்லாமல் வளரவும் நன்றாகப் படிக்கவும் வசதிசெய்து கொடுங்கோ. அவர்களுக்கென்றொரு இடத்தை அமைச்சு அங்கைவச்சு அவங்களை எல்லாம் வளர்த்தெடுத்து, அவங்களுக்கு ஒரு ஒளிமயமான எதிர்காலத்தைக் குடுத்து விடுங்கோ அண்ணை......"

தலைவரின் இதயத்தை இது தொட்டது. அப்படியான ஒன்றின் தேவைபற்றி எண்ணியிருந்த தலைவருக்கு காந்தரூபனின் வேண்டுகோள் மகிழ்ச்சியைக் கொடுத்தது. அவ்வாறான இல்லமொன்றை ஆரம்பித்து, காந்தரூபனின் நினைவாக, அதனை அவனது பெயரிலேயே செயற்படுத்தத் தான் எண்ணியுள்ளதாகத் தலைவர் கூறினார். அதற்குரிய ஏற்ப்பாடுகளிலும் தலைவர் ஈடுபட்டுள்ளார்.

–விடுதலைப்புலிகள்.



படிப்பகம்

www.padippakam.com





# 2வது லெப். ஆனந்தி

**(காமாட்சியம்மாள் தர்மசெட்டியார்)**

**வீரச்சாவு : 04.07.1988**

# ராதை

**(விக்கினேஸ்வரி கணேஸ்)**

**வீரச்சாவு : 03.07.1988**

*அப்பொழுது 1988 ஆம் ஆண்டின் நடுப்பகுதி*

வன்னிக்காடுகளில் எமது தலைவர் பிரபாகரனைத்தேடி இந்திய ஆக்கிரமிப்பு இராணுவம் சல்லடை போட்டுக்கொண்டிருந்த காலம்...

காடுகளில் புகுந்து தேடுதல் வேட்டை நடத்தியபோதெல்லாம், பாரிய உயிரிழப்புக்களைச் சந்தித்த ஆக்கிரமிப்புப் படையினர், பின்னர் தமது முகாம்களில் இருந்தவாறு காட்டுப்பகுதிகளை நோக்கி தொடர்ச்சியான எறிகணைத் (ஷெல்) தாக்குதல்களை மேற்கொண்டிருந்தனர்...

எங்களுடைய முகாம் அமைந்திருந்த அலம்பில் காட்டுப்பகுதியைநோக்கித் தினமும் இடைவிடாமல் எறிகணைகள் பாய்ந்துகொண்டிருந்தன. எனவே அந்தப் பகுதியைவிட்டு அதற்குச் சமீபமாக வேறொரு பகுதியில் எமது முகாமை மாற்றுவதற்காக எம்மில் குறிப்பிட்ட சிலர் மட்டும் அந்த இடத்திற்குப் போய் தற்காலிக முகாம் ஒன்றை அமைத்து, நிரந்தர முகாம் அமைக்கும் வேலைகளில் ஈடுபட்டிருந்தோம்.

அந்த இடத்திலிருந்து சிறிது தூரத்திற்கப்பால் அருவியொன்று... அருவியின் மேற்குப்புறமாய் பெரிய வெளியொன்று. இப்படிப்பட்ட வெளியை வெட்டை என்றும் சொல்லுவதுண்டு.

www.padippakam.com



அது புதிதாக அமைக்கப்பட்டுக்கொண்டிருந்த காட்டுமுகாம் என்பதால் அப்போதுதான் அங்கு கிணறு ஒன்றைத் தோண்டும் வேலையைச் செய்துகொண்டிருந்தோம். அதனால் எமக்குத் தேவையான தண்ணீரை, சுமார் ஒரு மைல் தொலைவில் வாய்க்காலின் நடுவே வெட்டப்பட்ட ஐந்து அடி ஆழமான கிணற்றிலிருந்தே எடுத்துவருவோம். பெரும்பாலும் ஆனந்தி அக்கா பாதுகாப்புக் கொடுத்து முன்னே செல்ல எங்கள் பட்டாளம் தண்ணீரை நிரப்பும் பாத்திரங்களுடன் (Barrel) பின்னே செல்லும். ஒருவர் தோளையும் மற்றவர் தோளையும் பலமாய்த் தடி ஒன்று இணைக்க – தடியின் நடுவில் நீர் நிறைந்த பாத்திரங்களைக் கட்டித் தொங்கவிட்டு இருவர் இருவராகச் சுமந்துவருவோம்.

ஆனந்தி அக்கா... மன்னார் தந்த மறப்பெண்.

எம் இதயங்களில் தனக்கென்று ஒரு தனி இடத்தைப் பதிவுசெய்துகொண்ட ஒரு இனிய தோழி.

எப்போது நினைத்தாலும் அந்த நெடிய, உயரத்திற்கேற்ற பருமனுடன் உறுதியான உடல்வாகும் கொண்ட அவளுடைய உருவம் எம்முன் நின்று எம்மைப் பார்த்துச் சிரிப்பதுபோலிருக்கும்...

ஆர். பி. ஜி போன்ற கடினமான ஆயுதங்களைக்கூட இலாவகமாக இயக்குவதில் ஆனந்தியக்கா கைதேர்ந்தவள். தனது மன உணர்ச்சிகளை லேசில் வெளிப்படுத்தாத அந்த வீராங்கனையின் அடிமனத்தில் எல்லோரிடத்திலும் ஒருவித ஆழமான பாசம் ஊற்றெடுத்துக்கொண்டிருந்ததை, அவளுடைய செய்கைகள் எப்பொழுதும் எமக்கு உணர்த்தும்.

பாரமான மூடைகளையோ பொருட்களையோ தூக்கவேண்டுமென்றால், உடனே எல்லோருடைய வாயிலும் ஆனந்தி அக்காதான்...

"ஆனந்தி அக்கா இதையொருக்காத் தூக்குங்கோ..."

"ஆனந்தியக்கா இதையொருக்காப் பிடிச்சு என்ரை தலையிலே வைச்சுவிடுங்கோ..."

எல்லோருக்கும் சளைக்காமல் கைகொடுப்பாள்.

தன்னுடைய தலையில் மூடையொன்றைச் சுமந்துகொண்டே மறு கையால் இன்னொருவரின் மூடைக்குக் கைகொடுக்கும் அவளுடைய உடல் உறுதியை எப்போது நினைத்தாலும் வியப்பே மிஞ்சும்...

உடல் மட்டுமல்ல, அவள் உள்ளமும் உறுதியின் உறைவிடம்தான்.

85ஆம் ஆண்டில், தமிழீழ விடுதலைப்போராட்டத்திற்காகத் தன்னை அர்ப்பணிக்கவென



படிப்பகம்

www.padippakam.com



இவள் விடுதலைப்புலிகளுடன் இணைந்துகொண்டபோது ஆனந்தியக்காவின் பெற்றோர் கடுமையாக எதிர்த்தார்கள்.

"வீட்டைவிட்டு நீ எப்ப வெளிக்கிட்டாயோ அன்றைக்கே நீ எங்கடை பிள்ளை இல்லை" எனச் சொல்லிவிட்டனர்.

இவளுடைய உறுதி தளரவில்லை.

துணிவுடன் தனது பாதையைத் தேர்ந்தெடுத்தாள்.

எப்போதாவது ஆனந்தியக்காவிடம் அவள் வீட்டைப்பற்றி, பெற்றோரைப் பற்றி யாராவது கேட்க நேர்ந்தால் பதில்கூறாமல் மௌனமாகிவிடுவாள். தன் பெற்றோரின் நிலைப்பாடுபற்றி அவளுடைய அடிமனதில் தாக்கமொன்று இருந்ததற்கு அந்த மௌனம் சாட்சி கூறும்.

மேலே இதுபற்றி எதுவும் கதையாமல் நாங்கள் பேச்சின் திசையை மாற்றுவோம்.

இந்தத் தற்காலிக முகாமில் எம்முடன் இருந்தவர்களில் மற்றுமொருத்தி ராதை. நீர்வேலி மண்ணில் பிறந்து வளர்ந்து தமிழீழ மண்ணுக்காய் தனது உயிரையும் உடலையும் அர்ப்பணித்தவள்.

சின்ன உருவம்... மென்மையான சுபாவம்.

எதிலும் அவசரப்படாமல் பொறுமையுடன் எந்தவேலையானாலும் அதை முழுமையாகச் செய்துமுடிப்பதில் கெட்டிக்காரி.

உலகப் போராட்ட வரலாறுகளைக் கூறும் பல புத்தகங்கள் ஆங்கில மொழியிலேயே எழுதப்பட்டிருப்பதால் அவற்றை விளங்கிக் கொள்வதற்குரிய ஆங்கில அறிவை எம்மில் வளர்த்துக்கொள்ள வேண்டும் என்ற ஆவல் எமக்கு எப்போதும் உண்டு. ராதைக்கு எம்மிலும் பார்க்க ஆங்கிலத்தில் ஓரளவு தேர்ச்சியுண்டு. எனவே அவளுடன் வேலைசெய்யும் நேரங்களிலெல்லாம் ஆங்கிலச் சொற்களுக்கு அவளிடமிருந்து அர்த்தம் தெரிந்துகொள்வோம். கிணறுதோண்டும் வேலை நடக்கும்போது கூட பல ஆங்கிலச் சொற்களுக்கு அவளிடமிருந்து அர்த்தம் தெரிந்துகொண்டோம். இதனால் வேலையின் பழுவும் எமக்குத் தெரியவில்லை...

அந்த நேரங்கள் அறிவை வளர்க்கவும் உதவின...

எமது கானக வாழ்க்கையில் மறக்கமுடியாத நாட்கள் அவை. திடீரென்று ஒருநாள் எமது முகாமுக்குச் சிறிது தொலைவில் இருந்த வெளிப்பகுதிக்கு மேல் இந்திய இராணுவ உலங்குவானூர்தியொன்று தாழப்பதிந்து வானில் சுற்றிச் சுற்றி நோட்டம் விடத்தொடங்கியது. நாம் அனைவரும் உடனே நிலையெடுத்துக்கொண்டோம். கப்டன் சதீஸ் அண்ணா

www.padippakam.com



தலைமையில் உலங்கு வானூர்தி மீது தாக்குதல் மேற்கொள்ளப்பட்டது. ஆனந்தியக்காவின் ஜி–3 யிலிருந்து புறப்பட்ட ரவை, உலங்குவானூர்தியிலிருந்த உயரதிகாரி ஒருவனுடைய கதையை முடித்தது...

இந்திய இராணுவம் இதைச் சற்றும் எதிர்பார்க்கவில்லை. தரையிறங்கினால் மேலும் ஆபத்து என்பதை உணர்ந்து அவ்விடம் விட்டுப் பறந்துசென்றது.

அப்பகுதியில் எமது முகாம் ஒன்று இருப்பதை அந்தச் சம்பவத்தின் மூலம் அறிந்துகொண்ட இந்திய இராணுவம் அன்று முதல் எமது முகாமைக் குறிவைத்து எறிகணைத் தாக்குதலை ஆரம்பித்தது.

சொல்லிவைத்தாற்போல தினமும் அதிகாலை 5 மணிக்கு எமது முகாமை நோக்கி இந்திய இராணுவம் ஏவிய எறிகணைகள் உய்... என்ற சத்தம் எழுப்பியவண்ணம், தொடர்ச்சியாக வந்து விழுந்துகொண்டேயிருக்கும் சிலநாட்களில் தொடர்ந்து ஒருமணிநேரம், சிலவேளைகளில் இரு மணிநேரம் எறிகணைத் தாக்குதல்கள் நடக்கும். எனவே நாங்கள் தினமும் அதிகாலை நான்குமணிக்கே எம்மால் அமைக்கப்பட்ட பாதுகாப்பான பதுங்குகுழியைத் தஞ்சமடைவதை வழக்கமாக்கிக்கொண்டோம்.

இதன் காரணமாக எமது காலை உணவு (ரொட்டி) வழமையான நேர அட்டவணைக்குள் அடங்காது போய்விடும். தொடர்ச்சியான நிகழ்ச்சியாக இது இருந்தபடியால் சிலநாட்களின் பின் எமது காலை உணவான ரொட்டியை முதல்நாள் இரவே செய்து, ஒவ்வொருவருடைய பங்கையும் அவரவர் சட்டைப்பைகளில் வைத்துக்கொள்வோம்.

காலைவேளையில் "பூபாளமாக" தினமும் எறிகணைகள் பயங்கரச் சத்தத்துடன் எமது முகாமைச் சுற்றிவர விழுந்துவெடிக்கும்... எங்கள் சட்டைப்பைகளில் பதுங்கியிருக்கும் ரொட்டிகள், பதுங்குகுழியில் இருந்தபடியே காலியாகும். தாக்குதல் ஓய்ந்துவிட்டது ஊர்ஜிதமானவுடன் முகாம் அமைக்கும் வேலைகளில் மும்முரமாய் ஈடுபடுவோம். அன்று... ஆடிமாதம் மூன்றாம் திகதி... வழமைக்கு விரோதமாய் அன்றைய காலைப்பொழுது அமைதியாய் மலர்ந்தது. தினசரி குண்டுச் சத்தங்களுடன் விடியும் பொழுது இன்று பறவைகளின் 'கீச்' ஒலியால் மெருகுபெற்றது. மந்திகள் கிளைக்குக் கிளை தாவி கிளைகளை உலுப்பி தமது குதூகலத்தை வெளியிட்டன. அன்று அதிகாலை 5மணிக்கு எறிகணை வந்து விழவில்லை.

அது ஒரு வித்தியாசமான அமைதி. அந்த அமைதிக்குப் பின்னர் ஏதோ விபரீதம் இருப்பதாக அடிக்கடி உள்மனம் எச்சரித்துக்கொண்டேயிருந்தது. ஏதோ ஒரு வித சோகம் மனதை ஆக்கிரமிக்க வேண்டாத சிந்தனைகளை உதறித் தள்ளிவிட்டு கடமைக்காகக் கால்கள் விரைகின்றன.

தண்ணீர் எடுத்துவரப் புறப்படுகிறோம். ஆனந்தியக்கா ஜி–3 உடன் முன்னே நடக்க



படிப்பகம்

www.padippakam.com



நாங்கள் பின்னால்...

நெடிதுயர்ந்த மரங்களினூடாக காட்டின் அடர்த்தியையும் ஊடறுத்து வளைந்தும் நெளிந்தும், ஏறியும் இறங்கியும், அகன்றும் ஒடுங்கியும் கிடந்த அந்த ஒன்றரை அடிப் பாதைவழியே தண்ணீர் சுமந்து முகாமை வந்தடைந்தோம். ஒன்றிரண்டு காவலரண்களை மேலதிகமாகப் போடத் தீர்மானித்ததனால் நானும் வேறு சிலரும் குழிகள் வெட்டும் வேலையில் நிற்கிறோம்.

அன்றைய சமையல் முறை ராதையினுடையது. ராதையின் சமையல் என்றால் எங்களுக்கெல்லாம் ஒரே கொண்டாட்டம்... ருசியான சமையலுடன், சமைத்த பாத்திரங்கள், அந்த இடம் யாவையும் சுத்தமாக்கி ஒவ்வொரு பொருளையும் அதனதன் இடத்தில் வைத்து மிகவும் நேர்த்தியாக ராதை செய்துமுடிப்பாள்... பார்க்கும்போதே சாப்பிடவேண்டும்போல இருக்கும். அது ராதைக்கே உரிய தனிக்கலை.

வேடிக்கையாய்ப் பேசி மகிழ்ந்து அன்றைய மதிய உணவை அனைவரும் ரசித்துச் சாப்பிட்டோம். அடுத்த கணமே எமக்கு மரணம் நேரலாம் என்பதைத் தெரிந்துகொண்டும் அந்தக் கணப்பொழுதை மகிழ்ச்சியாகக் கழிப்பதற்கு நாம் பழகிகொண்டவர்கள். அதனால் தான் கானக வாழ்க்கையின் கடினங்களையும் அருமைத்தோழர்களின் உயிரிழப்புக்களையும் சகித்துக்கொண்டு எமது உன்னதமான இலட்சியத்துக்கான போராட்டத்தை உறுதியோடு தொடர்ந்துகொள்வது எமக்குச் சாத்தியமாகிறது.

அன்றிரவு ஒன்பது மணிவரை முகாம் காவல் வேலை ஆனந்தியக்காவிற்கும் ராதைக்கும் உரியது. அதன்பின் இருவரும் வந்து படுத்துக்கொள்கிறார்கள்.

கொமாண்டோ ரென்ற் என்று சொல்லப்படுகின்ற ஏழுபேர் மட்டும் படுத்திருக்கக்கூடிய சிறிய கூடாரத்தில் எனது வலதுபக்கம் ஒரு தோழி, இடதுபக்கம் ராதை இன்னும் இருவர் படுத்திருக்கிறோம். கூடாரத்திற்கு வெளியே ஆனந்தியக்காவும் இன்னொரு தோழியும். அனைவரும் நித்திரையில் ஆழ்ந்துவிட்ட நேரம்.

இரவு பத்துமணி இருக்கும். செவிப்பறையை உடைக்கும் பாரிய வெடிச் சத்தமொன்று நித்திரையைக் கலைக்கிறது. திடுக்குற்றுக் கண்விழிக்கிறோம்.

"ஐயோ... ஐயோ... இங்கை வாங்கோ" காட்டுமரங்களில் எதிரொலித்துச் சிதறுகிறது. சுற்றிலும் கருமை படர்ந்த இருள். எதுவுமே கண்ணுக்குப் புலப்படவில்லை. ஆனாலும் எமது முகாமுக்குள்ளேயே எறிகணையொன்று விழுந்து வெடித்துவிட்டதென்பதை உணரக்கூடியதாகவிருந்தது.

"அக்கா ரோச் லைற் எங்கை?" ஒரு குரல்...



படிப்பகம்

"இங்கே தான் என்ரை தலைமாட்டிலை இருக்கு, என்னாலை எழும்பி எடுக்கேலாமலிருக்கு" காயமடைந்த தோழியொருத்தி முனகுகிறாள். இதற்கிடையில் "ஷெல் அடிக்கிறாங்கள், பதுங்குகுழிக்குள் ஓடுங்கோ" என்று பாதுகாப்பரணிலிருந்து ஒரு தோழி கத்துகிறாள்.

ஒரு எறிகணை விழுந்து எங்கள் கூடாரத்துக்கு மிக அருகில் வெடித்திருக்கிறது. என் ஆடைமுழுவதும் ஈரமாய் பிசுபிசுவென ஒட்டுகிறது... இரத்தம்!

யாருக்கோ காயம் பட்டிருக்கிறது. அதுவும் பலமான காயமாகத்தான் இருக்கவேண்டும். இல்லையென்றால் எனது ஆடைமுழுவதும் எப்படி ரத்தம் தோய்ந்து...

"ஐயோ... ஓடிவாங்கோ எனக்குக் காயம் பட்டுட்டுது..." ஆனந்தியக்கா பலமாகக் கத்துகிறாள். எங்கள் கூடாரத்துக்கு எல்லோரும் ஓடிவருவதைக் காலடி ஓசைமூலம் உணரமுடிகிறது. இருட்டில் அங்கும் இங்கும் துலாவி ரோச்லைற்றை எடுத்து மிதுலா அக்கா படுத்திருந்த பக்கம் அடிக்கிறேன்.

மிதுலா அக்காவின் முழங்காற்பகுதியிலிருந்து ரத்தம் குபுகுபுவென வழிந்துகொண்டிருக்கிறது...

அடுத்த எறிகணை வந்து விழுமுன் எல்லோரும் பதுங்குகுழிக்குள் போய்விடவேண்டும். மிதுலா அக்காவினால் நடக்கவோ, ஓடவோ நிச்சயம் முடியாது. அவளையும் தூக்கிக்கொண்டு ஓடவேண்டும். ஒருகையால் ரோச்லைற்றை அடித்தபடி அவவை மெதுவாய்த் தூக்கி இழுத்துக்கொண்டு பதுங்குகுழிநோக்கி விரைகிறேன். இதற்கிடையில் மேலும் இருவர் அவ்விடம் வந்துவிட எல்லோருமாய் மிதுலா அக்காவைப் பதுங்குகுழிக்குள் கொண்டுபோய்ச் சேர்க்க இரண்டுபேர் அவவுக்கு வேண்டிய முதலுதவிச் சிகிச்சையைச் செய்கிறார்கள். நானும் மற்றவர்களும் வெளியே வந்து ஆனந்தியக்காவிடம் ஓடுகிறோம்.

தொடையைக் கிழித்துக்கொண்டு எறிகணைத் துண்டொன்று வயிற்றினுள் பாய்ந்ததனால் இரத்தம் ஆறெனப் பெருக தாங்க முடியாத வேதனையில் முனகியவாறு ஆனந்தியக்கா அப்படியும் இப்படியும் புரண்டுகொண்டு கிடக்கிறா.

எங்கள் மூடைகளைத் தன்தலையில் சுமந்து கைகொடுத்த எங்கள் ஆனந்தி அக்கா வலியால் துடிதுடித்துக்கொண்டிருக்க அந்த வலியின் வேதனையை எங்களால் பகிர்ந்துகொள்ளமுடியவில்லையே என்ற ஏக்கத்தில் எம் இதயம் கனக்கிறது. உணர்ச்சிகளால் நெகிழ்ந்து போகவோ கரைந்து போகவோ அது இடமுமல்ல... நேரமுமல்ல... அவவை மெதுவாகத் தூக்கிக்கொண்டு நாங்கள் விரைவாக நடக்கத் தொடங்க...

"ஊய்ங்"காரமிட்டபடி அடுத்த எறிகணை எமது முகாமைநோக்கி வெறியுடன் வருகிறது. அப்படியே குப்புறப்படுக்கிறோம்... பலத்த ஓசையுடன் சற்றுத் தள்ளிப்போய் எறிகணை வெடிக்கிறது...

www.padippakam.com



மீண்டும் சிறிது தூரம் போக அடுத்த எறிகணை...

ஒரு மாதிரியாக அனைவரும் பதுங்குகுழிக்குள் போய்ச் சேர்ந்ததும், "ராதை எங்கே"? ராதை எம்முடன் வரவில்லை? அனைவர் மனதிலும் இதே கேள்வி...

எறிகணைகள் தொடர்ச்சியாக விழுந்துகொண்டேயிருக்கின்றன...

ஆனந்தியக்கா வலி பொறுக்கமுடியாமல் துடித்துக்கொண்டேயிருக்கிறாள். அந்த வேதனை ஒருபக்கம். ராதையைக் காணவில்லை என்று போய்ப் பார்த்துவரக்கூட முடியாமல் குண்டுமாரி பொழிந்துகொண்டிருந்தது, இதயத்தில் ஏற்படுத்திய ரணம் ஒருபக்கமுமாய்.. தொடர்ந்துவந்த ஒருமணிநேரமும் பதுங்குகுழியே தஞ்சமென இருக்கிறோம்.

ஒருவாறு எறிகணைவீச்சு ஓய்கிறது. கூடாரத்தைநோக்கி ஓடுகிறோம். அங்கே...

முகத்தின் ஒருபகுதி சிதைந்தநிலையில் ரத்தவெள்ளத்தில் ராதை ஆழ்ந்த துயிலில் அடங்கிப்போய்க்கிடக்கிறாள்.

பத்துமணிக்கு, முதலில் விழுந்த எறிகணை எங்கள் அன்பு ராதையை எம்மிடமிருந்து பிரித்துவிட்ட சோகத்தைப் பகிர்ந்துகொள்கிறோம்...

என் ஆடைகளை நனைத்திருந்தது, என் இனிய ராதையின் குருதியா?

இதயம் பாறையாகிக் கனக்கிறது...

ஆனந்தியக்காவின் உயிர் ஜீவமரணப்போராட்டம் நடத்திக்கொண்டிருந்தது. அவளுடைய உயிரையாவது காப்பாற்றுவோம் என்ற நம்பிக்கையில் எம்மால் முடிந்த சிகிச்சையைச் செய்தபோதும் ஏற்கனவே அதிக இரத்தம் வெளியேறிவிட்ட காரணத்தினால், அடுத்தநாள் ஆடி 4ம் திகதி அந்த இனிய உயிரும் எம்மைவிட்டுப் பிரிந்தது.

போருக்குப்புறப்படும் வீரமறவர்களுக்குப் பெண்கள் ரத்தத்தால் வெற்றித்திலகமிட்டு அனுப்புவதைப் பழைய வரலாறுகளில் படித்திருக்கிறோம். இங்கே தங்கள் உடலையே குருதியால் நனைத்து தமிழீழப் போராட்டத்தை உறுதியுடன் தொடர்வதற்கு எம்மையெல்லாம் ஆசீர்வதித்துப் போயிருக்கிறார்கள் எமது வீராங்கனைகள்.

ஆனந்தியும்... ராதையும்... !

அவர்களது ஆசைகள் நிச்சயம் பலிக்கும்... தமிழீழப் போராட்டம் வெற்றிவரலாறு படைக்கும்.

–சித்ரா, விடுதலைப்புலிகள்.


படிப்பகம்

www.padippakam.com





# மேஜர் டயஸ்

## (மயில்வாகனம் தவராசா)

## வீரச்சாவு : 21.08.1989

கோழைத்தனங்களுக்கும் இயலாமைக்கும் சித்தாந்த முலாம் பூசித் தமிழீழ விடுதலைப் போராட்டத்திலிருந்து ஆயிரக்கணக்கான இளைஞர்களை அந்நியப்படுத்தியவர்கள் என்ற வரலாறு புளொட் குழுவினருக்கே உண்டு. இவர்கள் ஒருசமயம் திருநெல்வேலியில் தமது இயக்கப் போராளிகள் சிலரைக் கைதுசெய்து கொண்டுபோய் தடுத்து வைத்திருந்தனர். கைது செய்யப்பட்டவர்களை விடுதலை செய்யும்படி உண்ணாவிரதப் போராட்டம் நடைபெற்றுக் கொண்டிருந்தது. கைதுசெய்யப்பட்ட போராளிகளினது பெற்றோரும் உறவினரும் நண்பர்களும் இந்தப் போராட்டத்தில் ஈடுபட்டுக் கொண்டிருந்தனர்.

உண்ணாவிரதம் நடக்கும் இடத்துக்குக் கொஞ்சம் தள்ளி, புளொட் இயக்கத்தினர் நின்றனர். அந்த இடத்துக்குப் போய்ச் சேர்ந்தான் டயஸ். புளொட் இயக்கத்தினருக்குக் கேட்கக்கூடியதாக "அவங்கள் எல்லோரையும் மண்டையில போட்டுட்டாங்கள், நீங்கள் ஏன் வீணாப் போராட்டம் நடத்துறீங்கள், எழும்பி வீட்டுக்குப் போங்கோ" என்றான். வீட்டுக்காரர் தயங்கி நின்றனர். பின்பு வேம்பாகக் கசந்த இச் செய்திகேட்டு அழுதனர். "ஏன் நிக்கிறீங்கள், ஒண்டும் பிரயோசனம் இல்லை, வீட்டை போங்கோ" மீண்டும் சொன்னான் டயஸ். இதைக் கேட்ட புளொட் இயக்கத்தினர் டயஸிடம் வந்தனர். "நீர் எப்படிச் சொல்லுவீர் மண்டையில போட்டுட்டம் என்று..." என்று கேட்டனர். "நான் திரும்பவும் சொல்லுறன் நீங்கள் அவங்களை மண்டையில போட்டுட்டீங்கள்" என்றான் டயஸ். "நீர் அதை நிரூபிப்பீரோ" என்று கேட்டனர் புளொட் இயக்கத்தவர். "நான் ஏன் நிரூபிக்கவேணும், நீங்கள் மண்டையில போட்டுட்டீங்களெண்டு



படிப்பகம்

www.padippakam.com



நான் சொல்லுறன், அப்படிப் போடயில்லயெண்டா நீரெல்லோ அதை நிரூபிக்கவேணும்!" என்றான் டயஸ். அவ்வளவுதான், வேகமாகச் சென்றனர் புளொட் இயக்கத்தினர். சில நிமிடநேரங்களில் வியர்த்து விறுவிறுக்க வந்துசேர்ந்தனர். அவர்களுடன் கைதுசெய்யப்பட்ட போராளிகளும் வந்திருந்தனர். அவர்களை உண்ணாவிரதப் போராட்டம் நடத்திக் கொண்டிருந்த பெற்றோருக்கு முன்னால் விட்டுவிட்டு, "இப்ப என்ன சொல்லுறீர்" என்று கேட்டனர் புளொட் இயக்கத்தினர். அதற்கு, புன்சிரிப்புடன் சொன்னான் டயஸ்: "இதற்குத்தான் நான் அப்படிச் சொன்னனான், இல்லாட்டி நீங்கள் இவங்களை விட்டிருப்பீங்களோ?, என்ரை அலுவல் முடிஞ்சுது, நான் வாறன்" போராளிகளிடமும் பெற்றோரிடமும் புளொட் இயக்கத்தினரிடமும் கூறிவிட்டு பயணமானான் டயஸ். போராளிகளைக் கண்ட பெற்றோர் மகிழ்ச்சிக் களிப்பில் நிற்க அசடு வழிந்த நிலையில் நின்றனர் புளொட் இயக்கத்தினர். இதுதான் டயஸ் பாணி. டயஸின் சாமர்த்தியத்திற்கு வேறு உதாரணங்கள் சொல்லி விளங்கப்படுத்தத் தேவையில்லை.

இவனது துப்பாக்கி யாழ்– பொலிஸ் நிலையத்திலிருந்து பொத்துவில் பொலிஸ் நிலையம் வரை விடுதலைப் பண்பாடியது. வடதமிழீழத்ததிலிருந்து தென்தமிழீழத்திற்குச் செல்லும் போராளிகளது பயணம் வேட்டு யாத்திரையாகவே அமைவதுண்டு. இவனது பயணமும் அதற்கு விதிவிலக்கல்ல, போகப் போக தாக்குதல் நடத்திக்கொண்டே சென்றது இவன் சென்ற குழு. யாழ்ப்பாணம் பொலிஸ்நிலையத்தைத் தாக்கிக் கைப்பற்றியவுடன் திருமலைக்குச் சென்று அங்கு குச்சவெளி பொலிஸ்நிலைலயத்தைத் தாக்கிக் கைப்பற்றி அப்படியே மட்டக்களப்பிற்குச் சென்று அங்கு ஏறாவூர் பொலிஸ் நிலையத்தைத் தாக்கிக் கைப்பற்றி அப்படியே அம்பாறை மாவட்டத்தினுள் காலடி எடுத்துவைத்தான் டயஸ். வேட்டுயாத்திரையின் இடைப்பட்ட காலத்தை சூறாவளிப்பிரச்சாரத்தை மேற்கொள்ளவும் பயன்படுத்தினான் இவன்.

படுவான்கரை வயல்வெளிகளில் இவனது குரல் விடுதலையின் தேவையை எதிரொலித்தது. கொக்கட்டிச்சோலையிலும் அம்பிளாந்துறையிலும் பழுகாமத்திலும் பகிரங்கக் கூட்டங்கள் நடத்தினான். டயஸின் காலடி படும்வரை மட்டக்களப்பு, அம்பாறை மாவட்டங்களில் புலிகள் பெரும்பாலும் பகிரங்கக் கூட்டங்கள் நடத்தியதில்லை.

கிராமங்களில் இவனது உரையைக் கேட்கக் கூடினர் மக்கள். எல்லாம் எமது விதி என்று எண்ணியிருந்த மக்கள் மத்தியில், இனி ஒரு விதி செய்வோம் என்பதை எடுத்துரைத்தான். அதைத் தொடர்ந்து போராளிகள் போலவே மக்களும் கெரில்லாக்களாக மாறினர். தோணிக்காரர் போராளிகளை ஆற்றுக்கு அப்பால் கொண்டுபோய்விட்டு திரும்பிவரும் நேரம்வரை காத்திருந்தனர். விறகு வெட்டப் போவோர் எங்கே எஸ்.டி.எவ் நிற்கிறான் என்பதைப் பார்த்துச் சொல்லினர். மீன்பிடிப்போர் பிடிக்கப்படும் மீன்களில் "நம்மட பொடியனுகளுக்கு" என்றொரு பங்கை ஒதுக்கினர். உலையில் போடப்படும் அரிசியில் வீட்டில் இல்லாதவர்களுக்கும் சேர்த்து ஒரு பங்குபோட்டனர் பெண்கள். மொத்தத்தில் போராட்டத்தை, போராளிகளை நேசித்தனர் அந்த மக்கள். இதேவேளை நாளாந்தம் இயக்கத்தில் இணைந்து கொண்டிருந்தது இளைஞர் கூட்டம்.



படிப்பகம்

www.padippakam.com



"படுவான்கரையில் உனது கடமை முடிந்தது, நீ இனி அம்பாறைக்குப் போ" என்ற கட்டளை கிடைத்ததும் தமிழீழத்தின் அடியெல்லைக் கிராமங்களுக்குப் பயணமானான் டயஸ். கல்முனை, காரைதீவு, அட்டப்பள்ளம், அக்கரைப்பற்று, கோளாவில், தம்பிலுவில், திருக்கோவில், கோமாரி, விநாயகபுரம், பொத்துவில் என எல்லாக் கிராம்ததவருமே இவன் பேசுவதைக் கேட்க ஆசைப்பட்டனர். இத்தனை மக்களுக்குள்ளும் இவனுடன் பேச ஆசைப்பட்டது ஒரு உயிர். அந்த புனிதவதியே பின்னாளில் இவனுக்கு மனைவியானாள்.

அம்பாறை மாவட்டத்தின் விநாயகபுரம் பகுதியில் அரச படையினருக்கு கண்ணிவெடியின் சக்தியை முதன்முதலில் தெரியப்படுத்தியவர்களில் டயசும் ஒருவன். அத்தாக்குதலில் 6 அரசபடையினர் மாண்டனர். தம்பட்டை, கல்முனை எனப் பல்வேறு இடங்களிலும் இவனது தாக்குதல்கள் தொடர்ந்தவண்ணமே இருந்தன. இலங்கை இந்திய ஒப்பந்தம் ஏற்பட்டதும் சிலநாட்கள் மட்டுமே இவனது துப்பாக்கி ஓய்ந்திருந்தது. அந்நாளில் திருக்கோவில் முகாம் இராணுவ அதிகாரி பண்டார இவனைக் கண்டு இலங்கை–இந்திய ஒப்பந்தத்தைப் பற்றிக் கேட்டபோது "இதால உனக்கும் லாபமில்ல, எனக்கும் லாபமில்ல, இதைப்பற்றிச் சொல்ல ஒண்டுமில்ல" என்று கூறிவிட்டு இந்திய அரசின் நோக்கங்கள் பற்றி அவர்களுக்கு எடுத்துரைத்தான். போராளிகள், பொதுமக்கள் மட்டுமல்ல சிறீலங்கா இராணுவத்தினரும் இவனிடம் இவ்வளவு அரசியல் திறமை உள்ளதா என அதிசயித்தனர்.

அதுபோலவே யாழ்ப்பாணத்தில் புலிகளுடன் இந்தியப்படையினர் போரை ஆரம்பித்த செய்தி, அம்பாறை மாவட்டப் போராளிகளுக்குத் தெரிவதற்கிடையில் "ஒரு அவசர விசயம் கதைக்கவேண்டும்" என்று அப்போதைய அம்பாறை மாவட்டப் பொறுப்பாளர் டேவிட்டைக் கூப்பிட்டு முகாமில் வைத்துக்கொண்டு இவனையும் அழைத்து வருமாறு ஆள் அனுப்பியது இந்தியப்படை, இவனோ "முதல் டேவிட் வரட்டும், பிறகு தலைமைப்பீடத்துடன் கதைத்துவிட்டு உங்க வாறதப்பற்றி யோசிக்கிறன்" என்று கூறி இந்தியப்படையினரின் வலையில் விழாது தப்பிவிட்டான். இந்தியப்படை முழத்துக்கு முழம் முகாம் போட்டுத் தேடியும் கடைசிவரை அவர்களுக்கு வெற்றி கிடைக்கவில்லை.

கிட்டத்தட்ட ஒருவருடம் அம்பாறையிலிருந்த இந்திய இராணுவத்தினரை அலைய வைத்துவிட்டு தலைமையின் கட்டளையை ஏற்று யாழ்ப்பாணம் வந்துசேர்ந்தான் டயஸ். அதுவரைகாலமும் தான் வசித்துவந்த அம்பாறை மாவட்ட அரசியல் பொறுப்பாளர் பதவியை தன்னால் உருவாக்கப்பட்ட போராளி கஸ்ரோவிடம் ஒப்படைத்துவிட்டு வந்தான் இவன்.

யாழ்ப்பாணம் வந்ததும் யாழ். மாவட்டத்தின் அரசியல் பொறுப்பாளராக விளங்கினான். அக்காலத்தில் இறுதிவரை டயஸ் என்றால் யார் என்பதை இந்திய இராணுவத்தினரால் கண்டுபிடிக்க இயலாமல் போய்விட்டது.

நாலுபுறமும் இந்தியப் படைவாகனங்கள் திரிகையில் இவன் சாவகாசமாக இந்தியப் பத்திரிகையாளர்களுக்குப் பேட்டி கொடுத்துக் கொண்டிருந்தான். அரசியல் வேலைகளைத்



படிப்பகம்

www.padippakam.com



திறம்பட மேற்கொண்டுவந்தான். டயஸ் செய்த பிரச்சாரங்கள் உலகின் கண்களைத் திறக்கவைத்தன. இங்கு ஒரு இனப்படுகொலை நடக்கிறது என்பதை வெட்ட வெளிச்சமாக்கியது.

இவ்வளவுவேலைகளுக்கு மத்தியிலும் அந்நியருக்கெதிரான தாக்குதல் நடத்துவதை மட்டும் இவன் பின்போட்டதில்லை. 21.08.89தான் இவனை நேசித்தவர்களுக்கு பேரிடியாக அமைந்த நாள். இவ்வளவு காலமும் தென்தமிழீழத்தின் கன்னாக்காடுகள் இவனுக்குக் கவசமாயிருந்தன.

அந்தக் கன்னாக்காடுகளின் சக்தி பருத்தித்துறைக் கட்டடங்களுக்கு இருக்கவில்லை. இவனுக்கெனவே தயாரிக்கப்பட்ட அந்த ரவை இவனைச் சந்தித்துத் தொலைத்தது.

"அவரோட எல்லாரும் நல்ல நேசம்" இது டயஸைப் பற்றி அவனது மனைவி கூறியது. அதைத் தென்தமிழீழ மக்கள் நிரூபித்தார்கள். டயஸ் மரணித்தான் என்ற செய்திகேட்ட தம்பிலுவில், திருக்கோவில், கோமாரி மற்றும் பல இடங்களைச் சேர்ந்த மக்கள் எத்தனையோ பஸ் பிடித்து, எவ்வளவோ சோதனைகளுக்கு உட்பட்டு ஈச்சமோட்டைக்கு வந்துசேர்ந்தனர். உண்மையாக மக்களை நேசித்தவன் இவன் என்பதற்கு நெருக்கடியான அந்தக் காலகட்டத்தில் அங்கிருந்து யாழ்ப்பாணம் வந்துசேர்ந்த மக்கள் கூட்டமே சாட்சி.

இவனது மரணம் நிகழ்ந்தபோது இவனது மனைவி மூன்றுமாதக் கருவாக குட்டி "டயஸை" வயிற்றில் சுமந்திருந்தாள். இவன் தனது பிள்ளையின் முகத்தைப் பார்க்கவில்லைத் தான். இவனைப்போலவேதான் புலேந்திரன் முதலான போராளிகளின் நிலையும். இவர்களெல்லாம் சந்ததிக்காக மரித்தவர்கள். அந்தத்திருப்தி இவர்களுக்கு உண்டு.

இவன் குட்டி டயஸ் – தவக்குமரன், புலி எங்கே என்று கேட்டால், தனது படத்தைக் காட்டுகின்றான். உரித்துப்படைத்து அதே முழியும் அதே கறுப்பும். "புலியாக மாறுவேன்" என்று அந்தப் பிஞ்சு சொல்வதைக் கேட்டு இழப்பின் கொடுமையை உணர்ந்த அவள் கண் கலங்கவில்லை; சிரிக்கிறாள்.

"அப்பன்ர குணம் அப்படியே..." என்று பூரிக்கின்றாள்.

அப்பன் முகமறியா இந்தப் பிஞ்சின் தலையில் போராட்டச் சுமை இறங்காமலிருக்க தமிழீழம் வரும் நாளை நாமே விரைவுபடுத்துவோம்.

–ஈழநாதம்.



படிப்பகம்

www.padippakam.com





# மேஜர் செல்வராஜா மாஸ்டர் (அண்டு)
## (சின்னத்துரை செல்வராசா)
## வீரச்சாவு : 27.08.1990

எமதியக்கத்திலுள்ள கூடுதலான போராளிகளுக்குப் பரிச்சயமான ஒருவர்.

காரணம் பல்லாயிரக்கணக்கான போராளிகள் அவராலேயே உருவாக்கப்பட்டனர்.

அவரிடம் நான் பயிற்சி பெறவில்லையே என்றதொரு ஏக்கம் அவரிடம் பயிற்சி பெறாதோருக்கு இருந்ததுண்டு. அவரிடம் பயிற்சி பெறாது விட்டாலும் பரவாயில்லை; சில மாதங்கள் அவருடன் கூட இருந்தாலே போதும் என்று கருதும் போராளிகளும் உண்டு. அவர்களில் நானும் ஒருவன்.

1987ம் ஆண்டு யாழ்ப்பாணத்தில் இந்தியப் படைகளுடன் சண்டை ஆரம்பமாகி சுமார் 2 மாதங்களின் பின்னர் வன்னியிலுள்ள விசுவமடுக் காட்டுக்குள் இருந்த முகாம் ஒன்றுக்குள் அவருடன் இருந்தேன்.

1987ம் ஆண்டுக்கு முன்னர் சிறீலங்கா இராணுவத்துடனான சண்டைகளிலோ அல்லது முகாம் தாக்குதல்களிலோ அதிகளவில் தான் கலந்துகொள்ளவில்லை என்று செல்வராசா மாஸ்ரர் சிறிது கவலையுடன் கூறுவார். அதற்குக் காரணம் போராளிகளை உருவாக்கும் பயிற்சியாளனாக செல்வராசா மாஸ்ரர் தலைவரால் நியமிக்கப்பட்டதுதான்.



படிப்பகம்

www.padippakam.com



ஆனால், இந்திய இராணுவத்துடனான சண்டைகளில் வட்டியும் முதலுமாக சேர்த்து மாஸ்ரர் பல சண்டைகளில் கலந்துகொண்டிருந்தார். அதில் யாழ்ப்பாணத்தில் உள்ள குளப்பிட்டிச் சந்தியில் இந்தியப் படைகளுடன் நடந்த சண்டையொன்றும் இணுவிலில் நடந்த சண்டையொன்றும் மாஸ்ரரின் திறமையைப் பறைசாற்றிய தாக்குதல் சம்பவங்களாகும்.

குளப்பிட்டிச்சண்டை நடைபெற்றநேரம் இரண்டு வெளிநாட்டுப் பத்திரிகையாளர்கள் யாழ்ப்பாணத்திலேயே நின்றிருந்தனர் ஒருவர் இந்தியாடுடே நிருபர், மற்றவர் பிரான்ஸ் பத்திரிகையொன்றின் நிருபர். இவர்களிருவரும் தாக்குதல் நடந்த இடத்திற்கு எமது போராளிகளால் கூட்டிச் சென்று காட்டப்பட்டனர்.

கொல்லப்பட்ட இராணுவத்தினரது உடல்களும் கைப்பற்றப்பட்ட ஆயுதங்களும் அவர்களுக்குக் காட்டப்பட்டது. இந்தியப்படைகளுக்கும் விடுதலைப்புலிகளுக்குமிடையில் எவ்விதம் சண்டைகள் நடைபெறுகின்றன என்பதை உலகம் முதலில் அறிந்தது இந்தச் சம்பவத்தின் மூலம் தான். இதை ஆதாரங்களுடன், படங்களுடன் வெளிநாட்டு நிருபர்களே கொடுத்தபோது உலகம் மூக்கில் விரலை வைத்தது. இந்தத் தாக்குதலை எவ்விதம் தனது குழுவினர் செய்தனர் என்பதை மாஸ்ரர் எமக்குச் செய்துகாட்டுவார். அவ்விதம் தான் எதிரியுடன் சண்டைசெய்யவேண்டும் என்று எமக்குக் கற்பிப்பார். இதில் 12 இந்திய இராணுவத்தினர் கொல்லப்பட்டனர். எமது தரப்பில் எவருமே இறக்கவில்லை.

அடுத்ததாக இணுவிலில் நடந்த ஒரு சண்டை அதில் இந்திய அரசால் "வீரசர்க்கார்" என்ற உயர்ந்த இராணுவ விருது கொடுத்துக் கௌரவிக்கப்பட்ட இந்திய அதிகாரியான மேஜர் பரமேஸ்வரன் கொல்லப்பட்ட சம்பவமாகும்.

இந்தச் சண்டையைப் பற்றி மாஸ்டர் சொல்லும்போது கூறுவார் இணுவிலில் ஒரு இடத்தால் இராணுவ அணியொன்று முன்னேறிக்கொண்டிருந்தது. சுமார் 50 பேர் வரை அந்த அணியில் இருந்தனர்.

இவர்கள் ஒரு பனங்கூடலுக்கால் வரும்போது எமது போராளிகள் தாக்குதலைத் தொடங்கினர். சண்டை நீண்டநேரம் நடந்தது, எமது பக்கத்தில் சண்டை செய்ய தகுந்த காப்பிடங்கள் இருக்கவில்லை. அப்படியிருந்தும் மாஸ்டரின் தலைமையில் தந்திரோபாயமும் துணிச்சலும் மிக்கவர்கள் மூலம் எதிரிகள் வீழ்த்தப்பட்டுக்கொண்டிருந்தார்கள். இறுதியில் 18 இராணுவ வீரர்கள் கொல்லப்பட்டிருந்தார்கள். அதில் பரமேஸ்வரனும் ஒருவர். எமது பக்கத்தில் ஒரு போராளி வீரமரணமடைந்தார்.

இத்தகைய வெற்றிகரமான சண்டைகளில் ஈடுபட்டபின்னர் வன்னிக்காட்டுக்குள் முகாம் அமைத்துத் தங்கினார். காட்டுக்குள் இருக்கும்போது மாஸ்டர் சும்மா இருக்கமாட்டார். எப்பொழுதும் ஏதாவது ஒரு வேலை செய்துகொண்டிருப்பார். அப்படியான நேரங்களில் மாஸ்டர் சொன்னார்...



படிப்பகம்

www.padippakam.com



"இயக்கத்திலுள்ள ஒவ்வொருவரும் ஒவ்வொரு நிமிடமும் ஏதாவது ஒரு வேலை செய்துகொண்டிருக்கவேண்டும். அது இயக்கத்திற்குப் பயன் உள்ளதாக இருக்கவேண்டும்"

உடற்பயிற்சிப் போட்டியொன்று வைத்தால் இயக்கத்தில் மாஸ்டருக்குத்தான் முதலிடம் கிடைக்குமென்று எமது போராளிகள் சொல்வார்கள். காட்டுமுகாமில் இருக்கும்போது அடிக்கடி எமக்கெல்லாம் அறிவுரைகள் கூறுவார்.

பொன்னம்மான், ராதா அண்ணையைப் பற்றி அடிக்கடி கூறுவார். குழப்படி செய்யும் போராளிகளைத் திருத்துவதில் மாஸ்டர் தனக்கே உரிய பாணிகளை வைத்திருக்கின்றார்.

ஒருமுறை இரண்டு போராளிகள் தங்களுக்குள் சண்டைபிடித்துக் கொண்டு கதைக்காது இருந்தனர். அவர்கள் இருவரையும் அழைத்து ஒரு கோப்பையில் சாப்பாட்டை எடுத்துவந்து ஒருவர் மாறி ஒருவருக்கு ஊட்டுவித்தார். "நாங்கள் எல்லோரும் சகோதரங்கள் போல இருக்கவேண்டும். ஒருவருக்கொருவர் சண்டைபிடக்கூடாது" என்று கூறி அனுப்பினார்.

காட்டுக்குள் இருந்த காலகட்டத்தில் உணவுகளுக்குப் பெருத்த தட்டுப்பாடு இருந்தது. அதுவும் இராணுவம் காடுகளுக்குள் இறங்கிய நேரங்களில் பட்டினியும் கிடந்திருக்கின்றோம்.

இந்த நிலையில் எந்த ஒரு உணவையும் உண்ணாது வீசுவதை மாஸ்டர் அங்கீகரிக்க மாட்டார். சிலவேளைகளில் இரவு உணவு அடுத்தநாள் காலையில் மிஞ்சியிருக்கும். அத்துடன் சேர்த்து ஏதோ ஒரு காலை உணவும் சிறிது சமைக்கப்படும்.

அந்தப் புது உணவுக்காக எமது மனங்கள் ஏங்கும். ஆனால், அது எல்லோருக்கும் போதாது என்பதால் பழைய உணவையும் புதிய உணவையும் கலந்துவிட்டு "சரி இனிச் சாப்பிடுவோம்" என்பார்.

இரண்டையும் கலந்தபின் அது இரவு சமைத்த உணவுவகையாகவும் இராது, காலை சமைத்த உணவுவகையாகவும் இராது. ஏதோவொரு புதியதொரு உணவாகவும் புதியதொரு சுவையாகவும் இருக்கும். பெருமூச்சு விட்டபடி அதை உண்போம்.

ஒருமுறை "ஒப்பறேசன் திரிசூலம்" என்ற பெயரில் நாம் இருந்த காட்டுப்பகுதியில் இந்திய இராணுவத்தினர் தேடுதலை நடாத்தினார்கள்.

அப்போது நடந்த சண்டையில் எமது இருப்பிடம் இராணுவத்துக்குத் தெரியவர புதிய இருப்பிடத்தைத் தேடினோம்.

அந்தச் சமயங்களில் எம்மிடம் உண்பதற்கு எதுவுமே இருக்கவில்லை; குடிக்க நீரும் இருக்கவில்லை.



படிப்பகம்

www.padippakam.com



அப்போது எமது ஒருநேர சாப்பாடு மூன்று 'கிறீம் கிறேக்கர்' பிஸ்கற்றும் அரைக் கப் தண்ணீரும் தான். அதுவும் ஒரு நாளைக்கு இரண்டு தடவை தான் உண்போம்.

அந்த நேரத்தில் எமது உடல் சோர்வடையும், ஆனால் உள்ளத்தில் சோர்வு ஏற்படாதவாறு மாஸ்டர் ஒவ்வொரு போராளியையும் ஊக்குவித்தார்.

மாஸ்ரரின் வீரமரணத்துக்கு நான்கு வாரத்துக்கு முன்னர்தான் ஒரு பயிற்சி முகாமை நடாத்தி முடித்திருந்தார்.

அப்போது மாஸ்டர் சொன்னார்...

"நான் பலாலிப்பக்கம் போகிறேன். இனி நான் இறந்தாலும் பறவாயில்லை. ஆயிரத்துக்கு மேற்பட்ட போராளிகளை நான் உருவாக்கிவிட்டேன். இதற்கெல்லாம் காரணம் பொன்னம்மான் தான். அவர்தான் என்னை உருவாக்கினார்."

மாஸ்டர் வீரமரணமடைந்த அன்றுகூட திருகோணமலையிலிருந்து இடம்பெயர்ந்து வந்த எமது போராளியின் குடும்பத்தவர்களில் ஒருவர் "செல்வராசா மாஸ்டர் எங்கே நிற்கின்றார்? எனக்கு அவரை நன்றாகத் தெரியும்" என்றார்.

இப்படி போராளிகளுக்கு மட்டுமன்றி மக்களுக்கும் மாஸ்டரை நன்கு தெரியும்.

அந்த செல்வராசா மாஸ்டர் இன்று எம்மோடு இல்லை.

—ஆனந்

செல்வராசா மாஸ்டர் ஒரு ஏழைக்குடும்பத்தில் பிறந்தவர். சொந்த இடம் காங்கேசன்துறை. தந்தையின் பெயர் சின்னத்துரை. அவருக்கு இரண்டு கண்களும் தெரியாது. அந்த நிலையில் தான் செல்வராசா மாஸ்டர் தன்னை போராட்டத்துக்கு அர்ப்பணித்தார்.

இவரது இயற்பெயர் செல்வராசா, இயக்கம் இவருக்கு இட்ட பெயர் அன்பு. மாஸ்டருடன் சேர்ந்து இயக்கத்திற்கு வந்த அவரது ஊர் நண்பர்களால் செல்வராசா அண்ணை என அழைக்கப்பட்டவர். காலகதியில் பயிற்சி முகாமின் பயிற்சி ஆசிரியனாக வந்த பின்னர் அவரது மாணவர்கள் இட்ட பெயர் தான் செல்வராசா மாஸ்டர் என்பதாகும்.

1983ஆம் ஆண்டு தமிழீழவிடுதலைப்புலிகள் இயக்கத்தில் தன்னை இணைத்துக்கொண்ட மாஸ்டர் எமது இயக்கத்தின் 3வது பயிற்சிமுகாமில் பயிற்சியைப் பெற்றிருந்தார். இவரது பயிற்சிமுகாமினது பொறுப்பாளராக லெப்.கேர்ணல் பொன்னம்மான் இருக்க பயிற்சியாளராக



படிப்பகம்

www.padippakam.com



லெப்.கேர்ணல் புலேந்தி அம்மான் இருந்தார்.

பயிற்சி காலகட்டத்தின் போதே செல்வராசா மாஸ்டர் திறமைபெற்று சக தோழர்கள் மத்தியில் முதன்மையான இடத்தைப் பெற்றிருந்தார்.

பயிற்சி நேரத்தின்போதே இவரது திறமையை, முயற்சியை, கட்டுப்பாடுகளுக்கு உட்படும் தன்மையை அவதானித்த புலேந்தி அம்மான் 3வது பயிற்சி முகாமின் மாணவனாக இருந்த செல்வராசா மாஸ்டரை அதே பயிற்சிமுகாமின் பகுதிநேரப் பயிற்சியாளனாக மாற்றிவைத்திருந்தார். அந்த அளவுக்கு மாஸ்டர் உடற்பயிற்சியில் ஒரு புலியாக இருந்தார்.

பின்னர் நான்காவது பயிற்சிமுகாமின் இறுதிக்கட்டத்தில் செல்வராசா மாஸ்டரே பயிற்சியாளனாக இருந்தார்.

எமது இயக்கத்தில் பொன்னம்மானுக்கு அடுத்தபடியாக ஏராளமான போராளிகளை உருவாக்கியது செல்வராசா மாஸ்டர்தான்.

பலாலியில்...

அன்று செல்வராசா மாஸ்டர் வீரமரணமடைந்துவிட்டார். செம்மண்ணான கட்டுவன் பகுதி மாஸ்டரின் குருதிபட்டு மேலும் செம்மையடைந்துவிட்டது.

செல்வராசா மாஸ்டரின் கரத்தால் இனித்துப்பாக்கியை இயக்கமுடியாதுதான்.

ஆனால், மாஸ்டர் உருவாக்கிவிட்ட ஆயிரமாயிரம் போராளிகளின் கரத்திலிருந்து துப்பாக்கிகள் ஆக்கிரமிப்பாளரின் அரண்களை நோக்கி முழங்கிக்கொண்டேயிருக்கும். அந்தத் துப்பாக்கி வெடிச் சத்தங்கள் தான் மாஸ்டருக்கு கிடைக்கும் அஞ்சலிக்கீதமாம்.

–தினேஸ்

## மாஸ்டரின் பயிற்சி மாணவர்கள் சொல்கிறார்கள்:

பயிற்சிக் காலகட்டத்தின் போது கட்டுப்பாடுகளைக் கருத்திலெடுக்காது குழப்படிகள் செய்து சிறுபிள்ளைத் தனமாகத் திரிபவர்களைப் பார்த்து அடிக்கடி மாஸ்டர் சொல்லுவார்: "முதலில் உன்னை மனிதனாக்குகிறேன், பிறகு போராளியாக்குகிறேன்..."

நாம் காட்டு வாழ்க்கையைச் சந்திக்கப் போகின்றோம். காட்டின் சூழலுக்கு ஏற்ற விதத்தில் நாம் வாழவேண்டும். பசி எடுக்கும். பட்டினி கிடக்க நேரிடும். களைப்பு எடுக்கும், தண்ணீர் கிடைக்காது. இவற்றக்கு மத்தியில் எதிரி வருவான். நாம் உற்சாகத்துடனும் உறுதியுடனும் சண்டையிடவேண்டும்.



படிப்பகம்

www.padippakam.com



நாம் சமையலுக்கு என்று வைத்திருக்கும் பாத்திரங்கள் எல்லாம் சாக்கினால் சுற்றி வைக்கப்பட்டிருக்கும், அல்லது உருமறைப்பு வர்ணம் தீட்டப்பட்டிருக்கும்.

இருமல், தும்மல், பலமாகச் சிரித்தல், சத்தம் போட்டுக் கதைத்தல் தவிர்க்கப்படும். அல்லது அந்த இடத்துக்கு மாஸ்டர் வந்துவிடுவார்.

பானையும் கரண்டியும் மிக அவதானமாகக் கையாளப்படவேண்டும். ஒரு சத்தமும் எழக்கூடாது. சத்தத்தை, மணத்தை எழுப்பக்கூடிய வறுவல், துவையல் இருக்காது.

குளிக்கத் தண்ணீர் இல்லை. குடிப்பதற்கே ஒரு கோப்பைதான் தண்ணீர். ஆனால் துப்பாக்கிகள் எந்தநேரமும் துப்பரவாக இருக்கவேண்டும்.

காட்டுக்குள் மாஸ்டர் அடிக்கடி கூறுவார்: "சத்தமும் வெளிச்சமும் மணமும் இங்கே எமது எதிரி."


பல சந்தர்ப்பங்களில் நாம் நோயால் அவதியுற்றோம். காய்ச்சலால் பலர் பாதிக்கப்பட்டிருந்தனர். ஆனால், மருத்துவ வசதி இருக்காது. வேதனை அதிகமாக இருக்கும். அந்த வேளைகளில் மாஸ்டர் அவர்களுக்கு அருகில் சென்றுவிடுவார். மனதுக்கு உற்சாகமூட்டும் கதைகளைக் கூறுவார். தாக்குதல் சம்பவங்களைக் கூறுவார். உடல்வேதனைக்கு இதமாக சதைகளைப் பிடித்துவிடுவார். இவ்விதமாக யாரும் படுக்கையில் சத்தமிட்டு முனகாதவாறு செய்துவிடுவார்.

–விடுதலைப்புலிகள்.


படிப்பகம்

www.padippakam.com





# கப்டன் கல்கி

## ( தாமோதரம் ருக்குமணி)

## வீரச்சாவு : 24.12.1992

இனிமையான தென்றல் தழுவிய குருத்துகள், சிலிர்த்து, ஜில்லிட்டு, நிமிர்ந்து புதினம் பார்க்கும் புற்கள். பனிபடிந்த பற்றைகள், காலைச் சூரியனின் கதிர்கள் பட்டு பளபளக்கும் நெற்கதிர்கள்...

இப்படியான குளுமைகளையெல்லாம் தன்னுள் கொண்டு குழந்தை போல் பளிச்சென்றிருந்த கிளிநொச்சியில் அழகிய ஒரு சிறு குடில். அந்த ஆனந்தமான குருவிக்கூட்டில் தாமோதரம், சரோஜா என்ற தம்பதிக்கு வாரிசாக சிணுங்கிய வண்ணம் 1973.12.02 அன்று தன் பிஞ்சுடலை இந்த மண்ணின் புற்பாயில் மலர்த்தினாள் கல்கி (ருக்மணி). கிழவிகளும், கிழவர்களும் தம் தொணதொணப்புப் பேச்சுடன் தூக்கி, வெற்றிலைச் சாறு படியக் கொஞ்சவும் பலர் தூக்கி மகிழவும், ஒரு குழந்தையானாள்.

இவளுக்குப் பின் இரு சகோதரிகள், இவளின் பேத்தியார் எல்லோரிடமும் சொல்லி மகிழ்வார்...

"இஞ்சாருங்கோ, இவள் ருக்கு கால் கழுவி விட்டு காலிலை மண் படாமலிருக்க, செருப்புக்குக் கீழை பேப்பர் போட்டு நடக்குது" என்று பொக்கை வாயால் சொல்லிச் சிரிப்பாள். பாட்டியின் பொக்கை வாய்ச் சிரிப்பை, தான் விளையாடிய முற்றத்தை, இவளுடன் அடித்துப் பிடித்து ஓடி விளையாடிய அயல்வீட்டுச் சிறுவர்களை, கிடைத்த காசில் மிட்டாய் வாங்கும்



படிப்பகம்

www.padippakam.com



'பயங்கரவாதம்' கடையை, விறகு பொறுக்கிய பற்றைக் காட்டை, சில காலம் தந்தை இல்லாதபோது அவள் வேலை செய்த வயல்வெளியை, அந்தக் கோயில் மணியோசையை, எல்லாவற்றுக்கும் மேலான அன்புத் தங்கைகளை, அம்மா அப்பாவை, அந்தக் குருவிக்கூட்டையே விட்டுச் சுதந்திரம் வேண்டி மண்ணின் விடிவுக்காகத் தன் பாதத்தை ஆழமாகப் பதித்துக் கிழக்கு நோக்கி நடந்தாள்.

*1990.08.15* இல் புதியவளாக, கல்கி என்னும் பெயர் தாங்கிப் பதினான்காவது பயிற்சிப் பாசறையில் பயிற்றுவிக்கப்பட்டாள். நீண்டு முழங்கால் வரை தொங்கும் அடர்ந்த கூந்தல், கட்டையான சிவந்த உருவம். சற்றே மிதந்திருக்கும் பற்கள், காற்றில் தத்தளிக்கும் அவளது கொச்சைத் தமிழ், பயிற்சியின் போதான உற்சாகம், மீதி நேரத்தில் தனிமையான சோர்வான தன்மை... இவையெல்லாமே இவளை மற்றவர்களிடமிருந்து வித்தியாசமாக வேறுபடுத்திப் பார்க்கவைத்தது. இவளது நகைச்சுவையுணர்வும் அந்தச் சுத்தமும் இவளைப் புதிராகக் கவனிக்கத் தூண்டியது. பயிற்சியைத் திறமையாகச் செய்தாள். இடையிடையே வயிற்றுக்குத்து என்று 'கவரும்' எடுத்தாள். ஆனால் குறிபார்த்துச் சுடுவதில், நீண்டதூரம் குண்டு எறிவதில் அபாரமான திறமையைக் காட்டினாள். கூடவே நீச்சலும் இவளுக்குத் தெரிந்திருந்தது. கிராமத்தின் அருவிகள், குளங்கள், வாய்க்கால்களில் தந்தையால் நீச்சல் பயிற்றுவிக்கப்பட்டவள். மீன்குஞ்சுபோல் நீந்திமகிழ்ந்தவள். நீச்சல் பற்றிக் கேட்டால் ஒரு கணம் தன் சிந்தனை வாகனத்தில் தன் கிராமத்துக்குச் சென்றுவருவாள்.

கல்கியின் முதற்களம் சிலாவத்துறை.

பின் ஆனையிறவு "பலவேகய 1" இல்,

பலாலிக் காவலரணில்,

தொடர்ந்து மணலாற்றுக் காட்டில் நடந்த "மின்னல்" இராணுவநடவடிக்கையில்...

அப்போது அவள் கையில் ஆயுதம் இல்லை. தனது பொறுப்பாளரிடம் ஒவ்வொரு நாளும் இரந்து கேட்பாள்.

"அக்கா ஆம்ஸ் தாங்கோக்கா, நான் நல்லாக் கவனிப்பன். நல்லா அடிபடுவன்."

என்று தன் கொச்சைத் தமிழில் அழுவது போல் கேட்பாள், பொறுப்பாளர், "நீ கெட்டிக்காரி, அடிபட்டு எடுப்பாய்" என்று சமாதானம் செய்வார். கல்கியும் தன் தோழிகளிடம் உறுதியாகவும், ஆனால் ஆதங்கத்துடனும் கூறுவாள்,

"பார், நான் அடிபட்டு ஆம்ஸ் எடுப்பன்"

கொக்குத் தொடுவாயில் நடந்த பதுங்கித் தாக்குதலில் திறமையாகப் போரிட்டாள்.

www.padippakam.com



அப்போது இவள் திறமை பொறுப்பாளருக்குக் கூடுதலாக விளங்கியதால், எம்–70 ரகத் துப்பாக்கியை இவளுக்குக் கொடுத்தார். கல்கியின் கைக்கு எம்–70 வந்த கதை இதுவே.

ஒருநாள், கல்கி சோர்ந்து போய் யோசனையில் ஆழ்ந்த வண்ணமிருந்தாள். அன்று அவளின் ஊரிலிருந்து வந்த போராளி ஒருத்தியுடன் கதைத்த பின்னர்தான் இப்படியாகி விட்டாள். பகிடிக்கார கல்கி சோகமானவளாக மாறிவிட்டாள். காரணம்...?

நீண்ட நாட்களுக்கு ஒருவருக்கும் தெரியாது. பின்னர் தான் தெரிந்தது. அவளது பெற்றோர் வைத்தியத்திற்காகக் கொழும்புக்குப் போன போது இராணுவத்தினர் பிடித்து விட்டதாகவும், அவர்கள் உயிருடன் இருப்பதற்கான சாத்தியக் கூறுகளே இல்லை எனவும், அவளது தங்கைகள் வேறு வேறு உறவினர்கள் வீடுகளில் வளர்வதாகவும் அறிந்து கவலை கொண்டாள். அவளால் தனிமையில் இருக்கத்தான் முடிந்தது. எல்லாம் கொஞ்சக்காலம் தான். தனது தனிப்பட்ட துன்பத்தை தன் மனதுக்குள் மூடி மறைத்தாள். சக தோழிகளைச் சுரண்டி, வம்புக்கிழுத்து, விளையாடி, குத்துக்கரணமடித்து, கூக்காட்டி வழமைபோலானாள். சிறிது காலத்தின்பின் யாழ்ப்பாணம் வந்தாள்.

இடையில் "தேவையேற்படின் முடி வெட்டலாம்" என்ற உத்தரவு வந்தது. இவள் தனது நீண்ட தலைமுடியை வெட்டினாள்.

"எடி, முள்ளுப்பன்றி வருகுது" என்று தோழிகள் கேலி செய்தனர். உண்மையிலேயே தலைமுடி படியாமல் குத்திக்கொண்டு, பார்க்கவே சிரிப்பாக இருந்தது.

மணலாற்றில் புதிய போராளிகளைப் பயிற்சி கொடுத்து வளர்ப்பதற்காகக் காடுநோக்கிப் பயணம் தொடர்ந்த வேளைதான் இவள் எனக்கு நன்கு பழக்கமானாள்.

அங்கு நின்றவர்களில் கல்கியே நான் அறிந்தவரையில் கூடுதலான தண்டனைகள் வாங்கியவள், ஆனால் கூடுதலான குறும்புக்காரியும் திறமையானவளும் கூட அவளேதான்.

அடிக்கடி அனுமதியில்லாமல் களவாகக் குளிப்பதில் கல்கியே வலு விண்ணி. இதை மற்றவர்கள் எனக்குச் சொல்லமாட்டார்கள். ஆனால், இவள் வெளியே வரும்வரைக்கும் காரணமில்லாமல் காத்திருப்பார்கள். நானும் என்ன இது என்று பார்த்துக்கொண்டிருக்க கல்கி குளித்துவிட்டு மெல்ல மெல்லக் காலைத் தூக்கி வைத்து நடந்து வருவாள். மண் தெறிக்காமலும், களவாகக் குளித்தது தெரியாமலிருக்கவுமே அவள் அப்படி நடந்துவருவாள். இவள் குளிக்கும்வரை வெளியே காத்திருக்கும் மற்றவர்கள், இவள் வெளியே வந்ததுமே,

"வாங்கோக்கா, பொச்சுப் போட்டுக் கால் தேச்சனியளோ? சொல்லாமலோ குளிச்சனியள்" என்று ஆளுக்காள் அவளை அமத்திக் காலுக்கு மண் அப்புவார்கள். கல்கி திமிறி, எல்லோரையும் துரத்தியடித்துவிட்டு என்னைப் பார்த்து அசட்டுச் சிரிப்புடன்,



படிப்பகம்

www.padippakam.com



"ஊத்தைக்கால் கழுவிட்டு வாறன்... "

என்று தென்னம் பொச்சு ஒன்றைத் தூக்கிக்கொண்டு தன் கள்ளம் தெரியக்கூடாது என்று நழுவி விடும் அவளுக்குத் தண்டனையா கொடுக்க முடியும், சிரித்துவிட்டு நானும் சென்றுவிடுவேன்.

இவளது குறும்புடன் திறமையும் வளர்ந்தது. ஆண்டாள் 1 இல் (பயிற்சி முகாம்) பயிற்சி எடுத்துக்கொண்டிருந்த 30 பயிற்சியாளர்களை (ஆறு நாட்கள் பயிற்சி மட்டுமே எடுத்தபடி) "கஜபார" சண்டைக்குக் கூட்டிச் சென்று திறமையாகச் செயற்பட்டாள். அவள் பொறுப்புக்குப் புதிது, பிள்ளைகளும் புதிது. இவள் குழப்படி வேறு என்னைப் பயமுறுத்திய வண்ணம் இருந்தது. ஆனால் திறமையுடன் செயற்பட்டு பிள்ளைகளை ஓயாத ரவை அடிக்குள்ளும் எறிகணை வீச்சுக்குள்ளும் மறைத்து வைத்திருந்து, விரைவாக உதவி, குழுவுக்குரிய வேலையைப் பழக்கினாள்.

இவளது திறமையைக் கண்டு, இவளுக்குச் சண்டையுடன் நிர்வாகத் திறமையும் வளருவதற்காக முகாம் ஒன்றுக்குப் பொறுப்பாக நியமித்தேன்.

சிலவேளைகளில் வானொலியில் பாடலைப் போட்டுவிட்டு அப்பால் முகாமைச் சுற்றிப் பார்க்கச் சென்றுவிட்டால், நான் இல்லை என்ற தைரியத்தில், கல்கி உடலை நெளித்து நெளித்து பைலா போடுவதை நான் பலமுறை ஒளித்துநின்று பார்த்திருக்கிறேன். சிரிப்புத் தாளாது. அந்தப் பாடலை இப்போதெல்லாம் நான் கேட்பதில்லை. நெளிந்தாட அவளா இருக்கிறாள்?

விடிந்தால் இவளின் பல்லவி தான்.

"அக்கா எனக்கு அது வாங்கித் தாங்கோ, இது வாங்கித் தாங்கோ" என்று, காசில்லாதநேரம் இவளின் தொணதொணப்புத் தாங்காமல், "எனக்கு ஒபீஸ்க்கு ஒண்டும் வேண்டாம், நீயே எடு", நான் கூறியதைச் சாட்டாக வைத்துக் கொண்டு திரைச்சீலையிலிருந்து அழிறப்பர் வரை எனக்குத் தெரியாமல் கொண்டு போய்த் தன் முகாமை அழகுபடுத்தியதும் போதாமல் பின் என்னையும் மற்றவர்களையும் தொலைபேசியில் அழைத்தாள். என் முகாமில் உள்ள போராளிகளையும் மற்றவர்களையும் கூட்டிக்கொண்டு சென்றேன். முகாம் பளிச்சென்றிருந்தது. (தேவையான உருமறைப்புக்களுடன்). காவலரணில் நின்ற போராளிகள் தம்மை உருமறைத்திருந்தனர். உள்ளே சென்றோம்.

"சா... நல்ல வடிவா இருக்குது கல்கி, நீற்றாய் இருக்கு. இந்த ஒபீசைப் பாருங்கோடி"

என்று பாராட்டிய போராளிகள், கல்கியின் அலுவலகத்தில் இருப்பவையெல்லாம் என் அலுவலகத்தில் இருந்து எடுக்கப்பட்வை என்பதைக் கவனித்துவிட்டார்கள். அவர்களுக்குக்



படிப்பகம்

www.padippakam.com



கோபம் வந்துவிட்டது

"இஞ்ச பாரடி, அக்கா தன்ரை ஒபீஸ் சாமானையெல்லாம் கல்கிக்குக் குடுத்திருக்கிறா"

இந்தச் செய்தி தொலைபேசிமூலம் ஏனைய முகாம்களுக்குத் தெரிவிக்கப்பட்டது. நான் தங்களுக்குத் துரோகம் புரிந்துவிட்டதாகவும், கல்கிக்குக் கொடுத்தது போலத் தமக்கும் தரவேண்டுமெனவும் ஒரு யுத்தமே புரிவார்கள் போலிருந்தது.

கல்கி சிரித்துக்கொண்டிருந்தாள். அவளைக் கோபமாகப் பேசமுடியாதபடி பக்கத்தில் பிள்ளைகள். எல்லாமே கொஞ்சநேரத்துக்குத்தான். மற்றவர்கள் அவளை மன்னித்துவிட்டார்கள். நான் தேநீர்கூடக் குடிக்காமல் ஒன்றுமே கதைக்காமல் என் முகாமுக்கு வந்துவிட்டேன். நான் கதைக்காமல் வந்ததே கல்கிக்குப் பெரிய தண்டனை. அன்று இரவு, அவள் என்னிடம் வந்து மன்னிப்புக் கேட்ட விதம்...

ஒருதடவை இவள் தனது இலக்கத் தகட்டைத் தொலைத்துவிட்டாள். இவளுக்குத் தண்டனை ஒரு மாதச் சமையல். அது எங்கள் எல்லோருக்குமே தண்டனைதான். பருப்புக்கு என்னென்ன போடுவது என்றில்லாமல் தன் விருப்பப்படி ஏதேதோவெல்லாம் போட்டு... அரிசிமாவில் பலகாரம் சுடப்போவதாகச் சொல்லி, ஏதோவொன்றைச் செய்து தந்து,

"எல்லாம் சரி வாங்கோ"

கல்கியின் உத்தரவு கேட்டது. அது சண்டைக்கான மாதிரிப்பயிற்சி. எங்களுடைய போராளிகளே இராணுவத்தினராகவும் போராளிகளாகவும் இருபகுதியாகப் பிரிந்து நேரடியாக மோதிப் பார்த்துப் பயிற்சியெடுத்துக் கொள்வோம். அடிக்கடி இவள் இராணுவத்தினனாகவே வருவாள்; உண்மையான இராணுவத்தினனைப்போல்.

"அடே கொட்டியா எனவா..." என்றவாறு வருவாள்.

"ஏற்கனவே இவளின்ர தமிழ் அப்பிடி, இப்ப சிங்களம் வேறை..." என்று பிள்ளைகள் தமக்குள் சொல்லிச் சிரித்துக்கொள்வார்கள்.

புலிகளாகப் பதுங்கிப் படுத்திருந்த போராளிகள், இராணுவ உயரதிகாரியாக வரும் கல்கியைப் பிடிப்பதாகத் திட்டம். கல்கியின் வழிநடத்தலுடன்(ஏற்கனவே வேவு எடுத்ததன் படி) இராணுவ நகர்வு நடந்துகொண்டிருக்கும்"

"டமார்" (பெரிய ட்ரம்மில் ஓங்கி ஒரு அடி), சரி. கிளைமோர் வெடித்துவிட்டது.

"அட்வான்ஸ், அடி குடு"



படிப்பகம்

www.padippakam.com



"டமால்..., டுமீல்..., டமால்..., டுமீல்..." (வாயால் சுடுவதுபோல சத்தம் செய்வார்கள்).

கல்கி பிடிபட்டால் தானே, பாய்ந்துவிடுவாள். புலியாகப் படுத்திருந்தவர்களுக்கு ஆத்திரம். எப்படியும் கல்கியைப் பிடிக்கவேண்டும். திட்டம் உடனே மாற்றப்பட்டது. நிலைகள் சற்றும் எதிர்பாராதவகையில் மாற்றியமைக்கப்பட்டன (உண்மையான வரைபடத்தில் அப்படியொன்றும் இருக்காது).

மீண்டும் நிலையெடுத்து,

"டமால்..., டுமீல்..., டமால்..., டுமீல்..."

கல்கியை ஒரே அமுக்கு,

"சிங்கள வடுவா"

என்று கத்தியவாறு கல்கியைக் கட்டிவைத்து உதை தான், எல்லோரும் சேர்ந்து சாத்துவார்கள்.

"மகே அம்மே, கொட்டியா அடிக்கிறான், அனே நோகுது" என்று நகைச்சுவையாகக் கூக்குரலிடும் இவளை அவிழ்த்துவிடுவார்கள்.

"கல்கி... நீ ஏன் நெடுக ஆமிக்கு வாறாய்? இந்தமுறை நீ புலி" என்று நான் சொல்ல அவள் முகம் மாறிவிட்டது. பின்தான் விளங்கியது.

"புலியெண்டால், உருமறைச்சு கன நேரம் ஆடாம அசையாம படுத்திருக்கவேணும், ஆமியெண்டால் சாப்பிடுறதெல்லாம் சாப்பிட்டு, குடிக்கிறதெல்லாம் குடிச்சு, ஒரு சின்ன நித்திரையும் கொண்டு..."

இது தான் கல்கி எனக்குச் சொன்ன காரணம். எனக்கு வந்த ஆத்திரத்தில்,

"அலேட் பொசிசனில் 24 மணித்தியாலம் நில்"

என்று தண்டனை கொடுத்துவிட்டேன்.

பின் அவளைப் பார்க்க பாவமாக இருந்ததால், 10 நிமிடத்திலேயே இறக்கிவிட்டேன். ஆனால், இவள் நான் தன்னை 24 மணித்தியாலம் உசார் நிலையில் நிறுத்தினேன் என்றும் அதனால் தனக்குக் காவற்கடமை இல்லை என்று சொல்லிவிட்டுப் படுத்துறங்கியதாகக் கேள்விப்பட்டேன்.

www.padippakam.com



கடைசி நிமிடத்தில் கூட இவளால் எப்படி இவ்வாறு பகிடி விட முடிந்தது, இவள் ஒரு குழுவுக்குப் பொறுப்பாளரும் கூட....

அன்றும் அப்படித் தான். பிள்ளைகளோடு சரிக்குச் சரி நின்று சண்டை பிடித்தாள். விளாத்தித் தோட்டம் தனது என்று அடம் பிடித்து, "இது அக்கா எனக்குச் சீதனமாகத் தந்திருக்கு, ஒருதரும் உள்ளே வரவேண்டாம்" என்று சொல்லிவிட்டாள். பிள்ளைகள் கெஞ்சினார்கள்.

"எங்கடை அக்காவெல்லோ, ஒரு விளாங்காயாவது ஆயவிடுங்கோ"

"உம், சரி. ஆயுங்கோ"

என்று அனுமதித்துவிட்டு, குரங்குகள் போல் மரங்களின் மேலே பிள்ளைகள் தொங்கிக் கொண்டு நிற்கும்போது என் பெயரைச் சொல்லிக் கூப்பிடுவாள். நான் வரப்போகிறேன் என்ற பயத்தில் பிள்ளைகள் பதற்றத்துடன் இறங்கி ஓடுவார்கள்... அதைப்பார்த்து நான் சிரி சிரியென்று சிரித்தேனே...

விளாத்தியடியில் நான் போய்ப்பார்த்தேன், கல்கியின் காலடித்தடயம் இருக்குமேயென்று...

பிள்ளைகள் அழுதார்கள்.

"இதில தானக்கா, இந்தக் கட்டையில தானக்கா கடைசியாக இருந்தவ, கல்கியக்கா கடைசியாக இருந்து சாப்பிட்டது இந்தக்கட்டையிலை தானக்கா..."

அந்தக் கட்டையை உயிருள்ள பொருளைப் பார்ப்பதுபோல அவளின் பிள்ளைகள், ஏன் நான்கூட மற்றவர்களுக்குத் தெரியாமல் தொட்டுப் ...

கொக்குத்தொடுவாய் இராணுவமுகாமுக்கும் கோட்டைக் கேணிக்குமிடையில் நகரும் இராணுவத்தினரைப் பதுங்கியிருந்து தாக்குவதற்காக ஒத்திகை பார்த்து முடிந்துவிட்டது. சண்டைக்குச் செல்லத் தயார்.

எங்கும் பச்சை, அது காட்டுப் பிரதேசம் என்பதால் தனிப்பச்சை. வரிப்பச்சைக் கோடுகள், பூக்கள், இப்படியான பச்சையுடைகள், தலைகளில் சாக்குத் தொப்பி, தண்ணீர்கான், குழுத்தலைவிமார் தலைவர்மார் எல்லாரிடமும் வோக்கி, திசைகாட்டி, ஆயுத அறிக்கை பைல், பொறுப்பாளர்மாரின் ஓட்டம், சுறுசுறுப்பு, உத்தரவுகள், விசாரணைகள், மீள்பரிசோதனைகள், பொருட்கள் பரிமாற்றம்.

மொத்தத்தில் ஒருவித உயிர்த்துடிப்பு...



படிப்பகம்

www.padippakam.com



மனதையும் வயிறையும் ஏதோ செய்யும் உணர்வு...

எல்லாம் சரிவரவேண்டும், இழப்புக் குறைவாக இருக்க வேண்டும். என் இதயம் துடிப்பது எனக்கே கேட்பதுபோல்.

"அக்கா, அங்க பாருங்கோ"

பிள்ளைகளின் குரல்கேட்டுத் திரும்பினேன். கல்கி... கரும்பச்சைச் சீருடை, கறுப்புச் சப்பாத்து, கரும்பச்சைத் தொப்பி, கோல்சரில் வோக்கி... எல்லாருமே அப்படித்தான். மிகவும் சீராக, பார்க்கவே மிகவும் அழகாக இருந்தனர். மெல்ல ஒவ்வொரு குழுவுக்கும் பொறுப்பான பிள்ளைகளையும் கூப்பிட்டு,

"நல்லாச் செய்யவேணும்..."

என்ற என் கைகளை அவர்களின் கைகள் அழுத்தி உறுதி தந்தன.

கல்கி என்னுடன் நீண்டநேரம் நிற்பதை உணர்ந்த நான்

"கல்கி, போய் உன்ர குறூப்பைக் கவனி" எனக்கு ஏதோ கல்கியைப் பார்க்க ஒரு மாதிரியாக இருந்தது.

"அக்கா... அக்கா..."

மெல்லத் தயங்கினாள், கலங்கினாள்.

"கல்கி, என்னம்மா?"

"தங்கச்சி கவனம். அம்மா... அப்பா... "

ஒரு கணம் அன்று நடந்த சம்பவம் ஞாபகத்துக்கு வந்தது. அண்மையில் கல்கி விடுமுறையில் வீட்டுக்குப் போய்வந்திருந்தாள். அவளது பேர்த்தியார், அம்மாவும் அப்பாவும் உயிருடன் இருக்கிறார்கள் என்றும் அவர்கள் தன்னை இந்த உடையில் பார்க்கவில்லை எனவும் கூறினாராம். இப்படி கல்கி என்னிடம் கூற, அதற்கு நான்,

"அம்மா, அப்பா வந்தவுடனே கட்டாயம் ஒரு மாத லீவில் கேட்டு விடுறன், அவை விரும்பினால் தங்கச்சிமாரை நான் படிப்பிக்கிறன்" என்று வாக்குக் கொடுத்திருந்தேன். ஆனால், அவர்கள் வரவேயில்லை.

எல்லோரும் நகரத் தொடங்கினோம்... நீண்ட நடைக்குப் பின் எமக்கான இடம். அவரவர்



படிப்பகம்

தத்தம் இடங்களுக்குப் பிரிந்துசென்றனர். ஒரு ஓசைகூட இல்லை. பச்சையோடு பச்சையாக...

மெல்லிய கறுத்த உருவங்கள் நகர்வது தூரத்தில் தெரிகிறது, அட எம்மவர்தான். அப்பால் முன்னுக்கு நிலையெடுக்கச் செல்கிறார்கள். விடிந்தது. காலைப் பனிபடர்ந்த புற்கள். பல்லும் பல்லும் சண்டையிட்டன. தொப்பியை மீறிய குளிர் நிலைகளில் ஈரலிப்பான புல் நிறைந்த தரையில் இரைதேடும் புலியாய், ஆடாமல் அசையாமல், பச்சையாய் எம்மவர்தான். வோக்கியில் உரையாடல்கள் தொடர்கின்றன. எமக்குக் கிட்டக்கிட்டவாக...

"டமார்..., சடச்சடச்...டடம்...டடம்... டும்... டமார்" இப்போது நடப்பது உண்மையான சண்டை.

"ஸ்க்... ஸ்க்"

இப்போது உண்மையான ரவைகள் பறந்தன. திடீரென எம் தலைக்கு மேலாக,

"ஸ்க்... டமார்..."

அட! எறிகணை!

"எல்லாம் கவரெடு" பின்னாலிருந்து யாரோ கத்துவது கேட்டது"

"அடி தங்கச்சி, அடியடா டோய்..." யாரோ ஒரு போராளி உத்வேகத்துடன் கத்தியவாறு போரிட்டுக்கொண்டிருந்தான்.

காயப்பட்டவர்களும் வீரச்சாவடைந்தவர்களும் அவர்கள் தம் உயிரைக் கொடுத்து கைப்பற்றிய ஆயுதங்களும் பின்னுக்கு அனுப்பப்பட்டுக்கொண்டிருந்தன. எல்லோரையும் பரிசோதித்து அனுப்பிக்கொண்டிருந்தேன். பிள்ளைகள் கல்கியைக் காவி வந்தனர். அதுவரை அவள் வீரச்சாவடைந்தது எனக்குத் தெரியாது. நெஞ்சிலும் மார்பிலும் குண்டுபாய்ந்து உடல்முழுக்கக் குருதிதோய்ந்தபடி கல்கி...

அன்று குழந்தையாக இருந்தபோது வெற்றிலைச் சாறு படிந்து சிவந்த அவள் கன்னங்கள், இன்றும் சிவந்திருந்தன, குருதியில் நனைந்ததால்...

பிள்ளைகளிடம் கேட்டேன்...

"எப்படி, என்ன நடந்தது...?"

பிள்ளைகள் ஏதோ கூறிக்கொண்டுபோனார்கள். எனக்கு ஒரு மாதிரியாக... என் மனதுக்குள் ஏதோ ஒரு மாதிரியாக... எல்லாவற்றுக்கும் விடை கிடைக்க நடந்தேன்.

www.padippakam.com



கல்கி இறுதியாக, "என்ரை குறூப் பிள்ளைகள் கவனம், ஒன்றையும் தவறவிடாதேங்கோ..." என்றாளாம்.

"என்ரை தங்கச்சிட்டைச் சொல்லுங்கோ, அக்காட்டைச் சொல்லுங்கோ..." என்று சொன்னபடியே இருந்தாளாம். பிள்ளைகள் விம்மலுடன் கூற நான் அப்போதைக்கு மரத்துப்போன இதயத்துடன் அவளையே பார்த்தவண்ணம்... அவள் ஸ்ரெச்சரில் கண்மூடியபடி...

கல்கி உண்மையில் குழப்படிதான். ஆனால், நல்ல போராளியாய், நல்ல பகிடிக்காரியாய், நல்லதொரு ஆயுதப் பராமரிப்பாளராய், நல்லதொரு பொறுப்பாளராய், நல்லதொரு சகோதரியாய், தோழியாய், பிள்ளையாய், பிள்ளைகளுக்குத் தாயாய்...

அவளின் உடலை அதே பனிபடர்ந்த தூசி படிந்தும் படியாததுமான புற்களையும் ஓங்கி வளர்ந்த மரங்களையும் இருமருங்கிலும் கொண்ட வீதியில் எடுத்துச் சென்றோம். அவளின் அம்மாவும் அப்பாவும் இன்னும் வரவில்லை...

அன்று இவளுடன் விளையாடிய சிறுவர்கள் இன்று பெரியவர்களாகிக் கைகட்டி நிற்க...

தாலாட்டுப் பாடி மகிழ்ந்த பாட்டி தன் வெற்றிலை படிந்த வாயால் ஒப்புச் சொல்ல...

கூடவே படித்த தோழியர் கண் கலங்க...

அதே மண்ணில், அதே வாங்கில், ஆனால் முன் போல் நெளிந்து சிணுங்காமல், பெரிய பிள்ளையாக, வீராங்கனையாக உறங்கிக்கொண்டிருக்கும் கல்கியின் சீருடை தழுவிய உடலைத் தங்கை கட்டி அழுதாள். பாட்டி மண்ணில் தலைவிரி கோலமாக...

கல்கியின் பிள்ளைகள், தோழிகள் இறுகிய கைகளில் துப்பாக்கிகளுடன், இறுகிய உதடுகளுக்குள் அழுகையை அடக்கி, நிமிர்ந்து அஞ்சலி செய்தவண்ணம் பாண்ட் இசையுடன் முன்னே செல்ல... மக்களின் அஞ்சலிக்காய் இவளின் உடல்....

கல்கியின் 'சுத்தமான' பாதங்களில் வெள்ளைக் காலுறை, கண்கள் மூடியவாறு, 'முள்ளம்பன்றித்தலை'யுடன் சவப்பெட்டியில் ஊர்வலமாய் 'பயங்கரவாதம்' கடையையும் கடந்து, மாவீரர் துயிலும் இல்லம் வரை... மக்கள் கண்களைத் துடைத்துக் கொள்கிறார்கள்.

தாய் தந்தையர் வருவார்கள் என்ற அவளின் கனவு, கனவாகவே போய்விட்டது.

ஆனாலும் அவள் அமைதியாக உறங்குவாள், அவள் மீதும் அவள் போன்ற ஆயிரமாயிரம் வேங்கைகள் மீதும் உறுதியெடுத்து அவளின் பணியை நாம் தொடர இருப்பதால்....


—சீத்தா, சுதந்திரப்பறவைகள்



படிப்பகம்

www.padippakam.com





# மேஜர் சலாம்

## (சின்னக்குட்டி நல்லராசன்)

## வீரமரணம் : 02.06.1988

இளமையோடு இருக்கும் வரை, ஆற்றல் உள்ளவரை சுதந்திரத்துக்காக நாம் போராடுவோம். இரத்தம் சிந்துவோம், எதிரியின் முன்னால் தளர்வின்றி முன்னேறுவோம். எதிரிக்கு இறுதி முடிவு ஏற்படும்வரை ஓயமாட்டோம். வாழ்நாள் முழுவதும் போராடவே நான் விரும்புகிறேன்.

மேற்கண்டவாறு ஏங்கல்ஸ் ஒருமுறை குறிப்பிட்டார். ஒரு புரட்சிவாதியின் சிந்தனை, செயல் எல்லாமே போராட்டம் பற்றியதாகவே இருக்கும்.

தொடர்சியாக சிறீலங்கா அரசினால் திட்டமிடப்பட்டு மேற்கொள்ளப்பட்டுவந்த இனஒழிப்பு நடவடிக்கைகள் பாடசாலை மாணவர்களாக இருந்த பலரைப் போராட்டத்தில் பங்கெடுக்கத் தூண்டியது. ஆனால் பாடசாலைக் கல்வியை முடித்துக்கொண்டு அரச பணிகளில் அமர்ந்து தமது ஜீவனோபாயத் தொழிலை மேற்கொண்டிருந்த ஒருசிலரே அரச சேவையைத் துறந்து தமிழீழ விடுதலைப் போராட்டத்தில் பங்காளிகளாகியுள்ளனர். 1956 ஆம் ஆண்டு சிங்களச் சட்டத்தின் காரணமாகப் பலர் தமது அரச பதவிகளில் இருந்து வெளியேறினர், அல்லது குறிப்பிட்ட வயதிற்கு முன்னரே இளைப்பாறினர்.

1972 ஆம் ஆண்டு அரசியல் அமைப்பு உருவாக்கப்பட்டபோது காசி ஆனந்தன் தனது பதவியைத் துறந்தார். 1983 ஆம் ஆண்டு இனக்கலவரத்தின் பின் சின்னக்குட்டி நல்லராசன் (மேஜர் சலாம்) தனது விசேடசேவை அதிகாரி பதவியைத் துறந்து விடுதலைப்புலிகளின்



படிப்பகம்

www.padippakam.com



முழுநேர உறுப்பினனானான்.

## இயக்கப்பணிகளில் மேஜர் சலாம்

1980 ஆம் ஆண்டு இளைஞர் சேவை மன்றத்தில் சேர்ந்த நல்லராசன் என்ற இந்த இளைஞன் தனது அயராத முயற்சியால் படிப்படியாக உயர்ந்து விசேட சேவை அதிகாரியானான். இந்தப் பதவியில் இருந்த பலர் தாம் விதானைக்கு விதானை என்று கூறிக்கொண்டு பல போராளிகளைப் பொலிஸாருக்குக் காட்டிக் கொடுத்துக்கொண்டிருந்த காலகட்டத்தில், நல்லராசனோ 1981 ஆம் ஆண்டு தொடக்கம் விடுதலைப்புலிகளின் பகுதிநேர உறுப்பினனாகச் செயற்பட்டான். ஆரம்பகாலகட்டத்தில் அவன் பொதுமக்கள் மத்தியில் பல கருத்தரங்குகளை ஒழுங்குசெய்து கருத்துப் பரிமாறல்களைச் செய்துவந்தான். 1978 ஆம் ஆண்டு மே மாதம் இலங்கை இனவாத அரசு விடுதலைப்புலிகள் தடைச்சட்டத்தைக் கொண்டுவந்தது. 1979 ஆம் ஆண்டு பயங்கரவாதத் தடுப்புச்சட்டத்தை உருவாக்கியது. தமிழ்ப்பகுதிகளில்மட்டுமே அக் காலகட்டத்தில் அமுல்படுத்தப்பட்ட இவ்விரு சட்டங்களும் விடுதலைப்புலிகளைக் குறிவைத்தே செயல்படுத்தப்பட்டன. அப்படியிருந்தும் கூட மேஜர் சலாம் அரச சேவையிலிருந்துகொண்டே விடுதலைப்புலிகளின் பகுதிநேர உறுப்பினனாகச் சேர்ந்து பணியாற்றினான் என்றால் அது அவனது விடுதலைப் பற்றையும் அஞ்சாநெஞ்சத்தையும் துலாம்பரப்படுத்துகிறது.

## பதவி துறப்பும் ஏரியாப் பொறுப்பும்

தனது விடுதலைப் பணிகளுக்குத் தனது அரச சேவை தடையாகவிருந்தபோது தனது அரச பணிகளால் தனது விடுதலைப் பணிகள் தடைப்படுவதைக்கண்ட சலாம் தனது பதவியைத் துறந்து முழுநேரமாக விடுதலைக்காக உழைக்கலானான்.

அவனது உற்சாகமான விடுதலைப் பணிகளைக் கண்ட விடுதலைப் புலிகளின் தலைமைப்பீடம் அவனை இமையாணன் பிரதேசப் பொறுப்பாளனாக்கியது. வல்வெட்டித்துறைக்கு தென்கிழக்கே இமையாணன் என்ற பிரதேசம் இருக்கிறது. இமையாணன் தான் சலாமின் பிறந்த ஊருமாகும். யாழ்ப்பாண இராச்சியத்தின் கடைசி மன்னனின் தளபதி இமையாணன் தங்கியிருந்த இடமாகையால் இவ்வூருக்கு அந்தத் தளபதியின் பெயரே சூட்டப்பட்டது. இவ்வூருக்கு அருகிலுள்ள புறாப்பொறுக்கி தான் தளபதி இமையாணன் தனது படைகளோடு தங்கியிருந்து பாசறையில் ஓய்வெடுத்துக்கொண்ட இடமாகும். இங்கேதான் மேஜர் சலாம் தனது ஆரம்பக் கல்வியைப் பெற்றுக்கொண்டான்.

## முதல் தாக்குதல்

1983 ஆம் ஆண்டு தொடக்கம் விடுதலைப் புலிகளால் பல தாக்குதல்கள் அவ்வப்போது அக்காலகட்டத்தின் அரசியல் முக்கியத்துவம் கருதி மேற்கொள்ளப்பட்டுவந்துள்ளன. தமிழீழம் பூராவும் 1984 ஆம் ஆண்டு சித்திரைமாதமும் ஆவணி மாதமும் கார்த்திகை மார்கழி

www.padippakam.com



மாதங்களிலும் பரவலாகவும் அதேவேளையில் தொடர்ச்சியாகவும் பெரும் தாக்குதல்கள் விடுதலைப்புலிகளால் மேற்கொள்ளப்பட்டன. அந்தவகையில் இலங்கைப் பாதுகாப்புப் படைகளுக்கு எதிரான 1984 ஆம் ஆண்டு ஆவணிமாத தாக்குதல் நடவடிக்கை வல்வெட்டித்துறையை அண்டிய நெடியகாட்டுப்பகுதியில் இலங்கைக் கடற்படைமீது 5–8–84 அன்று அதிகாலை மேற்கொள்ளப்பட்டது. கடற்படைக்குச் சொந்தமான வள்ளம் ஒன்றில் இப்பகுதிக்குள் வந்திறங்கிய கடற்படைமீது மேற்கொள்ளப்பட்ட இத்தாக்குதலில் ஆறு கடற்படையினர் மாண்டுபோயினர். இந்தத் தாக்குதலில் சலாம் ஏனைய புலிகளோடு பங்குபற்றினான்.

## திக்கம் கண்ணிவெடி

வடமராட்சியில் வல்வெட்டித்துறை தொடக்கம் பருத்தித்துறை வரையிலான கடற்கரையோரமாகவுள்ள பிரதான பாதையில் பொலிகண்டிக்கும் இன்பருட்டிக்கும் இடைப்பட்ட பகுதியில் திக்கம் அமைந்துள்ளது. இந்தக் கடற்கரையோரப் பாதையில் ஒரு பாலத்தருகில் 1–9–84 அன்று பருத்தித்துறை முகாமில் தங்கியிருந்த அதிரடி இராணுவத்தினர் ரோந்து சுற்றிக்கொண்டு வந்தபோது ஒரு தாக்குதல் மேற்கொள்ளப்பட்டது. இந்தத் தாக்குதலிலும் அப்போது இமையாணன் பிரதேசப் பொறுப்பாளனாகவிருந்த மேஜர் சலாமும் பங்குபற்றினான். லெப். கந்தன், லெப். ரமணன் இப்படியாகப் பலர் இந்தத் தாக்குதலில் பங்கெடுத்துக்கொண்டனர். இலங்கை இராணுவத்ததிற்குப் பலத்த இழப்பு ஏற்பட்டது. கண்ணிவெடியில் சிக்கிய கவசவாகனம் மேலே தூக்கிவீசப்பட்டுப் பக்கத்திலுள்ள பாலத்திற்குள் போய் விழுந்தது. இந்த இராணுவ நடவடிக்கை அக்காலகட்டத்தில் விடுதலைப்புலிகளுக்கு பெரும் வெற்றியை மட்டுமல்ல, நல்ல பிரச்சாரமாகவும் வெளிநாட்டுவானொலி, தொலைக்காட்சி, பத்திரிகைகளிலும் இடம் பிடித்துக்கொண்டது.

பருத்தித்துறை இராணுவ முகாமில் தங்கியிருந்த சிங்களச் சிப்பாய்கள் தான் பெருமளவில் இக்கண்ணிவெடியில் பலியானார்கள். சுமார் 18 பேர் வரை பலியானதாகவும் பலர் பலத்த காயமுற்றதாகவும் விடுதலைப்புலிகளின் அறிக்கை மூலம் வெளியிடப்பட்டது. பருத்தித்துறை இராணுவமுகாமுக்குத் தெற்கே ஹாட்லிக் கல்லூரி அமைந்துள்ளது, மேற்கே மெதடிஸ் பெண்கள் கல்லூரியும் கிழக்கே பருத்தித்துறைமுனையும் வடக்கே இந்துமாகடலும் அமைந்துள்ளது. இந்த இராணுவ முகாமிலிருந்த இராணுவ சிப்பாய்கள்தான் இதே தினம் பருத்தித்துறை ஹாட்லிக் கல்லூரி நூல்நிலையத்திற்குத் தீயிட்டனர்.

இந்த நூல்நிலையம் ஒரு நூற்றாண்டுக்கு மேற்பட்ட பழமை வாய்ந்தது. சுமார் 7500 க்கு மேற்பட்ட அரிய பொக்கிஷமான நூல்கள் எரிக்கப்பட்டன. நா. விஜயரட்ணம் என்பவரின் வீட்டுநூலகமும் இதே தினத்தில் எரிக்கப்பட்டது. ஹாட்லிக் கல்லூரியின் மூன்றுமாடிக் கட்டடமும் தளபாடங்களும் தீக்கிரையாக்கப்பட்டன. பருத்தித்துறை, திக்கம், சற்கோட்டை, இன்பருட்டி ஆகிய பகுதிகளில் பல பகுதிகள் எரிக்கப்பட்டன. பல பொதுமக்கள் சுட்டுக்கொலை செய்யப்பட்டனர்.



படிப்பகம்

www.padippakam.com



மேற்படி அனர்த்தங்கள் தொடர்பாகப் பிரசைகள் குழுக்களினால் இலங்கை அரசின் கவனத்திற்குக் கொண்டுவரப்பட்டபோது இது பற்றிப் பொலிஸ் மா அதிபர் விசாரணைகளை மேற்கொள்வார் என இலங்கை அரசு அறிவித்தபோதும் எதுவித விசாரணைகளும் இடம்பெறவில்லை. அக்கால கட்டத்தில் தமிழர் ஒருவரே பொலிஸ் மா அதிபராகவிருந்தார் என்பதும் குறிப்பிடத்தக்கது.

## விவசாயப் பகுதிப் பொறுப்பாளன்.

1983 ஆம் ஆண்டைத் தொடர்ந்து நீண்டகால யுத்தம் ஒன்றுக்கான ஆயத்தங்களை மேற்கொண்ட விடுதலைப்புலிகள், நெருக்கடிகால உணவுப்பிரச்சனையைத் தீர்க்குமுகமாக உணவு உற்பத்தித் திட்டமொன்றை முடுக்கிவிட்டனர். 1984 ஆம் ஆண்டின் காலகட்டத்தில் இப்பிரிவுப் பொறுப்பாளனாகவிருந்த மேஜர் சலாம் அக் காலகட்டத்தில் வீதிகளில் ரோந்துசுற்றும் இலங்கைப் பாதுகாப்புப் படையின் நெருக்கடிகளுக்கு மத்தியிலும் வல்வெட்டித்துறையிலிருந்து துவிச்சக்கரவண்டியில் வல்லை வெளியையும் தாண்டி வலிகாமம் வடக்கு – கிழக்குப் பகுதிகளுக்கு வருவது வழக்கம். விவசாய உற்பத்திப் பெருக்கவேலைகளில் ஈடுபட்டு, வாழை, மரவள்ளி மற்றும் பலவகைப் பயிர்களை ஒருநாள் எடுத்துக்கொண்டு, பலாலி வீதிவழியாக வந்துகொண்டிருந்தபோது அவனை இலங்கை இராணுவம் வழிமறித்தது. கையிலிருந்த சைனைட்குப்பியை மறைத்துக்கொண்டு தானே அந்த லொறியின் கிளீனர் என்று கூறி இலங்கை இராணுவத்துடன் புத்திசாதுர்யமாக உரையாடி லொறியையும் லொறிச் சாரதியையும் காப்பாற்றினான். உணவு உற்பத்திப் பிரிவோடு கைத்தொழில்களையும் இணைத்து நடாத்திய சலாம், உள்ளூரில் கிடைக்கக்கூடிய மூலப்பொருட்களைக் கொண்டே பழச்சாறு, குளிர்பானம், ஜாம் அத்துடன் சவர்க்கார உற்பத்தியிலும் ஈடுபட்டு வெற்றி கண்டான்.

## பொலிகண்டித் தாக்குதல்கள்

இலங்கை இராணுவத்திற்கெதிரான மற்றுமொரு தாக்குதல் 1985 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 31 ஆம் திகதி பொலிகண்டியில் மேற்கொள்ளப்பட்டது. இத்தாக்குதலிலும் மேஜர் சலாம் முக்கிய பங்கெடுத்துக்கொண்டான். இக்கண்ணிவெடித் தாக்குதலிலும் இலங்கை இராணுவத்திற்குப் பலத்த இழப்பு ஏற்பட்டது. சுமார் இருபது வரையான சிப்பாய்கள் பலியானதாக விடுதலைப்புலிகளின் அறிக்கை மூலம் தெரியவருகிறது. இங்கு இடம்பெற்ற இந்த அசம்பாவிதத்தைத் தொடர்ந்து சுமார் இரண்டாயிரம் நூல்களைக் கொண்ட பொலிகண்டி சனசமூக நிலையத்துக்குச் சொந்தமான நூல்நிலையம் ஒன்று சிங்களச் சிப்பாய்களால் தீக்கிரையாக்கப்பட்டது.

சுமார் 63 வீடுகளும் ஐந்து கடைகளும் ஓர் அரிசி ஆலையும் தீமிடப்பட்டன. மொத்தம் 35 இலட்சம் பெறுமதியான சொத்துக்களுக்கு இழப்பு ஏற்பட்டது என பிரசைகள் குழுவினர் மதிப்பிட்டனர்.


படிப்பகம்

www.padippakam.com



## 1985 ஏப்பிரல் மே மாதத் தாக்குதல்கள்

1985 ஆம் ஆண்டு ஏப்பிரல் மாதம் 10 ஆம் திகதி யாழ்ப்பாண பொலிஸ் நிலையக் கட்டடம் மீது தளபதி கிட்டுவின் வழிநடத்தலில் விடுதலைப்புலிகளால் மேற்கொள்ளப்பட்ட தாக்குதல் பூரண வெற்றியைத் தந்தமையால் உற்சாகமுற்ற விடுதலைப்புலிகள் இதைத்தொடர்ந்து மன்னார் குச்சவெளி, ஏறாவூர் முதலான பல இடங்களிலும் பொலிஸ் நிலையங்கள், பொலிஸ் இராணுவக் கூட்டுமுகாம்கள் மீதும் தாக்குதல்களை மேற்கொண்டனர். இக்காலகட்டத்தில் ஏனைய இயக்கங்களின் எதிர்ப்புரட்சி நடவடிக்கைகளுக்கும், இனவிரோத, சமூகவிரோத செயல்களுக்கும் மத்தியில் விடுதலைப்புலிகளால் மேற்கொள்ளப்பட்ட இத்தகைய தாக்குதல்கள் தான் பொதுமக்கள் மத்தியில் போராட்டம் தொடர்பான நம்பிக்கையை வளர்த்ததோடு போராட்டத்தைச் சீரழியாமலும் கட்டிக்காத்தன.

இத்தகைய போராட்டச் சூழலில் புத்தூக்கம் பெற்ற விடுதலைப் போராளிகள் 1985 ஏப்பிரல், மே மாதங்களில் பரவலாக மேற்கொண்ட இலங்கை இராணுவத்தின் மீதான தாக்குதல்களில் இலங்கை இராணுவத்தைச் சேர்ந்த பல உயர் அதிகாரிகளும் மாண்டுபோயினர்.

22–04–85 அன்று காப்டன் ரெஜி பங்கேற்ற ஒரு தாக்குதலில் முல்லைத்தீவில் ஒரு அதிகாரி பலியானான். 26–04–85 மூதூரில் மேஜர் கணேஷ், மேஜர் கஜேந்திரன் முதலானோர் மேற்கொண்ட தாக்குதலில் லெப். அமரியல் என்ற இலங்கை இராணுவ அதிகாரி கொல்லப்பட்டார். 09–05–85 அன்று உடுப்பிட்டியில் இளம்புலி ஜெயம் தனித்துநின்று தாக்கி மேஜர் மெண்டிஸ் என்ற அதிகாரியை உடுப்பிட்டி பஸ் நிலையத்தில் வைத்துக் கொன்றொழித்தான். 22–5–85 அன்று நிலாவெளியில் லெப். கேணல் சந்தோஷம், லெப். கேணல் புலேந்திரன் போன்றோரின் வழிநடத்தலில் மேற்கொள்ளப்பட்ட ஒரு தாக்குதலில் ஒரு உல்லாசப்பயண விடுதியில் தங்கியிருந்த விமானப்படை அதிகாரி பிரான்சிஸ் டீ மெல் கொல்லப்பட்டார். 29–4–85 அன்று கண்டி வீதியில் அரியாலை நெடுங்குளம் சந்தியில் லெப். வாசன் நடாத்திய தாக்குதலில் கப்டன் ரட்ணாயக்கா பலத்த காயமடைந்தான்.

இக் காலகட்டத்தில் வடமராட்சியில் இடம்பெற்ற தாக்குதல்கள் பலவற்றில் மேஜர் சலாம் பங்கெடுத்தான். 28–4–85 அன்று உடுப்பிட்டிக்கும் வதிரிக்கும் இடைப்பட்ட பகுதியிலுள்ள இரும்புமதவடி என்ற இடத்திலும் மண்டான் பகுதியிலும் இடம்பெற்ற தாக்குதல்களிலும் மேஜர் சலாம் பங்கேற்றான். இரண்டு தாக்குதல்களிலும் இலங்கை இராணுவத்திற்குப் பலத்த இழப்பு ஏற்பட்டது.

## தாக்குதலும் தப்பித்தலும்

29–4–85 அன்று பருத்தித்துறை வீரவாகு கட்டடத்தினுள் நின்ற சலாம் உட்பட வேறு சில போராளிகளையும் இலங்கை இராணுவம் சுற்றிவளைத்துக்கொண்டது. இவ்வாறான



படிப்பகம்

www.padippakam.com



சுற்றிவளைப்புக்களின்போது எதிரிக்கே அனுகூலமான புவியியல் சூழ்நிலையில் நின்றுகொண்டு எதிரி மீது தாக்குதலைத் தொடுத்து போராடுவதிலும் பார்க்க ஒரு கெரில்லாப் போராளி எதிரிமீது தாக்குதலைத் தொடுத்துவிட்டு எதிரியை நிலைகுலையவைத்தநிலையில் அவன் தன்னை மறுபடியும் சுதாகரித்துக்கொள்வதற்கு முன்னர் அங்கிருந்து தப்பிக்கொள்வதற்கான முயற்சியில் ஈடுபடுதலே மிகப்பொருத்தமான நடவடிக்கை ஆகும். கட்டடத்திற்கு முன்னால் நின்ற இராணுவ ட்றக் மீது மேஜர் சலாம் ஒரு கிரனைட்டை எடுத்துவீசினான். அது ட்றக்கினுள் வீழ்ந்து வெடித்துச் சிதறியபோது அதற்குள் நின்ற மூன்று சிப்பாய்கள் மரணமடைந்தனர். மேஜர் சலாமும் அவனது இரு நண்பர்களும் எதிரி நிலைகுலைந்த நிலையில் புத்திசாதுர்யமாகத் தப்பித்துக்கொண்டனர்.

1985 ஆம் ஆண்டு ஏப்பிரல் மே மாதங்களில் விடுதலைப்புலிகளால் மேற்கொள்ளப்பட்ட பரவலான தாக்குதல்களில் சிறீலங்கா இராணுவத்தின் படையணிகளில் பலத்த இழப்புக்கள் ஏற்பட்டன. படையணிகளுக்குத் தலைமை வகித்த அதிகாரிகள் பலர் மாண்டுபோயினர். இதனால் படைகளைப் புனரமைத்து மீண்டும் ஒழுங்குபடுத்தவேண்டிய தேவை சிறீலங்கா அரசுக்கு ஏற்பட்டது. 1984 ஆம் ஆண்டு தேசிய பந்தோபஸ்து அமைச்சராகப் பதவியேற்ற லலித் அத்துலத் முதலி மூன்று மாதத்திற்குள் வடபகுதித் தீவிரவாதத்தை ஒடுக்குவேன் என்று குறிப்பிட்டுப் பொறுப்பை ஏற்றுக்கொண்டார். அது சரியாக ஒரு வருடத்தின் பின் விசுவரூபம் எடுத்துநின்றமையால் அரசாங்கக்கட்சிக்குள்ளும் கபினெட்டுக்குள்ளும் பலத்த கண்டனத்துக்குள்ளானார். இராணுவத்தையும் இராணுவ தளபாடங்களையும் இழந்த நிலைமையில் இராணுவச்சிப்பாயகளுக்கு ஏற்பட்ட உயிர்ப்பலி சக சிங்களச் சிப்பாய்கள் மத்தியில் உளப்பலவீனத்தை ஏற்படுத்தியது. பலமுனைப்படுத்தப்பட்டதும் நன்கு திட்டமிட்டு ஒழுங்குபடுத்தப்பட்டதுமான பல தாக்குதல்களை விடுதலைப்புலிகள் இக்காலகட்டத்தில் மேற்கொண்டமையால் இலங்கை இராணுவத்தினர் மத்தியில் பலத்த பின்னடைவுகள் ஏற்பட்டன. இதனால் இலங்கை இராணுவப்படைப் பிரிவை மறுசீரமைத்து புனரமைக்கவும் புதிதாக ஆயுதங்களைக் கொள்வனவு செய்யவும் இலங்கை அரசுக்குக் கால அவகாசம் தேவைப்பட்டது. இதனால் ஜே. ஆர்., இந்தியப் பிரதமர் ராஜீவின் தயவை நாடினார். இந்தியத் தலையீடு காரணமாக ஜூன் 18 ஆம் திகதி ஒரு போர்நிறுத்தம் இலங்கை அரசுக்கும் தமிழ்ப்போராளிகளுக்குமிடையில் உருவானது. இதைத்தொடர்ந்து பூட்டான் தலைநகரான திம்புவில் பேச்சுவார்த்தைகள் ஆரம்பமாகின.

## சென்றிப் பொறுப்பாளன்.

1985 நடுப்பகுதியிலிருந்து யாழ். குடாநாடு விடுதலைப்புலிகளின் பூரண கட்டுப்பாட்டுக்குள் வந்தது. 1986 ஆம் ஆண்டு முதல் மேஜர் சலாம் மயிலியதனை இராணுவமுகாம் சென்றிப்பொறுப்பாளனாக நியமிக்கப்பட்டான். குடாநாடு விடுதலைப்புலிகளின் கட்டுப்பாட்டில் இருந்த காலகட்டத்தில் பல தடவைகள் முகாமைவிட்டு வெளியேறமுனைந்த இராணுவத்தின் மீது சலாமின் தலைமையில் நின்று போராடிய போராளிகள் இராணுவத்தைத் திருப்பி அனுப்பி பொதுமக்களை இனப்படுகொலையினின்றும் பாதுகாத்தனர். இக்காலகட்டத்தில் சலாம் பகுதி இராணுவப் பயிற்சிப் பொறுப்பாளனாகவும் நியமிக்கப்பட்டான்.

www.padippakam.com



## வல்வெட்டித்துறைப் பிரதேசப் பொறுப்பாளன்.

1987 ஆம் ஆண்டில் வல்வெட்டித்துறைப் பிரதேசப் பொறுப்பாளனாக நியமிக்கப்பட்ட மேஜர் சலாம் இக்காலகட்டத்தில் பொதுமக்கள் மத்தியில் பல பொதுப் பணிகளைச் செய்தான். வல்வெட்டித்துறையில் அமைக்கப்பட்டிருந்த நீதிமன்றத்தின்மூலம் பிரச்சனைக்குட்படும் இரு பகுதியினரையும் அழைத்து சமாதான மூலம் எவரையும் பாதிக்காத வகையில் தீர்ப்புக்களைக் கொடுத்து சமரசம் செய்துவைத்தான். இயற்கை நீதியின் பின்னணியில் ஒப்புரவுக்கோட்பாட்டின் அடிப்படையில் அவனால் தீர்த்துவைக்கப்பட்ட பிணக்குகளில் மக்கள் நீதியைப்பெற்றனர். மனுநீதிகண்ட சோழன் தேர்ச் சில்லின் கீழ் அகப்பட்டு இறந்த கன்றுக்குட்டிக்காகத் தேரைச் செலுத்திய தனது இளவரசனைத் தண்டித்ததுபோல் சலாமின் நீதிவிசாரணைகள் ஒருபாற்கோடாது ஒழுங்காக அமைந்திருந்தன என இப் பகுதிப் பெரியார் ஒருவர் சொன்னார். இவன் நீதி வழங்கியமுறையில் புரட்சிகரத் தன்மையும் இருந்ததாகப் பொதுமக்கள் திருப்திப்பட்டுக்கொண்டார்கள். கிராமங்கள் தோறும் இவன் விழிப்புக்குழுக்களையும் அமைப்பதில் வெற்றிகண்டான்.

## மயிலியதனை முகாம் தாக்குதல்.

1987 ஜனவரி மாதத்திலிருந்து விடுதலைப்புலிகள் விடுதலைப்போராட்டத்தைப் புதியதொரு பரிமாணத்தைநோக்கி நகர்த்தலாயினர். 1985 நடுப்பகுதியிலிருந்து இலங்கை இராணுவம் முகாம்களைவிட்டு வெளியேறுவதைத் தடுக்கும் பணியில் ஈடுபட்ட விடுதலைப்புலிகள் மினி முகாம்களைத் தகர்த்து நிர்மூலமாக்கும் பணியையும் 1987 இல் இருந்து மேற்கொண்டனர். இந்தவகையில் 1987 ஆம் ஆண்டு ஏப்பிரல் மாதம் இரண்டாம் திகதி வல்வெட்டித்துறை இராணுவமுகாமுக்கு அருகில் இருந்த மயிலியதனை இராணுவ மினிமுகாம்மீது தாக்குதல் மேற்கொள்ளப்பட்டது. இந்தத்தாக்குதலில் மேஜர் சலாம் முக்கிய பங்கெடுத்தான். வல்வெட்டித்துறைப் பிரதேசப் பொறுப்பாளனாகவிருந்த அவன் முகாம் தாக்குதலுக்கான பூரணமான முன்னேற்பாடுகள் அனைத்தையும் தானே முன்னின்று செய்தான். இந்தத் தாக்குதலில் இலங்கை இராணுவத்திற்குச் சொந்தமான உலங்குவானூர்தி ஒன்று சேதமாக்கப்பட்டதோடு இலங்கை இராணுவம் பலத்த இழப்புக்களையும் சந்தித்தது. விடுதலைப்புலிகளில் பத்துப் போராளிகள் வீரமரணமடைந்தனர்.

## ஒப்பறேசன் லிபறேசன்.

1987 மே மாதம் இலங்கை இராணுவம் வடமராட்சி மீது மேற்கொண்ட பாரிய இராணுவ நடவடிக்கையின் போது ஒரு படைப்பிரிவுக்கு மேஜர் சலாம் தலைமை தாங்கினான். இதன் பின் இலங்கை இராணுவத்தின் தேடுதல் வேட்டைகளின் போது அவர்களின் நடமாட்டம் பற்றி றெக்கி எடுக்கும் பிரிவுக்கும் சலாமே தலைமை தாங்கினான். இக்காலகட்டத்தில் வல்வெட்டித்துறைப் பகுதியில் இடம்பெற்ற ஒரு கண்ணிவெடித் தாக்குதலிலும் இவன்



படிப்பகம்

www.padippakam.com



தலைமையேற்று நடாத்தினான். 1987 ஜூலை மாதம் 5 ஆம் திகதி கப்டன் மில்லர் தலைமையில் இடம்பெற்ற நெல்லியடி சென்றல் பாடசாலை மீதான தாக்குதலிலும் சலாம் பங்கெடுத்தான்.

## இந்தியாவின் தலையீடு

கப்டன் மில்லரின் தலைமையில் இடம்பெற்ற தாக்குதல் சிறீலங்கா ஜனாதிபதி ஜே. ஆர். ஜெயவர்தனா தன்னைக் காப்பாற்றும் முகமாக முழுமையாக இந்தியாவிடம் போய் சரணாகதியடையவைத்தது. இதனால் இலங்கை இந்திய ஒப்பந்தம் உருவானது. இதன்பின் எழுபது நாட்கள் வெறுமையான ஒரு சமாதான காலம் தென்பட்டது. உண்மையில் இக்காலப்பகுதியில்தான் விடுதலைப்புலிகளுக்கு எதிரான ஒடுக்குமுறைகளை இலங்கையிடமிருந்து இந்தியா பொறுப்பேற்றுக்கொண்டது.

இக்காலகட்டத்தில் வடமராட்சி ஒப்பறேசன் லிபறேசன் காலத்தில் பாதிக்கப்பட்ட மக்களுக்கு வீடுகளைக் கட்டிக் கொடுக்கும் பணியில் ஈடுபட்டான். இதன் பலனாகப் பல கொலனிகள் உருவாயின. இரவு பகல் பாராது இக்காலகட்டத்தில் பம்பரம் போல் சுழன்று அவன் பொதுப்பணிகள் புரிந்தான்.

## வடமராட்சிப் பொறுப்பாளன்

இவனது கடமையுணர்ச்சி, விடுதலை ஆர்வம், சிறப்பான பணிகள் காரணமாக இவன் வடமராட்சி பிரதேசபொறுப்பாளனாக (அரசியல்) நியமிக்கப்பட்டான். 1987 ஒக்டோபர் மாதம் 10 ஆம் திகதி இந்திய இராணுவம் விடுதலைப்புலிகளுடன் போர் ஒன்றைத் தொடுத்தது.

விடுதலை என்பது கடையில் வாங்கும் சரக்கல்ல, அது மிக நீண்டகால அடிப்படையில் நன்கு ஒழுங்குபடுத்தப்பட்ட யுத்தம் ஒன்றின் மூலம் பல இழப்புக்களுக்கும் தியாகங்களுக்கும் மத்தியில் அறுவடை செய்யப்படவேண்டியதொன்றாகும் எனக் குறிப்பிட்ட சலாம் இந்திய இராணுவத்துடனான போர்களிலும் தலைமையேற்று நடாத்தினான். இதன்பின் போராட்டத்தைக் காப்பாற்றவேண்டிய தேவை ஏற்பட்டபடியால் இந்திய இராணுவத்தின் சிவில் நிர்வாகத்தின் மீது விடுதலைப்புலிகளால் தடைவிதிக்கப்பட்டது. இந்தச் சிவில் நிர்வாகத்தடை ஏற்பாடுகளுக்கமைவாக பருத்தித்துறை மாவட்ட நீதிமன்றச் செயற்பாடுகளைத் தடுக்கும் முகமாக மேஜர் சலாமின் தலைமையிற் சென்ற போராட்டக்குழுவினரால் மேற்படி நீதிமன்றக் கட்டடம் குண்டுவைத்துத் தகர்க்கப்பட்டது.

## சுற்றி வளைப்புகளும் தப்பிக் கொள்ளுதலும்

சிறீலங்கா அரசின் இராணுவச் சிப்பாய்கள் எப்படி வடமராட்சிப் பகுதியில் சலாமின் பெயரைக் குறிப்பிட்டு சுற்றி வளைப்புக்களையும் தேடுதல் வேட்டைகளையும் மேற்கொண்டபோது

www.padippakam.com



சலாம் அவற்றிலிருந்து தப்பிக்கொண்டானோ அதே போல் இந்திய இராணுவச் சிப்பாய்களும் இவனது பெயர் குறிப்பிட்டே இவனைத்தேடி தேடுதல் வேட்டைகளை மேற்கொண்டனர். அவ்வாறான தேடுதல் வேட்டைகளிலிருந்து சலாம் தப்பித்துக் கொண்டிருக்கிறான். அவை ஒவ்வொன்றும் திகிலூட்டுபவை மட்டுமல்ல சுவாரஸ்யமான நிகழ்ச்சிகளையும் கொண்டவையாகும். ஆனால் இவற்றில் ஒன்று என்றுமே மறக்க முடியாததாகும்: மரணத்தின் வாசலிலிருந்து அவனை மீட்டெடுத்த நிகழ்வாகும்.

## மறக்கமுடியாத அந்த நாள்

28–01–1988 வியாழக்கிழமை வடமராட்சி முழுவதும் இந்திய இராணுவம் முழுநாள் ஊரடங்குச் சட்டத்தை அமுல் படுத்திமிருந்தது. அதிகாலை 5–30 மணியளவில் இராணுவ வாகனங்கள் இரையும் சத்தம் கேட்டு சலாம் படுக்கையை விட்டு எழுந்தான். வெளியே எட்டிப்பார்த்தான். சலாம் தங்கிமிருந்த குடிசையைச் சுற்றிவர நாலாபக்கமும் 500 யார் தூரத்தில் இந்திய இராணுவச் சிப்பாய்கள் படுத்திருந்து நிலை கொண்டிருப்பதை அவதானித்தான். தனது உடைகளை மாற்றிக்கொண்டு ஒரு மறைவான இடத்திற்குள் போய் ஒளித்துக்கொண்டான். இராணுவத்தின் நடமாட்டத்தை உன்னிப்பாக அவதானித்துக்கொண்டிருந்தான். காலை ஒன்பது மணிமிருக்கும் இரண்டுஜவான்கள் சலாம் இருக்கும் இடத்தை நோக்கி வருகிறார்கள். சைனைட் குப்பியை வாய்க்குள் திணிக்க முயற்சிக்கின்றான். காலை தொடக்கம் தண்ணீரோ அல்லது ஆகாரமோ எதுவும் பருகாத நிலையில் ஒளித்திருந்த சலாமின் தொண்டை நன்றாக வரண்டுபோய்க்கிடந்தது. சைனைட்டை உட்கொண்டாலும் அது தொண்டைக்குள் போய்ச் சிக்கிவிடுமாகையால் இராணுவம் தன்னை உயிருடன் பிடித்துவிடுமோ என அஞ்சுகிறான். அக்கம் பக்கம் பார்க்கிறான். கொவ்வைப்பழம் நன்றாகப் பழுத்துத் தொங்கிக்கொண்டிருப்பதைக் கண்டு அவற்றைப் பிடுங்கிச் சாப்பிடுகிறான். இதேவேளை அருகில் வந்த இரண்டு ஜவான்களும் திரும்பிச்செல்கின்றனர்.

தன்னைக் கொஞ்சம் சுதாகரித்துக் கொண்ட சலாம் எட்டிப் பார்க்கின்றான். இப்போது நேரம் 10.30 மணிமிருக்கும். மீண்டும் நாவறளாமல் இருக்க கொவ்வைப் பழங்களைச் சாப்பிட்ட சலாம் மீண்டும் சைனைட் குப்பிகள் இரண்டையும் எடுத்து வாய்க்குள் வைக்க ஆயத்தமாகின்றான். அப்போது அவனுக்குத் தன்தோழர்களின் ஞாபகம் தான் வருகிறது. **சாவுக்கும் சமாதிக்குமிடையில் ஒரு ஜீவமரணப் போராட்டம் ஆரம்பமாகின்றது.** இது மேலும் சில மணிகள் தொடர்கின்றது. இப்போது நேரம் பகல் ஒரு மணி ஆகிவிட்டது. இப்போது சுற்றிவளைப்பில் ஈடுபட்ட இராணுவம் மெல்ல மெல்ல நகரத்தொடங்கிவிட்டது.

இவன் ஒளித்திருந்த இடத்திற்கு மேல் கற்குவியல் ஒன்று காணப்படுகிறது. அதற்கு மேலாலும் சப்பாத்துக் கால்களுடன் இராணுவம் நடந்துசெல்லத்தொடங்கியது. மரணத்தின் வாயிலில் நின்ற சலாம் தனது வாயில் சைனைட் குப்பிகள் இரண்டையும் மீண்டும் வைத்துக்கொள்கின்றான். கடைசியாக வந்த இராணுவச் சிப்பாய் கற்குவியல் மேல் கால்



படிப்பகம்

www.padippakam.com



வைத்தபோது அது சறுக்கி அவன் சலாம் நின்ற இடத்திற்கு முன்னால் விழுகின்றான் ஆனாலும் அவன் சலாமைக் காணவில்லை இந்திமொழியில் ஏதோ சொல்லிக்கொண்டு அப்பால் நகர்கின்றான். சலாம் தன் இஷ்ட தெய்வத்தை நினைத்துக்கொண்டு அவ்விடத்தை விட்டு தனது நண்பர்களைத் தேடிச் சென்றான்.

## இறுதி நாள் சம்பவம்

1988 ஜூன் மாதம் இரண்டாம் திகதி வியாழக்கிழமை. அந்த இருண்ட வியாழன் மீண்டும் இந்திய இராணுவச் சிப்பாய்கள் வடிவில் சலாமைச் சுற்றிவளைக்கின்றது. வல்வெட்டித்துறையில் வேம்படி என்ற இடத்தில் தங்கியிருந்த அவனை உயிருடன் பிடித்துவிடவே இந்த முற்றுகையை அவர்கள் மேற்கொள்ளுகின்றனர். காட்டிக் கொடுக்கும் கயமைத்தனம் இந்த மண்ணில் இன்னும் முற்றாக அகன்றுவிடவில்லை. அந்நிய ஆக்கிரமிப்பாளனுக்கு சொந்த நாட்டானையே பேரம் பேசி விற்று வாழும் பரத்தமை மறையவில்லை. இமய தூதர்கள் வடிவில் இந்திய இராணுவம் தன் முன்னால் நிற்பதை சலாம் உணர்கிறான். இயக்க மரபைப் பேணிக் காக்க சைனைட் வில்லைகளை உண்டு மரணித்த அவனது தோழர்களின் பாதை அவனின் கண் முன் தெரிகிறது. அவன் அந்த வழி செல்கின்றான். எதிரிகள் ஏமாற்றத்துடன் உறைந்துபோய் நிற்கின்றார்கள்.

மறுநாள் அவனது மரணச்சடங்கிற்கான ஏற்பாடுகள் நடக்கின்றன. மக்கள் திரள்கின்றார்கள். வடமராட்சி எங்கும் ஒரே சோகம். வாழைகள், தோரணங்கள், சோடனைகள், துண்டுப்பிரசுரங்கள் எல்லாம் ஒரே அமர்க்களம். வீட்டு வாசல்கள் தோறும் கறுப்புக்கொடிகள் பறக்கின்றன. அவனது மரணச் சடங்கைக் கூட நடாத்தவிடாமல் இந்திய இராணுவம் அட்டூழியங்களில் ஈடுபடுகின்றது. பொதுமக்களை இம்சைப்படுத்துகின்றது. கறுப்புக்கொடிகளை அறுத்தெறிய முயல்கின்றது. குழப்பங்களை விளைவிக்கின்றது.

எத்தனையோ தசாப்தங்களாக எதிரிகளை எதிர்த்து வீரப்போராட்டங்களை நடாத்திய வல்வெட்டித்துறை மக்கள் மத்தியில் இந்திய இராணுவப் பாய்ச்சல்களும் பாச்சாக்களும் எடுபட முடியாது. மக்கள் சக்தி திரளுகின்றது. பெண்கள், குழந்தைகள், முதியவர்கள் என்று சகலரும் மேஜர் சலாமின் இறுதிக் கடமைகளை புலிக்கொடி போர்த்தி வீரமரியாதைகளுடன் செய்துமுடிக்கின்றார்கள். மக்களின் சுதந்திர வேட்கைக்கு முன்னால் ஆக்கிரமிப்பாளனின் அடக்குமுறைகள் தோற்றுப்போகின்றன.

மேஜர் சலாமின் சமாதி ஒரு சந்நதியாகின்றது. வீரன் ஒருவன் மண்ணில் புதையும் போது விதையாய்த் தான் இருப்பான் என்ற அந்த கானம் காற்றில் கலக்கிறது. காதுகள் அதை உள்வாங்கிக்கொள்கின்றன.

– நேதாஜி, ஈழநாதம் .



படிப்பகம்

www.padippakam.com





# மேஜர் தாடிபாலா

## (செல்வரத்தினம் இராசரத்தினம்)

## வீரமரணம் : 10.10.1988

வளர்த்த சில நாட்களிலேயே மிக வேகமாக வளர்ந்து, அவனது முகத்தின் அரைவாசியை அழகாக மூடிவிடும் தாடி, அவனின் பெயருடனும் ஒட்டிக்கொண்டது.

உண்மைதான் தாடிபாலா என்றால் தான் மேஜர் பாலாவை அவன் நேசித்த எல்லாக் கிராமங்களுக்குமே தெரியும்; அவனை நேசித்த எல்லா இதயங்களுக்குமே புரியும். வன்னியில் பாலாவின் பெயர் தெரியாத எல்லைப்புறக் கிராமங்கள் குறைவாகவே இருக்கும். அப்பகுதிகளில் அந்த நிலத்தைக் காப்பதற்காக அவன் எதிரிகளைப் பல தடவைகள் சந்தித்திருக்கிறான்.

ஆட்களற்ற வெறிச்சோடிப் போய் நிற்கும் எங்கள் எல்லைக் கிராமங்களைக் கேளுங்கள்... தாடிபாலாவின் வரலாற்றை அவை விரிவாகவே சொல்லும். தமிழீழ எல்லைக் கோட்டுக்குச் சற்று உள்ளே காட்டுடன் ஒட்டிக்கொண்டிருக்கும் அனந்தர் புளியங்குளம் என்னும் கிராமத்தைச் சேர்ந்தவன் பாலா.

அவன் அந்தக் கிராமத்தின் கடுமையான உழைப்பாளிகள் குடும்பமொன்றில் கடைசிமகன். வயது போன காலத்திலும் கடுமையாக உழைத்துக் கொண்டிருக்கும் அப்பா, கட்டுப்பாடுகளைக் கடுமையாகவே விதிக்கும் அண்ணன்மார், பாசத்தைக் கொட்டிக்கொண்டு அம்மாவும் சகோதரிகளும் என்று அன்புப் பிணைப்பிற்குள் வாழ்ந்துவந்த பாலாவை இந்த மண்ணின் மாற்றங்கள் ஒரு போராளியாக மாற்றியது.

வன்னியில் ஒரு இராணுவ நடவடிக்கையில் ஈடுபட்ட புலிகளின் மூத்த உறுப்பினர்களைக்



படிப்பகம்

www.padippakam.com



கொண்ட அணியொன்று அனந்தர்புளியங்குளத்தில் சிலகாலம் தங்கியது. போராளிகளின் வாசம் அந்தக் கிராமத்தில் விடுதலை உணர்வுகளை விதைத்தது.

விடுதலைப்போராட்டம் தமிழ்மண்ணில் வீறுகொண்டிராத அந்தக் காலத்திலேயே பாலாவின் மனதிலும் இந்த மண்ணின் விடிவிற்காக போராடும் போராளியாக மாறவேண்டும் என்ற எண்ணம் கருக்கொண்டது. இந்த மண்ணில் இராணுவ அட்டூழியங்கள் அதிகரிக்கத் தொடங்கியபோது பாலா தனது சகோதரன் முறையான குலம் என்பவருடன் சேர்ந்து புலிகளுடன் தன்னை இணைத்துக்கொண்டான்.

புலிகளின் மூன்றாவது பயிற்சிமுகாம்...

பொன்னம்மான், புலேந்தியம்மான் என்ற உன்னதமான இரு தளபதிகளின் வழிநடாத்தலில் புதிய போராளிகள் உருவானார்கள். அந்தப் பயிற்சி முகாமின் சிறந்தவீரர்களில் பாலாவும் ஒருவன். ஒரு கிராமத்து விவசாய இளைஞனுக்குரிய உறுதியான உடல், கடுமையான பயிற்சிகளுக்கு இலகுவாக இடம் விட்டது. பாலா எல்லாப் பயிற்சிகளையும் திறமையாகச் செய்தான். அந்தப் பயிற்சிமுகாமில் நின்ற பழைய, புதிய போராளிகள் அனைவரிலும் மரதன் ஓட்டத்தில் பாலாவே முதலாவதாக வருவான்.

பயிற்சி முடிந்தபின் 1984 இன் பிற்பகுதியில் பாலா வன்னியில் களத்தில் இறங்கினான். எதிரிக்கு எதிராக பல போர்முனைகளில் பாலாவும் ஒருவனாகக் கலந்துகொண்டான்.

எங்கள் விடுதலைப்போராட்டம் உறுதியாக வளரத்தொடங்கியபோது எதிரியோ அதை அடக்குவதற்காக அல்லது அழிப்பதற்காகத் தன்னாலியன்ற அனைத்தையும் செய்யத் தொடங்கினான்.

அதில் ஒரு அங்கமாக மணலாறு பகுதிகளில் குடியேற்றங்களை நிறுவித் தமிழீழ தேசத்தின் நிலவழித் தொடர்பினை அறுக்கச் சிங்கள அரசு முயன்றது. அந்த நேரம்தான் டொலர், கென் பண்ணைகளில் குடியமர்த்தப்பட்ட கைதிகள், காடையர் குடியேற்றத்தையும் மீனவக் குடியிருப்பு என்று அமைக்கப்பட்ட கொக்கிளாய், நாயாறு சிங்களக் குடியேற்றங்களையும் புலிகள் விரட்டியடித்தனர். தொடர்ந்து கொக்கிளாயில் இராணுவமுகாம் ஒன்றை அமைத்துக் குடியேற்றத்தை நிறுவமுயன்றபோது அந்த இராணுவ முகாம் மீதும் புலிகள் ஒரு கடுமையான தாக்குதலை நடாத்தினார்கள். இதனால் ஒரு பெரும் குடியேற்றத் திட்டம் முளையிலேயே அழிக்கப்பட்டது. இந்த இராணுவ நடவடிக்கைகளிலெல்லாம் பாலாவும் ஒரு வீரனாகக் கலந்துகொண்டான்.

கொக்கிளாய் இராணுவமுகாம் தாக்குதலின்போது ஒரு நிலையில் எறிகணை ஒன்று விழுந்து வெடித்ததால் பாலாவிற்கு அருகில் நின்ற மாமா, தனபால் என்ற இரு போராளிகள் வீரச்சாவடைந்தனர். ஆனால் அவர்களுக்கு நடுவேநின்ற பாலா அதிசயிக்கத்தக்கவாறு


படிப்பகம்

www.padippakam.com



காயமெதுவும் இல்லாமலே தப்பிவிட்டான். இத்தாக்குதலின் பின்பு காயமடைந்த போராளிகளைப் பாதுகாப்பாகக் கொண்டுசெல்வதில் பாலா கடுமையாக உழைத்தான்.

இதன்பின்பு கிளிநொச்சியில் ஒரு பயிற்சிமுகாமின் பயிற்சியாளராக பாலா கடமையாற்றினான். அந்தப்பயிற்சிமுகாமிலிருந்து தேசத்தின் தேவைக்காகப் புதியபோராளிகள் உருவாகி வெளிவந்தார்கள். பாலாவிடம் எல்லோராலும் விரும்பப்படும் சில குணாம்சங்கள் இயல்பாகவே இருந்தன.

எதிலும் விட்டுக்கொடுத்துச் செல்லும் தன்மை – தனக்குத் தெரியாதவற்றைத் தெரிந்தது போல் நடிக்காமல், எனக்கு விளங்கவில்லை அல்லது தெரியாது என்று கேட்டுத் தெரிந்துகொள்ளும் வஞ்சகமில்லாத இயல்பு– இழப்புகள் தவிர்க்கமுடியாது என்பதைத் தெரிந்துகொண்டும் எந்தப் போராளிக்கும் எதுவுமே நடந்துவிடக்கூடாது என்று தவிக்கும் மன இயல்பு எனச் சில குணாம்சங்கள் தாடியில் படிந்துபோயிருந்தன.

அவனது இந்த இயல்புகளே அவனில் எல்லாப் போராளிகளும் அளவுகடந்த அன்பைச் செலுத்தக் காரணமாயிற்று.

வன்னியில் சிங்களப்படைகளுக்கு எதிரான பல போர்க்களங்களில் தாடிபாலா பங்குபற்றிக் கொண்டிருந்தான். அந்த நேரங்களில் மணலாற்றில் தொடர்ந்து புதிய முறைகளில் சிங்களக்குடியேற்றங்கள் நடக்கத்தொடங்கின. அதற்காக மேஜர் பாலாவின் தலைமையில் நெடுங்கேணியில் நின்று செயற்படுவதற்காய் புலிகளின் ஒரு சிறிய படையணி அனுப்பப்பட்டது. அவர்களின் வேலை எல்லைக் கிராமங்களில் குடியேற்றச் சிங்களவர்களை அகற்றுவதாகவே இருந்தது.

அந்நேரம் அப்பகுதிகளில் இராணுவத்தினருக்கும் புலிகளுக்குமிடையே ஒரு ஒளிவுமறைவு விளையாட்டு நடந்து கொண்டேயிருந்தது. அவர்கள் தேடும்போது புலிகள் மறைந்துவிடுவார்கள். ஆனால் அவர்கள் எதிர்பாராத போது திடீரெனத்தோன்றி எதிரிகளில் சிலரை புலிகளின் துப்பாக்கிகள் விழுங்கும். அங்கு குடியேற நினைத்த சிங்களக் காடையருக்குப் புலிகள் காலனாக இருந்தார்கள். ஆனால், எங்கள் தமிழ்க் கிராமங்களுக்கோ இவர்கள் காவலர்களாக இருந்தார்கள்.

இப்படித்தான் குடியேற்றங்களுக்கு எதிரானதொரு போர் அங்கு தொடர்ந்து நடந்து கொண்டேயிருந்தது.

வடமராட்சியில் ஒரு பாரிய இராணுவ நடவடிக்கையைச் சிறீலங்கா இராணுவத்தினர் மேற்கொண்ட பொழுது நாவற்குழி இராணுவமுகாமைச் சுற்றி அமைக்கப்பட்ட காவல் நிலைகளுக்குப் பொறுப்பாக பாலா நியமிக்கப்பட்டான். அக்காலத்தில் இராணுவம் வெளியேற நினைக்கும் போதெல்லாம் அவர்களை எதிர்த்து அசையவிடாது தடுத்துநிறுத்துவதில்



படிப்பகம்

www.padippakam.com



பாலாவும் அவனது அணியினரும் முயன்று வெற்றிகண்டார்கள். இலங்கை –இந்திய ஒப்பந்தமும் சிறிதுகால அமைதியும் இந்த மண்ணில் தோன்றியபோது பாலா மீண்டும் வன்னிக்கு வந்தான். அங்கு மேஜர் பசிலனுடன் இணைந்து நின்றான். பயிற்சிமுகாம் காலம்தொட்டே அவர்கள் இருவருக்குமிடையே மிகவும் நெருக்கமான நட்பு இருந்தது. அவர்களுக்கிடையேயான நட்பும் பாசமும் எல்லோரையும் வியக்கவைக்கும்.

இந்தியப் படைகளுடனான போர் தொடங்கியபோது கோப்பாயிலும் முல்லைத்தீவிலும் பசிலனுடன் இணைந்து பல தாக்குதல்களில் பாலா பங்குபற்றினான். 08.11.1987 அன்று ஒரு சண்டையின்போது பாலாவின் கண்களுக்கு முன்பாகவே பசிலன்...

...பசிலனின் இழப்பினால் இந்தப் படையணி சோகத்தில் கலங்கியது. அவனது இழப்பை ஏற்றுக்கொள்ளமுடியாமல் எல்லோரும் தவித்தனர். ஆனால், பாலா தனது துயரத்தை வெளிக்காட்டாது உறுதியாக இருந்தான். இரவுகளில் ஆட்களில்லாத காவல்வேளைகளில் மட்டும் அவன் அடக்கமுடியாமல் அழுவான்.

பசிலனின் இழப்பு பாலாவைச் சோர்வடையச் செய்யவில்லை. அவனது உணர்வுகளை மேலும் உறுதிபெறச் செய்தது. தொடர்ந்து இந்தியப்படைகளுக்கு எதிரான பல தாக்குதல்களில் பாலா பங்குபற்றினான்.

27.11.1987 அன்று நடந்த ஒரு பெரும் சண்டையில் விழுந்த, இந்தியச் சிப்பாய் ஒருவனின் எஸ்.எல்.ஆர் துப்பாக்கியை எடுத்துவரும்போது பாலாவின் நெஞ்சில் பலமான காயமொன்று ஏற்பட்டது. எங்கள் கண்ணுக்கு முன்பாக மருத்துவ வசதியின்றி அவன் சாவுடன் போராடினான். அவனது இறுதிக்கணத்தை எதிர்பார்த்தபடி நாம் இருந்தபோது பாலா எதிர்பாராத வழியில் காப்பாற்றப்பட்டான். அத்தாக்குதலின் போது லெப்டினன்ட் அலன் வீரமரணமடைந்தான். 1988 பங்குனி மாதம் பாலா முல்லைத்தீவுமாவட்டப் பொறுப்பாளராக நியமிக்கப்பட்டான் தொடர்ந்து இந்தியப்படைகளுக்கு எதிரான சண்டைகள் நடந்துகொண்டேயிருந்தன. இடையிலொருநாள் தலைவரைச் சந்திக்க என்று சென்ற பாலா எம். 16 சுரிகுழல் துப்பாக்கியுடன் வந்தான். தலைவர் தனக்குத் தந்ததாகச் சொன்னான். அதன்பின் அவன் அதைப் பிரியவே இல்லை.

10.10.1988 அன்று நித்தமும் நடந்தே திரியும் பாலா, அன்று மட்டும் உழவு இயந்திரத்தில் ஏறிவரும்போதும்–

தேசவிரோதிகளும் இந்தியர்களும் அவர்களைச் சுற்றிநின்று துப்பாக்கிகளை இயக்கும்போதும்–

அவனும் அவனுடன் மேலும் பதினொரு போராளிகளும் விழும்போதும்–

அந்த எம்.16 துப்பாக்கி அவனுடனேயே பிரியாமல் இருந்தது.

–விழுதுகள், ஈழநாதம்.



படிப்பகம்

www.padippakam.com





# மேஜர் சயந்தன்

**வீரமரணம் : 06.01.1992**

அன்று 1992ம் ஆண்டு தைமாதம் 7ம் திகதி செவ்வாய்க்கிழமை காலை நான் எனது முகாமில் உள்ள அலுவலக அறையில் படித்துக் கொண்டிருந்தேன். அப்போது மன்னாரிலிருந்து வந்து மருத்துவம் படித்துக் கொண்டிருக்கும் போராளி ஒருவன் எமது முகாமிற்கு வந்து என்னுடன் இருக்கும் ஒரு பிள்ளையிடம் அக்கா நிற்கிறாவோ? என்று கேட்டான். அவனின் குரல், அவன் கேட்ட விதம் பதற்றமாக இருந்தது. இது என் மனதில் ஓர் இனம் தெரியாத கலக்கத்தை ஏற்படுத்தியது. எனவே நான் உடனடியாக அறையில் இருந்து வெளிப்பட்டு அவனருகே வந்து "என்ன விசயம் அப்பன்" என்று கலக்கத்துடன் கேட்டேன். அவன் ஏற்கனவே நிறைய அழுதிருந்தான். நான் கேட்டவுடன் "அக்கா சயந்தண்ணை வீரச்சாவக்கா" என்று கூறிவிட்டு மீண்டும் அழத்தொடங்கிவிட்டான். இது... இது...எப்படி? ... சீச்சீ... இருக்காது... அப்படி இல்லை... எப்படி இவ்வளவு சீக்கிரம்? என் நெஞ்சு ஒரு கணம் அப்படியே இறுகிவிட்டது. எனக்கு வாயில் வார்த்தை வரவில்லை. உடல் பதறிக் கொண்டிருந்தது. ஒருவாறு என்னைச் சுதாகரித்துக் கொண்டு "எப்படியய்யா, இப்பதானே இங்கிருந்து போனான். போய் ஐந்து நாட்கள் கூட ஆகவில்லையே!" என்றேன். அதற்கு அவன், "அக்கா, சயந்தண்ணை மட்டுமல்ல, வேணு அண்ணை, குகன் அண்ணை, குட்டிமணியண்ணை மொத்தம் நாலுபேர். நேற்று வெமிக்கிள் மைன்ஸ் வைக்கேக்கை மிஸ் ஆகிட்டுதாம். அதோட சயந்தண்ணையின் பொடி கூடக் கிடைக்கேல்லையாம் என்கிறாங்க" என்று கூறி முடித்தான். என்ன கொடுமையிது. ஒன்றாக மன்னாரின் மாமணிகள் நான்கும்... இதை எப்படி அவர்கள் தாங்கப் போகிறார்கள்? இனி இவன் தனது புனித சேவையைத் தொடர வரமாட்டானா, இது



படிப்பகம்

www.padippakam.com



உண்மையா? என்னால் இன்னமும் நம்பவே முடியவில்லை. இச்செய்தி பொய்யாக இருக்கக்கூடாதா என்ற ஏக்கம்.

மருத்துவ சேவையில் என்னென்ன அபிவிருத்திகள் எதிர்காலத்தில் செய்யவேண்டுமென்று ஐந்து நாட்களுக்கு முன்புகூட என்னோடு கலந்தாலோசித்தானே. "எதிர்காலத்தில் மன்னாரில் வைத்தே எம் போராளிகளின் உயிரைக் காப்பாற்றும் நோக்குடன் சில சத்திரசிகிச்சைகள் செய்வதற்கு, அதற்காக அனுபவம் பெறுவதற்கு நான் படிக்கப்போகிறேன். அதற்கு ஒழுங்கு பண்ணுங்க. மீண்டும் விரைவில் வருவேன்..." என்று கூறிவிட்டுப் போனானே. இவை அனைத்தையும் விட்டுவிட்டு இவ்வளவு விரைவாக போவான் என்று யார்தான் நம்புவார்கள். யாருக்குத்தான் வேதனை இருக்காது. இதனால்தானோ என்னவோ இழப்புக்கள் பலதைத் தாங்கிய என் இதயம் கூட இவ்விழப்பினால் ஒரு கணம் கனத்தது.

நான் முதல் முதலாக இவனைச் சந்தித்த நிகழ்வு, இன்னும் என் மனதில் பசுமையாக நிழலாடுகிறது. 1989ஆம் ஆண்டு ஆவணிமாதம் மதுரையில் நான் தங்கியிருந்த காலத்தில், இவன் மன்னாரில் இருந்து காயமடைந்த போராளிகளை மேலதிக விசேட சிகிச்சைக்காக அங்கு கொண்டுவந்திருந்தான். அப்போது ஒரு நாள் என்னிடம் வந்து, "அக்கா, நாம கொஞ்ச நாளைக்கு இஞ்சை தங்க வேண்டியிருக்கு, அதுவரையும் சும்மா நிற்காமல் மெடிக்ஸில் ஏதாவது படிக்க விரும்பிறம். என்னோட இன்னொரு மெடிக்ஸ் றங்கனும் கூட வந்திருக்கிறார். நீங்க எங்க இரண்டு பேருக்கும் ஏதாவது படிப்பியுங்களேன்" என்றான். இதில் ஒரு விடயம் என்னவென்றால் அவர்கள் இருவரும் ஏற்கனவே மருத்துவத்தைப் பற்றி நிறையத் தெரிந்தவர்கள். மன்னாரில் காயமடைந்த போராளிகள் பலருக்கு சிகிச்சையளித்து உயிரைக் காப்பாற்றியவர்கள். அப்படிக் களத்தில் நின்று நிறைய அனுபவம் பெற்றவர்கள். அப்படியிருந்தும் என்னிடம் வந்து தங்களுக்கு மருத்துவம் படிப்பிக்குமாறு கேட்ட விதம் இவனை என் மனதில் நன்றாக உயர்த்திவிட்டது. அத்துடன் இவனுடன் ஒரு சில மணித்தியாலங்கள் கதைத்ததில் இவனுக்கு மருத்துவசேவையில் உள்ள பற்றுதலையும், காயமடைந்த போராளிகளைக் காப்பாற்றுவதில் இருந்த அக்கறையையும், அத்துடன் தன் மாவட்டத்தில் மருத்துவத்தை எப்படியெல்லாம் விருத்தியடையச் செய்யவேண்டும் என்ற அவாவினையும் எனக்கு எடுத்துக்காட்டியது. இதற்கு நான் உடனடியாகச் சம்மதித்து ஒவ்வொரு நாளும் ஒரு சில மணித்தியாலங்களுக்கு போர்க்காயங்கள் பற்றியும் அவற்றுக்கான முதலுதவிச் சிகிச்சை போன்றவற்றையும் என்னால் இயன்றவரை படிப்பிக்கத் தொடங்கினேன். இப்படிப் படிப்பித்துக் கொண்டிருக்கும்வேளையில் சிலசமயம் நான் வைத்தியசாலை வேலைப்பளுவின் நிமித்தம் களைத்துவந்து படுத்துவிடுவேன். ஆனால் இவன் விடமாட்டான். நான் வந்து மெதுவாக படுக்கையில் சரியவும், வந்து கதவைத் தட்டி, "அக்கா வந்திட்டீங்களா? படிக்க வரலாமோ?" என்று கேட்பான். இவனின் இத்தகைய அதி தீவிர ஆர்வம் என் களைப்பை ஒரு நொடியில் போக்கிவிடும். உடனே நான் எழுந்து வகுப்பு எடுக்கத் தொடங்கிவிடுவேன்.

இவன் படிப்பிலும் வேலையிலும் உற்சாகமாகச் செயற்பட்டாலும் ஓய்வுநேரத்தில் அமைதியை விரும்புவான். மௌனமாக ஏதாவது யோசித்துக் கொண்டு இருப்பான். இதை நான் கவனித்து,



படிப்பகம்

"என்ன அப்பன் யோசனை? ஏதாவது பிரச்சனையா, அல்லது ஏதாவது கவலையா?" என்று கேட்டால் "சீ அப்படி ஒன்றுமில்லை. ஏன் அப்படிக் கேட்டீங்க" என்றுவிட்டு புன்னகைப்பான். அப்புன்னகையில் ஒன்றுமே புரியாது. இவன் அதிகம் அலட்டமாட்டான், நான் பாராட்டினாலும் ஒரு புன்னகை தான், நான் ஏசினாலும் அதே புன்னகை தான். சிலசமயம் எனக்கு புத்திமதிகள் கூறுவான்; ஆறுதல் கூறுவான். அவ்வேளையில் இவன் எனக்கு மூத்த சகோதரனாக மாறிவிடுவான். இவ்வாறு அக்கறையுடன் நான்கு மாதங்கள் படித்து முடிந்ததும், இவனுக்கும் றங்கனுக்கும் மன்னார் திரும்பவேண்டிய காலம் வந்துவிட்டது. உடனே தாம் மன்னார் போய் மேற்கொள்ளவேண்டிய மருத்துவ வேலைத் திட்டத்திற்கு என்னுடன் சேர்ந்து தேவையான மருந்துகள், மருத்துவ உபகரணங்கள் போன்றவற்றை இரவிரவாக பட்டியல் தயாரித்து, பின்பு கடை கடையாக ஏறியிறங்கி அவற்றைக் கொள்வனவு செய்து, அவற்றிற்கு எல்லாம் பொலித்தீன் போட்டு கடற் பயணத்திற்கு ஆயத்தமானான்.

இவன் எம்மையெல்லாம் விட்டுப் பிரியப் போகிறான் என்றவுடன், எனக்கு மட்டுமல்ல, என்னுடன் தங்கியிருந்த மற்றைய போராளிகள் அனைவருக்கும் இனம் தெரியாத வேதனை. இதற்குரிய காரணம் இவன் பழகும் விதம், காட்டும் பரிவு, மரியாதை, பாசம், பண்பு போன்றவைதான். இவற்றை எந்தக் காலத்திலும் மறக்கமுடியாது. இவற்றையெல்லாம் விட எனக்கு இவனில் பிடித்த குணம் என்னவெனில், நான் மருத்துவம் சம்பந்தமாக என் மனதிற்பட்ட கருத்துக்கள், எண்ணங்கள், ஆலோசனைகள் ஏதாவது சொன்னால் அதை ஒருபோதும மறக்கமாட்டான்; அசட்டை செய்யமாட்டான்; அக்கறையாக கருத்தில் எடுத்துக் கொள்ளுவான். பின்பு இவற்றையெல்லாம் பல சந்தர்ப்பங்களில் செயலில் காட்டி வெற்றியும் கண்டுள்ளான்.

இவன் மன்னார் கிளம்பும் நாளன்று வண்டிக்கு போகமுதல் என்னிடம் ஓர் உதவி கேட்டான். அதை உதவியென்று சொல்வதைவிட வேண்டுகோள் என்றே சொல்லலாம். அது என்னவெனில்: "அக்கா, நாம் இன்று மன்னார் போறம். நீங்கள் படிப்பித்ததை, சொல்லித் தந்ததை நிச்சயமாக செயலில் காட்டுவம். நீங்க தொடர்ந்து எங்களை மாதிரிப் பிள்ளைகளுக்கு படிப்பிக்கவேணும். என்றோ ஒரு நாள் நாம் தமிழீழத்தைப் பார்க்கும் போது அங்கை காண்கிற இடமெல்லாம் அக்காவின் பிள்ளைகள் தான் மெடிக்ஸ் செய்யவேணும். இது என்ரை ஆசை. அதோடை நீங்க நாட்டுக்கு போனால், எமது தலைவரிடம் அனுமதி பெற்று ஒருக்கா மன்னார் காட்டுக்கு வந்து (அப்போது அவர்கள் காட்டு வாழ்க்கை தான்) அங்கை எங்களுக்கு ஒரு மினித் தியேட்டருடன் கூடிய ஒரு மெடிக்ஸ் செற்றப் செய்ய ஆலோசனை தரவேணும். அக்கா, நீங்கள் மருந்து சம்பந்தமாக ஏதாவது புதிதாக அறிந்தால், அல்லது மருந்துகளைப் பற்றி புதிய தகவல்கள் கிடைத்தால் ஏதாவது ஆலோசனைகள் தெரிவிக்கவேணும் என்றால், அவற்றையெல்லாம் விளக்கமாக எழுதி, என் பெயர் போட்டு மண்ணாருக்கு அனுப்பி வையுங்க" என்றான். இன்றுவரை நான் இவனின் வேண்டுகோளை நிராகரித்தது கிடையாது. தொடர்ந்தும் இவனின் ஆசையை இறுதிமூச்சுவரை செய்யக் காத்திருக்கிறேன்.

நான் இந்தியாவில் இருந்து 90ஆம் ஆண்டு எமது மண்ணிற்கு வந்த காலம் தொட்டு

www.padippakam.com



இவனுடன் கடிதம் மூலம் தொடர்பு வைத்திருந்தேன். ஆனால் இவனை முதன் முதலாக நேரடியாக சந்தித்தது சிலாவத்துறை வரலாற்றுச் சமரின் போதுதான். இத் தாக்குதலுக்கு நாம் போனபோது ஏற்கனவே இவனும், இவனுடன் கூட இருந்த மற்றைய மருத்துவப் போராளிகளும் சகலவிதமான ஒழுங்குகளையும் செய்திருந்தார்கள். ஒரு களத்தாக்குதல் நடவடிக்கைக்கு எப்படி மருத்துவக்குழு தயாராகவேண்டுமோ அப்படி எதுவித குறையுமில்லாமல் தயார்ப்படுத்தி வைத்திருந்தான். இவன் அத்தாக்குதலில் அடம்பனிலுள்ள ஒரு மருத்துவ வீட்டில் என்னுடன் நின்று செயற்பட்டான்.

அங்கு நாம் எம்மிடம் வந்த காயமடைந்தவர்களில் உடனடியாக விசேட சிகிச்சைக்கு உட்படுத்த வேண்டியவர்களை உடனுக்குடன் வைத்தியசாலைக்கு அனுப்பிவிட்டு மீதி சிறிய காயம் உள்ளவர்களை வேறு ஒரு மருத்துவ முகாமுக்கு அனுப்பினோம். அடுத்தநாள் காலை நானும் இவனும் முதல்நாள் இரவு வேறு முகாமுக்கு அனுப்பிய சிறியகாயமுள்ள போராளிகளைச் சென்று பார்வையிட்டு அங்கு அவர்களுக்கு பூரண சிகிச்சையளிப்போம். இதில் இவனின் பங்கு கணிசமானது; வியக்கத்தக்கது; பாராட்டத்தக்கது. இதில் ஒரு நோயாளிக்கு நான் மயக்கமருந்து கொடுத்தால் இவன் ஒப்பிரேசன் செய்வான். "மற்றைய போராளிக்கு நான் மயக்கமருந்து கொடுக்கிறேன். நீங்க, அக்கா ஒப்பிரேசன் செய்யுங்க" என்பான். இதில் இருந்து என்ன விளங்குகிறது என்றால், இவன் ஒரே நேரத்தில் சேர்ஜரியையும் அனஸ்தீசியாவையும் படிக்க, பழக விரும்புகிறான். இதற்குரிய காரணத்தையும் இவனே சொன்னான். "அக்கா இப்படி நாம் பழகினால் தான் தற்செயலாக நீங்க வரமுடியாவிட்டாலும் நாம் எங்கட பொடியளைக் காப்பாற்றுவோம். அதோட அவசரத்துக்கு உதவும்" என்றான்.

நான் இவனைப் பற்றி எழுதிக் கொண்டிருந்த வேளையில், ஒரு மருத்துவ கருத்தரங்கிற்காக மன்னார் மாவட்ட மருத்துவப் பொறுப்பாளர் ஜீவன் இங்கு வந்திருந்தார். இவரும் சயந்தனும் 1985ம் ஆண்டு தொடக்கம் ஒன்றாகச் செயற்பட்டவர்கள். நான் அவருடன் சயந்தனைப் பற்றி அளவளாவிக் கொண்டிருந்தபோது ஒரு கட்டத்தில் அவர், "அக்கா, அவன் மருத்துவத்தில் மட்டுமல்ல, வேறும் பல வேலைகளில் திறமைசாலி. உதாரணமாகக் குறிபார்த்துச் சுடுவதில், வாகனம் ஓட்டுவதில், ஏன் கண்ணிவெடி வைப்பதில் அவனுக்கு நிகர் அவனே தான். அத்துடன் அவனில் ஒரு பழக்கம் என்னவென்றால் தான் அறிந்ததை மற்றவர்களுக்கு உடனடியாக சொல்லிக் கொடுக்கவேணும். அந்த விடயத்தில் பலரை ஊக்குவித்து முன்னேற்றவேண்டும் என்பதில் மிகுந்த அக்கறையுடையவன்" என்றார். அவர் மேலும் குறிப்பிடுகையில், "அவன் பங்குபற்றிய தாக்குதல்கள் பல, அவற்றில்:

1986ஆம் ஆண்டு முற்பகுதியில் மடுறோட்டில் இலங்கை இராணுவத்தின் மீது பதுங்கியிருந்து மேற்கொண்ட தாக்குதலிலும்.

அதே காலத்தில் கொக்காவில் இலங்கை இராணுவ தொடர் அணிமீது நடாத்தப்பட்ட தாக்குதலிலும் பங்கு பற்றி,


படிப்பகம்

www.padippakam.com



1986ஆம் ஆண்டு நடுப்பகுதியில் மன்னார் தீவில் முன்னாள் மன்னார் மாவட்ட தளபதி சாகஜானுடன் இணைந்து ஒரு ஜீப் வண்டி மீது தாக்குதல் நடத்தினான். இதில் ஜீப் வண்டி முற்றாக சேதமடைந்ததுடன் ஏழு இராணுவத்தினர் கொல்லப்பட்டனர்.

பின்பு 1987 ஆம் ஆண்டு ஆனி மாதம் பூநகரிக் கோட்டைத் தாக்குதலிலும்,

1987ஆம் ஆண்டு முருங்கன்பிட்டியிலும், 88ஆம் ஆண்டு அச்சங்குளத்திலும் புளொட் சமூக விரோதக் கும்பல் மீதான தாக்குதலிலும் பங்குபற்றினான்.

இவற்றைவிட 88ம் ஆண்டு பெரியமடு பள்ளமடு வீதியில் சன்னார் என்ற இடத்தில் ரோந்துவந்த இந்திய இராணுவத்தினர் மீது தாக்குதல் நடத்திய குழுவுக்கு தலைமை தாங்கினான். இதில் 6 இராணுவத்தினர் கொல்லப்பட்டனர்.

90 ஆம் ஆண்டு மார்கழிமாதம் வரலாற்றுச் சமரான கஜவத்தை முகாம் தாக்குதலில் மருத்துவசேவையைப் பொறுப்பேற்று நடாத்தினான். அதன்பின்பு புத்தளம் சிலாவத்தை வீதியில் முள்ளிக்குளத்தில் மருத்துவச்சேவை, கண்ணிவெடி வைத்தல் ஆகிய இரு பணிகளையும் ஒரே நேரத்தில் கவனித்தான். "

என்று கூறி "அக்கா, இதன் பிறகு 91ம் ஆண்டு மாசிமாதம் நடைபெற்ற சிலாவத்துறை தாக்குதலில் தொடங்கி இறுதிவரை அவன் செய்த செயற்பாடுகள் யாவும் உங்களுக்குத் தெரியும்தானே" என்றும் சொல்லி முடித்தார்.

ஆம் உண்மைதான். அதன் பின்பு நடைபெற்ற பல தாக்குதல்களிலும் நானும் இவனுடன் கூட இருந்தேன். இதில் பலராலும் பேசப்படும் பெரியதம்பனை அடிபாட்டை எடுத்துக்கொண்டால், அத்தாக்குதலில் இவன் மருத்துவச்சேவையை மட்டும் செய்யாமல் கண்ணிவெடி வைத்தல், வாகனம் செலுத்துதல் போன்ற பணிகளையும் ஒரே நேரத்தில் செய்துகொண்டிருந்தான். இதற்கு நான், "ஏன் இப்படி செய்கிறாய், மெடிக்சை விடப்போகிறாயா?" என்று கேட்டால், "இல்லை அக்கா, நான் மெடிக்சை விடமாட்டன். ஆனால் நாம நாட்டுக்கு நிறைய செய்யக் கிடக்கு. தனிய மெடிக்ஸ் செய்தா காணாது." என்பான். இத்தாக்குதலில் தான் லெப். கேணல் ராஜனுக்கு கையில் காயம், அதிலிருந்து கடுமையான குருதிப்பெருக்கு. பகல்நேரம், சகடைகள் இரண்டு இடைவிடாது மாறி மாறிக் குண்டுகளை கண்டபாட்டுக்கு போட்டுக் கொண்டிருந்தன. சிந்திக்க நேரமில்லை. துணிந்து வாகனத்தை எடுத்தான். லெப்.கேணல் ராஜனை ஏற்றினான். வெட்டையூடாக, குண்டு மழைக்கு மத்தியில் "எங்கை ஏலுமானால் என்ர வாகனத்துக்கு குண்டு போடு பாப்பம்" என்ற விதமாக வேகமாக, படு சாமர்த்தியமாக, ஆனால் எதுவித பாதிப்போ சேதமோ இல்லாமல் அவரை எம்மிடத்திற்கு கொண்டு வந்து சேர்த்துவிட்டான். இந் நிகழ்வை பின்னர் சகல பொறுப்பாளர்களும் பாராட்டியதை நான் கேட்டு மகிழ்ந்தேன்.

இறுதியாக இவன் என்னை யாழ்ப்பாணத்தில் வைத்து 1992 ஆம் ஆண்டு தை மாதம்



படிப்பகம்

www.padippakam.com



முதலாம் திகதி சந்தித்துக் கதைத்தான். அப்போது மீண்டும் என்னிடம் இரு உதவிகள் கேட்டான். ஒன்று, தான் மேலும் சத்திர சிகிச்சை பற்றிப் படிக்கவேணும். அதற்கு ஒழுங்கு செய்யும்படியும்; மற்றது, முதலுதவி பற்றி முழுவதுமாக உள்ளடக்கி ஒரு புத்தகம் எழுதித் தனது மாவட்டத்திற்குத் தருமாறும் கேட்டான். நான் என்றுமே இவனின் வேண்டுகோளை நிராகரித்தது கிடையாது. இவனின் ஆசைகள் வேண்டுகோள்கள் யதார்த்தமானவை. இவனின் ஏக்கங்கள் நியாயமானவை. இவன் இவ்வுதவிகள் கேட்டு ஐந்து நாள், மிக அவசரமாக தன் உன்னத பணிகளை விட்டு விட்டு எம்மையும் விட்டு விட்டு, தூரப் போய்விட்டான். நான் மன்னாருக்கு இறுதியாக போனபோது இவனில்லை, என்னை வரவேற்க. இவன் காட்டிய இடங்கள், இவன் நடந்த இடங்கள் என்னை வெறுமையாக பார்ப்பது போல உணர்வு. அதிலும் குறிப்பாக குஞ்சிக்குளத்திலுள்ள தொங்கு பாலத்தில் நடந்தபோது இவன் கூட வருவதுபோல ஒரு பிரமை. ஆனால், இவன் தான் இன்று எம்மிடமில்லையே. தவிர இவன் வளர்த்துவிட்ட இவனின் தகைமைகளைக் கொண்ட பல சயந்தன்கள் இவனின் ஆசைகள் எதிர்பார்ப்புகளைச் சுமந்துகொண்டு மருத்துவ சேவையைச் செய்யத் தொடங்கியுள்ளார்கள். இன்று இவனின் கனவு நனவாகிக் கொண்டிருக்கிறது. இவனது ஆசைகள் பூர்த்தியாகிக் கொண்டிருக்கின்றன.

–டாக்டர் அக்கா.



படிப்பகம்

www.padippakam.com





# லெப். கேணல் வேணு

## (பிரான்சிஸ் றொபேட் சேவியர்)

## வீரமரணம் : 06.01.1992

"கண்ணிவெடித் தாக்குதல் நடந்ததாம்; பத்து ஆமி செத்துப் போனாங்களாம்."

இரண்டு வரிகளில் இந்தச் செய்தி முடிந்துவிடும், ஆனால் இதனுடைய பெறுமதி – இதன் பரிமாணம் – மிகப்பெரியது.

இதேவேளை கண்ணிவெடித் தயாரிப்புகளில் –முயற்சிகளில் நாம் இழந்துள்ள செல்வங்களின் பெறுமதியை நினைத்தால் கைதடி– அடம்பன்– நீராவியடி– வஞ்சியன்குளம்... என்ன தவறு நடந்தது?

பெரும்பாலும் இதனைச் சொல்வதற்கு இதனுடன் சம்பந்தப்பட்ட எவருமே மிஞ்சுவதில்லை.

இவ்வாறான சம்பவங்களில் ஒன்றுதான் மன்னாரை அதிரப் பண்ணிய வஞ்சியன்குளம் விபத்து. மன்னார்ப்பிராந்தியத் தளபதி லெப். கேணல் வேணு, மேஜர் குகன், மேஜர் சயந்தன், கப்டன் குட்டிமணி ஆகியோரை எம்மிடமிருந்து பறித்தெடுத்த சம்பவம் அது. பூநகரியிலிருந்து முள்ளிக்குளம் வரையிலான இந்தப் பிராந்தியத்திலுள்ள மக்கள் அனைவருக்குமே இவர்கள் நன்கு பரிச்சயமானவர்கள், ஆகையால் இவர்களின் இழப்பு இப்பிராந்தியத்தின் ஒவ்வொரு மூலைமுடுக்கிலும் எதிரொலித்தது.

www.padippakam.com



இச்சம்பவத்தில் எம்மால் இழக்கப்பட்டவர்களுள் ஒருவரான கப்படன் குட்டிமணி பேசாலையைச் சேர்ந்தவன். 1988ஆம் ஆண்டு இந்தியப் படையினரின் நடவடிக்கைகள் உச்சக்கட்டத்தை அடைந்திருந்த காலத்தில் எம்முடன் இணைந்து கொண்டவன். பயிற்சி முடிந்ததும் வெடிகுண்டுகள் தயாரிக்கும் பிரிவில் பணிபுரிந்தான். கண்ணிவெடிகள் வைப்பதில் கைதேர்ந்தவன். இந்தக் காடும், வெளியும் எமக்கே சொந்தம் என்பதை மிதிவெடிகள் மூலம் இந்திய இராணுவத்தினருக்கு உணர்த்திக் காட்டியவன். சொந்தக் காலுடன் வந்த இந்திய இராணுவத்தைச் செயற்கைக் காலுடன் அனுப்பிவைத்தவன்.

மேஜர் குகன்–மேஜர் சயந்தன் இருவருமே 1985ஆம் ஆண்டு நடுப்பகுதியில் இயக்கத்துடன் இணைந்து கொண்டவர்கள். இவர்களில் குகன் மன்னார்ப் பிராந்தியத்திற்கு அப்பாலும் அநேக போர்க்களங்களைக் கண்டவன். இந்திய இராணுவம் எமது மக்கள் மேல் போர் தொடுத்த போது, அதை யாழ்ப்பாணத்தில் பல களங்களில் எதிர்கொண்டவன். முதன்முதல் இந்தியப்படையை ஆயுதங்களுடன் சரணடையச் செய்த தாக்குதலிலும் பங்கு பற்றியவன். கொண்டச்சி, கஜவத்தை, வஞ்சியன்குளம் என பல்வேறு இடங்களிலும் சிறீலங்காப்படையினருக்குப் பாரிய இழப்பை ஏற்படுத்தியவன்.

ஒருமுறை இராணுவ நிலைகளை வேவு பார்க்கச் சென்ற போது இளைய தோழன் ஒருவனால் இவனது பிரத்தியேக ஆயுதம் இழக்கப்பட்டது. அந்தச் செய்தி மட்டும் தான் விசேட தளபதி சுபனைச் சந்தித்தது, அடிபட்ட புலியாய்த்திரிந்த இவன் மிகவும் ஆபத்தான பகுதி ஒன்றில் இரவுநேரம் வந்துகொண்டிருந்த ஜீப் ஒன்றின் மீது தாக்குதல் தொடுத்து அவ்வண்டி எரிந்து கொண்டிருக்கையில் நாலுக்கு மேற்பட்ட ஆயுதங்களைக் கைப்பற்றி அவற்றுடன் சென்றுதான் விசேட தளபதியைச் சந்தித்தான். இதுதான் புலிகளுக்கேயுரிய பாரம்பரியம் இந்த வழிவழியாக வந்த சொத்து என்னிடமும் உள்ளது என்பதை நிரூபித்துக் காட்டியவன்.

உப்புக்குளத்தைச் சேர்ந்த மேஜர் சயந்தன் தளபதி வேணுவுடன் இணைந்து மருத்துவக் குழுவில் பணியாற்றியவன். அத்துடன் போர்க்களத்தில் பணியாற்றத் தகுதி படைத்த சாரதியுமாவான். நீண்ட காலமாக தொழில் முறையில் வைத்தியம் பார்க்கும் வைத்தியர்களே வியக்கும் வண்ணம் மருத்துவப் பணிகளை ஆற்றியவன். தம்பனையில் நிகழ்ந்த சண்டையில் காயமடைந்த போராளிகளைக் காப்பாற்றி வாகனத்தில் கொண்டுசெல்லும் போது குண்டுவீச்சு விமானம் ஒன்று அந்த வாகனத்தைத் துரத்தித் துரத்திக் குண்டுகளைப் போட்டது. “எனது வேகத்திற்கேற்ப குண்டுவீசுவதற்கு இனிமேல்தான் நீங்கள் பழகவேண்டும்” என்ற செய்தியை உணர்த்தும் வகையில்மிக வேகமாக வாகனத்தைச் செலுத்திவந்து அவர்களைக் காப்பாற்றியவன்.

“ஆட்காட்டிவெளி” இந்தப் பெயரைக்கேட்டாலே சிங்கள இராணுவத்திற்கு மூக்குச் சிவக்கும். பொதுவாக அடம்பனுக்கு அப்பாலுள்ள இடங்கள், அவர்கள் வரைபடத்திலும் உயர இருந்து விமானமூலமே பார்க்கவேண்டிய பகுதிகளாகும். இப்பகுதிகளுக்குள் கால் வைக்கமுனையும் ஒவ்வொரு கட்டத்திலும் அச்சம்பவத்தில் சம்பந்தப்பட்ட சிங்கள இராணுவத்தின்


படிப்பகம்

www.padippakam.com



வாழ்நாள் முழுவதும் மறக்கமுடியாதபடியான தாக்குதல் நடக்கும். இங்கு தான் மன்னார்ப் பிராந்தியத் தளபதி வேணுவும் உருவானான்.

1984 ஆம் ஆண்டு இயக்கத்தில் இணைந்துகொண்ட இவன் மன்னார்த் தளபதியாக விளங்கிய லெப். கேணல் ராதாவின் பயிற்சி முகாமில் உருவாகியவன். மன்னார்த்தீவினுள் சிறீலங்கா இராணுவம் எமது இரு போராளிகளைச் சுட்டபோது மன்னார்க் கோட்டைக்குப் பக்கத்தில் லெப்.கேணல் ராதாவின் தலைமையிலான அணி பதிலடி கொடுத்ததுபோல, 1988ஆம் ஆண்டு அடம்பனில் எமது இரு போராளிகளைக் கைதுசெய்த சிறீலங்கா இராணுவம் அவர்களை இந்திய இராணுவத்திடம் கையளித்ததற்கு பதிலடி கொடுக்கத் தீர்மானித்தான். அடம்பன் முகாமுக்கு மிகக் கிட்டிய தூரத்தில் ஜீப்பில் வந்த சிறீலங்காப் படை உயரதிகாரிகள் மீது தாக்குதல் நடாத்தி இராணுவரீதியில் பதிலடி கொடுத்தான்.

பயிற்சி முகாமில் இருந்து வெளிவரும் போது இவன் ஒரு வைத்தியனாகவே வந்தான், விஞ்ஞானப்பிரிவில் அவன் கற்ற கல்வி மருத்துவப் பயிற்சிகளைப் பெற்றுக்கொள்வதற்கு பெரிதும் உதவியது. இவன் பங்குகொண்ட முதற் தாக்குதல் மன்னார் மாவட்டப் போராளிகளைப் பொறுத்தவரை மிக முக்கியமானதாகும். மன்னார்த்தீவினுள் அமைந்திருந்த இந்த மாவட்டத்தின் பிரதான பொலிஸ் நிலையத்தின்மீது நிகழ்த்தப்பட்ட இத்தாக்குதலின் போது காயமடைந்த போராளிகளுக்கு வைத்தியனாகச் சென்றான் அன்றிலிருந்து மன்னர் மாவட்டப் போராளிகளைப் பொறுத்தவரை இவனே டாக்டர். ஆனாலும் இடையிடையே கிடைக்கும் போர்க்களங்களிலும் தனது முத்திரையைப் பதிக்க இவன் தவறவில்லை. 17.01.1986 அன்று நாயாற்று வெளியில் அப்போதைய மன்னார் மாவட்டத் தளபதியான லெப்.கேணல் விக்ரரைக் குறிவைத்து மேற்கொள்ளப்பட்ட தாக்குதலில் ஈடுபட்ட இராணுவத்தினரை கண்டல் சந்தியில் வழிமறித்துத் தாக்கிய குழுவில் இவனும் ஒருவனாக இருந்தான். "பிச்சை வேண்டாம் நாயைப் பிடி" என்ற நிலையில் ஓடிய இராணுவம் நீண்ட காலத்துக்கு அந்தப் பக்கத்தையே நினைக்காமலிருந்தது.

பரப்புக்கடந்தான், வட்டக்கண்டல் போன்ற மிகப் பின்தங்கிய கிராமங்களைச் சேர்ந்த மக்கள் பலத்த போக்குவரத்துச் சிரமங்களின் மத்தியிலேயே மன்னார்–அடம்பன் போன்ற வைத்தியசாலைகளுக்குச் செல்லவேண்டும், இவனோ அந்த நிலையை மாற்றி மக்களைத் தேடி மருத்துவம் செய்யும் மருத்துவனானான். ஆட்காட்டிவெளியில் வைத்தியநிலையம் ஒன்றினை நிறுவி அப்பகுதி மக்களின் அன்புக்குப் பாத்திரமானான். இரவு–பகல் எந்த நேரமானாலும் பொதுமக்களுக்கோ, போராளிகளுக்கோ வேணுதான் டாக்டர்.

இக்காலத்தில் மக்களிடையே மிகவும் பிரபலமானான் வேணு. அவர்களோடு அவன் பழகியவிதம் – மக்களை அரவணைத்துச் செல்லும் பாங்கு என்பன தான், குடும்பத்தவர் எவருமே இந்த மண்ணில் இல்லாத நிலையில், இவன் மறைந்தபோது, உனக்குச் சொந்தங்கள் நிறைய உண்டு என்று கூறிற்று, பல்லாயிரக்கணக்கில் திரண்டுவந்து அஞ்சலி செலுத்தி வரண்ட பூமியாம் மன்னாரைத் தம் கண்ணீரால் ஈரமாக்கினர் அப்பகுதிமக்கள்.



படிப்பகம்

www.padippakam.com



*07.11.1989* அன்று வில்பத்துக் காட்டில் "பச்சைப் புலிகள்" எனப்படும் சிறீலங்காப் படையினர் மேற்கொண்ட தாக்குதலை இவன் முறியடித்த விதம் சாதனைக்குரியதாகும். பெட்டியுடன் இணைக்கப்பட்ட உழவு இயந்திரத்தில் தனது தோழர்கள் 14 பேருடன் பயணமாகிக்கொண்டிருந்தான் இவன். அப்போது மறைந்திருந்த சிறீலங்காப்படையினர் இவர்கள் மேல் தாக்குதல் தொடுத்தனர், பாதுகாப்பான நிலைகளில் இராணுவத்தினர் – பாதகமான நிலையில் போராளிகள், ஆனாலும் இவன் எதிர்த்தாக்குதல் தொடுத்தான். சண்டையை எமக்குச் சாதகமாக மாற்றினான். அதனால், உயிரிழந்த தமது சகா ஒருவனைக்கூட விட்டுவிட்டு சிறீலங்காப்படை தப்பியோடியது. உயிரிழந்த இராணுவத்தினனது உடலுடன் ஒருசில ஆயுதங்களையும் கைப்பற்றிவந்தான் இவன். இத்தாக்குதலில் ஈடுபட்ட அணிக்குத் தலைவனும் இவனே.

இந்திய இராணுவத்துடனான போர் நிகழ்ந்த காலப்பகுதி, இவனை மன்னார் மாவட்டத்தின் எதிர்காலத்தளபதியாக இனங்காட்டியது. இயக்கத்தின் பொருளாதாரத்திட்டங்களை நிறைவேற்றுவதிலும் வல்லவன் இவன்.

*1991* ஆம் ஆண்டு இவன் மன்னார் மாவட்டத் தளபதியாகப் பொறுப்பேற்றான். அக்காலத்தில் நிகழ்த்தப்பட்ட தாக்குதல்கள் தமது திட்டங்களை மறுபரிசீலனை செய்யவேண்டிய நிலைமையை சிறீலங்கா இராணுவத்தினருக்குத் தோற்றுவித்தது.

அது ஒரு கொடியநாள். ஏற்கெனவே மிகப்பெரிய வெற்றிகளையெல்லாம் (60 இராணுவத்தினர் பலியான சம்பவம் உட்பட) எமக்குத் தந்த வஞ்சியன்குளத்தில் எமக்கு ஒரு சோகம் காத்திருந்தது. சிறந்த தளபதி, மன்னார் மக்களின் அன்புக்குப் பாத்திரமான வேணுவை இழந்த கொடிய நாள் அது.

அவனுடன் மேஜர் சயந்தன், மேஜர் குகன், கப்டன் குட்டிமணி என்ற நால்வரை, எங்கள் நான்கு கண்மணிகளை வெடிமருந்துவிபத்தில் நாம் இழந்தோம்.

–சுரேஸ், விடுதலைப்புலிகள்.



படிப்பகம்

www.padippakam.com





# கப்டன் பரஞ்சோதி

## (சிவபாதசுந்தரம் அனுசீலன்)

**வீரமரணம் : 23.07.1991**

அன்று பரஞ்சோதி வீடு வழமைக்கு மாறான பரபரப்பில் இருந்தது. காலையில் ரியூசனுக்கு என்று சென்ற பரஞ்சோதியைக் காணவில்லை. எனினும், காணவில்லை என்பதற்காக அவனைத் தேடவேண்டிய அவசியம் அவனது வீட்டாருக்கோ அல்லது அயலவர்களுக்கோ இருக்கவில்லை. ஏனெனில் அந்தச் சின்னஞ்சிறிய கிராமத்தில் ஒரு இளைஞனைக் காணவில்லை என்றால் அவன் எங்கே சென்றிருப்பான் என்பது அந்த ஊராருக்கு நன்கு தெரியும்.

ஆமாம், "பரஞ்சோதி இயக்கத்திற்குப் போய்விட்டான்..."

அந்த ஊர் முழுவதும் ஒரு சில நாட்கள் அடிபட்ட வார்த்தை அது. இயக்கத்திற்குப் போவது என்பது அந்த ஊரைப் பொறுத்தவரையில் ஒரு ஆச்சரியமான விடயமாக இருக்கவில்லை. ஆனால், பரஞ்சோதியை நன்கு அறிந்தவர்களுக்கு...! ஆம், அவன் இயக்கத்திற்குப் போவான் என்று அவனது வீட்டாரோ, நண்பர்களோ அல்லது அந்த ஊரில் அவனை அறிந்த எவருமோ எதிர்பார்த்திருக்கமாட்டார்கள்.

அவன் மிகவும் மென்மையானவன், எட்டாம் வகுப்பில் கல்விகற்கும் பருவத்திற்கூட தாயின் மடியில் தவழுமளவிற்குக் குழந்தைத்தனம் மிக்கவன். பாடசாலை விட்டால் வீடு என்று கணநேரமும் வீட்டைவிட்டே பிரிந்திருக்காதவன். அப்படியான குழந்தைத் தனம் மிக்கவன். பந்தபாசங்களைத் துறந்து தாய் தந்தையைப் பிரிந்து இளவயதின் இன்பங்களையெல்லாம்



படிப்பகம்

www.padippakam.com



மறந்து எப்படித்தான் இயக்கத்தில் இணைந்து கொண்டானோ! அது இயற்கையின் நியதியாகவோ, அன்றி, காலத்தின் கட்டாயமாகவோ இருந்திருக்கலாம்.

ஆனாலும் யதார்த்தம் என்னவென்றால், மென்மையுள்ளம் கொண்டவர்கள் தான் போராளிகளாக மாறுகின்றார்கள். ஏனென்றால் அவர்களால் தான் அடக்குமுறைகளையும் அடிமைத்தனங்களையும் பொறுக்கமுடிவதில்லைப் போலும். தனது சக போராளியின் பிரிவினைத் தாங்கமுடியாமல் ஒரு போராளி அழுவதனைப் பார்த்து நான் ஆச்சரியமடைந்திருக்கிறேன்; அது சாத்தியமா என்று சிந்தித்திருக்கின்றேன். அதற்கு நான் கண்ட பதில் ஒரு போராளியின் மனம் மென்மையானதுதான்.

ஒரு சாதாரண மனிதன் போராளியாகின்ற பொழுது அவன் எவ்வாறு மாற்றமடைகின்றான்; அல்லது மாற்றப்படுகின்றான் என்பதற்கு உதாரணமான பல போராளிகளில் பரஞ்சோதியும் ஒருவன். வீட்டில் இருந்தபோது அவனிடம் காணப்பட்ட குழந்தைத் தனங்களையும் விளையாட்டுப் புத்தியினையும், அவன் இயக்கத்திற்கு வந்து பயிற்சி எடுத்ததில் இருந்து அவன் வீரமரணமடையும் வரை அவனிடம் காணவே முடியவில்லை. அவனது இயக்க வாழ்க்கை வரலாறு மிகவும் குறுகியதாக அமைந்துவிட்டபோதிலும் அந்தக் குறுகிய காலத்திற்குள்ளேயே அவன் இயக்கத்தில் ஒரு நற்பெயரையும் நன்மதிப்பையும் பெற்றிருந்தான் என்றால் அதற்குக் காரணம் அவனது திறமையும் விசுவாசமும் ஒழுக்கமுந்தான்.

தனது போராட்ட வரலாற்றின் ஆரம்பநாட்களை திருகோணமலையில் ஆரம்பித்த பரஞ்சோதி, பின்னர் யாழ்ப்பாணம் வந்து சார்ள்ஸ் அன்ரனி சிறப்புப்படைப்பிரிவு ஆரம்பிக்கப்பட்டபோது அதில் இணைக்கப்பட்டான். அதன்பின்னர் தனக்குக் கிடைத்த ஒவ்வொரு சந்தர்ப்பத்திலும் தனது திறமையினை முழுமையாகக் காட்டினான். சார்ள்ஸ் அன்ரனி படைப்பிரிவினால் ஓமந்தைப் பகுதியில் நடத்தப்பட்ட முதலாவது தாக்குதலில் பங்குபற்றியவன் என்றபெருமை பரஞ்சோதியையும் சாரும். அதனைத் தொடர்ந்து பூவரசங்குளப் பகுதியிலிருந்து மன்னார் நோக்கி முன்னேறமுயன்ற இராணுவத்தினரோடு நடந்த பாரிய தாக்குதலிலும் அத்தாக்குதலில் ஒரு உலங்குவானூர்தி சுட்டு வீழ்த்தப்பட்ட வெற்றிச் சம்பவத்திலும் பரஞ்சோதிக்கு முக்கிய பங்குண்டு.

அவனது அதீத திறமையினாலும் ஆற்றலினாலும் மிகவும் குறுகிய காலத்திலேயே அவனுக்கு 50 கலிபர் விமான எதிர்ப்பு ஆயுதமும் அதனுடனான குழுவின் பொறுப்பும் ஒப்படைக்கப்பட்டது. தனக்கு வழங்கப்பட்ட அந்த ஆயுதத்தினை ஒழுங்காகப் பாதுகாக்கவும் தனக்கு வழங்கப்பட்ட அந்தப் பொறுப்பினை செவ்வனே நிறைவேற்றவும் அவன் என்றும் தவறியதில்லை. பரஞ்சோதி பங்குபற்றிய ஒவ்வொரு தாக்குதலிலும் தனது உன்னத திறமையை வெளிக்காட்டிய வண்ணமேயிருந்தான். அதிலொன்று, நமது நெஞ்சங்களை விட்டு அகல முடியாத ஆனையிறவு இராணுவ முகாம் தாக்குதல். அத்தாக்குதலில் தனது ஆயுதக்குழுவுடன் பங்குபற்றிய பரஞ்சோதி தனது பொறுப்பில் இருந்த இரண்டு போராளிகள் வீரமரணமடைந்த வேளையிலும் சற்றும் மனந்தளராது தீரத்துடன் போராடி தனது ஐம்பது கலிபர் ஆயுதத்தினையும், போராளிகளையும் பாதுகாத்தான்.

www.padippakam.com



இயக்கத்தின் மீதும் போராட்டத்தின் மீதும் பரஞ்சோதி கொண்டிருந்த விசுவாசத்தின் தன்மையை எடுத்துக்காட்டுவதற்கு அவனது வாழ்க்கையில் நடந்த பல சம்பவங்களிலொன்றை உதாரணமாகக் கூறலாம். ஆனையிறவுத் தாக்குதலின் பின்னர் பரஞ்சோதி விடுமுறையில் யாழ்ப்பாணத்திலிருந்து முல்லைத்தீவுக்குச் சென்றிருந்தான். அவனுக்கு வழங்கப்பட்ட ஒருவார விடுமுறையில் யாழ்ப்பாணத்திலிருந்து முல்லைத்தீவுக்குச் சென்றிருந்தான். அவனுக்கு வழங்கப்பட்ட ஒருவார விடுமுறை முடிந்த பின்னரும் கூட அவன் முகாம் திரும்பவில்லை. நாட்கள் நகர்ந்த வண்ணமிருந்தன. பரஞ்சோதி அவ்வாறு நடந்து கொள்பவனல்ல. அதனால் அவனது பொறுப்பாளர்களுக்கு தர்மசங்கட நிலைமையாகிவிட்டது. விடுமுறையிற் சென்றவனைக் காணவில்லை. என்ன நடந்ததோ தெரியவில்லை என்று அவர்கள் கவலையடையத் தொடங்கிவிட்டனர். அந்நாட்களில் மணலாற்றுப்பகுதியில் பாரிய இராணுவத்தாக்குதல்களுக்கு போராளிகள் முகங்கொடுத்துக் கொண்டிருந்த நேரம். அத்தாக்குதல்களில் காயமடைந்த போராளிகள் யாழ் வைத்தியசாலைக்குக் கொண்டுவரப்பட்ட வண்ணமிருந்தனர். இந்நேரத்தில் அங்கு காயமடைந்து வந்திருந்த தமது பிரிவுப் போராளிகளைப் பார்ப்பதற்காக வைத்தியசாலைக்குச் சென்றிருந்த சிறப்புப் படையணியின் பொறுப்பாளர்கள் சிலர், அங்கு பரஞ்சோதி கையில் காயமடைந்து வந்திருப்பதனைக் கண்டு அதிர்ச்சியும் ஆச்சரியமுமடைந்தனர். விடுமுறையில் சென்றவன் எவ்வாறு காயமடைந்தான் என்பது பரஞ்சோதியோடு கதைத்தபின்னரே அவர்களுக்கு விளங்கியது.

"அண்ணை, நான் லீவில போய் இரண்டு, மூன்று நாளிலேயே அங்கு சண்டை தொடங்கிற்று, அங்க சண்டை நடக்கேக்குள்ள லீவில நிக்க எனக்குப் பிடிக்கேல்ல, அதுதான் உடனேயே அங்க போயிற்றன், அதில் தான் இந்தக் காயம்" என்று தனது காயத்தின் வேதனையிலும் புன்சிரிப்போடு கூறிமுடித்தான் பரஞ்சோதி. மணலாற்றுச் சமரின் பின்னர் பரஞ்சோதி ஆசிரியனாக மாறினான். ஆமாம், 50 கலிபர் துப்பாக்கி பற்றி ஏனைய போராளிகளுக்குக் கற்பிக்கும் பொறுப்பு பரஞ்சோதிக்கு வழங்கப்பட்டது. முதலில் கடற்புலிகளைச் சேர்ந்த போராளிகளுக்கு பயிற்சி கொடுத்துவந்த அவன், பின்னர் தனது சக பிரிவுப் போராளிகளுக்குப் பயிற்சி கொடுத்துவந்தான். அவனது பழகும் தன்மையினாலும் ஒழுக்கத்தினாலும் திறமையினாலும் ஒவ்வொரு போராளிகளும் நல்ல அன்பும் மரியாதையும் செலுத்தினர். அவர்கள் ஒவ்வொருவரும் அவனை பரஞ்சோதி மாஸ்ரர் என அன்பாக அழைத்தனர். இவ்வளவிற்கும் அவன் பாடசாலை நாட்களில் பெரிய கெட்டிக்காரனுமல்ல; அவன் படித்தது எட்டாம் தரம் மாத்திரமே.

இவ்வாறு அவன் பயிற்சி ஆசிரியனாக இருந்துவந்த காலப்பகுதியிற்தான் மணலாற்றில் மற்றுமோர் பாரிய இராணுவத் தாக்குதல் ஆரம்பமாகியது. எமது தாக்குதல் வரலாற்றில் இந்த மணலாற்றுச் சமர் தனக்கென ஒரு சிறப்பு முத்திரை பதித்த ஒன்று. அன்றிலிருந்து இன்றுவரை எமது எந்த ஒரு தாக்குதலை எடுத்துக்கொண்டாலும் அது எமது போராளிகளின் உறுதியான மனோபலத்தை எதிரிக்கு வெளிக்காட்டுபவையாகவே அமைந்துவருகின்றன. அந்த வகையில் எமது போராளிகளின் மனோபலத்தை தெளிவாக வலியுறுத்திய தாக்குதல்களில் ஒன்று இந்த மணலாற்றுச் சமராகும். இராணுவத்தினர் புதிதாகக் கொள்வனவு செய்த டாங்கிகளையும் பீரங்கிகளையும் கொண்டு முன்னேறத் தொடங்கினர். இவற்றையெல்லாம்



படிப்பகம்

www.padippakam.com



கண்டு நாம் பயப்படுவோமா, என்ன? எமது போராளிகள் தமது மனோபலத்தையே கவசமாகக் கொண்டு எதிர்த்தாக்குதல் தொடுத்தனர். இறுதியில் இராணுவத்தினர் தமது டாங்கிகளை இழந்த நிலையில், பீரங்கிகளை எம்மிடம் பறிகொடுத்த நிலையில் பின்வாங்கினர்.

இந்தத் தாக்குதல் வெற்றியில் பரஞ்சோதியின் பங்கு அளப்பரியது எனலாம். இத்தாக்குதலில் முன்னணியில் நின்ற அவன் தனது முழுத்திறமைகளையும் காட்டிப் போராடினான். தாக்குதல் நடைபெற்றுக் கொண்டிருந்த ஒரு கட்டத்தில் இராணுவத்தினால் கைவிடப்பட்ட நிலையில் இருந்த வாகனம் ஒன்றில் பொருத்தப்பட்டிருந்த ஐம்பது கலிபர் துப்பாக்கியைக் கழற்ற வேண்டியிருந்தது. அப்பகுதியில் நின்ற போராளிகளில் அதனைக் கழற்றத் தெரிந்தவன் பரஞ்சோதி ஒருவனே. அவன் கணநேரமேனும் தாமதிக்காது விரைவாகச் செயற்பட்டான். வாகனத்தில் பாய்ந்தேறி மிக விரைவாக அதனைக் கழற்றி சக போராளிகளிடம் ஒப்படைத்தான். இவ்வாறு மிகத்திறமையுடன் போராடிய பரஞ்சோதி இறுதியில் தலையில் காயமடைந்து யாழ். வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டான். அவ்வளவு நாட்களும் தனது மண்ணில் விடுதலைக்காக போராடிய அவன் கடைசி இரண்டு நாட்களும் தனது உயிருக்காகப் போராடி வீரமரணமடைந்தான். ஆம் அவன் இறுதிவரை போராடிக் கொண்டேயிருந்தான்.

பரஞ்சோதியின் மறைவு அவனை அறிந்த ஒவ்வொரு போராளிக்கும் மிகத் துயரைக் கொடுத்திருக்கும். ஒவ்வொரு போராளியுடனும் அவன் பழகும் விதம்; கடமைநேரங்களில் அவனது கண்டிப்பு, அவனது திறமை; விசுவாசம்; பொறுப்புணர்ச்சி... அந்த நினைவுகள்தான் எமக்கு மீதி.

*நீ மீண்டும் திரும்பிவருவாய் – என்ற*

*நம்பிக்கை எமக்கு இல்லை– ஆனாலும்*


*நீ நடந்துசென்ற பாதச் சுவடுகளை– நாம்*

*உறுதியுடன் பற்றித் தொடர்கின்றோம்.*

–கே.கபில், ஈழநாதம்.

www.padippakam.com





# கப்டன் அக்காச்சி

## (சிவகுமார் சிறீகாந்தன்)

## வீரமரணம் : 15.09.1989

வடக்குப் புன்னாலைக் கட்டுவனில் இந்தியப்படையின் முகாம் பொறுப்பதிகாரியான மேஜர் கே.பி.தாஸ் அச்செழு அங்கிளிடம் ஒரு கேள்வியைக் கேட்டார். அதாவது அக்காச்சி எப்படிப்பட்டவன் என்பதே அக்கேள்வி, அதற்கு அங்கிள் "A very good fighter, better social worker" என்று ஆங்கிலத்தில் பதில் கொடுத்தார். அதாவது "நல்லபோராளி அதைவிட மிகச்சிறந்த சமூகசேவையாளன். இதன்பின் அக்காச்சியின் பொதுப்பணிகளைப் பற்றி ஆராய்ந்த மேஜர் கே.பி.தாஸ் தான் அக்காச்சியைப் பார்க்கவேண்டும் என்றும், அக்காச்சியருகில் அமர்ந்து தேனீர் குடிக்கவேண்டும் என்றும் ஆசைப்பட்டார். அடுத்த போர் நிறுத்தம் வரும்போது தனது கண்ணைக் கட்டிக்கொண்டுபோயாவது அக்காச்சிமுன் நிறுத்துங்கள் என்றார். தெற்குப் புன்னாலைக்கட்டுவன் முகாம் பொறுப்பதிகாரியான மேஜர் ஒபரோய் பத்துநாட்களுக்குள் அக்காச்சியை உயிருடன் பிடிப்பேன் என்று சபதம் செய்து தோற்றுப்போனார். ஆனால், பின்னர் அக்காச்சி சமூகத்திற்கு நிறைய சேவைகள் செய்துள்ளான். (Rendered much services to his society) என்று பிரஜைகள் குழுவிடம் சொன்னான். இதேபோல் நீர்வேலிச்சந்தியில் முகாமிட்டிருந்த இராணுவ அதிகாரியான மேஜர் பாபுஜி ஏபிரகாம் அக்காச்சியின் சமூகசேவைகளைப் பற்றித் தான் கேள்விப்பட்டதாக பொதுமக்களிடம் சொன்னான்.

*உன்னில் இருந்து*
*என் தசை பிரிந்ததும்*



படிப்பகம்

www.padippakam.com



*இரத்தம் கசிந்தது – என்னுள்*

*நினைவுகளை நசுக்கிவிட*

நாட்களாலும் முடியவில்லை

பிரிவில் துலங்கியது

பரஸ்பர அன்பும்... ஆனாலும்

பிரிக்கப்பட்ட தசைகளிலிருந்தும்

இரத்தமாய்க் கசிகிறது

அன்பு

அனைத்து மக்களது அன்புக்கும் பாத்திரமாண அந்த வெள்ளை உள்ளம் மறைந்த செய்தி குடாநாடெங்கும் பரவியபோது எல்லோர் முகத்திலும் ஒரே சோகம். வலிகாமம் மேற்கில் வட்டுக்கோட்டை தொடக்கம் வலிகிழக்கு, அச்சுவேலி, ஆவரங்கால், புத்தூர் பகுதியிலிருந்தும் மக்கள் சாரை சாரையாக துவிச்சக்கரவண்டிகள், உழவு இயந்திரங்கள் லான்ட்மாஸ்ரர்கள் மூலமும் கப்டன் அக்காச்சியின் மரணச்சடங்கு இடம்பெற்ற அந்த இடத்தை நோக்கி விரைந்துகொண்டிருந்தனர். தியாகி திலீபன் அவர்களின் இரண்டாம் ஆண்டு நினைவு நிகழ்ச்சிகள் ஆரம்பித்த 15.09.89 அன்று நினைவு அஞ்சலி சோடனைகளிலும் பதாகைகளைக் கட்டுவதிலும் ஈடுபட்டிருந்த மக்களின் செவிகளில் அக்காச்சியின் மரணச்செய்தி விழுந்தபோது அக்காச்சியின் உடலையாவது கடைசியாகப் பார்த்துவிடவேண்டும் என்ற ஆவலில் எல்லோரும் மரணச்சடங்கு இடம்பெற்ற அந்த ஒதுக்குப்புறமான ஏகாந்தமான பிரதேசத்தை நோக்கி விரைந்துகொண்டிருந்தோம். தரிசு நிலப்பகுதி– அந்தத் தரவை நிலத்தை ஊடறுத்துச் செல்லும் களிமண் பாதையில் நெடுந்தூரம் சென்று பின்னர் இடைக்கிடை கரடுமுரடான பாதையிலும் சேற்று நிலத்திலும் மாறி மாறி சில மைல்கள் தூரம் சென்று அக்காச்சியின் மரணச்சடங்கு இடம்பெற்ற அந்த இடத்தை அச்செழு அங்கிளும் எனது மகனும் நானும் அடைந்தோம். இன்னுமொரு பாதைவழியாக அவ்விடத்தை நோக்கி வந்துகொண்டிருந்த யாழ். மாவட்ட மக்கள் முன்னணி அமைப்பாளர் ராஜன் அவர்களை வழிமறித்து அக்காச்சி பற்றிய செய்தியை வினவிய நீர்வேலி உதயதாரகை வாசிகசாலை மக்கள் சோகம் ததும்பிய குரலில் "ஐயோ எங்கள் தலைவனை இழந்துவிட்டோம்" என்று அழுது கூறினார்கள். இப்படித்தான் அக்காச்சியின் பூதவுடல் வைக்கப்பட்டிருந்த பேழையைச் சுற்றி அமர்ந்திருந்த மக்கள், பெண்கள், முதியவர்கள், குழந்தைகள் தமது தலைவனை இழந்த சோகத்தில் மூழ்கிப்போயிருந்த காட்சி என் நெஞ்சைப் பிழிவதாக இருந்தது.

## இளமைக்காலம்

இளமைக்காலம் வசந்தகாலம் என்பர். நீர்வேலியைச் சேர்ந்த சிவகுமாரன் – கனகமணி தம்பதிகள் தாம் பெற்ற இரட்டைக்குழந்தைகளுக்கு சிறீகாந்தன் என்றும் சிறீரஞ்சன் என்றும் பெயரிட்டனர். சிறீரஞ்சன் சிறுவயதிலேயே இறந்துவிட்டான். சிறீகாந்தன் விடுதலை ஸ்தாபனத்தில் ஜெகன் என்ற பெயரில் இணைந்துகொண்டு அக்காச்சி என்ற பெயரில் மக்கள் தலைவனாக



படிப்பகம்

www.padippakam.com



இருந்தான். அக்காச்சி பாடசாலையில் படிக்கும் காலத்தில் விளையாட்டுப் போட்டிகளிலும் கராட்டிப் பயிற்சிகளிலும் குதிரையேற்றப்பயிற்சிகளிலும் மிகுந்த ஆர்வமுள்ளவனாக இருந்தான். கிறிக்கட், உதைபந்தாட்டம் முதலானவற்றை தமிழர்களின் பாரம்பரிய விளையாட்டான தாச்சிப் போட்டியிலும் மிகுந்த ஆர்வம் கொண்டவனாக அக்காச்சி விளங்கினான். குதிரையேற்றப்பயிற்சிக்காக சிறுவயதில் ஒரு குதிரையை வளர்த்துவந்தான். சிறுவயதிலிருந்தே கீழ்ப்படிவு, நேர்மை, கண்ணியம், ஜீவகாருண்யம், இரக்கம், சகிப்புத் தன்மை, கொடுத்த வேலைகளை திறம்படச் செய்யும் மனப்பான்மை இவனிடம் குடிகொண்டிருந்தது. ஒருமுறை தியாகி திலீபனின் தந்தையார் இராசையா மாஸ்ரர் "உள்ளொன்று வைத்து புறமொன்று பேசத்தெரியாத வெள்ளையுள்ளம் அக்காச்சியின் உள்ளம்" என்று குறிப்பிட்டார். கப்டன் அக்காச்சி (சிவகுமாரன் சிறீகாந்தன்) எப்படிப் போராளியானான்.

## இயக்கத்தில் அக்காச்சி

1983ஆம் ஆண்டு கலவரத்தின் எதிரொலிகள் எல்லோரையும்போல அக்காச்சியையும் பாதித்தது. இதனால் விடுதலை ஸ்தாபனத்தின் போரணியில் ஒரு உறுப்பினனாக இணைந்துகொண்டான். நீர்வேலியைச் சேர்ந்த கப்டன் கண்ணாடி ராஜனும் (இராஜதுரை ஜெயக்குமார்) இவனும் ஒரே நாளில் இயக்கத்தில் இணைந்துகொண்டனர். "அக்காய் ரீசேட்" அணிந்து கொண்டு நின்ற ஜெகனைக் கண்ட, மறைந்த கப்டன் பண்டிதர் "அக்காச்சி" என்ற பெயரை வைத்தார். அன்றிலிருந்து அப்பெயரே நிலைத்து நின்றதோடு பிரபல்யமும் பெற்றுவிட்டது.

விடுதலை ஸ்தாபனத்தின் இரண்டாம் படைப்பிரிவில்ராணுவப் பயிற்சியை முடித்துக்கொண்டு 1985ஆம் ஆண்டு முற்பகுதியில் தாயகம் திரும்பிய அக்காச்சி அக்காலகட்டத்தில் விடுதலை ஸ்தாபனத்தால் நடாத்தப்பட்ட பல இராணுவ நடவடிக்கைகளிலும் 1985 பெப்ரவரியில் நடைபெற்ற கொக்கிளாய் இராணுவமுகாம் தாக்குதல், 1985 ஏபரல் மாதம் நடைபெற்ற யாழ்ப்பாணப் பொலிஸ்நிலையத் தாக்குதல், 1985 மேமாதம் நடைபெற்ற மன்னார் பொலிஸ்நிலையத் தாக்குதல் என்பவற்றில் அக்காச்சி பங்கேற்றான். யாழ். பொலிஸ் நிலையத் தாக்குதலில் அக்காச்சி குருநகர் பாஷையூர் பகுதிகளில் தாக்குதலுக்குத் தயார் நிலையில் நின்ற விடுதலைப்புலிகளுடன் இணைந்து குருநகர் இராணுவமுகாமைச் சேர்ந்தோர் வெளியேறி முன்னேறாதபடி தடுத்துக்கொண்டிருந்தான்.

1985 ஆம் ஆண்டு நடுப்பகுதியில் குடாநாடு விடுதலைப்புலிகளின் கட்டுப்பாட்டின்கீழ் வந்தது. இதன் பின் நீர்வேலிப்பிரதேச பொறுப்பாளனாக நியமிக்கப்பட்ட அக்காச்சி சிறீலங்காப்படைகள் முகாமை விட்டு வெளியேறாதபடி மேற்கொள்ளப்பட்ட இராணுவ நடவடிக்கைகளில் பங்குபற்றினான். குறிப்பாக பலாலியில் இருந்த இராணுவ விமானப்படை கூட்டுமுகாமிலிருந்து இராணுவம் வெளியேற முயன்ற போது விடுதலைப்புலிகள் மேற்கொண்ட பல எதிர்த்தாக்குதல்களில் அக்காச்சி பங்கேற்றான். நீர்வேலிப்பகுதியில் பொம்மர் குண்டுவீச்சு விமானங்கள் குண்டுகளை வீசித் தாக்குதலை மேற்கொண்டபோது அதனால் பாதிக்கப்பட்ட



படிப்பகம்

www.padippakam.com



மக்களுக்கு அக்காச்சி உதவி செய்தான். இராணுவ நடவடிக்கைகளால் பாதிக்கப்பட்டு இடம்பெயர்ந்த மக்களுக்கு நீர்வேலி கூட்டுறவுச் சங்கக் கட்டடமொன்றை ஒதுக்கிக்கொடுத்து அவர்கள் நலன்களைத் திறம்படக் கவனித்துக்கொண்டான். பல அகதிமுகாம்களை அமைத்து மக்களைப் பாதுகாத்தான். மழையில் நனைந்துகொண்டு சென்று அகதிகளுக்கு உதவிகள் செய்திருக்கிறான். விடுதலை ஸ்தாபனத்துடன் தொடர்புகொண்டு உழைத்த பொதுமக்களுக்கு தோள்கொடுத்து உதவியிருக்கிறான். கஸ்டப்பட்ட மக்களுக்கு தொழில் வாய்ப்புக்களை அளிக்க பண்ணைகளை நிறுவினான். கிராமிய உழைப்பாளர்களை பூ ர்சுவா வர்க்கம் சுரண்டியபோது அம்மக்களின் நியாயபூர்வமான ஊதியத்திற்காகவும் நேரப்படியான உழைப்பிற்காகவும் போர்க்கொடி தூக்கிப் போராடியவன் அக்காச்சி. ஏழைகளுக்கு கட்டுப்பாட்டு விலையில் பொருட்கள் கிடைக்கவேண்டுமென்பதற்காக தளபதி கிட்டுவின் அறிவுரையில் பல நியாயவிலைக் கடைகளைத் திறந்தான்.

## பொதுப்பணிகள்

தமிழ் இளைஞர்கள் ஒவ்வொருவரும் பொதுப்பணி செய்ய முன்வரவேண்டும் என அறிஞர் அண்ணாத்துரை ஒருமுறை குறிப்பிட்டார். விடுதலைப்போராளியாகவும் சமூக சீர்திருத்தவாதியாகவும் பொதுப்பணியாளனாகவும் விளங்கிய கப்டன் அக்காச்சியை மக்கள் தலைவனாக்கிய சிறப்புப் பரிமாணங்கள் அவனது யதார்த்தபூர்வமான செயற்பாடுகளேயாகும். சக விடுதலைப் போராளிகள் அக்காச்சியை ஏழைகள் தொண்டன், மக்கள் தலைவன் என்று சுவையாகக் குறிப்பிடுவதுண்டு. படித்தவர்கள் பலர் புத்தகப்பூச்சிகளாகவே வாழ்நாளை வீண் நாளாக்கி மறையும் காலத்தில் கிராமத்தையே கலாசாலையாக்கி ஏழைமக்களையே தனது ஆசான்களாக்கி அக்காச்சி அனுபவக் கல்வியூடாக மக்கள் பணிசெய்யக் கற்றுக்கொண்டவை ஏராளம். அவையே அவனது முன்னேற்றப்பாதையின் படிக்கற்களாகும்.

அபிவிருத்தியென்பது சமூகத்தின் அடிமட்டத்திலிருந்து கட்டியெழுப்பப்படவேண்டும் என ஓர்சுலாக்கிக்ஸ் என்ற அறிஞர் குறிப்பிட்டார். அபிவிருத்தியில் பல்வேறு பரிமாணங்களை சமூகத்தின் அடிமட்டத்திலிருந்து கட்டியெழுப்ப விரும்பிய கப்டன் அக்காச்சி, கீழ்மட்டத்தில் வாழும் மக்களுக்கு அடிப்படைக் கல்வியறிவைப் போதிக்க விரும்பி அதற்கான திட்டங்களை முதலில் வகுத்துக் கொண்டான்.

## கல்விப்பணிகள்

*'அன்னயாவினும் புண்ணியம் கோடி*

*ஆங்கோர் ஏழைக்கு எழுத்தறிவித்தல்'*

இப்படி வரகவி பாரதியார் பாடினார். கப்டன் அக்காச்சியின் கல்விப் பணிகளும் பாரதிபாடலின் தாற்பரியத்தை வெளிப்படுத்துவனவாகவே அமைகின்றன.

www.padippakam.com



நீர்வேலி பல பொருளாதார கட்டுமானங்களைக் கொண்ட மக்கள் வாழும் பகுதியாகும். பொருளாதார வசதி படைத்த செல்வந்தர்களும் சீவனோபாய மட்டத்திற்குக் கீழே வாழும் மக்களும் இங்கே வாழ்கிறார்கள். முற்றிலும் கிராமப்புறம் சார்ந்த ஒரு பிரதேசப் பொறுப்பாளனாக பொறுப்பேற்றுக்கொண்ட அக்காச்சி இப்பகுதியில் வாழும் வசதி குறைந்த குழந்தைகளுக்கு கல்வியூட்ட விரும்பி பல பகுதிகளிலும் பாலர் பாடசாலைகளை ஸ்தாபித்தான். புத்தூர்–வாதரவத்தையில் இரண்டு பாடசாலைகளை திறந்துவைத்தான். நீர்வேலி கந்தசுவாமி கோயில் அருகில் ஒரு பாலர் பாடசாலையை ஸ்தாபித்தான். கோப்பாய் கல்வி வளர்ச்சிக்கழகம் அக்காச்சியின் கல்விப்பணிகளின் ஒரு பரிமாணமாகும். இதை விட இடைநிலைக்கல்வி கற்கும் மாணவர்களது வசதி கருதி அக்காச்சி இலவச வகுப்புக்களை தகுதி வாய்ந்த ஆசிரியர்களைக் கொண்டு ஸ்தாபித்து நடத்தினான். அக்காச்சி அச்செழுவில் ஒரு நூல்நிலையம் ஒன்றை அமைத்திருந்தான். வெளிநாட்டு விடுதலைப்போராட்டங்கள் பற்றிய அபூர்வமான நூல்கள் அங்கே வைக்கப்பட்டிருந்தன.

தனது போராளிகளை அரசியல் பிரக்ஞையுள்ளவர்களாக வளர்த்து எடுப்பதில் அவன் அதிக நாட்டமுடையவனாகவே இருந்தான். இந்த நூல் நிலையத்தில் இருந்த நூல்களையெல்லாம் 1987 ஒக்டோபர்–நவம்பர் மாத காலத்தில் அந்நிய ஆக்கிரமிப்பு இராணுவம் அள்ளிக்கொண்டு சென்று நீர்வேலி–மாசுவன் சந்தியில் போட்டுத் தீமூட்டியது. யாழ்ப்பாண நூல்நிலையம் எரிக்கப்பட்டபோது அதனைக் கண்டித்த இந்தியா தனது ஆக்கிரமிப்பு இராணுவத்தின் மூலம் ஈழத்தின் பல பாகங்களிலும் பல நூல்நிலையங்களைத் தீக்கிரையாக்கி வரலாற்றுப் 'பெருமை'யைப் பெற்றுக் கொண்டது.

## மதிய போசனம்

தமிழ் நாட்டில் கல்லூரி மாணவர்களுக்கு சத்துணவு வழங்கப்படும் திட்டமும் இலங்கை அரசின் மாணவர் மதிய போசனத் திட்டமும் அறிமுகப்படுத்தப்படு முன்னரேயே கப்டன் அக்காச்சி பாலர்களுக்கு மதிய போசனம் வழங்கும் திட்டத்தை அறிமுகப்படுத்தினான். இலங்கையிலும் தமிழ் நாட்டிலும் அரசியல் நோக்குடன் இத்திட்டம் அடுத்த தேர்தலை நோக்காகக் கொண்டே மேற்கொள்ளப்பட்டது. ஆனால் அடுத்த சந்ததியின் ஆரோக்கியமான வாழ்வுக்காக அக்காச்சி இத்திட்டத்தை அறிமுகம் செய்தான். நீர்வேலி கந்தசுவாமி கோயில் அருகில் அமைக்கப்பட்ட பாடசாலை அபிவிருத்திக்காக காலஞ்சென்ற மக்கள் கலைஞர் வி.எம்.குகராஜா அவர்கள் தயாரித்த 'மனிதனும் மிருகமும்' என்ற நாடகத்தை அரங்கேற்றி அதில் கிடைத்த பணத்தைக் கொண்டு பாலர் பாடசாலைக்கான சுற்று மதில் பாதுகாப்பு ஏற்பாடுகளைச் செய்து கொடுத்தான். பாலர் பாடசாலையில் காலையிலும் மதிய வேளையிலும் இலவசமாக இருநேர மதிய போசனம் வழங்க ஏற்பாடு செய்தான். பொருளாதார வசதியுடையவர்களை அணுகி அவர்கள் மூலமாக தளபாட வசதிகளை இப்பாடசாலைகளுக்குச் செய்து கொடுத்தான்.

நீர்வேலி வீரபத்திரர் கோயில் அருகில் தியாகி திலீபன் ஞாபகார்த்தமாக ஒரு வாசிகசாலையை



படிப்பகம்

www.padippakam.com



அமைத்த அக்காச்சி அக்கட்டிடத்திற்குத் தேவையான சீமெந்து கட்டிகளை தனது சொந்த வீட்டிலிருந்தே எடுத்துவந்து பயன்படுத்தினான். ஏழை மக்கள் விஷக்குடிக்கு இலக்காகி குடும்பங்கள் சீரழியாமல் தடுக்கவிரும்பிய அக்காச்சி கசிப்பு ஒழிப்பு நாடகம் மூலம் பிரச்சாரம் செய்தான். கசிப்பு ஒழிப்பு நேரடி நடவடிக்கைகளிலும் ஈடுபட்டான்.

## சிரமதானம்

அக்காச்சி தான் பிரதேசப் பொறுப்பாளராகவிருந்த நீர்வேலிப் பகுதியில் காலத்திற்குக் காலம் பல சிரமதானப்பணிகளைச் செய்துவந்தான். இப்பணிகளில் போராளிகளும் பொதுமக்களும் இணைந்து பங்கேற்றார்கள். நீர்ப்பாசன வசதி குறைந்த இடங்களில் குளங்களைத் திருத்தும் வேலைகளை அக்காச்சி செய்துவந்தான். அந்த வகையில் நீர்வேலிப்பகுதியிலுள்ள நடுவத்தாள், கிராஞ்சி போன்ற குளங்களின் திருத்தவேலைப்பணிகள் கப்டன் அக்காச்சியால் மேற்கொள்ளப்பட்டவையாகும். அக்காச்சி ஜீவகாருண்யம் மிக்க போராளி என்ற முறையில் வரட்சிக்காலத்தில் மேய்ச்சலுக்காக செல்லும் கால்நடைகளும் இக்குளங்களில் நீர் பருக வேண்டும் என்பதும் அவனது ஆசையாக இருந்தது. வாதரவத்தைப் பகுதியின் கல்விவளர்ச்சிக்கும் பொருளாதார மேம்பாட்டுக்கும் அயராது உழைத்த அக்காச்சி இப்பகுதியில் குடிநீர்ப்பிரச்சனையை தீர்க்கும் முகமாக வாதரவத்தையில் பெரிய பொக்கணைக்கும், வீரவாணிக்கும் இடையில் வாழ்ந்த மக்கள் நலன்கருதி தண்ணீர் வசதிகளைச் செய்துகொடுத்தான்.

சிவில் நிர்வாகம் இல்லாத வேளைகளில் மக்கள் மத்தியில் ஏற்பட்ட சச்சரவுகளையெல்லாம் மனச்சாட்சியின் படி இயற்கை நீதிக் கோட்பாட்டைப் பின்பற்றி தீர்த்துவைத்தான். காணிப் பிரச்சனைகளை அவன் அணுகிய விதமும் தீர்த்துவைத்த முறைமையும் பலரது பாராட்டுதல்களையும் பெற்றது.

## ஒப்பறேசன் லிபரேசன்

1987இல் இலங்கை அரசு வடமராட்சி மீது தொடுத்த ஒப்பறேசன் லிபரேசன் இராணுவ நடவடிக்கைக்கு எதிரான யுத்தத்தில் அக்காச்சி பங்குபற்றினான். இலங்கை இராணுவம் எனது பகுதிக்குள் நுழையமுயன்றால் எல்லையில் வைத்து மோதுவேன், என் பிணத்தைத் தாண்டி வந்தே அவர்கள் எனது பகுதிக்குள் நுழையலாம் என சபதம் எடுத்துக்கொண்டு செயற்பட்டவன் அக்காச்சி. வடமராட்சிக்குச் சென்று பல தாக்குதல்களிலும் பங்குபற்றிவிட்டு பொதுமக்களுக்கு உதவியும் செய்துவிட்டே அக்காச்சி மீண்டும் வந்தான்.

## இந்திய இராணுவத்துடன் ஏற்பட்ட மோதல்

இந்திய இராணுவம் 1987 ஆம் ஆண்டு ஒக்டோபர் மாதம் விடுதலைப்புலிகளுடன் போர் தொடுத்தது. யாழ்ப்பாணம் டச்சுக் கோட்டையில் இருந்து ஒரு பிரிவினர் வெளியேற முயன்று



படிப்பகம்

www.padippakam.com



கொண்டிருந்த அதே வேளையில் வேறு படைப்பிரிவினர் பலாலி வீதி, கே.கே.எஸ் வீதி, கண்டி வீதி வழியாக யாழ்ப்பாண நகரை நோக்கி முன்னேற முயன்றுகொண்டிருந்தனர். கைதடி, கோப்பாய் வீதி வழியாக யாழ்ப்பாண நகரை நோக்கி முன்னேற முயன்றுகொண்டிருந்தனர். கைதடி கோப்பாய் வீதி வழியாக கோப்பாய்ச் சந்திக்கு வரமுயன்ற இந்திய இராணுவத்தை அந்த இடத்தை நோக்கி நகரவிடாமல் பதினொருநாட்கள் அக்காச்சி குறூப் தடுத்து நிறுத்தி வைத்துக்கொண்டது. உக்கிரமான போர் இடம்பெற்றது. பலத்த ஷெல் தாக்குதல்கள் இடம்பெற்றன. யுத்த களத்தில் நின்ற இந்திய ஜவான்களுக்கு உணவு கொண்டு வந்த இந்திய ஹெலிகள் மீது விடுதலைப்புலிகள் தொடுத்த தாக்குதலால் அவை உணவுப் பொட்டலங்களை நாவற்குழி தரவைக் காட்டுப்பகுதியில் போட்டுவிட்டு ஓடித் தப்பித் தலைமறைவாயின. இந்த உக்கிரமான போரில் கோப்பாய் சந்திக்கு வரமுடியாத நிலையில் நின்ற இந்திய இராணுவத்தின் ஒரு படைப்பிரிவை அக்காச்சி குறூப் தடுத்து நிறுத்தி வைத்துக்கொண்ட நிலையில் இன்னுமொரு இந்தியப் படைப்பிரிவு மறுபக்கத்தால் உரும்பிராய் கிருஷ்ணன் கோயிலடிக்கு வந்து வாழைத் தோட்டங்களுக்கூடாக நீர்வேலி வெங்காயக் கூட்டுறவுச் சங்கமருகில் வந்தது. கொமாண்டோ மோட்டோர் ஷெல் தாக்குதல்களும் செயின் புளக்குகளாலும் தாக்கியவண்ணம் கோப்பாய்ச்சந்திக்கு இந்திய இராணுவம் இரவு பன்னிரண்டு மணிக்கே சென்றடைந்தது. இந்திய இராணுவ நடவடிக்கைகளின் போது நீர்வேலிப்பகுதியில் அதிக உயிர்ச்சேதமோ பொருட்சேதமோ ஏற்படாமல் அக்காச்சியே ஏற்ற நடவடிக்கைகளையெடுத்து தனது திறமையால் கிராமத்தைக் காப்பாற்றினான் என இப்பகுதி மக்கள் நினைவுகூர்ந்து கதைத்துக்கொள்கிறார்கள்.

## வேறும் பல தாக்குதல்கள்.

*1987* அக்டோபர் தொடக்கம் *1988* மார்ச் வரையுள்ள காலப்பகுதியில் நீர்வேலிப்பகுதியில் இந்திய இராணுவத்துடன் பல தாக்குதல்களில் அக்காச்சி பங்கேற்றான். இந்த தாக்குதல்களில் பலவும் தற்பாதுகாப்பு நடவடிக்கைகளுக்காக மேற்கொள்ளப்பட்டவைகளாகும். அதாவது 1987 டிசம்பர் மாதத்தின் பின்னர் நீர்வேலி, அச்செழு பகுதியில் போராளிகளைத் தேடி இந்திய இராணுவம் மேற்கொண்ட சுற்றிவளைப்புக்களை உடைத்து அவர்களது தேடுதல் வேட்டைகளை நிர்மூலப்படுத்திய பின் அக்காச்சி அங்கிருந்து தப்பி பிறிதொரு பகுதிக்குள் நுழைந்தான். இந்த சுற்றிவளைப்பின் போது காயப்பட்ட பெண்போராளி மன்னாரைச் சேர்ந்த சகிலா சைனைட் உட்கொண்டு தியாக மரணமுற்றார்.

## பொதுமகன் காப்பாற்றல்

*1988* முற்பகுதியில் ஒரு நாள் அச்செழு பகுதிக்கு வந்த இந்திய இராணுவத்தினர் பற்றை மறைவுகளின் பின்னால் படுத்துக்கொண்டு போராளிகளது வருகைக்காகக் காத்துக் கிடந்தனர். முக்கிய போராளிகளான லெப்.கேணல் இம்ரான், கப்டன் நேரு, அக்காச்சி இப்படியாகப் பல போராளிகள் அங்கே தங்கியிருந்தனர். அதிகாலை ஆகையால் சன நடமாட்டம் மிகக்குறைவாகவே இருந்தது. இந்த நிலையில் இராணுவ நடமாட்டம் பற்றிய தகவல் அன்றைய தினம்



படிப்பகம்

www.padippakam.com



போராளிகளுக்குக் கிடைக்கவில்லை. இந்த நிலையில் ஒரு பொதுமகன் மீன் வலைகளைத் தன் தோளில் போட்டுக்கொண்டு வந்து இராணுவநடமாட்டம் பற்றிய தகவலைக் கொடுத்து போராளிகளைக் காப்பாற்றினார். தலைவர் பிரபாகரன் கூறியதுபோல "நாம் கடக்கவேண்டியது நெருப்பாறு என்பது எமக்குத் தெரியும். ஆனால், அதனைக் கடக்க மக்கள் ஆதரவு எனும் கவசம் எம்மிடம் உண்டு" என்ற கூற்றை இச்சம்பவம் நினைவு படுத்துவதாக அமைந்தது.

## வன்னியில் அக்காச்சி

1988 மார்ச் மாதம் தொடக்கம் 1989 தை மாதம் வரை அக்காச்சி வன்னிப்பகுதியில் இந்திய இராணுவத்துடன் பல மோதல்களில் ஈடுபட்டான். காலத்திற்குக்காலம் பல்வேறு சங்கேத மொழிகளில் இந்திய இராணுவம் விடுதலைப்புலிகள்மீது தொடுத்த யுத்தத்தில் இந்திய இராணுவம் ஒவ்வொரு தடவையும் பலத்த இழப்புக்களைச் சந்தித்துக்கொண்டது. போராட்டத் தலைமையையும் போராட்டததையும் இக்காலகட்டத்தில் காப்பாற்றுவதில் வன்னிப்பகுதி வகித்த பங்கு வரலாற்றுச் சிறப்புடையது. அளப்பரிய இழப்புக்களை இந்திய இராணுவம் அடைந்ததோடு, பெரும் தியாகத்தைச்செய்து வரலாற்றுக் கடமையை விடுதலைப்புலிகள் நிறைவேற்ற வன்னியின் இயற்கை அரணுடன் மக்களும் உறுதுணையாயினர். முல்லைத்தீவு பகுதியில் நின்று யுத்தத்தில் ஈடுபட்ட அக்காச்சியிடம் வன்னி அனுபவங்கள் பற்றிக் கேட்டபோது ஒருநாள் அடர்த்தியான காட்டில் பொழுது இருண்டவேளையில் ஒரு இளம்புலி தனது கையிலிருந்த துப்பாக்கியால் இரண்டு தடவைகள் சுட்டான். மறுநாள் காலையில் இந்திய மாநிலச்செய்தி அந்த இடத்தைக் குறிப்பிட்டு அந்த இடத்தில் இரண்டு ஜவான்கள் இறந்ததாகச் சொனனது. தலைவர் அந்த இளம் போராளியை அழைத்துப் பாராட்டினார். அதனை என்னால் மறக்கமுடியாது என்று அக்காச்சி பதில் சொன்னான்.

## மீண்டும் அக்காச்சி

சில மாதங்களை வன்னியில் கழித்துவிட்டு மீண்டும் 1989 தை மாதமளவில் அக்காச்சி குடா நாட்டிற்குள் வந்தான். இக்காலத்தில் அக்காச்சியும் அவனது தோழர்களும் கெரில்லா வாழ்க்கையே மேற்கொண்டனர். வீதிகளைக் கடக்கும் போது அல்லது தனது ஆதரவாளர்களைச் சந்திக்க வரும்போது எதிர்பாராமல் இந்திய இராணுவத்தைச் சந்திக்க நேரிட்டால் மோதல்கள் ஏற்படுவதுண்டு. இவ்வாறான மோதல்களில் பெரும் இழப்புக்களோடு இந்திய இராணுவம் முகாம் திரும்பிய ஒரு மோதல் 17.5.89 அன்ற நீர்வேலிப் பகுதியில் நிகழ்ந்தது. இதேபோல் அக்காச்சியும் சிவனேசன் என்ற இன்னொரு போராளியும் எதிரும் புதிருமான இந்திய இராணுவத்தைச் சந்தித்தபோது 30.5.89 அன்று பெரும் மோதல் ஒன்று நிகழ்ந்தது. இந்த மோதலின் போது கப்டன் நேரு, லெப். குட்டி ஆகியோரும் இராணுவத்துடன் மோதினர். நீர்வேலி– அச்செழு வீதியில் நிகழ்ந்த இந்த மோதலில் எல்லோரும் சுற்றிவளைப்பை உடைத்து வெளியேறினர். ஆனால் போராளி சிவனேசன் நேருக்கு நேர் ஏற்பட்ட மோதலில் வீரமரணம் அடைந்தான். இதேபோன்ற பிறிதொரு மோதல் 8.8.89 அன்று பருத்தித்துறை வீதியில்

www.padippakam.com



சிறுப்பிட்டி அருகே ஏற்பட்டது. இந்த மோதலில் கப்டன் ஒருவன் உட்பட இரண்டு இந்திய இராணுவத்தினர் இறந்தனர். இந்த மோதலிலும் அக்காச்சி முக்கிய பங்கு வகித்தான். இந்த மோதல் நிகழ்ந்த மறுதினம் காலை 7.15 மணிக்கு ஒலிபரப்பாகும் ஆகாசவாணி டில்லி தமிழ் செய்தியில் இந்த மோதல் பற்றிக் குறிப்பிட்டுவிட்டு அக்காச்சி தலைமையிலான குழுவே இந்த மோதலில் ஈடுபட்டது என்றும் அந்தச் செய்தியறிக்கையில் தெரிவிக்கப்பட்டது.

## சுவையான சம்பவங்கள்

1987 ஒக்டோபர் தொடக்கம் 1989 செப்ரம்பர் வரை ஏறத்தாழ இரண்டு ஆண்டுகளில் அக்காச்சியின் கரந்துறை வாழ்வில் பல சுவையான சம்பவங்கள் நிகழ்ந்தன. 1987 டிசம்பர் மாதம் ஒரு நாள் அக்காச்சி இராஜவீதி வழியாக வந்துகொண்டிருந்தான். இந்திய இராணுவ சிப்பாய்கள் வீதியில் நின்று வீதியாற் செல்வோரை வழிமறித்து விசாரிப்பதும் அவர்களைச் சோதனையிடுவதுமாக நின்றனர். எதிரும் புதிருமாக அந்த வீதி வழியாக வந்த அக்காச்சி இராணுவத்தைக் கண்டவுடன் பதட்டமடையாமல் வாழைத்தோட்டம் ஒன்றுக்குள் இறங்கினான். மறுபக்கமாக சீக்கிய சிப்பாய் ஒருவன் வருவதைக் கண்ட அக்காச்சி சமயோசிதமாக அந்தத் தோட்டத்திலே நின்று வேலை செய்துகொண்டிருந்த விவசாயி ஒருவனின் கையில் தனது சேட்டைக் கழற்றிக் கொடுத்துவிட்டு அந்த விவசாயியின் சவுக்கத்தை (சால்வையை) வாங்கி தலைப்பா கட்டிக்கொண்டு அந்த விவசாயியின் மாட்டை மேய்காட்டுவதுபோல் சாய்த்துக் கொண்டுசென்று அப்பால் உள்ள மரம் ஒன்றில் கட்டிவிட்டு தலைமறைவானான். மாட்டைப்பற்றி வியாசம் எழுதச்சொன்னால் மாட்டைக் கொண்டுசென்று மரத்தில் கட்டிவிட்டு மரத்தைப்பற்றி கட்டுரை எழுதும் மாணவர்கள் மலிந்த இந்தக் காலத்தில் மாட்டைக் கொண்டுபோய் மரத்தில் கட்டிவிட்டு தலைமறைவான அக்காச்சியின் புத்திசாதுரியமும் திறமையும் போற்றுதற்குரியதே.

இதேபோல் இந்திய இராணுவம் நூற்றுக்கணக்கில் ஒரு கிராமத்தைச் சுற்றிவளைத்தபோது ஒரு வீட்டின் தண்ணீர்த் தாங்கி ஒன்றினுள் ஏறி அக்காச்சியும் அவனது தோழர்களும் படுத்துக்கொண்டனர். நீண்ட நேரமாகியும் இராணுவம் அகல்வதாக இல்லை. திடீரெனத் தண்ணீர்த்தாங்கி அருகில் இருந்த பப்பாசிமரம் அசைந்தது. திகைப்படைந்த அக்காச்சி எட்டிப்பார்த்தான். அந்த வீட்டுக்காரர் பப்பாசிமரம் வழியாக ஏறி தண்ணீர்த்தாங்கி அருகில் வந்து "தம்பியவை இந்தாருங்கோ யூஸ் கரைச்சுக்கொண்டு வந்தனான்" என்று கொடுத்துவிட்டு மரத்தில் இருந்து இறங்கிச் சென்றார்.

இதேபோல் பிறிதொரு இடத்தில் அக்காச்சியும் அவனது நண்பர்களும் ஒரு சுற்றிவளைப்பின்போது தண்ணீர்தாங்கி ஒன்றினுள் ஒளிந்துகொண்டனர். ஏணி வழியாக ஏறி மேலே வந்த அந்த வீட்டின் ஐந்து வயதுச் சிறுவன் தானும் அக்காச்சியோடு தண்ணீர்த்தாங்கியினுள் ஒளிந்து கொள்ளவேண்டும் என்று அடம் பிடித்தான். உடனே அக்காச்சி "நீ போகாவிட்டால் அடிப்பேன்" என்று அதட்டிக் கூறினான். உடனே அந்தச் சிறுவன் "அண்ணை இப்ப அடிப்பியளோ அல்லது ஆமி போனபிறகு அடிப்பியளோ என்று கேள்வி எழுப்பினான்.



படிப்பகம்

www.padippakam.com



இதேபோல் அக்காச்சியும் அவனது தோழர்களும் ஒரு வீட்டு மதியபோசனத்திற்காக அழைக்கப்பட்டிருந்தனர். அந்த வீட்டிற்குள் நுழைந்த அக்காச்சி குழுவினர் அந்த வீட்டுக்கார அம்மாவிடம் "எம்மைப்போல இன்னும் இரண்டு நண்பர்கள் இங்கே சாப்பிட வருவார்கள்" என்று கூறிவிட்டு உள்ளே இருந்து தமது வேலைகளைக் கவனித்துக்கொண்டிருந்தனர். திடீரென அங்கு வந்த அந்த வீட்டுக்கார அம்மா, "தம்பியவை, இரண்டுபேர் படலேலை வந்து நிக்கினம், ஒருவர் தாடியும் தலைப்பாகையுமா நிக்கிறார். மற்றவர் ஆமி உடுப்புப் போட்டிருக்கிறார், அவையளைக் கூட்டிக்கொண்டுவரட்டோ" என்றார். வெளியே அக்காச்சி எட்டிப்பார்த்தான். படலையில் ஒரு சீக்கியனும் அவனுக்குதவியாக ஒரு தேசத்துரோகியும் நின்றனர்.

இப்படியாகப் பல சுவையான சம்பவங்களையெல்லாம் தனது கெரில்லா வாழ்க்கையின் போது தான் சந்திக்க நேரிட்டது என்று அக்காச்சி தனது நண்பர்களுக்குக் கூறி தானும் சேர்ந்து சிரிப்பான். அக்காச்சியின் வசீகரமான அந்த முகத்தில் அடிக்கடி உதிரும் புன்னகை ஆயிரம் அர்த்தங்களைக் கொண்டது. அவனது அந்தப் புன்னகையில் எம்மை மறந்து எமது கவலைகளை மறந்து மகிழ்ச்சியடைந்த நாட்கள் எத்தனையெத்தனை.

## மக்கள் காப்பற்றல்

ஒரு நாள், *1989* ஆகஸ்ட் மாதமளவில், அக்காச்சியும் அவனது நண்பர்களும் கப்புது என்ற கிராமத்தில் தங்கியிருந்தனர். கிராமத்தை *800*க்கு மேற்பட்ட இந்தியச் சிப்பாய்கள் சுற்றிவளைத்துக்கொண்டனர். வீடுவீடாகத் தேடுதல் நடவடிக்கைகளை இராணுவம் மேற்கொண்டது. சாதாரண மக்களைக் கொண்ட அந்தக்கிராமம் மிகவும் புத்தி சாதுரியமாக அக்காச்சியையும் தோழர்களையும் காப்பாற்றியது. இந்தக் கிராமமக்கள் நீண்டகாலமாகவே போராளிகளுக்கு உறுதுணையாக இருந்துவருபவர்கள். இன்னும் ஒரு சம்பவம் மறக்கமுடியாதது.

*1987* ஜூலை மாதம் 5ம் திகதி மில்லர் இலங்கை இராணுவம் தங்கியிருந்த நெல்லியடி மத்தியகல்லூரி முகாம் மீது தாக்குதலைத்தொடுக்க முன்னர் தயாரிப்புவேலைகளை முடித்துக்கொண்டு இக்கிராமத்துக்குள் சென்றான். கப்டன் மில்லர் எடுத்துச் சென்ற அந்த வாகனம் இலங்கை இராணுவத்தின் கண்களில் படாதபடி அந்தப் பெரிய வாகனத்தை இலைகுழைகளில் மூடி மறைத்து உருமறைப்புச் செய்து உதவியவர்கள் இந்தப்பகுதி மக்கள் தான் என்று தியாகி திலீபன் பெருமையோடு சொன்னான். மில்லரின் அந்தத் தாக்குதல் தமிழர் வரலாற்றில் ஒரு திருப்புமுனைக்கு வழிவகுத்தது.

## கடைசித்தாக்குதல்

ஒட்டுமடம் என்ற இடத்தில் கூடாரமடித்து தேசத்துரோகச் செயல்களில் ஈடுபட்டிருந்த ஈ.என்.டி.எல்.எப் என்ற தேசவிரோதக் கும்பல்கள் *15.9.89* அன்று தியாகி திலீபனின்



படிப்பகம்

www.padippakam.com



அஞ்சலிநிகழ்ச்சிகளுக்கான ஏற்பாடுகளைச் செய்துகொண்டிருந்த பொதுமக்கள்மீது தாக்குதலை மேற்கொண்டு மக்களை இம்சைப்படுத்தி நிகழ்ச்சிகளைக் குழப்பும் நோக்குடன் நீர்வேலிக்கு கயேஸ் வாகனம் ஒன்றைக் கடத்திக்கொண்டு வந்தார்கள். திலீபனின் அஞ்சலிப் பிரசுரம் ஒட்டிய மதனா என்ற இளைஞன் சுட்டுக்கொல்லப்பட்டான். இவற்றையெல்லாம் கேள்வியுற்ற அக்காச்சி நீர்வேலிச்சந்தியில் நின்றுகொண்டிருந்த தேசத்துரோகிகளை நோக்கி சக போராளிகளோடு விரைந்தான். அங்கே பெரும் மோதல் ஒன்று ஆரம்பமானது. தேசத் துரோகிகள் பலர் தாம் கடத்திவந்த வானையும் போட்டுவிட்டு நீர்வேலித் தரவைப் பாதையூடாக ஓட்டம் பிடித்தனர். சண்டையில் பல துரோகிகள் மாண்டுபோயினர். ஒருவன் உயிருடன் பிடிபட்டான். தற்செயலாக நீர்வேலிக் கண்ணாடித்தொழிற்சாலைக்குச் சென்ற அக்காச்சிமீது அங்கு ஒளிந்துகொண்டிருந்த கோழையொருவன் துப்பாக்கிப் பிரயோகம் செய்தமையால் மார்பினில் குண்டேந்தி அக்காச்சி மறைந்தான்.

நீர்வேலியில் பிறந்து நீர்வேலியில் கல்விகற்று நீர்வேலிப் பிரதேசப் பொறுப்பாளனாக இருந்து நீர்வேலியில் வீரமரணமடைந்த கப்டன் அக்காச்சியின் அர்த்தமுள்ள வாழ்வு விடுதலைக்குப் போராடும் மக்களுக்கு ஒரு வழிகாட்டியாகவுள்ளது. அவன் செய்த சேவையின் நினைவுச்சின்னங்களாக நீர்வேலிப் பிரதேசத்தில் காணப்படும் கட்டடங்களே மிளிர்கின்றன.

இவனது ஒன்றுவிட்ட தமையனார் பலதடவை தன்னுடன் வெளிநாடு வருமாறு அழைத்தும் அங்கு செல்ல மறுத்துவிட்டான். இவன் இறப்பதற்கு இரண்டு நாட்களுக்கு முன்னரும் இவ்வாறான ஒரு வேண்டுகோளை அவர் அனுப்பியிருந்தார். அந்தச் செய்தியைக் கொண்டுவந்த பேர்வழியிடம் அக்காச்சி பின்வருமாறு சொன்னான் "நான் செய்யும் பணிகளை வேறு ஒருவரைக் கொண்டு நிறைவுசெய்யமுடியுமாயின் தான் வருவேன். அதுவரை நான் வரமாட்டேன்" இந்த ஆணித்தரமான பதில் வெறும் மேனி மினுக்கு வார்த்தைகளல்ல, அது ஒரு உறுதியான பிரக்ஞையின் வெளிப்பாடு என்பதில் சந்தேகமேயில்லை.

–நேதாஜி, ஈழநாதம்.



படிப்பகம்

www.padippakam.com

படிப்பகம்

www.padippakam.com

# உங்களுடன்......

போகிறேன்

களம் நோக்கி....

சில வேளைகளில்.....

என் மூச்சுக்களும்

சுட்டுப் பொசுக்கும்

சிவந்த கண்களும்

சிதறி வெடிக்கும்

உடைகளும்

என்

இறுதி வார்த்தைகளும்

உங்களுக்கு கிடைக்காமல்

போகலாம்

ஆனால் நாளை.....

சுதந்திரத்தின் பிரசவிப்பில்

உங்கள் முற்றத்தில்

மலராய்

நான் மலர்வேன்.

தமிழீழ விடுதலைப்புலிகள்
நோர்வேக் கிளை

தமிழர் ஒருங்கிணைப்புக்குழு
Tamil Co-ordinating Commitee Norway
Post Boks 1699, Vika
0110 Oslo
Norway
Tel. : 22191260 fax : 22190114

படிப்பகம்